ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1944/22 - 2015 දෙසැම්බර් මස 07 වැනි සඳුදා - 2015.12.07

*1944/22 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 07 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

***2015 ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆந் திகதி கதிர்காமம் பிரதேச சபையின் மாதாந்த சபை கூட்டத்திற்கு முன்வைக்கப்பட்ட பிரேரணை***

*"1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (துணை நடவடிக்கை) சட்டத்தின் 2 ஆவது உப வாக்கியத்தின் (அ) பந்தியுடன் கூறப்படவேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபை சட்டத்தின் 122 முதல் 126 வரையிலான வாக்கியங்களில் (261 ஆவது அத்தியாயமான) 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சிமன்றங்கள் (அங்கீகரிக்கப்பட்ட துணைச் சட்டம்) சட்டத்தில் (2) ஆவது வாக்கியத்தில் (1) ஆவது உப வாக்கியத்தின் கீழ் ஊவா மாகாணத்தின் மாகாண சபை உள்ளூராட்சிமன்ற விடய பொறுப்பு அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் ஊவா மாகாணத்தின் உள்ளூராட்சிமன்ற விடய பொறுப்பு அமைச்சரினால் செய்யப்பட்ட 2013.06.28 ஆந் திகதிய 1816/43 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி IV (ஆ) பிரிவில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ள பிரதேச சபைகளில் அங்கீகரிக்கப்பட்ட துணைச் சட்டம்/அங்கீகரிக்கப்பட்ட துணைச் சட்டங்களின் இலக்கம் 1 முதல் 23 வரையிலான பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட துணைச் சட்டத்தில் இந்த பிரேரணை வர்த்தமானி பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் திகதி முதல் நடைமுறைப்படுத்தி ஏற்றுக்கொள்ள மேல் குறிப்பிட்ட உள்ளூராட்சிமன்ற (அங்கீகரிக்கப்பட்ட துணை சட்டம்) சட்டம் 3 ஆவது வாக்கியத்தில் (1) ஆவது உப வாக்கியத்தின் கீழ் கதிர்காம பிரதேச சபை பிரேரணை செய்கின்றது."*

*பிரேரித்தவர் : சானக்க அமில ரங்கன - தவிசாளர், கதிர்காமம் பிரதேசசபை.*

*கே. எல். ஏ. எல். ஜயதிலக,*
*தவிசாளர்,*
*கதிர்காமம் பிரதேச சபை.*

***அங்கீகரிக்கப்பட்ட துணைச் சட்டம்***

*1972 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, உள்ளூராட்சிமன்ற (அங்கீகரிக்கப்பட்ட துணைச் சட்டம்) சட்டம் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபை (துணை நடவடிக்கை) சட்டத்தில் 2 ஆவது வாக்கியத்துடன் சொல்லப்படவேண்டிய (262 ஆவது அத்தியாயமான) 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சிமன்ற (அங்கீகரிக்கப்பட்ட துணைச் சட்டம்) சட்டத்தின் 2 ஆவது வாக்கியத்தின் கீழ்*

*எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், ஊவா மாகாணத்தில் மாகாண சபை உள்ளூராட்சிமன்ற விடய பொறுப்பு அமைச்சர் சஷிந்திர ராஜபக்ஷ ஆகிய என்னால் 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சிமன்ற (அங்கீகரிக்கப்பட்ட துணைச் சட்டம்) 2 ஆவது வாக்கியத்தின் கீழ் செய்யப்பட்ட வரைவின் துணைச் சட்டம் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*அந்த வரைவு துணைச் சட்டங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளில் உள்ளடங்கிய துணைச் சட்டம் தயாரிப்பதற்கு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆவது வாக்கியத்துடன் கூறப்படவேண்டிய 126 ஆவது வாக்கியத்தின் மூலம் பிரதேச சபைக்கு அதிகாரம் கிடைத்துள்ளதுடன், துணைச் சட்டம் மேற்குறிப்பிட்ட 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சிமன்ற (அங்கீகரிக்கப்பட்ட துணைச் சட்டம்) சட்டத்தின் 2 ஆவது வாக்கியத்தில் 3 ஆவது உப வாக்கியத்தில் ஏற்பாடுகளின் கீழ் ஏற்றுக்கொள்வதற்கு ஊவா மாகாணத்தின் அனைத்து பிரதேச சபைகளுக்கும் இதன் மூலம் அதிகாரம் வழங்கப்படுகின்றது.*

*சஷிந்திர ராஜபக்ஷ,*
*ஊவா மாகாண முதலமைச்சர் மற்றும் நிதி முறை தயாரிப்பு,*
*நீதி மற்றும் சமாதானம், கல்வி, உள்ளூராட்சிமன்றம், கலாசார*
*அலுவல்கள், போக்குவரத்து, காணி, நீர்ப்பாசன, பொருளாதார மேம்பாட்டு*
*மற்றும் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி மற்றும்*
*கட்டிட அமைப்பு அலுவல்கள் அமைச்சர்,*
*ஊவா மாகாணம்.*

*பதுளை,*
*2013, யூன் 24.*

**துணைச் சட்டம்**

*1 ஆவது பிரிவு*

**அனைத்து அங்கீகாரம்பெற்ற துணைச் சட்டங்கள் கருத்து கூறலுக்குரிய துணைச் சட்டம்**

*இந்த அதி விசேட வர்த்தமானியில் உள்ள 2 ஆவது பிரிவு முதல் 27 ஆவது பிரிவு வரை குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து அங்கீகரிக்கப்பட்ட துணைச் சட்டம் கருத்து கூறுகையில் பிரதேச சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட துணைச் சட்டத்தில் குறிப்பிடப்படும்.*

(i) *''பிரதேச சபை'' என குறிப்பிடுவது அந்த பிரதேச சபையையும் ;*
(ii) *''தவிசாளர்'' என குறிப்பிடுவது அந்த பிரதேச சபையின் தவிசாளரும் ;*
(iii) *''செயலாளர் '' என குறிப்பிடுவது அந்த பிரதேச சபையின் செயலாளரும் ;*
(iv) *''பிரதேச சபை பிரதேசம்'' என குறிப்பிடுவது அந்த பிரதேச சபையின் அதிகார பிரதேசமும் ;*
(v) *''வேறு உத்தியோகத்தர் அல்லது அதிகாரமுள்ள உத்தியோகத்தர்'' என குறிப்பிடுவது தவிசாளரினால் அதிகாரம் வழங்கப்பட்ட எந்த ஒரு உத்தியோகத்தரும்.*
(vi) *''விண்ணப்பதாரர்'' என குறிப்பிடுவது அனுமதிப்பத்திரம், உத்திரவுப்பத்திரம் அல்லது சேவை பெற்றுக்கொள்ள விண்ணப்பிப்பவரும் என கருதப்படும்.*

*2 ஆவது பிரிவு*

**பிரதேச சபைக்கு அல்லது சபையின் நிர்வாகத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அசையா சொத்து முகாமைத்துவம்**

கருத்தரங்கு மண்டபம்

*1. பிரதேச சபையினால் நடாத்தப்படும் அல்லது பிரதேச சபைக்குரிய அல்லது பிரதேச சபை நிர்வாகத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள கருத்தரங்கு மண்டபம் பராமரிப்பு, முகாமைத்துவம் மற்றும் அவைகள் பாவிப்பதற்கான கட்டணம் தயாரித்தல் தொடர்பான துணைச் சட்டமாகும்.*

*2. பிரதேச சபையினால் நடாத்திச் செல்லும் கூட்ட மண்டம் அல்லது கருத்தரங்கு மண்டபத்தை பாவிப்பதற்காக அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள கருதும் ஒருவரினால் இந்த துணைச் சட்டத்தில் முதலாம் அட்டவணையில் காணப்படும் மாதிரி தயாரிக்கப்பட்ட விண்ணப்பபத்திரமொன்றை பூர்த்தி செய்து பிரதேச சபைக்கு முன்வைக்க வேண்டும்.*

3. (அ) பிரதேச சபையின் கருத்தரங்கு மண்டபத்தை பாவிப்பதற்காக அனுமதி பெறுவதற்கான அனைத்து விண்ணபத்திரமும் பிரதேச சபை காரியாலயத்திற்கு கிடைத்த முறைப்படி கவனத்தில் கொள்ள வேண்டும். அவ்வாறாயினும் கருத்தரங்கு மண்டபத்தை பாவிப்பதற்காக கிடைக்கும் விண்ணப்பப்பத்திரங்களில் அரச ஸ்தாபனங்களினால் வேண்டுகோள் விடுக்கப்படும் விண்ணப்பங்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் ;

(ஆ) பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் நிர்ணயிக்கப்படும் விதத்தில் கருத்தரங்கு மண்டபத்தை பாவிப்பதற்கான கட்டணம் மற்றும் பாதுகாப்பு வைப்பு பணம் செலுத்திய பின்னர் மாத்திரம் அனுமதிபத்திரம் விநியோகிக்க வேண்டும் ;

அந்த கட்டணம் மற்றும் பாதுகாப்பு வைப்பு பணம் பிரதேச சபையினால் காலத்திற்குக் காலம் நிர்ணயிக்கும் போது அந்த கட்டண தொகையை வருடாந்த அரச வர்த்தமானி பத்திரத்தின் மூலம் அறிவிக்க வேண்டும்.

4. கருத்தரங்கு மண்டபத்தை பாவிப்பதற்கான விண்ணப்பப்படித்தை மண்டபம் தேவைப்படும் திகதிக்கு குறைந்தபட்சம் வேலை செய்யும் தினங்களில் மூன்று நாட்களுக்குள் முன்வைக்க வேண்டும்.

5. கருத்தரங்கு மண்டபத்திற்கு அருகில் உள்ள பாடசாலைகளுக்கு மற்றும் அதனை சுற்றியுள்ள அரச காரியாலயங்களின் கடமைகளுக்கு மற்றும் தனியார் இல்லங்களுக்கு இடையூறு ஏற்படாதவாறு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். ஒலிபெருக்கி மற்றும் வேறு விதமான ஒலி பெருக்கிகள் பாவிப்பதாயின் அதற்கான விசேட அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டும்.

6. கருத்தரங்கு மண்டபத்திற்குள் மதுபானம் அருந்துதல் மற்றும் புகைபிடித்தல் செய்யக் கூடாததுடன், சூதாட்டம் அல்லது வேறு விதமான துஷ்பிரயோகங்களில் ஈடுபடுதல் கூடாது. கருத்தரங்கு மண்டபத்தை பாவிக்கும் தினங்களில் பயன்படுத்தும் அலங்கார பொருட்கள் மற்றும் வேறு அசுத்த பொருட்களை முறையாக உரிய இடங்களில் போடுதல் வேண்டும்.

7. கருத்தரங்கு மண்டபத்தை ஒதுக்கிக் கொண்டதன் பின்னர் அதை இரத்துச் செய்துகொள்ள வேண்டுமானால், விண்ணபதாரருக்கு தேவையான தருணத்தில் கீழ்க்காணும் விதிமுறைகளின் கீழ் இடமளிக்க பிரதேச சபை தவிசாளருக்கு அல்லது செயலாளருக்கு வாய்ப்பு உள்ளது.

(அ) மேற்குறிப்பிடப்பட்ட இடத்தை ஒதுக்குதலை இரத்துச் செய்ய வேண்டுமானால் வைப்பு செய்யப்பட்டுள்ள பணத்தில் 10% மான தொகையினை பிரதேச சபையின் நிதியத்திற்கு செலுத்த வேண்டும் ;

8. (அ) எவரேனும் வைப்பாளரினால் ஒதுக்கிக்கொண்ட கருத்தரங்கு மண்டபத்தை ஒதுக்கிக்கொண்ட விடயத்தை தவிர்ந்த வேறு விடயத்திற்கு பாவிக்கக் கூடாது ;

(ஆ) கருத்தரங்கு மண்டபத்தை ஒதுக்குவதற்காக விநியோகிக்கப்படும் உத்தரவுப்பத்திரத்தை எக்காரணம் கொண்டும் வேறு நபருக்கு ஒப்படைக்கக் கூடாது.

(இ) எவராவதொரு வைப்பாளரினால் கருத்தரங்கு மண்டபத்தை ஒதுக்கிக் கொள்வதற்காக செய்யும் வேண்டுகோளுக்கு இடமளிக்காத தருணத்தில் அவ்வாறு இடமளிக்க முடியாததற்கான காரணத்தை குறிப்பிட்டு அந்த விடயத்தை விண்ணப்பப்பத்திரத்தை முன்வைக்கும் தினத்திலேயே அந்த விண்ணப்பதாரருக்கு எழுத்து மூலமாக அறிவிக்க வேண்டும்.

9. ஏதாயினுமொரு விடயத்திற்காக ஒதுக்கிக் கொண்ட கருத்தரங்கு மண்டபத்தை அவ்வாறு ஒதுக்கிக்கொண்ட திகதியை மாற்றிக்கொள்ள தேவையாயின் விண்ணபதாரர்யினால் அது தொடர்பாக எழுத்து மூலமாக வேண்டுகோள் விடுக்க முடியும். அந்த வேண்டுகோளின்படி ஒதுக்கிய திகதியை திருத்தம் செய்தல் 3 ஆவது மற்றும் 4 ஆவது வாக்கியங்களில் நியமங்களுக்கு உள்வாங்க வேண்டும்.

10. ஏதாயினுமொரு காரியத்துக்காக ஒதுக்கப்பட்ட கருத்தரங்கு மண்டபம் குறித்த காரியத்துக்காகப் பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சபையில் வைப்புச் செய்யப்பட்ட பணத்தின்,

(அ) கருத்தரங்கு மண்டபத்திலுள்ள உபகரணங்கள் மற்றும் பொருத்தப்பட்டுள்ளவை சம்பந்தமாக ஏதாவது சேதம் ஏற்பட்டிருந்தால் அதற்கான நட்டத்தின் பெறுமதி மற்றும் ;

(ஆ) கருத்தரங்கு மண்டபத்தை ஒதுக்கிக்கொண்ட கால எல்லையைவிட கூடுதலாக பயன்படுத்திக் கொண்ட காலத்துக்காக அறிவிடப்படவேண்டிய கட்டணத்தைக் கழித்துக்கொண்டதன் பின்னர் மிகுந்திருக்கும் தொகையினை மாத்திரம் விண்ணபதாரர்க்கு மீளளிக்க இயலும்.

11. கருத்தரங்கு மண்டபத்தினைப் பயன்படுத்துகின்ற சந்தர்ப்பத்தில் வருகின்ற வாகனங்கள், மோட்டார் சைக்கில்கள், மிதிவண்டிகள் ஆகிய அனைத்தையும் கட்டிடத்துக்கு இடையூறு ஏற்படாத வகையில் அவ் வளவினுள் நிறுத்தி வைக்கலாம்.

12. இந்த துணைச் சட்டத்தின் கீழ் ஒதுக்கிக் கொள்ளப்பட கருத்தரங்கு மண்டபம் பிரதேச சபையின் அத்தியாவசிய விடயங்களுக்காக தேவைப்படும் போது அந்த ஒதுக்கிக் கொள்ளலை இரத்துச் செய்வதற்கு பிரதேச சபையின் தவிசாளருக்கு அதிகாரம் இருக்க வேண்டும். அது தொடர்பாக விண்ணப்பதாரருக்கு ஒதுக்கிக் கொள்ளப்பட்ட திகதிக்கு 3 தினங்களுக்கு முன்னர் அறிவிக்க வேண்டியதுடன், விண்ணப்பதாரரினால் செலுத்தப்பட்ட கட்டணம் மற்றும் வைப்புப் பணம் முழுமையாக அவருக்கு மீண்டும் செலுத்த வேண்டும்.

13. இந்த துணைச் சட்டத்தில் எந்தவொரு நடவடிக்கைகளை மீறுதல் குற்றமாவதுடன், உரிய அதிகாரமுள்ள நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டதன் பின்னர் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தில் 122 (2) வாக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தண்டங்களுக்கு உள்ளாக வேண்டும்.

### 1 ஆவது அட்டவணை

பிரதேச சபையின் கீழ் அமைந்துள்ள .......................... கருத்தரங்கு மண்டபம் உபயோகப்படுத்துவதற்காக அனுமதி பெற்றுக்கொள்ளும் விண்ணப்பப்பத்திரம்

1. விண்ணப்பதாரரின்/ஸ்தாபனத்தின் பெயர் :..............................................................................................
2. முகவரி :..............................................................................................................................................
3. தேசிய அடையாள அட்டை இலக்கம் :..............................................................................................................
4. கூட்ட மண்டபத்தை ஒதுக்கிக் கொள்ளும் காரணம் :..................................................... ...................................... ................ .............
5. தேவைப்படும் திகதி மற்றும் நேரம்

| திகதி முதல் | திகதி வரை | நேரம் |
|---|---|---|
| .............................. | .................... | ........................................... |

6. மண்டபத்தை பாவிப்பதற்கு வெளியிலிருந்து கொண்டுவரும் உபகரணங்கள், மர தளபாடங்கள் மற்றும் ஒலிபெருக்கி உபகரணங்களின் விபரம் :.......................................................................................................................................... ..........................................................................................................................................

மேல் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மையானவை என்றும் சரியானதென்றும் உறுதியளிக்கின்றேன். இந்த வேண்டுகோளின்படி குறித்த கூட்ட மண்டபத்தின் கட்டிடத்திற்கு, அமைப்புகளுக்கு, உபகரணங்களுக்கு மற்றும் இணைப்புகளுக்கு ஏதேனும் பாதிப்புகள் ஏற்பட்டால் அதன் நட்டத்தை வைப்பு பணத்தில் பிரதேச சபையினால் அறவிட்டுக் கொள்வதற்கு இணங்குவதுடன், அந்த வைப்புப்பணம் குறித்த நட்டத்திற்கு போதுமானதாக அல்லாத தருணத்தில் மேலும் தேவைப்படும் பணத்தை பிரதேச சபைக்கு செலுத்த இணங்குகின்றேன். அதேபோல் கருத்தரங்கு மண்டபத்தை கண்காணித்தல் மற்றும் பராமரித்தல் தொடர்பான துணைச் சட்ட நடவடிக்கையை கடைபிடிக்க உடன்படுகின்றேன்.

| | |
|---|---|
| ............................... | ................................ |
| திகதி | ஒப்பம் |

3 ஆவது பிரிவு

### பிரதேச சபைக்கு அல்லது சபையின் அதிகாரத்தின் கீழ் ஒப்படைக்கப்பட்டுள்ள அசையா சொத்து முகாமைத்துவம் சனசமூக நிலையம்

1. ............................. பிரதேச சபைக்கு அல்லது பிரதேச சபையின் நிர்வாகத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள சனசமூக நிலையங்கள் பராமரிப்பு முகாமைத்துவம் மற்றும் அவைகளை பாவிப்பதற்காக கட்டணம் தயாரித்தல் தொடர்பான துணைச் சட்டமாகும்.

2. .....................................பிரதேச சபையினால் நடாத்தப்படும் சனசமூக நிலையம் ஒன்றை உபயோகிப்பதற்காக உத்தரவுப் பத்திரம் பெற்றுக்கொள்வதற்கு கருதும் எவரேனும் ஒருவரினால் இந்த துணைச் சட்டத்தில் முதலாவது அட்டவணையில் குறிப்பிட்டுள்ள மாதிரிக்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்ப பத்திரத்தை பூர்த்தி செய்து சமர்ப்பிக்க வேண்டும்.

3. 2 ஆம் துணைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறான விண்ணப்பப்படிவம் ஒன்றினைச் சமர்ப்பித்தயாராயினும் ஒருவருக்கு..........................................................பிரதேச சபையினால் நடாத்தப்படுகின்ற சனசமூக நிலையமொன்றினைப் பயன்படுத்துவதற்காக அனுமதிப்பத்திரம் வழங்கும் போது இங்கே குறிப்பிடப்படுகின்ற நிபந்தனைகளைப் பூர்த்தி செய்திருந்தால் தவிர தலைவரினால் அனுமதிப்பத்திரம் வழங்கப்படக்கூடாது.

(அ) சனசமூக நிலையமொன்றினை பயன்படுத்துவதற்கு பெற்றுக்கொள்வதற்காக அனுமதிப்பத்திரம் கோருவதற்கான ஒவ்வொரு விண்ணப்பப்படிவமும் ...................................................... பிரதேச சபைக் காரியாலயத்துக்குக் கிடைக்கப்பெற்ற ஒழுங்கின்படி கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். அவ்வாறாயினும் சனசமூக நிலையம் அமைந்துள்ள பிரதேசத்தின் எதாயினுமொரு அரச நிறுவனத்தின் கூட்டமொன்று அல்லது அத்தகைய அமைப்பொன்றினால் நடாத்தப்படுகின்ற பகிரங்கக் காரியம் ஒன்றுக்காக முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும் ;

(ஆ) ...................................................... பிரதேச சபையினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படும் வகையில் சனசமூக நிலையத்தினை ஒதுக்கிக்கொள்ளும் கட்டணம் மற்றும் வைப்புப் பணம் ஆகியன செலுத்தப்பட்டதன் பின்னர் மாத்திரமே அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படல் வேண்டும் ;

(இ) சனசமூக நிலையங்களை ஒதுக்கிக்கொள்ளும் கட்டணம் மற்றும் வைப்புப் பணத்தொகைகள் காலத்துக்குக் காலம்................ பிரதேச சபையினால் நிர்ணயிக்கப்பட்டதன் பின்னர் குறித்த பணத்தொகைகள் வருடாந்தம் அரசாங்க அதி விசேட வர்த்தமானியின் ஊடாகவே வெளியிடப்பட்டிருக்க வேண்டும். சனசமூக நிலையம் அமைந்துள்ள பிரதேசத்தின் யாதேனுமொரு அரச நிறுவனத்தின் கூட்டமொன்று அல்லது அத்தகைய அமைப்பொன்றினால் நடாத்தப்படுகின்ற பகிரங்கக் காரியம் ஒன்றுக்காக எதுவித கட்டணமும் அறவிடப்படக்கூடாது.

4. பாவிப்பதற்காக சனசமூக நிலையமொன்றினை ஒதுக்கிக் கொள்வதற்கான விண்ணப்பத்திரம், சமர்ப்பித்தல், அதனை ஒதுக்கிக் கொள்ள வேண்டிய தினத்திற்கு குறைந்தபட்சம் மூன்று தினங்களுக்கு முன்னர் செய்தல் வேண்டும். அவ்வாறாயினும்................ பிரதேச சபை அதிகார பிரிவுக்குள் வாழ்ந்து வந்த எவருடையதேனும் அல்லது அவ்வாறானவரின் உறவினரின் பூதவுடல் பொதுமக்களின் அஞ்சலிக்காக தற்காலிகமாக வைப்பதற்காக சன சமூக நிலையம் ஒன்றை ஒதுக்கிக் கொள்ள செய்யப்படும் வேண்டுகோளுக்கு இந்த கால எல்லை கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது. எவராவது ஒருவரினால் செய்யப்படும் வேண்டுகோள் சனசமூக நிலையத்தை ஒதுக்கிக்கொள்ள தேவையான திகதிக்கு மூன்று தினங்களுக்கு முன்னர் எந்த தருணத்திலும் சமர்ப்பிக்க முடியும். அந்த வேண்டுகோளின்படி செய்யப்படும் ஒதுக்கிக்கொள்ளல் 3 ஆவது வாக்கியத்தில் நடைமுறையின்கீழ் செய்யப்பட வேண்டும்.

5. இந்த சட்டத்தின்படி ஒதுக்கிக் கொள்ளப்பட ஏதேனுமொறு சனசமூக நிலையம் அவ்வாறு ஒதுக்கிக் கொண்டதை இரத்துச் செய்ய விண்ணப்பதாரருக்கு வேண்டிய தருணத்தில் கீழ்க்காணும் நடவடிக்கையின் கீழ் இடமளிக்க தவிசாளருக்கு முடியும்.

(அ) ஒதுக்கிக் கொண்டதை இரத்துச் செய்வதற்கு வேண்டுகோள் விடுப்பது சன சமூக நிலையத்தை ஒதுக்கிக் கொண்ட திகதிக்கு ;

(i) பதினைந்து நாட்களுக்கு முன்னரானால் செலுத்திய கட்டணத்தில் 10 % ;

(ii) மூன்று தினங்களுக்கு முன்னர் செலுத்திய கட்டணத்தில் 25% பிரதேச சபை நிதியத்திற்கு செலுத்த உடன்பட வேண்டும்.

(ஆ) ஒதுக்கிக் கொண்டதை இரத்துச் செய்வதற்கு வேண்டுகோள் விடுப்பது சனசமூக நிலையத்தை ஒதுக்கிக் கொண்ட திகதிக்கு மூன்று தினங்களிலும் குறைவான காலத்திலென்றால் செலுத்திய கட்டணம் மீளளிக்கக்கூடாது ;

(இ) எந்த ஒரு ஒதுக்கிக் கொள்ளலையும் இரத்துச் செய்து கொண்ட போது அவ்வாறு ஒதுக்கிக் கொண்டதற்காக செலுத்திய வைப்பு பணத்தை முழுமையாக பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பதாரருக்கு உரிமை இருக்க வேண்டும் ;

(ஈ) எவராவதொரு வைப்பாளரினால் ஒதுக்கிக் கொண்ட சனசமூக நிலையத்தை ஒதுக்கிக் கொண்ட விடயத்திற்கு தவிர்ந்த வேறு எவ்விதமான விடயத்திற்கும் உபயோகித்தல் கூடாது;

(உ) சனசமூக நிலையம் ஒன்றை ஒதுக்கிக் கொள்ள விநியோகிக்கும் உத்தரவுப்பத்திரம் எந்த காரணம் கொண்டும் வேறு எவருக்கும் ஒப்படைக்கக் கூடாது ;

(ஊ) உபயோகத்திற்காக சனசமூக நிலையத்தை ஒதுக்கிக் கொண்டவரினால் முறையான அனுமதிப்பத்திரம் அல்லது அந்த சூழலில் ஒலிபெருக்கி இயந்திரம் பாவிக்கக்கூடாது.

*6. எவரேனும் ஒரு வைப்பாளரினால் சனசமூக நிலையத்தை ஒதுக்கிக் கொள்வதற்காக செய்யப்படும் வேண்டுகோளுக்கு இடமளிக்காத தருணத்தில் அவ்வாறு இடமளிக்க முடியாததற்கான காரணத்தை குறிப்பிட்டு விண்ணப்பத்தை சமர்ப்பித்த தினத்திலேயே விண்ணப்பதாரருக்கு எழுத்துமூலமாக அறிவிக்க வேண்டியது தவிசாளரின் விடயமாகும்.*

*7. ஏதேனுமொரு விடயத்திற்காக ஒதுக்கிக் கொள்ளப்பட்ட சனசமூக நிலையத்தை அவ்வாறு ஒதுக்கிக் கொண்ட திகதியை மாற்றிக் கொள்ள தேவையாயின் விண்ணப்பதாரரினால் அது தொடர்பாக எழுத்துமூலமாக தவிசாளரிடம் வேண்டுகோள் விடுக்க முடியும். அந்த வேண்டுகோளின்படி ஒதுக்கிக் கொண்ட திகதியை திருத்தம் செய்தல் 3 ஆவது மற்றும் 4 ஆவது துணைச் சட்டத்தின் நியமங்களின் கீழ் நடைபெற வேண்டும்.*

*8. ஏதேனுமொறு விடயத்திற்காக ஒதுக்கிக் கொள்ளப்பட்ட சனசமூக நிலையத்தை குறித்த விடயத்திற்காக பயன்படுத்திய பின்னர் பிரதேச சபையில் வைப்பு செய்யப்பட்ட வைப்பு பணத்தில்,*

(i) *சனசமூக நிலையத்தை அல்லது அதன் ஒது பகுதிக்கு அல்லது அதிலுள்ள உபகரணங்களுக்கு ஏதேனும் நட்டம் ஏற்பட்டிருந்தால் அந்த நட்டத்தின் பெறுமதி மற்றும் ;*

(ii) *சனசமூக நிலையத்தை ஒதுக்கிக் கொண்ட காலத்திற்கும் பார்க்க அதிகமாக எடுத்துக் கொண்ட காலத்திற்காக அறவிடவேண்டிய கட்டணத்தை, கழித்துக் கொள்வதன் பின்னர் மீதியாகும் பணம் மாத்திரம் விண்ணப்பதாரருக்கு மீண்டும் செலுத்த முடியும்.*

*9. எவரேனுமொரு வைப்பாளரினால்..................... பிரதேச சபைக்குரிய ஏதாவதொரு சனசமூக நிலையத்திற்கு பாதிப்பு ஏற்படுத்துதல், அல்லது அவ்வாறு பாதிப்படைய செய்தல் கூடாததுடன், சனசமூக நிலையத்திற்குள் புகை பிடித்தல், மதுபானம் அருந்துதல், சூது விளையாடல், அல்லது ஏதேனும் முறைகேடான விடயங்களில் ஈடுபடக்கூடாது.*

*10. இந்த துணைச் சட்டத்தின் கீழ் ஒதுக்கிக் கொள்ளப்பட்ட ஏதேனுமொரு சனசமூக நிலையத்தை அவ்வாறு ஒதுக்கிக் கொண்ட தினத்தில் ................. பிரதேச சபையின் ஏதேனும் தேவைக்காக தேவைப்படும் போது அந்த ஒதுக்குதலை இரத்துச் செய்வதற்கு தவிசாளருக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும். அவ்வாறாயினும் அவ்வாறான இரத்துச் செய்தல் செய்யப்படுவதாயின் அந்த இரத்துச் செய்தலை சனசமூக நிலையத்தை ஒதுக்கிக் கொண்ட திகதிக்கு மூன்று தினங்களுக்கு முன்னர் விண்ணப்பதாரருக்கு எழுத்துமூலமாக அறிவிக்க வேண்டும். அவரால் செலுத்தப்பட்ட கட்டணம் மற்றும் வைப்பு பணத்தை முழுமையாக அவருக்கு மீளளிக்கப்பட வேண்டும். மேலும் அதே போன்ற இரத்துச் செய்தல் ஒதுக்கிக் கொண்ட திகதிக்கு முன்னர் மூன்று தினங்களுக்கு குறைந்த காலத்தில் செய்யக் கூடாது.*

*11. இந்த துணைச் சட்டத்தின் குறிப்பிட்டுள்ள விடயங்கள் நடைமுறைப்படுத்துவதற்கு அதிகாரம்............ பிரதேச சபையினால் நியமம் செய்யப்படும் உரிய உத்தியோகத்தருக்கு அல்லது உத்தியோகஸ்தர்களுக்கு ஒப்படைக்க முடியும் .*

*12. 11 ஆம் வாக்கியத்தின்படி அதிகாரம் வழங்கப்படும் அதிகாரிக்கு அல்லது அதிகாரிகளுக்கு பாவனைக்காக அதிகாரமளிக்கப்பட்டுள்ள அந்த சூழலுக்கு பிரவேசிப்பதற்கு இந்த துணைச் சட்டத்தின் மூலம் அதிகாரமளிக்கப்படுகின்றது.*

*13. 11 ஆவது வாக்கியத்தின்படி அதிகாரம் வழங்கப்படும் உத்தியோகத்தர் அல்லது உத்தியோகத்தர்கள் சனசமூக நிலையத்தை ஒதுக்கிக் கொள்ளும் நபருக்கு அல்லது அவர்களுடைய குறித்த விடயங்களுக்கு இடையூறு ஏற்படாத விதத்தில் தமது கடமையில் ஈடுபட வேண்டும்.*

*14. சனசமூக நிலையத்தை பாவிப்பதற்காக பெற்றுக் கொள்ளப்படும் நபர்களினால் கண்காணிப்பு கடமைக்காக வருகை தரும் உத்தியோகத்தர் அல்லது உத்தியோகத்தர்களின் கடமைகளுக்கு இடையூறு ஏற்படுத்தக்கூடாது.*

*15. இந்த துணைச் சட்டத்தின் ஏதேனுமொரு நடவடிக்கை மீறுதல் குற்றமாவதுடன், உரிய அதிகாரமுள்ள நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டதன் பின்னர் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபை சட்டத்தின் 122 (2) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தண்டனைகளுக்கு உள்ளாக நேரிடும்.*

*16. பதம் சம்பந்தமாக வேறு அர்த்தம் தேவையாயின் இந்த பிரிவில் துணைச் சட்டங்களில் -*

*"பொது விடயங்கள்" என்பது ...................... பிரதேச சபை பிரதேசத்திற்குள் வசிக்கும் மக்களின் பொது நன்மைகளுக்காக அல்லது தேவைப்பாடுகள் நிமித்தம் ஏதேனும் அரச ஸ்தாபனத்தினால் ஏற்பாடு செய்யப்படும் ஏதேனும் கூட்டம், கலந்துரையாடல், வைத்திய சிகிச்சை, உதவி வழங்கும் விடயங்கள் போன்ற தன்மைகளில் வரும் ஏதேனும் விடயங்கள் அல்லது சமயம் அல்லது சமூக விடயங்கள் எனக் கருதப்படுவதுடன், ஏதேனும் வணிக தன்மையுடைய விடயங்கள் அதற்கு உள்ளடங்கக் கூடாது.*

"சனசமூக நிலையம்" என்பது ............... பிரதேச சபையினால் நடாத்திச் செல்லப்படும் பொதுப் பாவனைக்காக ஒதுக்கப்பட்டுள்ள ஏதேனும் காணி அல்லது சூழல் எனக் கருதப்படுவதுடன் அதனைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள மதிற் சுவர் அல்லது அதனுள் அமைக்கப்பட்டுள்ள ஏதேனும் கட்டிடம் அல்லது ஏதேனும் அமைப்புகளின் ஒரு பகுதி அல்லது ஏதேனும் பொருத்தங்கள் அல்லது உபகரணங்கள் அதனுள் உள்ளடங்க வேண்டும்.

"அரச ஸ்தாபனம்" என்பது, அரசாங்க அல்லது மாகாண சபையின் அல்லது உள்ளூராட்சிமன்ற ஸ்தாபனங்களுக்கு மற்றும் கண்காணிப்பிற்கு உட்பட்ட எந்தவொரு ஸ்தாபனம் எனக் கருதப்படும்.

*முதலாவது அட்டவணை*

**விண்ணப்பத்திரம்**

............................ பிரதேச சபையில் ..................................... அமைந்துள்ள சனசமூக நிலையத்தை பாவிப்பதற்காக அனுமதி பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பப்பத்திரம்

(1) விண்ணப்பதாரர்/ஸ்தாபனத்தின் பெயர் :----.
விலாசம் :----.
தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
(2) சனசமூக நிலையத்தினைக் கோருவதற்கான காரணம் :---.
(3) தேவைப்படும் திகதி மற்றும் நேரம் :----.

| திகதி முதல் | திகதிவரை | நேரம் |
|---|---|---|
| .................................. | .................................. | .................................. |
| .................................. | .................................. | .................................. |
| .................................. | .................................. | .................................. |
| .................................. | .................................. | .................................. |

மேற்குறிப்பிட்டுள்ள விடயங்கள் அனைத்தும் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் உறுதியளிக்கின்றேன். இந்த வேண்டுகோளுக்கமைய குறித்த சனசமூக நிலையத்தை ஒதுக்கித் தந்தால் அந்த சனசமூக நிலையத்தின் கட்டிடத்திற்கு, அமைப்புகளுக்கு, உபகரணங்களுக்கு மற்றும் பொருத்தப்பட்டுள்ளவற்றுக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டால் அதன் நட்டத்தை பணத்தில்.......................... பிரதேச சபையினால் அறவிட்டுக் கொள்வதற்கு இணங்குவதுடன், அதன் வைப்பு பணம் அந்த அறவீட்டுகளுக்கு போதாத விடத்து மேலும் தேவைப்படும் பணம்.................................. பிரதேச சபைக்கு செலுத்த இணங்குகின்றேன். அதே போன்று சனசமூக நிலையம் தொடர்பான துணைச் சட்டங்களின் விதிமுறைகளை ஏற்றுக்கொள்ளவும் இணங்குகின்றேன்.

.............................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :.........................

(அரச ஸ்தாபனமாயின் தலைமை அதிகாரியின் கையொப்பத்துடன் பதவி முத்திரை இடவேண்டும்.)

4 ஆவது பிரிவு

**பிரதேச சபைக்கு அல்லது சபையின் அதிகாரத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அசையா சொத்து முகாமைத்துவம்**

விளையாட்டு மைதானம்

1. பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அல்லது சபையின் நிர்வாகத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள விளையாட்டு மைதானம் மற்றும் விளையாட்டரங்கு பராமரிப்பு மற்றும் முகாமைத்துவம் மற்றும் அவைகளை பாவித்தலுக்கான கட்டணம் அறவிடுதல் சம்பந்தமான துணைச் சட்டம்.

2. பிரதேச சபைக்குரிய விளையாட்டு மைதானம் மற்றும் விளையாட்டரங்குகளை பாவிப்பதற்காக அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கு கருதும் ஒருவர் இங்கு முதலாவது அட்டவணையில் காணப்படும் மாதிரியின்படி தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்பத்திரம் ஒன்றை சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

3. விளையாட்டு மைதானம் மற்றும் விளையாட்டரங்கு பயன்பாட்டிற்கு பெற அனுமதி பெறுவதற்கான அனைத்து விண்ணப்பப்பத்திரமும் பிரதேச சபை காரியாலயத்திற்கு கிடைத்த வரிசை கிரமத்தின்படி கவனத்தில் கொள்ள வேண்டும். அவ்வாறாயினும் விளையாட்டரங்கு பாவிப்பதற்கு கிடைக்கும் விண்ணப்பங்களில் ஏதாவதொரு விளையாட்டு அல்லது விளையாட்டிற்கு சம்பந்தமான ஏதேனும் விடயம் சம்பந்தமான விண்ணப்பப்பத்திரத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட வேணடும்.

4. பிரதேச சபையினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படும் விதத்தில் விளையாட்டு மைதானம் மற்றும் விளையாட்டரங்கு ஒதுக்கிக் கொள்ளும் கட்டணம் மற்றும் பாதுகாப்பு வைப்பு பணம் செலுத்திய பின்னர் மாத்திரம், உத்தரவுப்பத்திரம் விநியோகிக்க வேண்டும். அந்த கட்டணம் மற்றும் பாதுகாப்பு வைப்பு பணம் பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் நியமிக்கையில் அந்த தொகையை வருடாந்த அரச வர்த்தமானியின் மூலம் அறிவிக்கப்பட வேண்டும்.

5. விளையாட்டு மைதானம் மற்றும் விளையாட்டரங்கு பாவிப்பதற்கான விண்ணப்பபத்திரத்தை அதனை ஒதுக்கிக்கொள்ள கருதும் திகதிக்கு மூன்று வேலை நாட்களுக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும்.

6. விளையாட்டு மைதானத்திற்கு அருகில் உள்ள பாடசாலைகளுக்கு அதனை சுற்றியுள்ள அரச காரியாலயங்களின் கடமைகளுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு ஏற்பாடுகள் மேற்கொள்ள வேண்டும்.

7. விளையாட்டு மைதானம் மற்றும் விளையாட்டரங்கிற்குள் மதுபானம் அருந்தக் கூடாததுடன், விழா நடைபெறும் திகதிகளில் பாவிக்கப்படும் தோரணங்கள், மற்றும் வேறு கழிவுப் பொருட்களை முறையாக குறித்த இடங்களில் போட வேண்டும்.

8. மேற்குறித்தவாறு ஒதுக்கிக் கொண்ட விளையாட்டு மைதானம் மற்றும் விளையாட்டரங்கு அவ்வாறு ஒதுக்கிக் கொண்டதை இரத்துச் செய்துகொள்ள விண்ணப்பதாரருக்கு தேவைப்படும் தருணத்தில் கீழ்க்காணும் விதிமுறைகளின் கீழ் இடமளிக்க பிரதேச சபையின் தவிசாளருக்கு அல்லது செயலாளருக்கு வாய்ப்பு உண்டு.

(அ) விளையாட்டு மைதானம் மற்றும் விளையாட்டரங்கு ஒதுக்கிக் கொள்வதற்காக செலுத்தப்பட்ட கட்டணம் அன்றைய தினமே பிரதேச சபை நிதியத்தில் வைப்பு செய்யப்படுவதால், அந்த பணம் மீளளிக்கப்படமாட்டாது.

(ஆ) வைப்புப் பணமாக பெற்றுக்கொள்ளும் பணம் மாத்திரம் விண்ணப்பதாரருக்கு மீண்டும் செலுத்தப்படும்.

9. (அ) எவரேனும் ஒரு நபரினால் ஒதுக்கிக் கொள்ளப்பட்ட விளையாட்டு மைதானம் மற்றும் விளையாட்டரங்கு ஒதுக்கிக் கொள்ளப்பட்ட விடயத்துக்கு அல்லாது வேறு எந்த ஒரு விடயத்துக்காகவும் பயன்படுத்தக் கூடாது.

(ஆ) விளையாட்டு மைதானம், விளையாட்டரங்கு ஒதுக்கிக் கொள்வதற்காக விநியோகிக்கப்படும் அனுமதிப்பத்திரம் எக்காரணம் கொண்டும் வேறு நபருக்கு ஒப்படைத்தல் செய்யக்கூடாது.

10. எவரேனும் ஒரு நபரினால் விளையாட்டு மைதானத்தை ஒதுக்கிக் கொள்வதற்காக செய்யப்படும் வேண்டுகோளுக்கு இடமளிக்காத தருணத்தில் அவ்வாறு இடமளிக்க முடியாததற்கான காரணத்தை குறிப்பிட்டு அதனை விண்ணப்பத்தை சமர்ப்பித்த தினத்திலேயே விண்ணப்பதாரருக்கு எழுத்து மூலமாக அறிவிக்க வேண்டும்.

11. ஏதேனுமொரு விடயத்திற்காக ஒதுக்கிக் கொள்ளப்பட்ட விளையாட்டு மைதானம் மற்றும் விளையாட்டரங்கு அவ்வாறு ஒதுக்கிக் கொண்ட திகதியை மாற்றிக் கொள்ள தேவையாயின் விண்ணப்பதாரரினால் அது தொடர்பாக எழுத்து மூலமாக வேண்டுகோள் விடுக்க முடியும். அந்த வேண்டுகோளின்படி ஒதுக்கிக்கொண்ட திகதியை திருத்தம் செய்தல் 3 ஆவது மற்றும் 4 ஆவது துணைச் சட்டத்தின் நியமங்களின்கீழ் நடைபெற வேண்டும்.

12. இந்த துணைச் சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளின்படி விளையாட்டு மைதானம் ஏதேனும் ஒரு விடயத்திற்காக ஒதுக்கப்படாத ஏதேனுமொரு தருணத்தில் அந்த விளையாட்டு மைதானத்தை விளையாடுவதற்கு அல்லது விளையாட்டு பயிற்சி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்த பிரதேச சபையின் தவிசாளரின் அல்லது தவிசாளரினால் அதிகாரம் வழங்கப்பட்ட வேறு உத்தியோகத்தரின் அனுமதியை பெற்றுக்கொள்ள வேண்டும்.

13. ஏதேனும் ஒரு விடயத்திற்காக ஒதுக்கிக் கொள்ளப்பட்ட விளையாட்டு மைதானத்தை குறித்த விடயத்திற்காக பாவித்த பின்னர் சபையில் வைப்பு செய்யப்பட்ட வைப்பு பணத்தில்,

(அ) விளையாட்டு மைதானம் மற்றும் விளையாட்டரங்கு அல்லது அதன் ஒரு பகுதிக்கேனும் நட்டம் ஏற்பட்டிருந்தால் அந்த நட்டத்தின் பெறுமதி மற்றும்.

(ஆ) விளையாட்டு மைதானத்தை ஒதுக்கிக் கொண்ட காலத்திலும் பார்க்க அதிகமாக பயன்படுத்திய காலத்திற்காக அறவிடவேண்டிய கட்டணத்தை கழித்ததன் பின்னர் மீதியாகும் பணத்தை மாத்திரம் விண்ணப்பதாரருக்கு மீளளிக்க முடியும் ;

14. எவரேனுமொரு நபரினால் பிரதேச சபைக்குரிய விளையாட்டு மைதானம் மற்றும் விளையாட்டரங்கிற்கு பாதிப்பு ஏற்படுத்துதல், அவ்வாறு பாதிப்பு ஏற்பட திட்டமிடல் செய்யக்கூடாததுடன், விளையாட்டு மைதானத்திற்குள் மாடுகள், பன்றிகள், குதிரைகள், போனிகள், கழுதைகள் அல்லது நாய்கள் பிரவேசித்தலை செய்யக்கூடாது. அதேபோன்று மேலும் பிரதேச சபையின் தவிசாளர்/வேறு உத்தியோகத்தரிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட அனுமதியின்றி எந்த ஒரு வாகனத்தையும் எந்த ஒரு விளையாட்டு மைதானத்திற்குள்ளும் நுழைக்க கூடாது.

15. இந்த துணைச் சட்டத்தின் கீழ் ஒதுக்கிக் கொள்ளப்பட்ட விளையாட்டு மைதானத்தை பிரதேச சபையின் கட்டாய தேவைக்காக தேவைப்படும் தருணத்தில் அந்த ஒதுக்கிக் கொள்ளளை இரத்துச் செய்வதற்கு பிரதேச சபைக்கு அதிகாரம் இருக்க வேண்டும். அதனை விண்ணப்பதாரருக்கு ஒதுக்கப்பட்டுள்ள திகதிக்கு மூன்று தினத்திற்கு முன்னதாக எழுத்து மூலம் அறிவிக்க வேண்டியதுடன், விண்ணப்பதாரரினால் செலுத்தப்பட்ட கட்டணம் மற்றும் வைப்பு பணம் முழுமையாக அவருக்கு மீளளிக்க வேண்டும்.

16. இந்த துணைச் சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவதொரு விதிமுறைகளை மீறும் நபர் குற்றம் செய்வதுடன், முறையான நீதிமன்றமொன்றினால் குற்றவாளியாக்கப்பட்ட பின்னர் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 122 (2) ஆவது வாக்கியத்தில் குறிப்பிட்டுள்ள தண்டனைக்கு உள்வாங்கப்பட வேண்டும்.

17. பதம் சம்பந்தமாக வேறு அர்த்தம் தேவைப்படுமாயின்,

(i) ''விளையாட்டு'' என்பது, 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டு சட்டத்தில் அதற்கு வழங்கப்பட்டுள்ள அர்த்தமும் ;

(ii) ''விளையாட்டு'' மைதானம்'' என்பது, சபையினால் விளையாட்டு மைதானமாக பெயரிடப்பட்டு முறையான பெயர் பலகை பொருத்தி பொதுமக்களின் பார்வைக்கு காட்சிப்படுத்தியுள்ள இடமும் ;

(iii) ''விளையாட்டரங்கு'' என பெயரிடப்பட்ட விளையாட்டு மைதானத்திற்குள் அமைக்கப்பட்டுள்ள உள்ளக விளையாட்டு அரங்கு, பார்வையாளர் அரங்கு, கட்டிடம், நீர் தொட்டி மற்றும் வேறு கட்டிடங்கள் எனக் கருதப்படும்.

## முதலாவது அட்டவணை

### பிரதேச சபையின் விளையாட்டு மைதானம் பாவிப்பதற்காக அனுமதி பெற்றுக்கொள்ளும் விண்ணப்பபத்திரம்

1. கோரப்படும் விளையாட்டு மைதானம் அமைந்துள்ள இடத்தின் பெயர் :........................................................................

2. விண்ணப்பதாரியின் விபரங்கள் :.................................................................... ........................................... ...........

3. முகவரி :..............................................................................................................................................................

4. தேசிய அடையாள அட்டை இல. :..............................................................................................................................

5. விளையாட்டு மைதானத்தை கோரும் காரணம் :..........................................................................................................

6. தேவைப்படும் திகதி மற்றும் நேரம் :......................................................................................................................

| திகதி முதல் | திகதி வரை | நேரம் |
|---|---|---|
| ..................................................... | .................................. | ............................................ |
| ..................................................... | .................................. | ............................................ |

மேற்குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் அனைத்தும் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் உறுதியளிக்கின்றேன். இந்த வேண்டுகோளுக்கமைய குறித்த விளையாட்டு மைதானத்தை ஒதுக்கித் தந்தால் அந்த விளையாட்டு மைதானத்தின் கட்டிடத்திற்கு, அமைப்புகளுக்கு, உபகரணங்களுக்கு மற்றும் பொருத்தப்பட்டுள்ளவற்றுக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டால் அதன் நட்டத்தை வைப்பு பணத்தில் பிரதேச சபையினால் அறவிட்டுக் கொள்வதற்கு இணங்குவதுடன், அதன் வைப்பு பணம் அந்த அறவீட்டுகளுக்கு போதாத

விடத்து மேலும் தேவைப்படும் பணம் பிரதேச சபைக்கு செலுத்த இணங்குகின்றேன். அதே போன்று விளையாட்டு மைதானத்தை முறைப்படுத்துதல் நிர்வகித்தல் கண்காணித்தல் தொடர்பான துணைச் சட்டங்களின் விதிமுறைகளை ஏற்றுக்கொள்ளவும் இணங்குகின்றேன்.

..................................................................
விண்ணப்பதாரியின் யையொப்பம்.

திகதி :...................................................

(அரச ஸ்தாபனமாயின் தலலமை அதிகாரியின் கையொப்பத்துடன் பதவி முத்திரை இட வேண்டும்).

*5 ஆவது பிரிவு*

**பிரதேச சபைக்கு அல்லது சபையின் நிர்வாகத்திற்கு கீழ் வழங்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களின் முகாமைத்துவம்**

*தகனசாலை*

1. பிரதேச சபை அதிகார பிரிவுக்குள் அமைந்துள்ள சபைக்குச் சொந்தமான தகனசாலை முறைப்படுத்துதல், நிர்வகித்தல் மற்றும் கட்டணம் அறவிடுதல் தொடர்பான துணைச் சட்டமாகும்.

2. தவிசாளரினால் அல்லது அவரினால் அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தரினால் விநியோகிக்கப்படும் உத்தரவுப்பத்திரம் இல்லாது சபைக்குச் சொந்தமான தகனசாலையில் எந்த விதமான பூதவுடலையும் தகனம் செய்யக்கூடாது.

3. 2 ஆவது துணைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட உத்தரவுபத்திரம் பெற்றுக்கொள்ள கருதும் இங்கு இதன் பின்னர் விண்ணப்பதாரர் என குறிப்பிடப்படும் நபரொருவரினால் 1 ஆவது அட்டவணைக்கு ஏற்றவாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்திரம் ஒன்றை தவிசாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

4. விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரர் இறந்தவரின் நெருங்கிய உறவினராக இருக்க வேண்டியதுடன், இறந்தவரின் மரணச் சான்றிதழின் மூலப் பிரதி மற்றும் அதன் நிழற் பிரதி ஒன்று சமர்ப்பிக்க வேண்டும். மரணச் சான்றிதழில் தகனம் செய்யப்படும் இடம் பிரதேச சபையின் தகனச் சாலை எனப் பெயர் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

5. இறந்தவரின் மரணம் சம்பந்தமாக 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் வழக்கு நடைமுறையின் கீழ் பரிசோதனை செய்யப்படுமாயின், பரிசோதனை நடாத்தும் நீதிவானால் அல்லது மரண விசாரணை பரிசோதகரினால் பூத உடலை தகனம் செய்வதற்காக அனுமதி வழங்கி விநியோகித்த சான்றிதழ் விண்ணபத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

6. உயிரற்ற பிறப்பின் மூலம்கிடைத்த உடல் மரணம் பதிவு செய்தல் சட்டத்தின் கீழ் விநியோகிக்கப்படும் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.

7. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணபத்திரம் காரியாலயத்திற்குக் கிடைத்த பின்னர் கிடைத்த வரிசையின்படி பதிவு செய்தல் வேண்டும். விண்ணபப்பத்திரம் ஒன்றை நிராகரிப்பதற்கு நேரிட்டால் அதற்கான காரணம் விண்ணபதாரருக்கு எழுத்து மூலமாக அறிவித்தல் வேண்டும். பூதவுடலை தகனம் செய்கையில் பிரதேச சபை அதிகார பிரிவு அல்லது அதிகார பிரிவுக்கு வெளியில் வசித்தவர்களின் பூதவுடல் தகனம் செய்ய வாய்ப்புள்ளதுடன் , பிரதேச சபை அதிகார பிரதேச எல்லைக்குள் வசிப்பவர்களின் பூதவுடல் தகனம் செய்வதற்கும் அதிகார பிரிவுக்கு வெளியில் வசிக்கும் ஒருவரின் மரண உடல் தகனம் செய்வதகும் பிரதேச சபையினால் காலத்திற்குக்காலம் வேறு வேறாக நியமம் செய்யும் கட்டணம் செலுத்த வேண்டும். இந்த கட்டணம் பிரதேச சபையினால் வருடாந்தம் அரசாங்க வர்த்தமானி மூலம் அறிவிக்க வேண்டும்.

8. வாரத்தில் அனைத்து தினமும் தகனம் செய்ய செய்ய முடிவதுடன், கிடைக்கும் விண்ணப்பங்களின் வரிசை முறையின்படி நேரம் ஒதுக்கி கொடுக்க வேண்டும். தகனம் செய்யப்படும் நேரம் காலை 6.00 மணி முதல் மாலை 8.00 மணிக்கு இடைப்பட்ட காலமாக இருக்க வேண்டும். உத்தரவுப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட நேரத்துக்கு 30 நிமிடங்கள் முன்பதாக சடலத்தை தகனச்சாலை

பொறுப்பாளர்களிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும். காலை 6.00 மணி முதல் மாலை 8.00 மணிக்கு இடைப்பட்ட காலத்தை தவிர்ந்த வேறு மாற்று நேரத்திற்குள் மரண உடல் சடலமொன்று தகனம் செய்யப்படுவதாயின் அதற்காக தவிசாளரின் விசேட அனுமதி இருக்க வேண்டும். ஒரு தினத்தில் தகனம் செய்யப்படும் அதிகபட்மான மரண உடல்களின் எண்ணிக்கையை சபையினால் தீர்மானிக்கப்பட்டு தகனச் சாலையின் அறிவித்தல் பலகையில் காட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

9. முறையான உத்தரவுப்பத்திரத்தினால் தகனம் செய்தவற்காக அனுமதி வழங்கப்பட்டுள்ள சடலமொன்று அந்த அனுமதி வழங்கப்பட்டுள்ள நேரத்துக்குள் தகனம் செய்வதை நிறுத்துவதாயின் நீதிமன்றத்தினால் அல்லது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியினால் வழங்கப்படும் எழுத்துமூலமான கட்டளையின் மீது மாத்திரமே இடைநிறுத்த இயலும். இதன் போது ஒதுக்கப்பட்ட நேரத்திற்கு மாற்று நேரம் பெற்றுக்கொடுக்க அல்லது அதற்காக செலுத்தப்பட்ட கட்டணத்தை மீளளிக்க பிரதேச சபை பொறுப்பு கூறுதலுக்கு கட்டுப்பாடாததுடன், அதற்காக அவருக்கு வேண்டுகோள் விடுக்க எவ்வித உரிமை இல்லை.

10. தகனச்சாலையில் மரண உடல் தகனம் செய்யப்படும் தருணத்தில் ஏற்படும் தொழில் நுட்பக்கோளாறு காரணத்தினால் சிறிது நேரத்திற்குள் மீண்டும் வழமையான நிலைக்கு கொண்டுவர முடியாத தருணங்களில் அந்த மரண உடலை அல்லது மரண உடலில் பாகத்தை கௌரவத்துடன் நல்லக்கம் செய்யும் உரிமை பிரதேச சபைக்கு உரியதாகும்.

11. மரண உடலின் அஸ்த்திகளை தகனம் செய்த நேரம் முதல் 24 மணி நேரத்திற்குள் பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பதார் முன்வர வேண்டியதுடன், குறித்த நேரத்திற்குள் பெறப்படாத அஸ்த்திகளை அடக்கம் செய்வதற்கு பிரதேச சபைக்கு அதிகாரம் உள்ளது.

12. சபைக்குச் சொந்தமான மயான பூமியில் அஸ்திகளை வைப்பு செய்வதற்கு பிரதேச சபையின் முறையான உத்தரவை பெற்றுக்கொள்ள வேண்டியதுடன், அதற்காக கட்டணத்தை செலுத்த வேண்டியதுடன், அதை சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானித்து அரசாங்க வர்த்தமானி மூலம் வருடாந்தம் பிரசுரிக்கப்பட்டுள்ளவாறு நடைபெற வேண்டும்.

13. தகனச் சாலை பூமிக்கு அனுமதியின்றி உட்பிரவேசிப்பது குற்றமாவதுடன் தகனசாலை பூமிக்கு உட்பிரவேசிக்க கூடியது தகனம் செய்யப்படும் தருணத்தில் மரணத்துடன் வருகைத் தருபவர்களுக்கு மாத்திரமே, தகனசாலை பூமியில் பிரதான நுழைவாயிலில் மரண உடலை கொண்டு வந்த வாகனத்திற்கும் மற்றும் ஒரு வாகனத்திற்கு மாத்திரம் உட்பிரவேசிக்க அனுமதி உண்டு.

14. தகனசாலையின் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தக்கூடிய சபையினால் முறையாக அதிகாரம் வழங்கப்பட்ட நபர் அல்லது நபர்கள் மாத்திரமே.

15. தகனச் சாலை பூமிக்குள் அமைதியை கெடுக்கும் வித்திலான நடத்தை அல்லது தகனசாலையில் சேவையில் ஈடுபட்டிருக்கும் சேவையாளர்களின் கடமைகளுக்கு இடையூறு ஏற்படுத்துதல், தகனசாலை சூழலில் அலங்காரம் செய்தல், கூடாததுடன், தகனசாலை பூமிக்குள் கூட்டம் நடாத்துதல், மதுபானம் அல்லது போதைப் பொருட்கள் பாவித்தல் செய்யக்கூடாததுடன், தகனசாலை பூமியில் சமய அனுஷ்டானங்கள் செய்ய வாய்ப்பு உண்டு.

16. தகனசாலையில் தகன கூடத்திற்கு மரண உடலை உள்நுழைத்து அதன் பாதுகாப்பு வாயிலை மூடிய பின்னர் கூடத்தின் மூடப்பட்ட பிரிவுக்குள் தகனசாலை பொறுப்பாளர் அல்லது அவரது உதவியாளர் அல்லது உதவியாளர்கள் தவிர்ந்த வேறு ஒருவரையும் உள்வாங்கக் கூடாது.

17. இந்த துணைச் சட்டத்தில் செய்யக்கூடாது என குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளை செய்தல் குற்றமாவதுடன், அதற்காக முறையான அதிகாரமுள்ள நீதிமனறத்தினால் குற்றவாளியாக்கப்பட்டால் 750 ரூபாவுக்கு குறையாத தண்டத்திற்கு குற்றம் செய்யும் நபர் உள்வாங்கப்பட வேண்டும். அந்த குற்றத்தை தொடர்ந்தும் செய்தால் நாளொன்றுக்கு 250 ரூபா வீதம் மேலதிக தண்டம் செலுத்த கட்டுப்பட்டிருக்க வேண்டும்.

18. சபைக்குச் சொந்தமான தகனச் சாலையினுள் அல்லது பூமிக்குள் இருக்கும் சொத்துக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தினால் அந்த பாதிப்பு சம்பந்தமாக நட்டத்தை சபைக்கு செலுத்த விண்ணப்பதாரர் உடன்பட வேண்டும்.

19. இத்துணைச் சட்டத்தில் "நெருங்கிய உறவினர்" என்பது, இறந்தவரின் துணைவன் அல்லது துணைவி அல்லது பிள்ளைகள் அல்லது பெற்றோர் அல்லது சகோதர சகோதரிகள் அல்லது பொறுப்பாளர்.

"தகனசாலை பொறுப்பாளர்" என்பது, பிரதேச சபையினால் அதன் சேவைக்கு ஈடுபடுத்தப்பட்டுள்ள நபர் எனக் குறிப்பிடப்படுகின்றது.

*முதலாவது அட்டவணை*

*3 ஆவது சரத்து*

**தகனச்சாலையில் மரண உடலை தகனம் செய்வதற்கு உத்தரவு பெறுதற்கான விண்ணப்பம்**

1. உள்ளூராட்சிமன்ற அதிகாரப் பிரதேசம் :.......................................................................................................

2. விண்ணப்பதாரியின் விபரங்கள் :.......................................................................................................

(அ) பெயர் :.......................................................................................................
(ஆ) விலாசம் :.......................................................................................................
(இ) தேசிய அடையாள அட்டை இல. :.......................................................................................................
(ஈ) தொலைபேசி இலக்கம் :.......................................................................................................
(உ) தகனம் செய்ய வேண்டிய திகதி :.......................................................................................................
(ஊ) இறந்தவருக்கான உறவு முறை :.......................................................................................................

3. இறந்தவரின் விவரங்கள் :.......................................................................................................

(அ) பெயர் :.......................................................................................................
(ஆ) வசித்த வந்த முகவரி :.......................................................................................................
(இ) இறந்த திகதி :.......................................................................................................
(ஈ) வயது :................................... வருடங்கள் :.................................................. மாதங்கள் :.............................. திகதி
(உ) மரணச் சான்றிதழ் இலக்கம் :.......................................................................................................
(ஊ) மரணத்துக்கான காரணம் :.......................................................................................................

**விண்ணப்பதாரர்யின் உறுதியுரை :**

மேற்குறித்த விடயங்கள் அனைத்தும் உண்மையானதும் சரியானதெனவும், சடலத்தை தகனம் செய்வதற்கு ஒதுக்கித் தரப்பட்டுள்ள நேரத்துக்கு 30 நிமிடங்கள் முன்னர் மரண உடலை தகனசாலைக்கு ஒப்படைப்பதாகவும், தகனசாலையில் அல்லது அந்த பூமியில் உள்ள அசையும் அல்லது அசையா சொத்துக்களை பாதுகாப்பதாகவும், அந்த சொத்துக்களுக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டால் அதன் பொறுப்பை ஏற்றுக்கொள்வதாகவும் உறுதியளிக்கின்றேன்.

................................................................
விண்ணப்பதாரியின் மையொப்பம்.

திகதி :....................................................

*6 ஆவது பிரிவு*

**பிரதேச சபைக்கு அல்லது சபையின் நிர்வாகத்தின்கீழ் ஒப்படைக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை முகாமைத்துவம் செய்தல்**

*நூலகங்கள் மற்றும் வாசிகசாலை*

1. பிரதேச சபைக்கு அல்லது பிரதேச சபையின் நிர்வாகத்திற்குக் கீழ் வழங்கப்பட்டுள்ள நூலகங்களைப் பராமரித்தல் மற்றும் முகாமைத்துவம் மற்றும் அதன் பாவனைக்காக கட்டணம் அறவிடுதல் தொடர்பான துணைச் சட்டமாகும்.

2. (அ) பதம் சம்பந்தமாக வேறு அர்த்தங்கள் தேவைப்படுமாயின் நூலகங்கள் தொடர்பாக இந்த துணைச் சட்டங்களில் "நூலக பொறுப்பதிகாரி" என்பது, நூலகத்தின் பொறுப்பாளராக இருப்பதற்கு பிரதேச சபையினால் நியமிக்கப்படும் நபரை குறிப்பிடும்.

(ஆ) பிரதேச சபையினால் அமைக்கப்பட்டு நடாத்தி வரும் பொது நூலகம்.

(i) வெளியில் கொடுக்கும் பிரிவு;

(ii) விமர்சன பிரிவு ;

(iii) சிறுவர் பிரிவு ;

(iv) பத்திரிகை வாசிக்கும் பிரிவு ;

(v) கணினிப் பிரிவு என்ற பிரிவுகளுடன் கூடியதாகும்.

3. பொது நூலகத்தை கண்காணித்தல் மற்றும் சாதாரண நிர்வாகம் இங்கு இதன் பின்னர் "நூலக குழு" என கருதப்படும் நூலக குழுவுக்கு ஒப்படைக்கப்படும். அந்த குழு கீழ்க்காணுபவர்கள் மற்றும் நபர்களினால் உள்ளடங்குவர்.

(அ) இங்கு இதன் பின்னர் "தவிசாளர்" என குறிப்பிடப்படும் உரிய காலத்தில் பிரதேச சபையில் தவிசாளர் பதவியை வகிக்கும் நபர் ;

(ஆ) பிரதேச சபையினால் பிரதேச சபையின் உறுப்பினர்கள் இடையில் தெரிவு செய்யப்படும் அங்கத்தினர்கள் இருவர் மற்றும் ;

(இ) பிரதேச சபையினால் பிரேரணை அங்கீகரித்தலின் மூலம் தெரிவு செய்யப்படும் அதிகார பிரிவுக்குள் திறமையான நபர் ஒருவர் மற்றும் சபையில் சேவையில் ஈடுபட்டிருக்கும் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் வேறு உத்தியோகத்தர் மற்றும் நூலகம் உட்பட மேற்குறிப்பிட்ட பிரிவுகளை பிரதிநிதித்துவம் செய்யும் அங்கத்தினர்கள் ஐவர்.

4. நூலகத்தை முறையாக நடாத்திச் செல்வதற்காக முறைப்படுத்துதல், நிர்வகித்தல் மற்றும் கண்காணித்தல் நூலக பொறுப்பதிகாரியின் கடமையாகும்.

5. (i) பிரதேச சபையின் தவிசாளர் அதிகாரத்தினால் குழுவின் தவிசாளராவதுடன், குழுவின் அனைத்து கூட்டங்களுக்கும் அவர் தலைமைதாங்க வேண்டும். ஏதேனும் ஒரு கூட்டத்திற்கு தவிசாளர் வருகை தராத போது வருகை தந்துள்ள அங்கத்தினர்களினால் குழுவின் அங்கத்தினர்களின் தெரிவு செய்யப்படும் ஒருவர் தலைமை தாங்க வேண்டும்;

(ii) ஏதேனுமொரு கூட்டத்திற்கு தலைமைதாங்கும் அங்கத்தினருக்கு ஒரு அடிப்படை வாக்கும் ஏதேனும் ஒரு பிரச்சினை சம்பந்தமாக ஆளும் கட்சி அல்லது எதிர்கட்சி வாக்குகளின் எண்ணிக்கை சமமானால் தீர்மானிக்கும் வாக்கும் உள்ளது.

6. அங்கத்தினர்கள் ஐவரின் கோரம் இருந்தால் தவிர்த்து குழு கூட்டத்திற்கு உரிய நடவடிக்கை எடுக்கக் கூடாததுடன் இந்த குழுவை மூன்று மாதத்திற்கு ஒரு முறை கூட்ட வேண்டும்.

7. குழுவினால் தேவையென கருதும் விதிமுறைகளின் கீழ் எவரேனும் ஒருவருக்கு பொது நூலக சூழலில் ஏதேனும் ஒரு பிரிவை பாவிப்பதற்கு இடமளிக்க அல்லது எவரேனும் ஒரு நபரினால் நூலகம் தொடர்பாக இந்த துணைச் சட்டத்தில் எதையேனும் மீறப்பட்டிருந்தால், அந்த நபருக்கு அந்த சூழலில் ஏதாவதொரு பிரிவை பாவிப்பதற்கு இடமளிப்பதை நிராகரிக்க குழுவுக்கு அதிகாரம் உண்டு.

**வெளியில் கொடுக்கும் பிரிவு**

8. (i) எவராவது ஒரு நபர் -

(அ) 12 வயதுக்கு குறைவானால் தவிர;

(ஆ) பிரதேச சபை அதிகார பிரிவுக்குள் வசிப்பவரானால் அல்லது பிரதேச சபை அதிகார பிரிவுக்குள் காரியாலயம் வியாபாரம் இருந்தால் தவிர ;

(இ) நூலகப் பொறுப்பாளரிடம் 100 ரூபா வைப்பு செய்யப்பட்டிருந்தால் தவிர;

(ஈ) பிரதேச சபைக்கு வரி செலுத்துபவரிடம் சிபாரிசு செய்து இருந்தால் தவிர, அந்த நபர் வெளியில் கொடுக்கும் பிரிவின் அங்கத்தினராக சேர்த்துக்கொள்ளக்கூடாது.

(ii) வெளியில் கொடுக்கும் பிரிவில் அங்கத்தினராக நுழைவதற்கு எதிர்பார்க்கும் அனைவரும் நூலக பொறுப்பதிகாரியிடமிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய மாதிரி பத்திரத்தின் மீது அதற்காக விண்ணப்பிக்கவேண்டியதுடன், அவரினால் அந்த விண்ணப்பபத்திரத்தை இங்கு கீழ்க் குறிப்பிட்டுள்ள நபரொருவரினால் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

(அ) சபையின் உறுப்பினர் ஒருவர் ;
(ஆ) நூலக குழுவின் அங்கத்தினர் ஒருவர் ;
(இ) சமய மதகுரு ஒருவர் ;
(ஈ) சமாதான நீதவான் ஒருவர் ;
(உ) பாடசாலையொன்றின் அதிபர் ஒருவர்
(ஊ) 21,000 ரூபாவுக்கு குறையாத அடிப்படை சம்பளம் பெறும் அரசாங்க உத்தியோகத்தர் ஒருவர் ;
(எ) பிரதேச சபை அதிகார பிரிவின் கிராம சேவை உத்தியோகத்தர் ஒருவர்.

(iii) வெளியில் கொடுக்கும் பிரிவில் அங்கத்தினர் ஒருவருக்கு புத்தகங்களை வெளியில் கொண்டு செல்வதற்காக இரண்டு அட்டைகள் பெற்றுக்கொள்ள உரிமையுண்டு.

9. வெளியில் கொடுக்கும் பிரிவில் அங்கத்தினர் ஒருவருக்கு விநியோகிக்கப்படும் அட்டை மீது அவரினால் எடுத்துச் செல்லப்படும் ஏதேனும் ஒரு புத்தகம் சம்பந்தமாக அவர் பொறுப்புக் கூற வேண்டும்.

10. வெளியில் கொடுக்கும் பிரிவின் அங்கத்தினருக்கு விநியோகிக்கப்படும் அட்டை அவரிடத்து தொலைந்து போகும் தருணத்தில் அவ்வாறு தொலைந்து போனது தொடர்பாக அவரினால் நூலகப் பொறுப்பதிகாரிக்கு அறிவிக்க வேண்டும். அந்த அட்டையின் மூலம் வெளியில் கொடுக்கும் பிரிவினால் புத்தகம் பெற்றுக்கொள்ளவில்லை என நூலக பொறுப்பதிகாரி திருப்தியடைந்தால் அவரினால் அந்த அங்கத்தினருக்கு அட்டையின் பிரதியொன்றை விநியோக்க முடியும். அட்டை தொலைந்துள்ளதாக அறிவிக்கப்பட்ட நாள் முதல் 30 நாட்கள் கடந்து சென்றிருந்தால் தவிர நூலக பொறுப்பதிகாரியினால் பிரதி அட்டை விநியோகிக்கக் கூடாது.

11. வெளியில் கொடுக்கும் பிரிவில் அங்கத்தினர் ஒருவரினால் பெற்றுக்கொள்ளும் புத்தகம் ஒன்று பெற்றுக்கொண்ட நாள் முதல் 14 நாட்களுக்குள் நூலகப் பொறுப்பதிகாரியிடம் மீண்டும் ஒப்படைக்க வேண்டும்.

12. அவ்வாறான புத்தகம் ஒன்று வேறு அங்கத்தினரினால் கோரப்படாதிருந்தால் அந்த புத்தகத்தை மீண்டும் அந்த அங்கத்தினருக்கே 14 நாட்களுக்கு பெற்றுக்கொடுக்க நூலக பொறுப்பதிகாரிக்கு அதிகாரம் உண்டு.

13. 11 ஆவது வாக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 14 நாட்கள் கொண்ட கால எல்லைக்குள் ஒரு புத்தகம் நூலக பொறுப்பதிகாரியிடம் மீண்டும் ஒப்படைத்தல் அங்கத்தினர் ஒருவரினால் தவிர்த்திருக்கும் தருணத்தில் அந்த புத்தகம் மீண்டும் ஒப்படைக்க வேண்டிய திகதி கடந்து செல்லும் ஒவ்வொரு நாளைக்கும் ரூபா 5 வீதம் தண்டம் செலுத்த அங்கத்தினர் உட்படுகின்றார்.

14. வெளியில் கொடுக்கும் பிரிவில் அங்கத்தினர் ஒருவரினால் பெற்றுக்கொள்ளும் புத்தகம் 11 ஆவது வாக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 14 நாட்கள் கடந்து 30 நாட்களுக்குள் மீண்டும் ஒப்படைத்தல் அங்கத்தினர் ஒருவரினால் தவிர்க்கும் தருணத்தில் அந்தப் புத்தகம் தொலைந்துள்ளதாகக் கருத முடியும்.

15. அங்கத்தினர் ஒருவரினால் பெற்றுக்கொள்ளும் புத்தகம் ஒன்று தொலைந்துள்ளதாக கருதும் தருணத்தில் அந்த புத்தகத்தை மீண்டும் பெற்றுக்கொள்வதற்கான செலவை அங்கத்தினர் செலுத்த வேண்டும்.

16. எவராவதொரு அங்கத்தினரினால் வெளியில் கொடுக்கும் பிரிவில் பெற்றுக்கொள்ளும் புத்தகத்திற்கு பழுது ஏற்படுத்துதல் அல்லது ஏதாவதொரு விதத்தில் பழுதடையச் செய்தல் செய்யக்கூடாது.

17. வெளியில் கொடுக்கும் பிரிவில் தான் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கும் புத்தகத்திற்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு அல்லது சேதம் ஏற்படுத்துதல் தொடர்பாக நூலக பொறுப்பதிகாரிக்கு அறிவிப்பது அனைத்து அங்கத்தினரின் கடமையாகும்.

18. அவ்வாறான பாதிப்பு அல்லது சேதம் ஏற்படுத்துதல் தொடர்பாக நூலக பொறுப்பதிகாரிக்கு அறிவிப்பதை அங்கத்தினர் தவிர்த்திருக்கும் தருணத்தில் அந்த புத்தகத்தை அவருக்கு பாதிப்பு அல்லது சேதம் ஏற்படுத்தல் அல்லாது விநியோகித்ததாக கருத முடியும்.

19. அங்கத்தினர் ஒருவரினால் மீண்டும் ஒப்படைக்கும் புத்தகமொன்று மேலும் விநியோகிக்க முடியாதவாறு அவரினால் பாதிப்பு ஏற்படுத்தி அல்லது சேதம் ஏற்படுத்தியிருப்பதாக நூலக பொறுப்பதிகாரி கருதும் தருணத்தில் அந்த புத்தகத்தை மீண்டும்

பெற்றுக்கொள்வதற்கான செலவை பொறுப்பேற்க அந்த அங்கத்தினர் கட்டுப்பட்டுள்ளார். அந்த புத்தகத்தை மீண்டும் பெற்றுக் கொண்டதன் பின்னர் பாதிப்படைந்த புத்தகத்தை "பொது நூலகத்தில் பாதிப்பு ஏற்பட்ட புத்தகமாக விற்கப்படும்" என முத்திரையிட்டு அந்த அங்கத்தினருக்கு வழங்கப்படும்.

20. (அ) வெளியில் கொடுக்கும் நூலகத்தில் பெற்றுக்கொண்ட புத்தகம் ஒன்றை எந்தவொரு அங்கத்தினராலும் வேறு நபர்களுக்கு கொடுக்கக்கூடாது ;

(ஆ) இந்த வாக்கியத்தில் (அ) ஆவது பந்தியில் விதிமுறைகளை மீறும் அங்கத்தினரின் வைப்பு பணத்தை இல்லாது செய்யாது வெளியில் கொடுக்கும் பிரிவில் அவரது அங்கத்துவம் இல்லாது போய்விடும் ;

21. (அ) முடியாத அல்லது நோயினால் எவராவதொரு நபரினால் பாவிக்கப்பட்டதாக தனக்கு தெரிந்த ஏதாவதொரு புத்தகம் அங்கத்தினரினால் வெளியில் கொடுக்கும் பிரிவுக்கு மீண்டும் ஒப்படைக்க முடியாது ;

(ஆ) வெளியில் கொடுக்கும் பிரிவில் அங்கத்தினரினால் பெற்றுக்கொள்ளப்படும் புத்தகம் பரவும் அல்லது தொற்றும் நோயினால் பீடிக்கப்பட்ட நபரொருவரினால் பாவிக்கப்பட்டுள்ளபோது அந்த புத்தகத்தை அழித்துவிட வேண்டியதுடன், அதை மீண்டும் பெற்றுக்கொள்ளும் செலவை அந்த அங்கத்தினரினால் நூலக பொறுப்பதிகாரியிடம் செலுத்த வேண்டும்.

22. ஏதாவதொரு புத்தகத்தை வெளியில் கொடுக்கவேண்டியது எந்த அங்கத்தினருக்கு என்பது தொடர்பாக பேதம் வெளியில் கொடுக்கும் பிரிவின் அங்கத்தினர் இருவர் அல்லது அதிகமானவர்களிடம் ஏற்பட்டால் அந்த பேதத்தை நூலக பொறுப்பதிகாரியினால் தீர்த்து வைக்க முடியும்.

23. வேறு அங்கத்தினர் ஒருவரினால் பெற்றுக்கொண்டுள்ள ஒரு புத்தகத்தை பெற்றுக்கொள்வதற்கு எவராவது ஒரு அங்கத்தினர் எதிர்பார்க்கும் போது தனது பெயரை மற்றும் புத்தகத்தின் பெயரையும் அந்த விடயத்திற்காக வைக்கப்பட்டுள்ள பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும். அந்த புத்தகத்தை எடுத்துச் சென்றுள்ள அங்கத்தினர் அதை மீண்டும் ஒப்படைத்த பின்னர் நூலகப் பொறுப்பதிகாரியினால் அதை பதிவேட்டில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள அங்கத்தினருக்கு விநியோகிக்க வேண்டும். எவராவதொருவருக்காக அங்கத்தினர்கள் ஒருவருக்கு மேல் அதிகமாகவர்கள் பதிவேட்டில் பெயர் குறிப்பிட்டுள்ள தருணத்தில் அவர்களின் பெயர் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள வரிசை முறையில் அந்த புத்தகத்தை அவர்களுக்கு விநியோகிக்க வேண்டும்.

24. பிரதேச சபை அதிகார பிரிவுக்குள் வசிக்கும் அல்லது காரியாலயம் அல்லது வியாபார நிலையம் வைத்திருக்கும் எவரேனும் அங்கத்தினர் அவ்வதிகார பிரிவிலிருந்து அகலும் சந்தர்ப்பத்தில் வெளியில் கொடுக்கும் பிரிவில் அங்கத்தினராக இருப்பது நிறுத்தப்படுவதுடன் 08 ஆவது வாக்கியத்தின் கீழ் அவருக்கு விநியோகிகப்பட்டுள்ள அட்டைகள் 2 நூலக பொறுப்பதிகாரியிடம் ஒப்படைக்க வேண்டும்.

25. எவரேனும் ஒருவரினால் 8 (1) (இ) துணை வாக்கியத்தின் கீழ் செலுத்தப்பட்டுள்ள 100 ரூபா வைப்பு பணம் வெளியில் கொடுக்கும் பிரிவுக்கு தங்களினால் அறவிட வேண்டிய ஏதேனும் பணம் இருந்தால் அதை கழித்து அந்த நபரின் அங்கத்துவம் முடியும் போது அவருக்கு மீளளிக்க வேண்டும்.

26. வெளியில் கொடுக்கும் பிரிவு ஞாயிற்றுக்கிழமை மற்றும் பொது விடுமுறை தினங்கள் அங்கத்தினர்களுக்கு 07 நாட்கள் அறிவித்த பின்னர் தொகை கணக்கெடுப்பதற்காக குழுவினால் நியமனம் செய்யும் வேறு ஒரு திகதிகளை விடுத்து தினமும் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 5.00 மணிக்கு இடைப்பட்ட காலத்திற்குள் திறந்து வைக்கப்பட வேண்டும்.

**விமர்சன பிரிவு**

27. அ) விமர்சனப் பிரிவு பாவிப்பதற்காக நூலக பொறுப்பதிகாரியின் அனுமதியை பெற்றுக்கொண்டிருந்தால் தவிர, மற்றும்

(ஆ) விமர்சனப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள பதிவேட்டில் கையொப்பமிட்டிருந்தால், தவிர, எந்தவொரு நபரினாலும் விமர்சனப் பிரிவை பாவிக்கக்கூடாது ;

28. நூலகப் பொறுப்பாளரினால் -

(அ) வாசிக்க மற்றும் எழுதக் கூடிய ;
(ஆ) பிரதேச சபை பிரதேசத்தில் வசிக்கும் ;
(இ) 12 வயதுக்கு குறையாத எவராவதொருவருக்கு விமர்சனப் பிரிவை பாவிப்பதற்கு அனுமதி வழங்க முடியும்.

29. வாசித்து பார்ப்பதற்காக தனக்கு விநியோகிக்கப்படும் எந்த ஒரு புத்தகத்தையும் எந்த ஒரு நபரினாலும் விமர்சனப் பிரிவிலிருந்து வெளியில் கொண்டு செல்லக்கூடாது.

30. (i) இந்த துணைச் சட்டத்தில் 26 ஆவது வாக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கைகளின் கீழ்பட்டு விமர்சனப் பிரிவை மு. ப. 9.30 மணிமுதல் பகல் 12.00 மணிக்கிடையிலும், பி. ப. 1.00 முதல் 4.30 மணிவரையிலும் திறந்து வைத்தல் வேண்டும்;

(ii) பிரதேச சபையினால் பிரேரணை அங்கீகரிக்கப்பட்ட ;

(அ) இவ்வாக்கியத்தின் முதலாவது பந்தியில் கூறப்பட்ட கால எல்லை நீடிக்க முடியும்.
(ஆ) அந்த பிரேரணை சம்மதத்தை காட்டப்படக்கூடிய நேரங்களுள் ஞாயிறு மற்றும் விடுமுறை தினங்களில் விமர்சனப் பிரிவை திறந்து வைக்குமாறு குழுவினால் வேண்டுகோள் விடுக்கலாம் ;
(இ) தொகை கணக்கெடுக்கும் காரியத்துக்காக பிரதேச சபையினால் நிர்ணயிக்கப்படும் தினங்களில் விமர்சனப் பிரிவினை மூடி வைக்குமாறும் கோரிக்கை விடுக்கலாம்;

### சிறுவர் பிரிவு

31. சிறுவர் பிரிவை பாவிப்பதற்காக நூலக பொறுப்பதிகாரியின் அனுமதி பெற்றுள்ள 05 முதல் 12 வயதுக்கு இடைப்பட்ட ஒருவர் தவிர்ந்த எந்த ஒரு நபரினாலும் சிறுவர் பிரிவை பாவிக்க முடியாது.

32. புத்தகங்கள் வெளியில் கொடுப்பது சம்பந்தமான நடவடிக்கைகளுக்காக வெளியில் கொடுக்கும் பிரிவின் விதிமுறைகளை உபயோகப்படுத்த வேண்டும்.

### பத்திரிகை வாசிப்புப் பிரிவு

33. இந்த துணைச் சட்டத்தில் 26 ஆவது வாக்கியத்தின் விதிமுறைகளுக்கு கட்டுப்பட்டு வாசிப்பு மண்டபத்தை மு. ப. 9.00 முதல் பி. ப. 5.00 மணி வரை திறந்து வைக்க வேண்டும்.

34. தொகை கணக்கெடுத்தல் விடயத்திற்காக பிரதேச சபையினால் நியமம் செய்யக்கூடிய தினங்களில் வாசிப்பு மண்டபம் மூடி வைக்குமாறு குழுவினால் வேண்டுகோள் விடுக்க முடியும்.

35. வாசிப்பு மண்டபத்தில் வைக்கப்பட்டுள்ள அல்லது வாசிப்பு மண்டபத்திற்கு உரிய எந்த ஒரு பத்திரிகையையும், வார மஞ்சரி, சஞ்சிகை, வரைபடம், கடிதம், கையேடு அல்லது வேறு ஏதேனும் கடிதம் எவராலும் வாசிப்பு மண்டபத்திலிருந்து வெளியில் கொண்டு செல்லக்கூடாது.

### கணினிப் பிரிவு

36. கணினிப் பிரிவை பாவிப்பதற்கு எதிர்பார்க்கும் அங்கத்தினரும் நூலக பொறுப்பதிகாரியினால் எழுத்து மூலமான வேண்டுகோளை முன்வைக்க வேண்டும்.

37. அவ்வாறு வேண்டுகோள் விடுக்கும் அனைத்து அங்கத்தினரும் 15 வயதுக்கு குறையாதவராக இருக்க வேண்டும்.

38. கணினிப் பிரிவுக்காக 500.00 ரூபா அங்கத்துவக் கட்டணம் செலுத்தி வேறாக அங்கத்துவம் பெற வேண்டும்.

39. கணினியொன்றை ஒரு தினத்தில் ஒருவருக்கு ஒரு மணி நேரம் மாத்திரம் பாவிக்க முடியும்.

40. கணினியை பாவிக்கும் அனைத்து அங்கத்தினரும் கணினியை பாவிப்பதற்கு முன்னர் அதிலுள்ள கோளாறு மற்றும் பாதிப்பு தொடர்பாக ஆராய்ந்து பார்த்து பாவிக்க வேண்டும்.

41. ஏதேனும் விதத்தில் கணினி இயந்திரம் அவ்வாறான கோளாறு மற்றும் பாதிப்பு இருந்தால் அதனை நூலகப் பொறுப்பதிகாரிக்கு அறிவிக்க வேண்டும்.

42. அவ்வாறு அறிவித்ததன் பின்னர் கணினி இயந்திரத்தில் நிலவும் கோளாறு மற்றும் குறைபாடுகள் தொடர்பாக, நூலக பொறுப்பதிகாரி ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

43. அவ்வாறு ஆராய்ந்து பார்த்த பின்னர் கணினி இயந்திரத்தில் கோளாறு மற்றும் பாதிப்பை பாவனையாளருக்கு முன்னர் நிலவியதா, இல்லையேல் பாவனையாளரினால் ஏற்படுத்தப்பட்ட கோளாறா எனும் தீர்மானத்தை நூலக பொறுப்பதிகாரி எடுக்க வேண்டும்.

44. அந்த கோளாறை பழைய நிலைக்கு கொண்டு வருவதில் அல்லது தேவையான நடவடிக்கை மேற்கொள்வது நூலக பொறுப்பதிகாரியினால் செய்தல் வேண்டும்.

**சாதாரணம்**

45. ஏதேனும் முடியாத ஸ்பர்ஸ அல்லது சரும நோயினால் பாதிக்கப்பட்ட அல்லது அண்மையில் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு அண்மையில் சிகிச்சை பெற்ற ஒருவர் நோய் பரவும் காலம் மற்றும் விதை விருத்தியடையும் கால எல்லை கடக்கும் வரை பொது நூலகத்திற்குள் செல்ல முடியாது.

46. எவரேனும் ஒருவர் -

(i) பொது நூலக கூழலுக்குள் அல்லது அருகில் முறையற்ற விதத்தில் நடந்து கொள்ளல் அல்லது அவ்வாறான செயல்களை செய்தல் கூடாது ;

(ii) பொது நூலகத்தில் அல்லது அருகிலுள்ள பிரதேச சபையில் ஏதேனும் கட்டிடத்தில் ஒரு பகுதிக்கு அல்லது சொத்துக்களுக்கு நட்டம் ஏற்படுத்துதல், விகாரமடையச் செய்தல் கூடாது.

(iii) பொது நூலகத்தை மூடிய பின்னர் நூலக சூழலுக்குள் இருப்பது, வீனே உலாவுவது கூடாது.

(iv) பொது நூலக சூழலில் புகை பிடித்தல், எச்சில் துப்புதல் கூடாது.

(v) சத்தமிடுதல், பாடல் பாடுதல், அல்லது வேறு ஒலி எழுப்புதல் கூடாது.

(vi) அசுத்த நிலையில் பொது நூலக சூழலுக்குள் நுழைய கூடாது.

(vii) பொது நூலக சூழலுக்குள் நடமாடும் தொலைபேசி பாவித்தல் முற்றிலும் கூடாது.

47. நூலக பொறுப்பதிகாரிக்கு அல்லது நூலக பொறுப்பதிகாரியின் நியமத்தின்கீழ் செயற்படும் வேறு எவரேனும் ஒரு நபருக்கு இந்த துணைச் சட்டத்தின் கீழ் அவரது அதிகாரத்தை சட்டப்படி செயற்படுத்துவதற்கு இடையூறு ஏற்படுத்தக் கூடாது.

48. இந்த துணைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் விதிமுறைகளை மீறுவது குற்றமாவதுடன், அதற்காக உரிய அதிகாரமுள்ள நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டால் 750 ரூபாவுக்கு குறையாத தண்டத்திற்கு குற்றத்தை செய்யும் நபர் உள்ளாக்கப்படுவார். அந்த தவறை தொடர்ந்தும் செய்து வந்தால் ஒரு நாளைக்கு 25 ரூபா வீதம் மேலதிக தண்டம் செலுத்த கட்டுப்பட வேண்டும்.

**7 ஆவது பிரிவு**

வீதிகளில் செல்லும் வாகனங்களில் பாரம் மற்றும் வேகத்தை கட்டுப்படுத்துதல் தொடர்பான துணைச் சட்டம்

1. பிரதேச சபைக்குரிய வீதிகளில் வாகனங்களின் பாரம் மற்றும் வேகத்தை கட்டுப்படுத்துதல் தொடர்பான துணைச் சட்டம்.

2. பிரதேச சபைக்குரிய வீதிகளில் நியமம் செய்யும் அதிகூடிய பாரத்துடன் மற்றும் வேகத்துனடனான வாகனங்கள் செலுத்துதல், நிர்வகித்தல் மற்றும் அந்த வீதிகளில் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் வீதி பாவனைக்காக கட்டணம் தயாரிப்பதற்காக இந்த துணைச் சட்டம் தயாரிக்கப்படுகின்றது.

3. பிரதேச சபைக்குரிய வீதியில் இங்கு மூன்றாவது அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பார அளவுக்கு அதிகமாக உள்ள வாகனங்கள் போக்குவரத்துக்காக தேவைப்படும் அனைவரினாலும் குறைந்த பட்சம் அந்த போக்குவரத்து செய்வதற்கு எதிர்பார்க்கும் நாளுக்கு வேலை செய்யும் 3 தினங்களுக்கு முன்னர் இங்கு முதலாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தின் சாராம்சத்தின்படி தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்பத்திரம் பிரதேச சபைக்கு சமர்பிக்க வேண்டும்.

4. இங்கு இரண்டாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரியின்படி முறையான அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொண்டிருந்தால் தவிர எந்த ஒரு நபரும் அந்த எல்லையை கடந்து செல்லும் விதத்தில் அந்த வீதிகளில் வாகனங்களை போக்குவரத்து செய்யக்கூடாது.

5. அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பிக்கும் நபர் கீழ்க்காணும் விதிமுறைகளுக்கு இணங்கினால் தவிர தவிசாளரினால் அல்லது அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தரினால் எவராவது ஒருவருக்கு போக்குவரத்திற்காக அனுமதிப்பத்திரம் விநியோகிக்கக் கூடாது.

(i) வீதிகளில் அமுலில் உள்ள பார எல்லையின் கீழ் போக்குவரத்து செய்தல் வேண்டும் ;

(ii) வீதிகளுக்கு பாதிப்பு எற்படத்தகாத வாகனமாக இருக்க வேண்டும்.

(iii) சபையினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கும் வீதி பாதுகாப்பு பிணை வைப்பு பணம் சபையில் வைப்பு செய்திருக்க வேண்டும்.

6. உத்தரவுப்பத்திரத்தை வருடாந்தம், மாதாந்தம், வாரம் மற்றும் திகதி என விநியோகிப்பதுடன், அந்த உத்தரவுப்பத்திரக் கட்டணம், உத்தரவுப்பத்திரம் பெறுபவரினால் சபைக்கு செலுத்த வேண்டியதுடன், உத்தரவுப்பத்திரக் கட்டணம் பிரதேச சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானித்து வருடாந்தம் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரித்திருக்க வேண்டும்.

7. அந்த உத்தரவுப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள திகதி மற்றும் காலத்திற்குள் மாத்திரம் போக்குவரத்து செய்தல் வேண்டும். அந்த அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் மாத்திரம் போக்குவரத்து செய்தல் வேண்டும்.

8. மேலே 6 ஆவது வாக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உத்தரவுப்பத்திரக் கட்டணத்திற்கு மேலதிகமாக போக்குவரத்தின் போது வீதிகளுக்கு ஏற்படக்கூடிய நட்டங்களை ஈடு செய்வதற்காக சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானித்து வருடாந்தம் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள விதத்தில் பாதுகாப்பு வைப்புப் பணம் சபைக்கு செலுத்த வேண்டும்.

9. உத்தரவுப்பத்திரத்தின் காலம் முடிந்த பின்னர் உத்தரவுப்பத்திரம் பெற்றவரினால் வீதி பாதுகாப்பு வைப்புப் பணத்தை பெற்றுக்கொள்வதற்காக வேண்டுகோள் விடுக்க வேண்டியதுடன், வீதி பாதிப்புகள் ஏற்படாததை உறுதிப்படுத்திக் கொண்டதன் பின்னர் வீதி பாதுகாப்பு வைப்புப் பணம் விடுவிக்கப்படும்.

10. வீதிக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டால் வைப்புப் பணம் சபைக்குரியதாவதுடன், 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தில் 70 ஆவது வாக்கியத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்.

11. தவிசாளர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரினால் அல்லது தவிசாளரினால் ஏற்றுக்கொள்ளப்படும் ஏதேனும் ஒரு அமைப்பினால் உத்தரவுப்பத்திரத்தை பரிசோதித்தல் சட்ட ரீதியானதாக இருக்க வேண்டுமே தவிர எவராவதொரு உத்தரவுப்பத்திரம் பெற்றவரினால் அந்த பரிசோதனை அல்லது அதற்கு இடையூறு செய்யக்கூடாது.

12. வீதிகளில் தயாரிக்கப்பட்டுள்ள வேகத்தை கடந்து செலுத்துதல் கூடாது.

13. முறையான உத்தரவுப்பத்திரம் இல்லாது வீதி ஆரம்பிக்கும் இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் போக்குவரத்து செய்யக்கூடிய வாகனத்தின் பார எல்லையை கடந்து வீதிகளில் வாகனம் போக்குவரத்தில் ஈடுபடுத்தக்கூடாது.

14. கீழ்க்காணும் வாகனம் இந்த துணைச் சட்டத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள எல்லைகளில் விடுவிக்கப்படும்.

(i) கட்டாய தேவைக்காக செல்லும் வாகனம் ;

(ii) இயற்கை அனர்த்தம் ஏற்படும் தருணங்களில் போக்குவரத்து செய்யும் வாகனம்.

15. இத்துணைச் சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் விதிமுறைகளை மீறுதல் குற்றமாவதுடன், அந்த நபருக்கு உரிய அதிகாரமுள்ள நீதிமன்றத்தின் முன் குற்றவாளியாக்கப்பட்டால் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தில் 122 (2) ஆம் வாக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லைகளின்படி தண்டத்திற்கு கீழ்ப்படிய வேண்டும்.

16. பதம் சம்பந்தமாக வேறு அர்த்தங்கள் தேவையாயின் தவிர இந்த பிரிவின் துணைச் சட்டங்களில்

(i) "வீதி" என்பது, பிரதேச சபைக்குரிய ஏதேனும் பாதை, வீதி, பெருஞ்சாலை, குறுகிய பாதை, வீதி, பாலம் பிரதேச சபைக்குரிய ஏதேனும் பாதைகள் பெருஞ்சாலை, ஒழுங்கை வீதிக்கு படிகளுக்கு சம்பந்தமான பாலம் ஏதாவதொரு வகையிலான போக்கு கருதப்படுவதுடன்,

(ii) "வாகனம்" என்பது, வாகனக் கட்டளைச் சட்டத்தில் அதற்கு வழங்கப்பட்டுள்ள கருத்துக்களாக வேண்டியதுடன், வண்டி, துவிச்சக்கர வண்டி அல்லது சக்கரம் பொருத்தப்பட்ட இயந்திரத்தினால் அல்லது வேறு விதத்தில் செயற்படும் உபகரணங்கள் எனக் கருதப்படும்.

## முதலாவது அட்டவணை

3 ஆவது வாக்கியம்

### பிரதேச சபை வீதிகளில் போக்குவரத்திற்கான விண்ணப்பப்பத்திரம்

(1) விண்ணப்பதாரியின் பெயர் :----.
(2) விலாசம் :-.
(3) தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
(4) தொலைபேசி இலக்கம் :---.
(5) வாகன இலக்கம் :----.
(6) வாகனத்தின் பாரம் :----.
(7) போக்குவரத்து செய்யும் பொருட்கள் :----.
(8) பொருட்கள் ஏற்றிய பின்னர் முழுப் பாரம் :----.
(9) பயணிக்கும் வீதி தொடர்பான விபரம் :----.
படங்கள் மூலம்

(10) விண்ணப்பிக்கப்படும் அனுமதிப்பத்திரம் செல்லுபடியாக வேண்டிய காலக்கெடு:
ஆரம்ப திகதி :...............................................................
முடிவுத் திகதி :............................................................

(11) பிரதேச சபை வீதிகளில் போக்குவரத்தை நிர்வகிப்பதற்கான துணைச் சட்டங்களின் விதிமுறைகள் அனைத்தையும் பின்பற்ற வேண்டும் எனவும் அனுமதிப்பத்திரத்தினூடாக கிடைக்கப்பெற்றுள்ள அனுமதியின்படி செயல்படுவேன் எனவும் இத்தால் உறுதி கூறுகின்றேன்.

.............................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :............................

## இரண்டாவது அட்டவணை

*4 ஆவது வாக்கியம்*

### உரிய எடை எல்லையினை மீறி வாகனத்தைச் செலுத்துவதற்கான அனுமதிப்பத்திரம்

(1) சபையின் பெயர் :----.
(2) அனுமதிப்பத்திரதாரரின் பெயர் :----.
(3) அனுமதிப்பத்திரதாரரின் முகவரி :----.
(4) வாகனத்தின் இலக்கம் :---.
(5) ஏற்றிச் செல்லப்படும் பொருள் :----.
(6) அதிகூடிய முழு எடையின் அளவு :----.
(7) அனுமதிப்பத்திரம் செல்லுபடியாகும் காலக்கெடு :----.

| | திகதி | ஆரம்பிக்கும் நேரம் | முடிவடையும் நேரம் |
|---|---|---|---|
| (1) | ............................................ | .................................................... | .................................................... |
| (2) | ............................................ | .................................................... | .................................................... |
| (3) | ............................................ | .................................................... | .................................................... |
| (4) | ............................................ | .................................................... | .................................................... |
| (5) | ............................................ | .................................................... | .................................................... |

அனுமதிப்பத்திரம் செல்லுபடியாகும் வீதி :-

| | | | |
|---|---|---|---|
| (1) | ............................................ | .................................................... | .................................................... |
| (2) | ............................................ | .................................................... | .................................................... |
| (3) | ............................................ | .................................................... | .................................................... |
| (4) | ............................................ | .................................................... | .................................................... |
| (5) | ............................................ | .................................................... | .................................................... |

............................................
தவிசாளரின் கையொப்பம்,
.............................. பிரதேச சபை,
(பதவி முத்திரை).

திகதி :...........................

## மூன்றாவது அட்டவணை

.................................. பிரதேச சபை

| | வீதியின் பெயர் | தூரம் | அதிகூடிய எடை | அதிகூடிய வேகம் |
|---|---|---|---|---|
| 1. | | | | |
| 2. | | | | |
| 3. | | | | |
| 4. | | | | |
| 5. | | | | |
| 6. | | | | |
| 7. | | | | |
| 8. | | | | |
| 9. | | | | |
| 10. | | | | |

***8 ஆவது அட்டவணை***

*பாதைகள் மற்றும் வீதிகளில் தடை, தடங்கள் ஏற்படுத்துதல் மற்றும் பாதிப்பு ஏற்படுத்துதலை தடுத்தல்*

*பிரதேச சபைக்குரிய வீதிகளுக்கு நட்டம் ஏற்படுத்துதல் மற்றும் வீதிகளில் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்துதல் மற்றும் வீதியில் தடங்கள் ஏற்படுத்துதல் தடுத்தல், இல்லாது செய்தல் மற்றும் கண்காணித்தல் தொடர்பான துணைச் சட்டம்.*

*2. எவராவதொருவரினால் பிரதேச சபைக்குரிய ஏதேனும் ஒரு பாதைக்கு பாதிப்பு ஏற்படுத்தக் கூடாததுடன், வீதியில் பயணிக்கும் வாகனங்களுக்கு அல்லது பாதசாரிகளுக்கு இடையூராகும் விதத்தில் வீதியில்,*

*(அ) வியாபாரம் செய்தல் ;*

*(ஆ) விலக்கிக் கொண்டு செல்வதற்காக உயிர்ப்பிப்பதற்கு அல்லது வேறு இடர்பாடு காரணமாக செலுத்திக் கொண்டு செல்ல முடியாத ஏதேனும் காரணம் ஏற்படுமாயின் தவிர பிரதேச சபையினால் வாகனம் நிறுத்துவதற்கு இடமளிக்க தீர்மானிக்கப்பட்ட ஏதேனும் பிரிவு அல்லாத இடத்தில் வாகனம் நிறுத்தி வைத்தல் ;*

*(இ) வாகனம் பழுதுபார்த்தல் அல்லது வாகனம் கழுவுதல் ;*

*(ஈ) ஏதேனும் வீதியில் செய்யப்படும் பழுதுபார்த்தலுக்காக பிரதேச சபையில் அல்லது தவிசாளரின் தீர்மானத்தின் மீது செய்யப்படும் விடயங்களின் போது தவிர்ந்த கல், மணல், பொரலு, மண், செங்கல் அல்லது மரக் கட்டைகள் இறக்குதல் அல்லது வைத்தல் ;*

*(உ) வாகன பகுதிகள் அல்லது ஏதேனும் பொருட்கள் அல்லது உபகரணங்கள் தரித்து வைக்கப்படக்கூடாது.*

*3. வீடு மற்றும் நகர அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தில் 19 ஆவது வாக்கியத்தின் விதிமுறைகளின் கீழ் அகலத்தின் ஐந்து அடிக்கும் (16.7 மீற்றருக்கு) அதிகமான வீதிக்காக வீதி ரேகை நியமிக்கப்படாத ஏதேனும் வீதியில் மத்திய ரேகையிலிருந்து இருபத்தைந்து அடி (3.18 மீற்றர்) உள்ளே ஏதேனும் விதத்தில் நிர்மாணித்தல் எவராவதொருவரினால் செய்யக்கூடாததுடன், வேறு ஏதேனும் நிர்மாணித்தலுக்காக கொண்டு வரப்பட்ட ஏதேனும் நிர்மாணிப்பு பொருள் ஏதேனும் வீதியில் அல்லது ஒரு பகுதியில் வைத்தல் கூடாது.*

*4. 2 ஆவது வாக்கியத்தில் குறிப்பிட்ட நியமனங்களை மீறி எவராவதொருவரினால் பிரதேச சபைக்குரிய ஏதேனும் வீதியில் அல்லது வீதியின் ஒரு பகுதியில் ஏதேனும் பொருள் வைக்கப்பட்டுள்ள தருணத்தில் தவிசாளரினால் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரினால் அந்த பொருளை அந்த இடத்திலிருந்து அகற்றுவதற்கு அல்லது பிரதேச சபையின் பொறுப்பிற்கு எடுக்க நடவடிக்கை எடுத்தல் சட்டபூர்வமாகும். தவிசாளரினால் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரினால் மேற்குறித்த விதத்தில் செயற்படுதல் காரணத்தினால் அந்த பொருட்கள் வீதியில் வைக்கப்பட்டுள்ள அல்லது வைப்பதற்கு ஏற்பாடு செய்த நபருக்கு ஏற்படும் நட்டம் அல்லது பாதிப்பு அல்லது சேதம் சம்பந்தமாக அந்த பொருட்களை அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொண்ட நபர் அல்லது பிரதேச சபை பொறுப்பு கூறலுக்கு உள்வாங்கப்பட மாட்டார்கள். அதேபோல் மேலும் அவ்வாறு அகற்ற வேண்டிய பொருட்களுக்காக ஏதேனும் நட்டஈடு செலுத்த பிரதேச சபை அல்லது தவிசாளர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் உள்வாங்கப்பட மாட்டார்.*

*5. பிரதேச சபைக்குரிய ஏதேனும் வீதி பராமரித்தல் அல்லது பழுதுபார்த்தலுக்காக தேவைப்படும் விடயத்திற்காக,*

*அ) அந்த வீதியை முழுமையாக அல்லது வீதியின் ஒரு பகுதியை பராமரித்தல் அல்லது வீதியில் ஏதேனும் ஒரு திசைக்கு பயணிக்கும் ஏதேனும் ஒரு பாதை குறித்த காலத்திற்கு வாகன போக்குவரத்தை நிறுத்தி வைத்தல் ;*

*(ஆ) ஏதேனும் நிர்மாணிப்புப் பொருட்கள் அல்லது அந்தப் பாதையில் ஏதேனும் ஒரு பகுதியில் குவித்து வைப்பதற்கு ;*

*(இ) அந்த வீதிக்கு அருகிலுள்ள காணிக்கு நுழைவதற்கு மற்றும் நிர்மாணிப்புப் பொருட்கள் ஏதேனும் அந்த காணியில் வைப்பதற்கு ;*

*(ஈ) அந்த வீதிக்கு அருகிலுள்ள காணியில் ஏதேனும் சொத்துக்களுக்கு பாதிப்பு ஏற்படாத விதத்தில் அந்தக் காணியில் வாகனம் பயணிப்பதற்காக இடமளிக்க*

*உத்தரவிடுவதற்காக தவிசாளருக்கு அதிகாரம் இருக்க வேண்டும்.*

6. 5 ஆவது துணைச் சட்டத்தின்கீழ் தவிசாளரினால் செய்யப்பட்ட ஏதேனும் உத்தரவிற்கு எதிரான விதத்தில் செயற்படுதல் அல்லது ஏதேனும் ஒரு உத்தரவிற்கு அமைய செயற்படும் எவரேனும் ஒரு நபருக்கு இடையூறு ஏற்படுத்துதல் அல்லது அவ்வாறு செய்யத் தூண்டுவது எவராலும் செய்யக்கூடாது.

7. தவிசாளரினால் விநியோகிக்கப்படும் எழுத்து மூலமான உத்தரவு இருக்குமாயின் தவிர எவராவதொருவரினால் பிரதேச சபைக்குரிய ஏதேனும் வீதியில் தேங்கி நிற்கும் கல், பொரலு, மணல், மண் அல்லது வேறு ஏதேனும் பொருள் சேகரித்தல் அல்லது குவித்தல் அல்லது வெளியில் கொண்டுசெல்லல் செய்யக் கூடாது.

8. ஏதேனும் காணிக்கு அல்லது காணியில் அமைந்துள்ள கட்டிடத்தின் கூரையில் விடும் மழை நீர் தவிர்ந்த வேறு ஏதேனும் விதத்தில் அந்தக் காணியில் அல்லது காணியில் அமைந்துள்ள கட்டிடத்தில் நிலவும் நீர் அல்லது பாவித்த பின்னர் வெளியாகும் அசுத்த நீர் உறிஞ்செடுக்கும் குழிக்கு செல்லும் விதத்தில் செய்ய வேண்டும். பிரதேச சபைக்குரிய வீதிக்கு அல்லது வீதியின் வழியாக உள்ள கானுகளுக்கு வெளியிடுதல் செய்யக் கூடாது.

9. போக்குவரத்து செய்யப்படும் பொருட்கள் அல்லது புளுதி அல்லது மணல் அல்லது சிறிய துண்டுகளாகப் பரப்பி விடுதல் தடுக்கும் மறைவினால் மூடப்பட்டிருந்தால் தவிர எவராவதொருவரினால் அவ்வாறான பொருட்களை பிரதேச சபைக்குரிய வீதியில் எந்தவொரு வாகனத்திலும் போக்குவரத்துச் செய்தல் கூடாது.

10. ஏதேனும் வீதியின் வழியாக உள்ள கானுகளை மூடுதல் அல்லது அதற்கு பாதிப்பு ஏற்படுத்துதல் அல்லது அவ்வாறான ஏதேனும் கானுகளில் ஓடும் நீரை இலகுவாக ஓடுவதற்கு இடையூறு செய்தல் எவரேனுமொருவரினால் செய்யக்கூடாததுடன், அவ்வாறான கானுகள் வழியாக ஏதேனும் காணிக்கு உள்நுழைய தேவையாயின் நீலத்தில் 10 மீட்டருக்கு குறையாத விதத்தில் பாலம், மேடை அல்லது ஆறுக்கு அமைப்பது அந்தக் காணியின் உரிமையாளரின், வசிப்பவரின் விடயமாகும்.

11. கொன்கிரீட் செய்யப்பட்ட அல்லது குட்டி கல் அடுக்கப்பட்ட வீதிகளில் ஐந்து தொன்னுக்கும் பார்க்க அதிகமான பாரத்தைக் கொண்ட வாகனம் போக்குவரத்துச் செய்யக் கூடாது.

12. விற்பனைக்காக ஐந்து தொன்னுக்கு அதிகமான மரங்களை போக்குவரத்துச் செய்கையில் பிரதேச சபை வீதிகளை பாவிப்பதாயின் அவ்வாறான வீதிகளுக்கு பாதிப்பு ஏற்படுவதனால் காலத்திற்குக் காலம் சபையினால் நியமம் செய்யப்பட்டு வருடாந்தம் வர்த்தமானி பத்திரத்தில் பிரசுரிக்கப்படும் கட்டணம் செலுத்தி முறையான உத்தரவுப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

13. இந்த துணைச் சட்டத்தில் ஏதேனும் விதிமுறைகளை மீறுவது குற்றமாவதுடன், உரிய அதிகாரமுள்ள நீதிமன்றத்தின் முன் குற்றவாளியாக்கப்பட்ட பின்னர் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தில் 122(2) ஆம் வாக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தண்டத்திற்கு கீழ்ப்படிய நேரிடும்.

14. பதம் சம்பந்தமாக வேறு அர்த்தங்கள் தேவையாயின் தவிர இந்த துணைச் சட்டங்களில்,

(i) “வீதி” என்பது, பிரதேச சபைக்குரிய ஏதேனும் வீதிகள், பாதைகள், பெருஞ்சாலைகள், குறுகிய பாதைகள், வீதிப்படிகள், தொங்கு பாலம் அல்லது பிரயாணிகளின் பாலம் எனக் கருதப்படுவதுடன், பிரதேச சபைக்குரிய வீதிகளுக்கு, பாதைகளுக்கு, பெருஞ்சாலைகளுக்கு, குறுகிய பாதைகளுக்கு, வீதிக்கு, படிகளுக்கு சம்பந்தப்படுத்தி பொருத்தப்பட்டுள்ள அல்லது நடப்பட்டுள்ள ஏதேனும் தூரத்தைக் காட்டும் அடையாளம், மாயம் குறிப்பிட்ட கல், மாயம், குறிப்பிட்ட தூண், விளக்குத் தூண், பாலம் ஏதாவதொரு விதத்திலான போக்கு, நீர்க்கடவை, மதில் சுவர், குழி, கானு, குகை, தாங்கும் மதில் சுவர், சங்கிலி, வேலி, சமிக்ஞை பலகை, வீதிப் பெயர்ப்பலகை அல்லது வீதிக்கு அருகிலுள்ள நடைபாதை அதற்கு உள்ளடங்கும்.

(ii) “வாகனம்” என்பது, வாகன கட்டளைச் சட்டத்தில் அதற்கு வழங்கப்பட்டுள்ள அர்த்தங்களை கருத்தில்கொள்ள வேண்டியதுடன், வண்டி, துவிச்சக்கர வண்டி, சக்கரம் பொருத்தப்பட்ட இயந்திரத்தினால் அல்லது வேறு விதத்தில் செயற்படும் உபகரணம் எனக் கருதப்படும்.

(iii) “பாதிப்பு ஏற்படுத்துதல்” என்பது, அழித்துவிடுதல், கழட்டி விடுதல், விகாரமடையச் செய்தல், பிறட்டி விடுதல், ஒதுக்கி விடுதல், வேறு ஏதாவதொரு விதத்தில் பாதிப்பு ஏற்படுத்துதல், ஏதேனும் பிரிவின் மீது போஸ்டர் அல்லது துண்டுப் பிரசுரம் ஒட்டுதல் அல்லது பெயின்ட் அல்லது வேறு ஏதாவதொரு பூசும் பொருள் அல்லது தார் பூசுதல் எனக் கருதப்படுவதுடன், ஏதேனுமொரு பெயர்ப்பலகையில் எழுத்துக்களை மாற்றம் செய்தல், அழித்து விடுதல், சுரண்டி விடுதல் அல்லது கழட்டி விடுதல் அதற்கு உள்வாங்க வேண்டியதுடன், பிரதேச சபையினால் அல்லது தவிசாளரினால் அல்லது தவிசாளரின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தரினால் ஏதேனும் வீதி பழுதுபார்ப்பதற்காக செய்யப்படும் ஏதேனும் விடயங்கள் அதற்கு உள்வாங்கக் கூடாது.

9 ஆவது பிரிவு

**பாதைகள் மற்றும் வீதிகள் மற்றும் அருகிலுள்ள இடங்களை அலங்காரம் செய்தல்**

பிரதேச சபை எல்லைகளுக்குள் உள்ள பாதைகள் மற்றும் வீதிகள் அதனருகிலுள்ள இடங்களை அலங்காரம் செய்தல் தொடர்பான துணைச்சட்டம்

2. இந்த துணைச்சட்டம் பிரதேச சபை அதிகாரப் பிரிவுக்குள் பாதைகள், வீதிகள் அற்றும் அருகிலுள்ள இடங்களை அலங்காரம் செய்தல், அதனால் பொது மக்களுக்கு ஏற்படும் இடைஞ்சல் மற்றும் சுற்றாடலுக்கு ஏற்படும் பாதிப்பு தவிர்த்தல் மற்றும் அவைகளை நிருவகித்தல், அது தொடர்பாக உத்தரவுப்பத்திரம் விநியோகித்தல் மற்றும் கட்டணம் அறவிடுதல் தொடர்பாக விதிமுறைகள் தயாரிக்கப்படும்.

3. இங்கு இதன் பின்னர் ஏதேனுமொரு வீதிகளுக்கு அருகில் ஏதேனும் ஒரு பொது சூழலில் வீதிகள் அல்லது பாதைக்காக அட்டவணை இலக்கம் இரண்டில் காட்டப்பட்டுள்ள மாதிரியின் பிரகாரம் உத்தரவுப்பத்திரம் பெற்றுக்கொண்டு இருந்தால் தவிர அந்தப் பொது இடங்களை, வீதிகளை, பாதைகளை எந்தவிதத்திலும் அலங்கரித்தல் செய்யக்கூடாது.

4. 3 ஆவது வாக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் உத்தரவுப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்காக சமர்ப்பிக்கப்படும் அனைத்து விண்ணப்பப்பத்திரமும் இங்கு முதலாவது அட்டவணையில் காட்டப்பட்டுள்ள மாதிரியின்படி தயாரித்து சமர்ப்பிக்க வேண்டும்.

5. சமர்ப்பிக்கப்படும் அனைத்து விண்ணப்பப்பத்திரமும் அலங்காரம் செய்ய நினைக்கும் திகதிக்கு ஐந்து தினங்களுக்கு முன்னதாக தவிசாளர் அல்லது செயலாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறாயினும் இந்த துணைச் சட்டத்தில் நிச்சயிக்கப்பட்டுள்ள கால எல்லைக்குள் முன்வைக்கப்படாத அவ்வாறான விண்ணப்பப்பத்திரம் விசேட தருணத்திற்கான விடயங்களின்கீழ் கவனத்தில் கொண்டு தவிசாளர் அல்லது செயலாளரினால் அது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

6. மேல் மூன்றாவது வாக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முதலாவது அட்டவணையில் உள்ளடங்கிய விண்ணப்பப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விடயங்கள் அதற்கு மேலாக விண்ணப்பப்பத்திரம் சம்பந்தமாக தீர்மானம் எடுப்பதற்காக தவிசாளர் அல்லது செயலாளரினால் வேண்டி நிற்கும் வேறு ஏதேனும் விபரங்கள் இருப்பின் அந்த அனைத்து விபரங்களையும் அனைத்து விண்ணப்பதாரரும் வழங்க வேண்டும்.

7. சபையினால் முன்வைக்கும் அனைத்து உத்தரவுப்பத்திரமும்,

(அ) இங்கு இரண்டாவது அட்டவணையிலுள்ள மாதிரியான பிரகாரம் இருக்க வேண்டும் ;

(ஆ) ஏதேனும் இடைநிறுத்தலுக்கு அல்லது இரத்துச் செய்வதற்கு கீழ்ப்பட்டு விநியோகிக்கும் விடயம் மற்றும் காலத்திற்காக மாத்திரம் செல்லுபடியாக வேண்டும்.

8. தவிசாளர் கீழ்க்காணும் விடயங்கள் தொடர்பாக அதாவது-

(அ) விநியோகிக்கப்படும் உத்தரவுப்பத்திரம் இந்த துணைச்சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் விதிமுறைகளை மீறுவதற்கு பயன்படுத்த மாட்டேன் என்றும்,

(ஆ) உத்தரவுப்பத்திரத்தின் மூலம் அதிகாரம் கிடைக்கும் நடவடிக்கைகளினால் பொது மக்களுக்கு அல்லது சுற்றாடலுக்கு அல்லது பொதுச் சொத்துக்களுக்கு பாதிப்பு அல்லது நட்டம் அல்லது ஏதேனும் பாதிப்புகள் செய்ய மாட்டேன் என்றும்,

(இ) சுற்றாடலை பாதுகாப்பதற்காக விண்ணப்பதாரரினால் போதுமான நடவடிக்கை எடுத்துள்ளதாக திருப்தியடையும் பட்சத்தில் மாத்திரம் குறித்த உத்தரவுப்பத்திரத்தை விநியோகிக்க வேண்டும்.

9. உத்தரவுப்பத்திரம் விநியோகிப்பதற்கான கட்டணமாக சபையினால் காலத்திற்குக்காலம் பிரேரணை அங்கீகரிக்கப்பட்ட கட்டணம் நியமிக்க முடிவதுடன், அந்தக் கட்டணம் வருடாந்த அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகையில் சபையினால் பிரசுரிக்க வேண்டும். உத்தரவுப்பத்திரம் விநியோகிப்பதற்கு முன்னர் அந்தக் கட்டணம் விண்ணப்பதாரரினால் சபைக்குச் செலுத்த வேண்டும்.

10. துணைச் சட்டத்தில் இலக்கம் 9 ஆவது வாக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணத்திற்கு மேலதிகமாக அனுமதிப்பத்திரத்திற்கு அமைய செய்யப்பட்ட அலங்காரங்களை உத்தரவுப்பத்திரம் பெற்றுக்கொண்டவரினால் குறிப்பிட்ட காலத்திற்குள் அகற்றப்படாது விட்டால் அந்த அலங்காரங்களை அகற்றுவதற்கு செலவு ஏற்படுமெனக் கருதும் பணத்திற்கு சமமான பணத்தை

உத்தரவுப்பத்திரத்தை விநியோகிப்பதற்கு முன்னர் வைப்புப் பணமாக உத்தரவுப்பத்திரம் பெறுபவரினால் சபைக்குச் செலுத்த வேண்டியதுடன், உத்தரவுப்பத்திரம் பெறுபவர் செய்த அலங்காரங்களைக் குறிப்பிட்ட காலத்தில் அகற்றப்படாது விட்டால் குறித்த வைப்புப் பணத்தை சபை நிதியத்திற்கு வைப்புச் செய்யப்பட வேண்டியதுடன் குறித்த அலங்காரங்களைச் சபையினால் அகற்றுவது சட்டபூர்வமாகும்.

11. துணைச் சட்டத்தில் இலக்கம் 10 ஆவது வாக்கியத்தில் குறிப்பிடப்பட்ட வைப்புப் பணம் எவ்வளவு என்பதை வருடாந்த அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகையில் தவிசாளர் பிரசுரிக்க வேண்டும்.

12. உத்தரவுப்பத்திரம் பெறுபவரினால் செய்யப்படும் அனைத்து அலங்காரங்கள் வீதிகளில் பயணம் செய்யும் எவராவதொரு நபருக்கு, நபர்களின் குழுவுக்கு அல்லது சொத்துக்களுக்கு இடையூறு ஏற்படும் அல்லது பாதிப்பு ஏற்படும் விதத்தில் செய்தல் கூடாததுடன், அதன் மூலாம் ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டால் அந்தப் பாதிப்பினால் ஏற்படும் நட்டத்தை உத்தரவுப்பத்திரம் பெறுபவர் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

13. உத்தரவுப்பத்திரம் பெறுபவரினால் செய்யப்படும் அனைத்து அலங்காரங்கள் வீதிகளில் பயணம் செய்யும் எவராவதொரு நபருக்கு, நபர்களின் குழுவுக்கு அல்லது ஓட்டிச் செல்லும் ஏதேனுமொரு வாகனப் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படும் விதத்தில் செய்யக்கூடாது.

14. செய்யப்படும் அலங்காரம் எவரேனும் ஒருவருக்கு, நபர்களின் குழுவிற்கு அவமானம் ஏற்படும் விதத்தில் இருக்கக் கூடாது.

15. அலங்காரம் செய்கையில் அகற்றப்படும் அனைத்துப் பொருட்களும் சுற்றாடலுக்குப் பாதிப்பு ஏற்படாதவாறு வெளியேற்றுதல் உத்தரவுப்பத்திரம் பெறுபவரினால் செய்தல் வேண்டும்.

16. இந்த துணைச் சட்டத்தை மீறுதல் தொடர்பாக அந்த மீறும் செயல் நிலை நிறுத்தப்படும் ஏதேனும் செயற்பாடு அல்லது செய்யாது விடுதலுக்காக 750 ரூபாவுக்கு அதிகரிக்காத தண்டத்திலும், அந்த மீறும் செயலைத் தொடர்ந்தும் இடைவிடாது செய்துகொண்டு செல்லும்போது உரிய அதிகாரமுள்ள நீதிமன்றத்தினால் அது தொடர்பாக குற்றவாளியாக்கப்பட்டதன் பின்னர் அல்லது அந்த மீறல் தொடர்பாக கவனம் செலுத்தி தவிசாளரினால் அல்லது அதிகாரமுள்ள வேறு உத்தியோகத்தரினால் எழுத்துமூலமான அறிவித்தல் ஒப்படைத்ததன் பின்னர் மீறும் செயலை தொடர்ந்தும் இடைவிடாது செய்யும் ஒரு தினத்திற்கு 250 ரூபாவுக்கு அதிகரிக்காத மேலதிக தண்டத்திற்கு உள்வாங்க நேரிடும்.

17. பதம் சம்பந்தமாக வேறு அர்த்தம் தேவையாயின் தவிர இந்தப் பிரிவின் துணைச்சட்டங்களில்,

(i) ''பாதைகள் அல்லது வழிகள்'' என்பது, 193 ஆவது அதிகாரமான வழிகள் கட்டளைச் சட்டத்தில் முறையே அவைகளுக்கு வழங்கப்பட்டுள்ள விளக்கமும்,

(ii) ''பொதுச் சொத்து'' என்பது, பிரதேச சபை அதிகாரப் பிரிவுக்குள் அனைத்துப் பாதைகள் மற்றும் வழிகளின் இரு புறங்களிலும் அமைந்துள்ள தொலைபேசி மற்றும் மின் கம்பங்களும், பொது மக்கள் பொதுவாகப் பாவிக்கும் அனைத்து இடங்களும் சொத்துக்களும்,

(iii) ''அலங்காரம்'' என்பது, இயற்கை, செயற்கை அல்லது எந்தவொரு பொருளாலும் அல்லது வெளிச்ச சமிக்ஞை மூலம் செய்யப்படும் ஏதேனும் ஒருவிதத்திலான அலங்காரம் எனக் கருதப்படும்.

**01 ஆம் இலக்க அட்டவணை**

பாதைகள் மற்றும் வழிகள் மற்றும் அதனை அண்மித்த இடங்களை அலங்காரம் செய்தலுக்கான விண்ணப்பப்பத்திரம்

1. விண்ணப்பதாரரின் பெயர் :----------------------------------------------------------------------.
2. விலாசம் :----------------------------------------------------------------------------------.
3. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----------------------------------------------------------.
4. தொலைபேசி இலக்கம் :----------------------------------------------------------------------.
5. அலங்காரம் செய்யப்படும் விழா/விடயத்தின் தன்மை :-------------------------------------------------.
6. அலங்காரம் செய்வதற்குப் பயன்படுத்தும் பொருட்கள் தொடர்பான விபரம் :-------------------------------------
   ------------------------------------------------------------------------------------------.
7. அலங்காரம் செய்யும் இடம் தொடர்பான விபரம் :---------------------------------------------------------
   ------------------------------------------------------------------------------------------
8. அலங்காரம் செய்ய ஆரம்பிக்கும் மற்றும் முடிக்கும் திகதி :------------------------------------------------.
   (அ) அலங்காரத்தைக் காட்சிப்படுத்தும் காலம் :----------------------------------------------------------.

9. அலங்காரங்களை கழற்றி அகற்றும் திகதி :------------------------------------------------------------------------.
10. அகற்றப்படும் பொருட்களை வெளியேற்றம் செய்யும் முறை தொடர்பான விபரம் :----------------------------------
----------------------------------------------------------------------------------------------------.

பிரதேச சபையினால் செய்யப்படும் நியதிகளுக்கு இணங்குவதாக உறுதியளிக்கின்றேன்.

* அலங்காரம் செய்யப்படும் விதம் தொடர்பாக திட்டத்துடன் விண்ணப்பப்பத்திரத்தைச் சமர்ப்பிக்க வேண்டும்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

**அட்டவணை - இலக்கம் 2**

பாதைகள் மற்றும் வழிகள் மற்றும் இடங்கள் அலங்காரம் செய்தல் உத்தரவுப்பத்திரம்

1. உத்தரவுப்பத்திரம் பெறுபவரின் பெயர் :------------------------------------------------------------------------.
2. விலாசம் :--------------------------------------------------------------------------------------------.
3. அலங்காரம் செய்வதற்கு அதிகாரம் கிடைக்கும் பொது இடங்கள் மற்றும் வீதியில்/வீதிகளில்/வழிகளில் என்றால் :
----------------------------------------------------------------------------------------------------.
----------------------------------------------------------------------------------------------------.
4. அலங்காரம் செய்வதற்குப் பயன்படுத்தும் பொருட்கள் தொடர்பான விபரம் :--------------------------------------
----------------------------------------------------------------------------------------------------.
5. அலங்காரம் செய்வதற்கு உத்தரவு வழங்கப்படும் காலம் :--------------------------------------------------.
6. (அ) அலங்காரம் செய்ய ஆரம்பிக்கும் திகதி மற்றும் நேரம் :----------------------------------------------.
(ஆ) அலங்காரத்தைக் கழட்டி அகற்றவேண்டிய திகதி மற்றும் நேரம் :----------------------------------------.

7. இந்த உத்தரவுப்பத்திரம் விநியோகிக்கப்படுவது கீழ்க்காணும் விதிமுறைகளின் கீழாகும் :

(அ) உத்தரவுப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்குள் மாத்திரம் அலங்காரம் செய்தல் செய்ய வேண்டும் ;
(ஆ) செய்யப்படும் அனைத்து அலங்காரங்கள் எந்தவிதமான பொதுச் சொத்துக்கோ தனியார் சொத்துக்கோ பாதிப்பு அல்லது இடையூறு ஏற்படாதவாறு செய்யப்படுதல் வேண்டும் ;
(இ) செய்யப்படும் அனைத்து அலங்காரங்கள், அலங்காரம் செய்யப்படும் பாதையில் அல்லது வீதியில் செல்லும் எந்த வாகனத்திற்கும், நபருக்கும் இடையூறு ஏற்படாத விதத்தில் இருக்க வேண்டும் ;
(ஈ) அனுமதிப்பத்திரத்தைப் பரிசோதிப்பதற்காக தவிசாளர் அல்லது அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் ஒருவர் அல்லது பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கேட்கும் போது அதைன சமர்ப்பித்தல் வேண்டும்.

(உரிய இடத்தில் ✓ அடையாளம் இடுக.) :

* வழியில் ஒரு பக்கம்
* வழியில் இரு பக்கம்
* வழியின் மேல் குறுக்காக
சொத்துக்கள் சூழலுக்குள் - வழிக்கு அருகில்

இடம் :

----,
உத்தரவுப்பத்திரம் விநியோகிக்கும் உத்தியோகத்தரின் கையொப்பம்.

பதவி :----.
பதவி முத்திரை :----.
சபையின் பெயர் மற்றும் விலாசம் :--

திகதி :----.

*10 ஆவது பிரிவு*

**கட்டாக்காலி மிருகங்கள்**

*பிரதேச சபை அதிகாரப் பிரிவுக்குள் கட்டாக்காலி மிருகங்களினால் ஏற்படும் பாதிப்புகளை தவிர்த்துக்கொள்வதற்காக அந்த மிருகங்களை தொழுவத்தில் வைத்தல் மற்றும் அதனை ஒத்த மேலதிக விடயங்கள் தொடர்பான துணைச்சட்டம்*

*2. கட்டாக்காலி மிருகங்கள் சம்பந்தமாக இந்த துணைச்சட்டத்தினால் காட்டப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்வதற்காக கட்டாக்காலி மிருகங்களைப் பிடித்த பின்னர் பிரதேச சபையினால் செய்யப்பட்டுள்ள தொழுவத்திற்குள் தற்காலிகமாக நிறுத்தி வைப்பதற்கு பிரதேச சபைக்கு அதிகாரம் உண்டு.*

*3. அதிகாரமுள்ள நபரொருவர் அல்லது பாதுகாவலர் ஒருவருக்கு இந்த துணைச் சட்டத்தின் மூலம் அல்லது தவிசாளரினால் அல்லது செயலாளரினால் ஒப்படைக்கும் கடமையாவதுடன், எவராலும் அந்தக் கடமைகளைச் செய்வதற்கு இடையூறு செய்தல், தடை ஏற்படுத்துதல், கடமையிலிருந்து விலக்குதல் அல்லது அவர்களை பயம் காட்டுதல் அல்லது மிரட்டுதல் குற்றமாகும்.*

*4. அதிகாரமுள்ள நபரொருவரினால் பொது இடத்தில் கட்டாக்காலி மிருகம் ஒன்றைப் பிடித்தல், அந்த மிருகத்தை தனது பொறுப்பில் கொள்ளல் உகந்ததென தன்னால் தீர்மானிக்கும் பாதையின் வழியே தொழுவத்திற்கு கொண்டுவருவது சட்டமாகும்.*

*5. அதிகாரமுள்ள நபரொருவரினால் பிடிக்கப்பட்ட அனைத்து மிருகங்களையும் இயன்றளவு விரைவாகத் தொழுவத்துக்குக் கொண்டுவந்து பாதுகாவலரிடம் ஒப்படைக்க வேண்டும்.*

*6. அதிகாரமுள்ள நபரொருவரினால் பிடிக்கப்பட்ட மிருகம் தொழுவத்திற்கு ஒப்படைக்கையில் மிருகத்தை பிடித்துக்கொண்ட திகதி, நேரம், இடம், மிருகத்தின் வகை, ஆணா பெண்ணா என்பது, வர்ணம், தோல் அடையாளம், வேறு விசேட விடயங்கள் பதிவேட்டில் உள்ளடக்கி அந்த மிருகங்களை தொழுவத்திற்குள் பெற்றுக்கொண்டதாக பாதுகாவலரின் கையொப்பத்தைப் பெற்றுக்கொண்டு அவ்வாறு ஒப்படைத்ததாக தானும் ஒப்பமிட வேண்டும். இந்தப் பதிவேட்டில் மிருகங்கள் தொடர்பாக குறிக்கப்பட்ட பின்னர் வரும் அலுவலக நேரத்திற்குள் பதிவேட்டினை சபையின் செயலாளரின் மேற்பார்வைக்குச் சமர்ப்பித்து கையொப்பம் பெற்றுக்கொள்ள வேண்டும்.*

*7. தொழுவத்திற்குள் பாதுகாவலரினால் பொறுப்பேற்கும் மாடுகள் தொடர்பாக மேற்குறிப்பிட்ட 6 ஆவது துணைச் சட்டத்தின்படி விபரமும் செயலாளரின் விடுவிக்கும் உத்தரவு கிடைத்த திகதி மற்றும் நேரம், விடுவித்த நேரம் உள்ளடங்கிய பதிவேடு ஒன்றும் பாதுகாவலரினால் நடாத்திச்செல்ல வேண்டியதுடன், மிருகத்தைப் பொறுப்பேற்றவரின் கையொப்பத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.*

*8. செயலாளரினால் விநியோகிக்கப்படும் மிருகங்களை விடுவிக்கும் உத்தரவு இல்லாது எந்தவொரு மிருகத்தையும் விடுவிக்கக் கூடாததுடன், உத்தரவில் குறிப்பிட்டுள்ள நபருக்கே மிருகத்தை ஒப்படைக்க வேண்டும்.*

*9. தொழுவத்தில் வைக்கப்பட்டுள்ள மிருகமொன்றை விடுவிப்பதற்காக செயலாளரினால் விடுவிக்கும் உத்தரவு வழங்குவதற்கு முன்னர் மிருகத்தைப் பிடித்துக்கொண்டதற்கான கட்டணத்தையும், உணவு மற்றும் பாதுகாப்புக் கட்டணமாக நியமிக்கும் பணத்தை மிருகத்தின் உரிமையாளர் உரிமையாளரினால் பிரதேச சபைக்குச் செலுத்திப் பற்றுச்சீட்டு பெற்றுக்கொண்டுள்ளதாக மற்றும் விண்ணப்பதாரர் மிருகத்தின் உண்மையான உரிமையாளர் என்பதையும் செயலாளர் ஏற்றுக்கொள்ளக்கூடிய விதத்தில் எழுத்துமூலமான தனிப்பட்ட சாட்சிகளினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என திருப்தியடைய வேண்டும்.*

*10. அதிகாரமுள்ள ஒருவர் மிருகமொன்றைப் பிடித்துக்கொண்ட தருணம் முதல் தொழுவத்திலிருந்து விடுவிக்கும் தருணத்திற்கு இடைப்பட்ட காலத்திற்குள் ஏதாவதொரு மிருகம் நோய்வாய்ப்படுதல், இறந்துபோதல் தொடர்பாக பிரதேச சபை அல்லது அது தொடர்பாக செயற்படும் எவரும் பொறுப்புக்கூற கடமைப்பட்டவர்கள் இல்லாததுடன், அவ்வாறான விடயத்திற்காக நட்டஈடு, நட்டம் செலுத்த சபை கட்டுப்படாது.*

*11. (அ) பிடித்துக்கொள்ளப்படும் எந்த வகையான மிருகத்திற்கானாலும் பிடிக்கப்பட்ட கட்டணமாக ஒரு மிருகத்திற்காக காலத்திற்குக் காலம் சபையினால் நியமம் செய்யும் பணம் கட்டணமாக மிருகத்தின் உரிமையாளர் அல்லது பொறுப்பாளர் பிரதேச சபைக்கு செலுத்தும் வரை எந்த மிருகத்தையும் விடுவிக்கக்கூடாது. அவ்வாறு நியமம் செய்யப்படும் பணத்தில் சபையினால் காலத்திற்குக்காலம் நியமம் செய்யும் தொகை அதிகாரமுள்ளவருக்கும் பாதுகாவலருக்கும் செலுத்தி நிலுவையை சபை நிதியத்தில் வைப்புச் செய்யப்பட வேண்டும்.*

*(ஆ) மிருகங்களைப் பிடித்துக்கொள்ளும் கட்டணம், உணவு மற்றும் பாதுகாப்புக் கட்டணம் காலத்திற்குக்காலம் பிரதேச சபை நியமம் செய்து வருடாந்தம் அரசாங்க வர்த்தமானி பத்திரிகையில் பிரசுரித்திருக்க வேண்டும்.*

12. பிடித்துக்கொண்ட அனைத்து மிருகத்தையும் பாதுகாத்துக் கொள்ளல், உணவு வழங்குதல், குறிப்பிட்ட தருணங்களில் சிகிச்சை வழங்குதல் போன்ற அனைத்து விடயங்களும் பிரதேச சபையின் பொறுப்பாவதுடன், அது சம்பந்தமாக ஏற்படும் செலவை மிருகத்தின் உரிமையாளர் அல்லது பொறுப்பாளரிடம் அறவிட்டுக்கொள்வது சட்டபூர்வமாகும்.

13. உரிமையாளர் அல்லது பொறுப்பாளர் முன்வராத போதும், குறிப்பிட்ட கட்டணம் செலுத்தாதபோதும் பிடித்துக்கொண்ட நாள் முதல் 14 நாட்களுக்குக் குறையாத காலம் தொழுவத்திற்குள் வைத்திருந்ததற்கும் ஏதேனுமொரு மிருகத்தின் உரிமை சபைக்குரியதாவதுடன், தவிசாளரினால் தீர்மானிக்கும் விதத்தில் அறிவித்தல் விடுத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்தல், விலைக்குப் பெற்றவருக்கு மிருகத்தின் உரிமையை வழங்குவதற்கும் தேவைப்படும் ஏனைய விடயங்களைச் செய்வதும் சட்டபூர்வமாகும்.

14. ஏலத்தில் விடுவதன் மூலம் பெற்றுக்கொள்ளம் பணத்தில் பிரதேச சபைக்குச் செலுத்தவேண்டிய கட்டணங்களைப் பெற்றுக்கொண்டு மிருகத்தின் உண்மையான உரிமையாளர் கேட்டுக்கொண்டால் நிலுவையாகும் பணத்தை அவருக்குச் செலுத்த முடியும். ஏலத்தின் பின்னர் 6 மாதம் கடந்த வேண்டுகோள்களை ஏற்றுக்கொள்ளக் கூடாது. அவ்வாறான தருணங்களில் நிலுவையான பணத்தைப் பொது நிதியத்தில் வைப்புச்செய்ய வேண்டும்.

15. இந்த துணைச் சட்டங்களில் ஏதேனும் துணைச் சட்டத்தில் அனைத்து மீறல்களுக்காகவும் 750 ரூபாவுக்கு அதிகரிக்காத தண்டத்திலும், தொடர்ச்சியாக செய்யும் அவ்வாறான குற்றம் சம்பந்தமாகும்போது குற்றவாளியாக்கப்பட்ட பின்னர் அல்லது மீறுதல் தொடர்பாக கவனம் செலுத்தி தவிசாளரினால் அல்லது தவிசாளரினால் அதிகாரம் வழங்கப்பட்ட வேறு உத்தியோகத்திரினால் எழுத்து மூலமான அறிவித்தலர் ஒப்படைத்ததன் பின்னர் மீறும் செயலைத் தொடர்ந்தும் இடைவிடாது குற்றம் செய்யும் ஒரு தினத்திற்கு 250 ரூபாவுக்கு அதிகரிக்காத மேலதிக தண்டத்திற்கு உள்வாங்க நேரிடும்.

16. பதங்கள் சம்பந்தமாக வேறு அர்த்தகங்கள் தேவையாயின் தவிர, இந்த துணைச் சட்டங்களில்–

(i) ‘‘மிருகம்’’, ‘‘ஒரு மிருகம்’’, ‘‘மிருகங்கள்’’ என்ற சொற்களுக்கு மாடு, எருமை, குதிரை, கழுதை, போனி, ஆடு அல்லது பன்றி உள்ளடங்குவதுடன், அந்த அனைத்து வகையும் பெண் மிருகம் மற்றும் ஆண் மிருகம் உள்ளடங்கும். மேலும் ஒருமையில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களுக்கு உரிய விதத்தில் பன்மை அர்த்தமும் மாற்றமடைய வேண்டும்.

(ii) ‘‘பொது இடம்’’ என்பதற்கு பிரதேச சபை அதிகாரப் பரிவுக்குள் அமைந்துள்ள ஏதேனும் ஒரு பாதை, குளம், பொது பஸ் நிறுத்தம், விளையாட்டு பூமி, பங்கா, பொது கட்டிட சூழல் அல்லது பொது மக்களுக்குப் பொதுவாக நுழையக்கூடிய வேறு இடங்கள் என்ற அர்த்தம் உள்ளடங்கும்.

(iii) ‘‘கட்டாக்காலி மிருகங்கள்’’ என்ற கூற்று பிரதேச சபை அதிகாரப் பிரிவுக்குள் ஏதேனும் பொது இடங்களில் திரியும், தின்னும், இருக்கும், தங்கி நிற்கும், கட்டப்பட்டிருக்கும் அல்லது இருக்கும் அல்லது வேறு விதத்தில் இருக்கும் மிருகங்கள் எனக் கருதப்படுவதுடன், பொருட்கள் இறக்குதல் மற்றும் ஏற்றுதலுக்காக நிறுத்தப்பட்டிருக்கும் வண்டியில் கட்டப்பட்டிருக்கும் மாடு அல்லது எருமை மாடு அல்லது எவரேனும் கயிற்றினால் கட்டி ஓட்டிச்செல்லும் மிருகம் உள்ளடங்கப்பட மாட்டாது.

(iv) ‘‘அதிகாரமுள்ள நபர்’’ என்பது, பிரதேச சபை அதிகாரப் பிரிவுக்குள் கட்டாக்காலியாகச் செல்லும் மிருகங்களைப் பிடித்து தனது பொறுப்பிற்கு எடுப்பதற்கும், தொழுவத்திற்குக் கொண்டுவருவதற்குச் தவிசாளரினால் எழுத்து மூலமாக அதிகாரம் வழங்கப்பட்ட, அந்த அதிகாரம் செல்லுபடியாகும் ஒருவர் எனக் கருப்படுவார்.

(v) ‘‘தொழுவம்’’ என்பது, கட்டாக்காலியாகத் திரிந்து பிடிக்கப்பட்ட மிருகங்களை நிறுத்தி வைப்பதற்காகப் பிரதேச சபையினால் அடிக்கடி அமைக்கப்படும் நடாத்தப்படும் மிருகத் தொழுவம் அல்லது மிருகத் தொழுவங்கள் எனக் கருதப்படும்.

(vi) ‘‘பாதுகாவலர்’’ என்பது, தொழுவம் அல்லது அதனுள்ளே வைக்கப்பட்டிருக்கும் மிருகங்களைப் பார்த்துக்கொள்வதற்காக, நிருவகிப்பதற்காகத் தவிசாளரினால் எழுத்து மூலமாக அதிகாரம் வழங்கப்பட்ட, அந்த அதிகாரத்தைச் செல்லுபடியாகும் வித்ததில் நடாத்திச்செல்லும் நபர் எனக் கருதப்படுவார்.

*11 ஆவது பிரிவு*

**கட்டிடம் அமைத்தல் மற்றும் வேலைகள்**

1. (i) பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்திற்குள் கட்டிடங்கள் அமைத்தலின் பிரதேங்களைத் தீர்மானித்தல்.

(ii) நிலையான தன்மையை எற்படுத்துதல், தீப்பிடித்தலைத் தவிர்த்தல், சுகாதாரத்தைப் பாதுகாத்தல் நோக்கமாகக் கொண்ட அந்தக் கட்டிடத்தை அமைக்கும் பொருட்களை நிருவகித்தல்.

(iii) இடையூறு இன்றி காற்றுப் பரிமாற்றம் ஏற்படுவதற்கு மற்றும் குப்பைகளைப் போடுவதற்கு இடம் கிடைக்கும் விதத்தில் கட்டிடங்களுக்கிடையில் இடம் இருத்தல்.

(iv) கதவு, யன்னல்களின் நீளம்-அகலம், தரை மட்டம், கூரையின் உயரம், சாதாரண காற்றோட்டம், நீர் ஓடைகளை முறைப்படுத்துதல்.

(v) புதிய கட்டிடங்கள் அமைப்பதற்காக அல்லது நிலவும் கட்டிடங்களை மாற்றம் செய்வதற்காகத் திட்டங்களைப் பரிசோதனை செய்தல் மற்றும் கவனத்தில் கொள்ளலுக்காகச் சேவைக்கட்டணம் அறவிடுதல்.

(vi) மலசலகூடங்களின் எண்ணிக்கை மற்றும் தன்மையை நிர்ணயித்தல்.

(vii) கட்டிடங்களின் எதிர்முக ரேகையை நிர்ணயித்தல்

தொடர்பான துணைச் சட்டமாகும்.

2. இந்த துணைச்சட்டம் பிரதேச சபை அதிகாரப் பிரிவுக்குள் அட்டவணையில் இலக்கம் 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள வீதியிலிருந்து வீதிக்கு மத்தியில் இருந்து இரு பக்கத்திற்கும் (அந்த அட்டவணையில்) குறிப்பிட்ட மீற்றர் அளவின் எல்லைக்குள் கட்டிடங்கள் அமைப்பதற்காக அதிகாரம் நிலவும்.

3. இந்த துணைச் சட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்ட எல்லைக்குள் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் செய்கையில் கீழ்க்காணும் விதிமுறைகளுக்கு அமைய கட்டிடங்கள் அமைக்க வேண்டும் :

(i) மேற்குறித்த அதிகாரப் பிரிவுக்குள் ஏதாவதொரு நிர்மாணிப்புகள் செய்வதற்கு முன்னர் அதற்கான திட்டம் மற்றும் உரிய கடிதங்கள் பிரதேச சபைக்குச் சமர்ப்பித்து அனுமதி பெற்றிருக்க வேண்டும்.

(ii) கட்டிட அத்திவாரம் செய்வதற்கு கொன்கிரீட் அல்லது கருங்கல்லுடன் சீமெந்துக் கலவை மாத்திரம் பயன்படுத்த வேண்டும். இதற்காகப் பயன்படுத்தும் சீமெந்துக் கலவையில் சீமெந்து மற்றும் மணல் கலவை 1:5 விகிதம் எடுக்க வேண்டும்.

(iii) சுவர் அமைப்பதற்காகச் சீமெந்துச் செங்கல், செங்கல் மற்றும் சுட்ட செங்கல் மாத்திரம் பயன்படுத்த வேண்டும்.

4. (i) இடையூறு இன்றி காற்றோட்டம் கிடைப்பதற்காக, வசிப்பதற்காக நிர்மாணிக்கப்படும் கட்டிடங்கள் 2 இற்கு இடையில் இடைவெளி குறைந்தபட்சம் 4 மீட்டர் இருக்க வேண்டும்.

(ii) கழிவுப் பொருட்களை முறையாக வெளியேற்ற வேண்டியதுடன், நீர் வழிந்தோடுவதற்காக முறையான காணுகள் நிர்மாணிக்க வேண்டும்.

(iii) கட்டிடங்களின் உள்ளே போதுமானளவு வெளிச்சம் மற்றும் காற்றோட்டம் கிடைக்கும் விதத்தில் கதவு, யன்னல் மற்றும் கட்டிடத்தின் சுவர்களில் உயரம் அனுமதிக்கப்பட்ட தரத்திறிகேற்ப இருக்க வேண்டும். கட்டிடத்தின் ஒவ்வொரு மாடிகளின் சுவர்களில் உயரம் குறைந்தபட்சம் 3 மீட்டர் இருக்க வேண்டியதுடன், யன்னல்களின் முழுப் பரப்பளவு கட்டிடம் வசிப்பதற்கென்றால் தரையின் பரப்பளவில் ஆறில் ஒன்றுக்கும், கட்டிடம், வியாபார நடவடிக்கைக்கென்றால் தரையின் பரப்பளவில் பதினைந்தின் ஒன்றுக்கும் குறையாதிருக்க வேண்டும்.

5. கட்டிடத்தில் சஞ்சரிக்கும் சனத்திற்குப் போதுமான விதத்தில் மலசலகூடம், கழிவறை வசதிகள் இருக்க வேண்டும். பொது இடங்களில் 10 பேருக்கு மலசலகூடம் 1 வீதம் ஆண், பெண் வேறு வேறாகவும், அதிகரிக்கும் 10 பேருக்கு 1 வீதம் ஆண், பெண் வேறு வேறாக அனுமானமாக 100 பேருக்கு 1 வீதம் ஆண், பெண் மலசலகூடங்கள் வேறு வேறாக இருக்க வேண்டும்.

6. கிணற்று நீரைப் பாவிப்பதாயின் கிணறு அமைந்துள்ள இடம் மற்றும் மல அசுத்தங்கள் வெளியேற்றும் இடத்திற்குமிடையில் குறைந்தபட்ச தூரம் 15 மீட்டர் இருக்க வேண்டும்.

7. பிரதான வீதியில் மத்திய ரேகையிலிருந்து கட்டிட எல்லை கீழ்க்காணும் விதத்தில் இருக்க வேண்டும் :

| கட்டிட எல்லை | மீற்றர் |
|---|---|
| (i) ஏ தரத்தின் வீதிகள் | 16 |
| (ii) பீ தரத்தின் வீதிகள் | 13 |
| (iii) சீ மற்றும் டீ தரத்தின் வீதிகள் | 10 |
| (iv) ஏனைய வீதிகள் | 05 |

8. கட்டிட அத்திவாரத்திற்காக களிமண் மற்றும் மண் பாவிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

9. கூரைப் பொருட்களாகத் தென்னம் கீற்று, வைக்கோல், மானா, கிடுகு, மரம், பொலித்தீன் போன்ற தீப்பாதிப்புக்களுக்கு உள்ளாகக்கூடிய பொருட்கள் பாவிக்கக் கூடாது.

10. சுவர் அமைப்பதற்காகப் பலகை, வரிச்சுவர், தகடு போன்ற பொருட்கள் பாவிக்கக் கூடாது.

11. கழிவுப் பொருட்கள், கழிவு நீர் மற்றும் வேறு குப்பைக் கூழங்கள் வெளியேற்றும் விதம் திட்டத்தின் குறிப்பிட வேண்டும்.

12. நுளம்புகள், கிருமிகள் மற்றும் நோய் பரப்பும் மிருகங்கள் பரவுதலைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

13. தற்காலிகக் கட்டிடங்கள் நிர்மாணிக்கையில் மங்களம், அவமங்களம் மற்றும் விழாக்கள் முடிவடைந்து 7 தினங்களுக்குள் அகற்றப்பட வேண்டும்.

14. நிலையாக அல்லது தற்காலிகமாக நிர்மாணிக்கும் கட்டிடம் அல்லது கட்டிடங்களின் சூழலுக்கு நுழைவதற்கும், பரிசோதனை செய்வதற்கும், உத்தியோகத்தருக்குத் தேவை எனக் கருதும் விபரங்களைப் பெற்றுக்கொள்வதற்கும் தவிசாளர் அல்லது தவிசாளரினால் அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தருக்கு மு. ப. 6.00 மணி முதல் பி. ப. 6.00 மணி வரை காலத்திற்கு அதிகாரம் உண்டு.

15. தற்காலிக நிர்மாணிப்புகளுக்குக் கீழ்க்காணும் விதிமுறைகள் அமுலாக்கப்படும் :

(i) தற்காலிக நிர்மாணிப்பின்போது அத்திவாரம் இட்டு சுவர் கட்டுதல் அல்லது நிலையான கூரை மறைவு செய்யக்கூடாது.

(ii) முறையாகக் கழிவுப் பொருட்களை வெளியேற்ற வேண்டும்.

(iii) அந்த இடத்தில் நடமாடும் சன எண்ணிக்கைக்கு அமைய நீர், மலசல கூடம், கழிவறை வசதி போதுமான அளவு இருக்க வேண்டும்.

16. நிலையான கட்டிடத்திற்காக திட்டம் அனுமதிக்கையில் சபையினால் காலத்திற்குக்காலம் நியமம் செய்யும் பரிசோதனை மற்றும் சேவைக் கட்டணம் மற்றும் விண்ணப்பப்பத்திரக் கட்டணம் சபைக்குச் செலுத்த வேண்டும். இந்தக் கட்டணம் சபையினால் வருடாந்தம் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளவாறு இருக்க வேண்டும்.

17. (i) மாடி கட்டிடமானபோது ஒவ்வொரு மாடியினதும் சதுர அடி அளவின்படி இந்தக் கட்டணங்கள் நியமிக்கப்படும். (அனைத்துக் கட்டிடங்களுக்கும் வீட்டு விடயங்களுக்காக நீர் மற்றும் மின்சாரம் பெற்றுக்கொள்ளும் முறை உறுதிப்படுத்த வேண்டும்.).

(ii) 3 மாடிகளுக்கு அதிகமாகும்போது அவசரக் கதவு பொருத்தி, தீப்பாதுகாப்பு நடவடிக்கை ஏற்படுத்தியிருக்க வேண்டும். 5 மாடி அல்லது அதற்கு அதிகமாகும்போது மின்சார சுமைதாங்கி பொருத்தப்பட வேண்டும்.

18. மங்களம், அவமங்களம் மற்றும் புண்ணிய நடவடிக்கைக்காக அமைக்கப்படும் தற்காலிகக் கட்டிடங்களுக்கு எவ்வித கட்டணமும் அறவிடப்பட மாட்டாது.

*19.* இந்த துணைச் சட்டத்தில் ஏதாவதொரு விதிமுறையை மீறுவது குற்றமாவதுடன், உரிய அதிகாரமுள்ள நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்ட பின்னர் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கமுடைய பிரதேச சபைச் சட்டத்தில் 122(2) ஆவது வாக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தண்டங்களுக்கு உள்ளாக்கப்படும்.

*20.* இந்த துணைச் சட்டத்தில் பதம் சம்பந்தமாக வேறு அர்த்தங்கள் தேவையாயின் தவிர,

(i) "வணிக நடவடிக்கை" என்பது - தொழிற்சாலை, வர்த்தக வியாபாரம், ஓய்வு விடுதி, சுற்றுலா பங்களா, விழா மண்டபம், வதிவிட விடுதி, தனியார் கல்வி நிலையம் அல்லது பணம் அறவிட்டு ஏதேனும் சேவை அல்லது வியாபாரம் செய்யப்படும் இடம் எனக் கருதப்படும்.

(ii) "நிர்மாணித்தல்" என்பதற்கு- புதிதாக அமைத்தல், புதிய பகுதியொன்றைச் சேர்த்தல், மாற்றம் செய்தல், நீடித்தல், இணைத்தல் எனக் கருதப்படும்.

**அட்டவணை 1**

4 ஆவது வாக்கியம்

| வீதி வகை | அனுமதியின்றி கட்டிடம் நிர்மாணித்தல் செய்ய முடியாத எல்லை வீதியின் மத்தியிலிருந்து இரு பக்கமும் மீற்றர் |
|---|---|
| (i) ஏ தரத்தின் வீதிகள் | 500 |
| (ii) பீ தரத்தின் வீதிகள் | 400 |
| (iii) சீ தரத்தின் வீதிகள் | 300 |
| (iv) ஏனைய வீதிகள் | 200 |

12 ஆவது பிரிவு

**அசுத்தங்களை வெளியேற்றுதல்**

பிரதேச சபையின் அதிகாரப் பிரிவுக்குள் அமைக்கப்பட்டுள்ள கழிவுத் தொகுதிகளை நிருவகித்தல் மற்றும் முறைப்படுத்துதல் மற்றும் கட்டணங்கள் அறவிடுதல் சம்பந்தமான துணைச் சட்டமாகும்.

*2.* இந்த துணைச் சட்டத்தில் 1 ஆவது அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பிரதேசத்திற்குள் தற்போதுள்ள மற்றும் அமைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் கட்டிடங்களுக்காக இந்த துணைச் சட்டத்தில் விதிக் கட்டளைகள் செல்லுபடியாகும்.

*3.* கழிவுப் பொருட்கள் மற்றும் கழிவு நீர் வெளியேற்றும், கழிவுப் பொருட்கள் வெளியேற்றும் தொகுதி எந்தவொரு கட்டிடத்திலும் அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து புதிதாக அமைக்கப்படும் பிரதான குழாய்த் தொகுதிக்கு இணைக்கப்பட வேண்டும்.

4. (i) சபையின் தவிசாளருக்கு தற்போது நிலவும் கட்டிடம் ஒன்றில் கழிவுப் பொருட்கள் மற்றும் கழிவு நீர் வெளியேற்றும் தொகுதி மகிழ்ச்சியற்றதாக கருத்து அல்லது முறைப்பாடு கிடைத்தபோது அவரினால் எழுத்து மூலமான அனுமதியின் மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அல்லது அவரினால் அதிகாரம் வழங்கப்பட்ட வேறு உத்தியோகத்தர் அவருக்காக இடத்தைப் பரிசோதனை செய்து எழுத்து மூலமான அறிக்கை பெற்றுக்கொடுக்க வேண்டும்.

(ii) அந்த அறிக்கையை நன்கு பரிசோதனை செய்து தேவைப்பாடுகள் தொடர்பாக திருப்தியடைவதாயின் தவிசாளரினால் ................. மாத கால எல்லை அல்லது அந்தக் காலத்திற்குள் தொழில்நுட்ப தேவைப்பாடுகளாக நிச்சயித்து பிரதான குழாய்த் தொகுதிக்கு இணைத்தலுக்காக இடம் வழங்கப்படும். இதற்காக இணைப்புக் கட்டணம் சபையினால் காலத்திற்குக் காலம் நியமம் செய்து வருடாந்தம் அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டவாறு அமைய வேண்டும்.

5. (i) எந்தவொரு நபரினாலும் கழிவுப் பொருட்கள் மற்றும் கழிவு நீர் வெளியேற்றும் தொகுதியை பிரதான குழாய்த் தொகுதிக்கு இணைத்தலுக்காக விருப்பம் தெரிவித்தால் அதற்காக துணைச் சட்டத்தில் 4 (ii) ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணத்துடன் விண்ணப்பப்பத்திரம் ஒன்றைத் தவிசாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

(ii) தவிசாளருக்கு அந்த விண்ணப்பம் கிடைத்த பின்னர் மதிப்பீடு மற்றும் அந்தத் தேவைப்பாட்டின் உண்மைத் தன்மை தொடர்பாகக் கவனத்தில் கொண்டு திருப்தியடைவதாயின் அதைப் பிரதான குழாய்த் தொகுதிக்கு இணைப்பதற்காக அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படும்.

(iii) இந்த வாக்கியத்தில் (i) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு குழாய்த் தொகுதியை இணைப்பது தொடர்பாக நிச்சயிக்கப்பட்டு அதன் அமைப்பில் யோக்கிய தன்மை மற்றும் பிரவேசிப்பதற்காக ஏற்கவேண்டிய மதிப்பீடு செய்யப்பட்ட செலவும விண்ணப்பதாரருக்கு விண்ணப்பித்த திகதி முதல் 7 தினங்களுக்குள் அறிவிக்கப்படும். அந்த மதிப்பீட்டுச் செலவு விண்ணப்பதாரர் சபைக்குச் செலுத்தும்வரை அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட மாட்டாது.

(iv) கழிவுப் பொருட்கள் மற்றும் கழிவு நீர் பிரதான அசுத்தப் பொருட்களை வெளியேற்றும் குழாய்க்கு இணைப்பதற்கான விண்ணப்பப்பத்திரத்திற்காக அனுமதி கிடைத்ததன் பின்னர் அந்த உரிமையாளர் அல்லது வசிப்பவரினால் தவிசாளர் அல்லது அவரினால் அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தரினால் அனுமதிக்கப்படும் வர்க்கம் குறிப்பிடப்பட்ட அளவிலான குழாய் மற்றும் உபகரணங்கள் பாவிக்க வேண்டும்.

6. (i) குழாய்த் தொகுதியைப் பொருத்துதல், பராமரித்தல் மற்றும் எந்தவொரு நபரும் விருப்பம் தெரிவித்தால் அவரினால் பிரதேச சபையினால் அமைக்கப்பட்டிருக்கும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவில் பதிவுசெய்து முறையான அனுமதிப்பத்திரம் பெற்றிருக்க வேண்டும்.

(ii) தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் தெரிவுசெய்யப்படும் அனைவரினாலும் அதற்காக சபையினால் காலத்திற்குக்காலம் நியமித்து வருடாந்த வர்த்தமானிப்பத்திரத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள கட்டணம் செலுத்த வேண்டும்.

7. துணைச் சட்டத்தில் 5 ஆவது வாக்கியத்தில் குறிப்பிட்டுள்ளவாறு அதற்காக அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்ட நபரைத் தவிர்ந்த வேறு ஒருவரும் பிரதான குழாய்த் தொகுதிக்கு இணைப்பை ஏற்படுத்தி குழாய் பொருத்துவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.

8. (i) கழிவுப் பொருட்களை வெளியேற்றுவதற்காக குழாய் பொருத்துதல் முறைப்படுத்துவதற்காக எந்தவொரு முறையிலும் அல்லது ஒதுக்கப்பட்ட அல்லது சுரங்கப் பாதைக்காகத் திட்டமிடும் பாஷானம் அல்லது பாதுகாப்பு இல்லம் மற்றும் சூழப்பட்ட வேறு காணி சம்பந்தமாக சபையினால் எழுத்து மூலமான அறிவித்தல் வழங்கப்பட்டுள்ள உரிமையாளர் அல்லது வசிப்பவருக்கு கழிவுப் பொருட்கள் வெளியேற்றுவதற்கான குழாய் பொருத்துதலில் ஈடுபட்டிருக்கையில் சொத்துக்களுக்காக ஏற்படக்கூடிய நட்டம் அல்லது நட்டங்களைக் குறைப்பதற்காகத் தேவைப்படும் நடவடிக்கை சபையினால் எடுக்கப்படும்.

(ii) இங்கு 8 (i) ஆவது வாக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கழிவுப் பொருட்களை வெளியேற்றுவதற்காகக் குழாய்ப் பொருத்துகையில் ஏற்படும் நட்டங்கள் அல்லது நட்டத்திற்காகச் சபையினால் மதிப்பீடு செய்து பணம் செலுத்தப்படும்.

(iii) மேல் குறிப்பிட்டவாறு எவரேனும் ஒருவருக்கு அவ்வாறான நட்டம் அல்லது நட்டங்கள் ஏற்பட்டிருந்தால் அந்த உரிமைக்காக நிகழ்வு ஏற்பட்டு 14 தினங்களுக்குள் சபைக்கு வேண்டுகோள் முன்வைக்க வேண்டும்.

(iv) அவ்வாறான வேண்டுகோள் சம்பந்தமாக பிரதேச சபைச் சட்டத்தில் ஒழுங்குப்படுத்தியுள்ள ஏற்பாடுகளுக்கமைய மாற்றப்பட வேண்டியவற்றை மாற்றம்செய்து அந்த வேண்டுகோள் சம்பந்தமாக மதிப்பீடு செய்த நட்டம் சபையினால் செலுத்தப்படும்.

9. கழிவுப்பொருட்கள் மற்றும் கழிவு நீர் வெளியேற்றுவதற்காக வசதிகள் வழங்குவதற்காக சபையினால் உகந்த இடங்கள் அமைக்கப்படும்.

10. தனியார் சொத்தின் வழியாக குழாய்கள் பொருத்த நேரிடும்போது பிரதேச சபைச் சட்டத்தின்கீழ் ஒழுங்குபடுத்தியுள்ள ஏற்பாடுகளுக்கமைய கீழ்க்காணும் விதத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் :

(i) தேவைப்படும்போது சபையினால் கழிவுப் பொருட்கள் மற்றும் கழிவு நீர் வெளியேற்றுவதற்காகக் குழாய்கள் பொருத்தப்படுவதுடன், அவ்வாறான பொருத்தும் நடவடிக்கைகள் வீதி அல்லது பாதைகள் ஊடாக அல்லது அதற்கு கீழ் திட்டமிடும் எந்தவொரு இடம் அல்லது அவ்வாறு கருதும் வீதி அல்லது கட்டிடத்தின்கீழ் அல்லது சுரங்க வழியாக அருகில் அமைந்துள்ள வேறு காணியின் வழியாக இருக்கலாம். அவ்வாறான விடயங்களின்போது காணியின் நட்டம்

பாதிப்பு தொடர்பாக சபையின் குறிக்கோள்களைக் குறிப்பிட்டு அறிவித்தல் ஒன்றைச் சபையினால் இரண்டு வார காலத்திற்குள் உரிமையாளர் அல்லது அங்கு வசிப்பவருக்குப் பெற்றுக்கொடுப்பதுடன், அதற்காக எதிர்ப்பு ஏற்படுவதாக அல்லது விருப்பமின்மை தோன்றினால் சபையின் கட்டளையின்படி கழிவுப்பொருட்களைக் காணியின் வழியாக அல்லது காணிக்கு கீழ் வெளியேற்றுவது உகந்ததெனக் கருதினால் அந்தக் காணியின் உரிமையாளருக்கு எழுத்துமூலமாக உத்தரவிட வேண்டும்.

(ii) அவ்வாறான எந்தவொரு விடயமும் முழுமை செய்த பின்னர் சபையினால் நிச்சயிக்கப்பட்ட சாதாரணமான நட்டஈட்டுத் தொகை அந்த நட்டத்தை ஏற்கும் உரிமையாளர் அல்லது வசிப்பவருக்குச் செலுத்தப்பட வேண்டும்.

(iii) செலுத்தும் நட்டஈட்டுத் தொகை சம்பந்தமாக இணங்காதவிடத்து பாதிக்கப்பட்ட தரப்பினர் அதற்காக விளக்கமளித்து தவிசாளருக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

(iv) அவ்வாறான விளக்கமளித்தல் சம்பந்தமாக தவிசாளரினால் ஒரு வாரத்திற்கு முன்னதாக அவரது தீர்மானத்தை அறிவிக்கும் தவிசாளரின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

11. (i) எவரேனுமொரு நபருக்கு அல்லது உரிமையாளருக்கு உரிய காணியின் ஊடாக அல்லது காணியின்கீழ் கழிவுப் பொருட்களை வெளியேற்றுவதற்காக மிகப் பொருத்தமான வடிகால் தொகுதி என்றால் சபையினால் மேற்கூறிய காணி உரிமையாளருக்கு அவர் கழிவுப் பொருட்களை வெளியேற்றுவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளாதது ஏன் என வினவி காரணம் காட்டுவதற்காக சாதாரண வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். அதற்காக எதிர்ப்பு ஏற்படுவதாக அல்லது மகிழ்ச்சியற்ற தன்மை தெரிந்தால் சபையின் கட்டளையின்படி காணியின் ஊடாக அல்லது காணியின்கீழ் கழிவுப்பொருட்களை வெளியேற்றுதல் உகந்ததென அந்தக் காணியின் உரிமையாளருக்கு உத்தரவிட முடியும்.

(ii) எவரேனுமொருவரினால் அல்லது அவரினால் சேவையில் வைக்கப்படும் பிரதிநிதியொருவருக்கு அந்த விடயத்திற்காக விநியோகிக்கப்படும் அவ்வாறான அனைத்து உத்தரவும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அனுமதியாவதுடன், அவரது விருப்பத்தின்படி அதை நடைமுறைப்படுத்துவதற்காக மு. ப. 6.00 மணி முதல் பி. ப. 6.00 மணிவரை அவரது உதவியாளர்கள் மற்றும் சேவையாளர்களுடன் குறித்த காணிக்குள் நுழைவதற்கு அனுமதி இருக்க வேண்டும்.

(iii) இந்த துணைச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள விதிமுறைகளுக்குக் கீழ்ப்பட்டு காணியின் உரிமையாளர் அல்லது வசிப்பவரினால் கழிவுப் பொருட்களை வெளியேற்றும் விடயத்திற்குப் பயன்படுத்தும் பிரதிநிதி அல்லது அவரினால் சேவையில் ஈடுபடுத்தியுள்ள நபர், குறித்த காணியை உரிமையாளருக்குப் பெற்றுக்கொடுத்த பின்னர் கழிவுப் பொருட்களை வெளியேற்றுவதற்காக சட்ட ரீதியாக கட்டியெழுப்பப்படும் வடிகால் தொகுதி சட்ட ரீதியானது என்பதைத் தெரிவித்து எழுத்து மூலமாக அறிவித்த பின்னர் அதைப் பழுதுபார்த்தல் மற்றும் சுத்தம் செய்யும் விடயத்திற்காக மு. ப. 6.00 மணி முதல் பி. ப. 6.00 மணிவரை எந்தத் தருணத்திலும் அவரது உதவியாளர்கள் அல்லது சேவையாளர்களுடன் குறித்த காணிக்குள் நுழைய முடியும்.

(iv) இந்தத் துணைச்சட்டத்தின்கீழ் எந்தவொரு விடயத்தையும் நடைமுறைப்படுத்துவதற்காக சபையினால் குறித்த காணி சம்பந்தமாக ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைப்பதற்குத் தேவையான உபாயங்களை நடைமுறைப்படுத்துவதுடன், காணியின் உரிமையாளர் அல்லது வசிப்பவரின் நன்மை கருதி கீழ்க்காணும் நடைமுறைகளை மேற்கொள்ள வேண்டும் :-

(i) விடயங்களை நடைமுறைப்படுத்துகையில் குறைந்தளவு தாமதத்தைத் தவிர்த்தல் ;
(ii) குறித்த விடயத்தை செயற்படுத்துகையில் தோண்டப்படும் காணியை அவரது செலவில் மீண்டும் செய்தல் ;
(iii) பொதுச் சந்தையில் பொருட்களின் பெறுமதியைக் கவனத்தில் கொண்டு அவ்வாறு காணிகளின் விடயத்தை செயற்படுத்துகையில் அவரது காணிக்கு ஏற்படும் நட்டத்திற்காக குறித்த காணியை பழைய நிலைக்குக் கொண்டுவருவதற்காக நட்டஈடு செலுத்துதல்.

(v) இந்த துணைச்சட்டத்தின்படி எந்தவொரு இடத்திலும் உரிமையாளரினால் விடயமொன்றை நிறைவேற்றுவதற்காகத் தேவைப்படும்போது சாதாரணமான காரணத்தைச் சபைக்குத் தெரிவிக்காதவிடத்து அதை நிராகரிப்பதைத் தவிர்க்க முடியாது. பிரதேச சபைச் சட்டத்தில் 94 ஆவது பந்தியில் வழங்கப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு அமைய அவ்வாறான விடயங்கள் செய்தல் சட்டத்தை மீறும் செயலாகும்.

(vi) இந்தத் துணைச்சட்டத்தின்கீழ் காணியின் உரிமையாளரினால் அசுத்த நீரைக் காணியின் ஊடாக அல்லது காணிக்குக்கீழ் வெளியேற்றுவதற்கு இணங்கி அவ்வாறான காணியில் கட்டிடம் நிர்மாணிப்பது சம்பந்தமாக அவரின் கருத்தைத் தெரிவித்து சபைக்கு அறிவிக்கையில் சபையினால் எழுத்து மூலமான அனுமதியைப் பெற்றுக்கொடுக்கலாம்.

12. சபையினால் எழுத்துமூலமான உத்தரவின்மீது அதிகாரம் வழங்கப்படும் உத்தியோகத்தருக்கு அல்லது சேவையாளர்களுக்கு அதன் உரிமையாளர் அல்லது வசிப்பவருக்கு அறிவித்ததன் பின்னர் எந்தவொரு தனியார் காணியிலும் அல்லது சொத்தின் குழாய்த் தொகுதியைப் பரிசோதித்தல், பழுதுபார்த்தல், சுத்தம் செய்தல், பராமரித்தலுக்காக மு. ப. 6.00 மணி முதல் பி. ப. 6.00 மணிவரை எந்தவொரு நேரத்திலும் உள்நுழைவதற்கு சட்ட ரீதியாக இடமுண்டு.

13. சபைக்காக அதிகாரம் வழங்கப்பட்ட எந்தவொரு உத்தியோகத்தருக்கும் கழிவுப் பொருட்கள் மற்றும் கழிவு நீர் திட்டத்திற்குரிய சபையின் பராமரிப்பு நடவடிக்கை, தோண்டப்பட்ட மண் அகற்றுதல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கையில் இடையூறு ஏற்படுத்துதல் செய்யக்கூடாது. பிரதேச சபைச் சட்டத்தில் 94 ஆவது பந்தியில் வழங்கப்பட்டுள்ள விதிமுறைகளுக்கமைய அவ்வாறு இடையூறு செய்தல் சட்டத்தை மீறுவதற்குரியதாகும்.

14. எவராவதொருவரினால் இந்தத் திட்டத்தின் குழாய்களுக்கு அல்லது இழுவை இயந்திரத்திற்கு அல்லது (மேன்ஹோலுக்கு) பாதிப்பு ஏற்படுத்தக் கூடாது.

15. எந்தவொரு நபரும் துணைச் சட்டத்தில் 13 ஆவது வாக்கியத்தை மீறினால் நீர்த்தொகுதியை, இழுவை இயந்திரத்தை அல்லது தாங்கி (மேன்ஹோல்) பழுதுபார்ப்பதற்காகச் செலவு ஏற்பட்ட நட்டத்தைச் செலுத்த வேண்டியதுடன், அதை கவனியாது விட்டால் தவிசாளரினால் அதற்காகச் செலவாகிய பணத்தைச் செலுத்தி முடிக்கும்வரை அவருக்கு வழங்கப்பட்டுள்ள கழிவுப் பொருட்களை வெளியேற்றுவதற்கான சேவையைத் துண்டிப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

16. கழிவுப்பொருட்கள் மற்றும் கழிவு நீர் வெளியேற்றும் சேவைக்காகக் கழிவுப் பொருட்கள் மற்றும் கழிவு நீர் வெளியேற்றும் திட்டத்தின் உத்தியோகத்தர்களுடன் சேவை பெற்றுள்ள அனைத்து நபர்களுக்காகவும் பணம் அறவிடுவதுடன், அந்தப் பணத்தை மாதாந்தப் பற்றுச்சீட்டுடன் கணக்கிடுவதுடன், சபையினால் நிச்சயிக்கப்படும் தொகையை மாதாந்தப் பற்றுச்சீட்டில் குறிப்பிடுவதுடன், இந்தப் பணத்தை 30 நாட்களுக்குள் செலுத்தி முடிக்க வேண்டும். அதைத் தவிர்ப்பது அல்லது செலுத்துவதைத் தாமதப்படுத்தினால் அதற்காக பிடிவிறாந்துக் கட்டணத்திற்கு உள்வாங்கப்படுவதுடன், பற்றுச்சீட்டு கிடைத்து 30 நாட்களுக்குள் செலுத்தத் தவறினால் சேவை துண்டிக்கப்படும்.

17. எவராவதொருவரினால் நீர்க்குழாயில் கீழ்க்காணுபவைகளைக் கட்டியெழுப்புதல், திறந்து விடுதல், கைவிடுதல், ஓடச்செய்தல், வைத்தல் செய்யக்கூடாது :-

(i) எந்த வகையிலான குழாய் நீர், கிருமிநாசினிகள், மழை நீர், அசுத்த நீர், அசுத்தப் பொருட்கள் தொகுதியின் குழாய்களுக்குப் பொருத்தமற்ற இரசாயனப் பொருட்கள் அல்லது வேறு பொருள் ;

(ii) வடிகால் தொகுதி மூலம் சுதந்திரமாக நீர் வழிந்தோட மற்றும் கழிவுப் பொருட்களை வெளியேற்றுவதற்குத் தடுக்கக்கூடிய மற்றும் பாதிக்கக்கூடிய கொதி நீர் மற்றும் வாயு போன்ற பொருட்கள் ;

(iii) குழாய் வழிகளில் தடை ஏற்படக்கூடிய மண், செங்கல் அல்லது செங்கல் தூள் அல்லது குழாய் வழியில் தடை ஏற்படும் பொருட்கள் அல்லது அதற்கு இணைக்கப்பட்ட வேறு குழாய் வழிகள்.

18. எந்தவொரு நபரினாலும் சபையின் எழுத்து மூலமான உகத்தரவின்மீது தவிர குழாய் வழிகளை மாற்றுதல், பொருத்தப்பட்டுள்ள தன்மை, அமைத்தல் அல்லது அகற்றுதல், தடை ஏற்படுத்துதல், மூடி விடுதல், மீண்டும் இடமாற்றம் செய்தல் அல்லது எந்தவொரு வடிகாலையும் மலசலகூடங்களின் கழிவுகளை வெளியேற்றும் குழாய் அல்லது வேறு ஏதாவது உபகரணம் அல்லது அதற்காகப் பொருத்தப்பட்ட வேறு பொருட்களை மாற்றம் செய்தல் கூடாது.

19. எந்தவொரு நபரினாலும் கழிவுப் பொருட்கள் செல்லும் வடிகாலுக்கு பாதிப்பு ஏற்படும் விதத்தில் அந்தக் காணியில் கட்டிடங்கள் கட்டுதல், மீண்டும் கட்டியெழுப்புதல், மலசலகூடம் அல்லது அவ்வாறான கட்டிடங்களுக்காக வழங்கப்படும் பொருட்கள் அல்லது வேறு கட்டிடங்கள் நிர்மாணித்தல் செய்தல் கூடாது.

20. (i) கழிவுப்பொருட்கள் வெளியேற்றும் தொகுதிகளுக்காக ஏதாவதொரு இணைப்பு செய்தல் அல்லது இணைப்புச் செய்ய திட்டமிடல் ;

(ii) ஏதாவதொரு உள்ளகக் குழாய்த் தொகுதியைப் பழுதுபார்க்கத் திட்டமிடல் ;

(iii) பிரதான குழாய்த் தொகுதியின் அல்லது இழுவை இயந்திரத்தில் அல்லது (மேன்ஹோல்) எதையேனும் நீக்குதல்.

சபையினால் விநியோகிக்கப்படும் எழுத்து மூலமான உத்தரவுப்பத்திரத்தின் மீது அல்லது அதற்காக அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தரினால் தவிர வேறு ஒருவரினாலும் செய்யக் கூடாது.

21. எவராவதொரு நபரினால் இந்தத் துணைச் சட்டத்தில் 16, 17, 18, 19 ஆம் வாக்கியங்களில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள விதிமுறைகளை மீறுதல் கூடாது. பிரதேச சபை சட்டத்தில் 94 ஆவது வாக்கியத்தின்கீழ் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள விதிமுறைகள் அவ்வாறு மீறுதல் சம்பந்தமாக உரியதாகும்.

22. எந்தவொரு நபரினாலும் துணைச்சட்டத்தில் 23 ஆவது வாக்கியத்தில் குறிப்பிட்டுள்ளவாறு, கழிவுத் தொகுதிக்கு இடையூறு ஏற்படுத்தினால் அவ்வாறான இடையூறுகளுக்காகச் செலவு செய்யப்படும் பணம் சபைக்குச் செலுத்த வேண்டும். அவ்வாறான பணம் செலுத்தாது தவிர்த்தல் பிரதேச சபைச் சட்டத்தின்கீழ் தயாரிக்கப்படும் கழிவுப் பொருட்கள் கட்டணமாகக் கருதி அதை அறவிட்டுக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

23. (i) அனைத்து நபரினாலும் சபைக்கு முதலில் பெற்றுக்கொண்ட எழுத்து மூலமான உத்தரவின்றி பொதுக் கழிவுக்குழாய் வழி (பிரதான குழாய் வழி) மீது கட்டிடம் அமைத்தல் அல்லது நிர்மாணித்தல் அல்லது அவ்வாறானதொன்றைத் திட்டமிடுதல் செய்யக்கூடாது. அது பிரதேசச் சபைச் சட்டத்தின்கீழ் 94 ஆவது அதிகாரத்தின்கீழ் ஒழுங்கு செய்துள்ள விதிமுறைகளின்படி அந்தச் சட்டத்தை மீறுவதாகக் கருதப்படும்.

(ii) சபையின் உத்தரவின்றி எந்தவொரு கட்டிடத்தையும் உடைத்தல் அல்லது கட்டியெழுப்புதல் துணைச்சட்டத்தில் (i) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செய்ய முடியாததுடன், அங்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ள விதிமுறைகளின் பிரகாரம் அதை உடைத்தல், மாற்றம் செய்தல் அல்லது அவ்வாறில்லையேல் அது தொடர்பாகப் பாதிப்பு ஏற்படுத்தினால் அதைச் சீர்திருத்தம் செய்வதற்குச் செலவான பணத்தை, சபையின் உத்தரவின்றி அதை, அந்த விடயத்தை செய்வதற்குத் திட்டமிட்ட நபரினால் செலுத்த வேண்டியதுடன், அவ்வாறு செலுத்துவதைத் தவிர்த்தால் அதை, சபையினால் தயாரிக்கப்பட்ட கட்டணமாக தயாரித்து அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

24. (i) குழாய் வழிகள் சம்பந்தமாக ஏதேனும் ஒரு விடயம் கட்டியெழுப்புதல், பொருத்துதல், மாற்றம் செய்தல் அல்லது தனியார் கழிவுப் பொருட்கள் குழாய் வழிகள் அமைத்தல் அல்லது பொருட்கள் உபகரணங்கள் பொருத்துதல் அல்லது தனியார் கழிவுப் பொருட்கள் குழாய் வழிகளுடன் பொதுக் கழிவுப் பொருட்கள் குழாய் வழியை இணைத்தல் இந்த துணைச் சட்டத்தில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள விதிமுறைகளின்படி செய்தல் வேண்டியதுடன், அதை நடாத்திச் செல்லுதல் சபையினால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள மற்றும் சபையில் பதிவுடன் காணிக்கு கழிவுப் பொருட்கள் சேவை வழங்கப்படும் உரிமையாளரின் செலவில் மாத்திரமே.

(ii) இந்த துணைச்சட்டத்தின்கீழ் சபையினால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு நாளில் எந்தவொரு சாதாரண தருணத்திலும் எந்தவொரு விடயத்தையும் பரிசோதனை செய்யும் உரிமை உண்டு.

25. (i) கழிவுப் பொருட்கள் மற்றும் அசுத்த குழாய் தொகுதி பொருத்தப்பட்டிருந்த தருணத்தில் அது தொடர்பாக தவிசாளர் திருப்தியடைவாராயின் துணைச் சட்டத்தின் தன்மைக்கமைய அதைப் பாவிப்பதற்காக அனுமதி வழங்கப்படும்.

(ii) சபைக்காக அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தரினால் கழிவுப் பொருட்கள் மற்றும் அசுத்த நீர் வெளியேற்றும் குழாய்த் தொகுதி தொடர்பாக சிபாரிசு செய்து இந்த துணைச் சட்டத்தில் அல்லது வேறு எழுத்து மூலமான சட்டத்தில் ஒழுங்குசெய்துள்ள தன்மையின்படி நிறைவேற்றவேண்டிய விடயங்களின்படி திருப்தியடைவதாயின், அவ்வாறான சிபாரிசு கிடைத்த பின்னர் மாத்திரம் தவிசாளரினால் அனுமதி வழங்கப்படும்.

26. இந்த துணைச் சட்டத்தில் விதிமுறைகளை மீறுதல் குற்றமாவதுடன், அதிகாரமுள்ள நீதிமன்றத்தில் குற்றவாளியாக்கப்பட்ட பின்னர் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைச் சட்டத்தில் 122(2) ஆம் வாக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தண்டங்களுக்கு உள்வாங்கப்படுவர்.

13 ஆவது பிரிவு

## குப்பை கூழங்கள் முறைப்படுத்துதல்

பிரதேச சபையினால் நிச்சயிக்கப்படும் பிரதேசத்திற்குள் குப்பை போடுதலை முறைப்படுத்துதல், நிருவகித்தல் மற்றும் அதற்காகக் கட்டணம் அறவிடுதல் தொடர்பான துணைச்சட்டம்.

2. பிரதேச சபை அதிகாரப் பிரிவுக்குரிய இந்தச் சட்டத்தில் 1 ஆவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேசத்திற்குள் சொத்துக்கள் உரிமையாளர்கள் அல்லது அவைகளைப் பராமரிப்பவர்களினால் வியாபாரம் மற்றும் வசிக்கும் இல்லத்திற்காக குப்பை சேகரிக்கும் கட்டணம் மற்றும் குப்பை போடுதலுக்காக பணம் பிரதேச சபைக்கு மாதத்திற்கு ஒரு முறை செலுத்த வேண்டும். செலுத்தும் திகதி மாதத்தின் முதலாம் திகதி முதல் 7 தினங்களுக்குள் செலுத்த வேண்டும். இந்தக் காலம் குப்பை போடும் கட்டணம் சபையினால் காலத்திற்குக்காலம் தீர்மானித்து வருடாந்தம் அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகையின் மூலம் பிரசுரித்தவாறு அமைய வேண்டும்.

*3. 1 ஆவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரப் பிரிவுக்குள் வசிப்பவர்களினால் குப்பை போடுதல் சம்பந்தமாக கீழ்க்காணும் விதத்தில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் :-*

*(1) பிரதேச சபையினால் வீதியின் இரு பக்கமும் கொக்கியுடனான இரும்புத் தூண்கள் நடப்பட்டு அந்தத் தூண்களில் செம்மஞ்சள் வர்ணம் பூசி அடையாளப் பெயர்ப்பலகை பொருத்தப்பட்டுள்ளது. அந்தச் சபை வழங்கியுள்ள பைக்குள் குப்பைகளை இட்டு குறிப்பிட்ட தினங்களில் காலை 6.00 மணி முதல் மாலை 5.00 மணிக்கு முன்னர் அந்தக் குப்பை பையைக் குறித்த தூண்களில் தொங்கவிட வேண்டும். குப்பைகள் உக்கிப்போகும் அல்லது உக்கிப்போகாத என வகைப்படுத்தி இரு வர்ணங்களில் வழங்கப்பட்டுள்ள பைக்குள் இட வேண்டும். சிவப்பு வர்ணத்திலுள்ள பைக்குள் உக்கிப்போகாத குப்பைகளையும், கறுப்புப் பைக்குள் உக்கிப்போகும் குப்பைகளையும் வேறுபடுத்தி இடுதல் வேண்டும். பைக்குள் போடமுடியாத மரங்களின் வாதுகள் போன்றவற்றைக் குறியீட்டில் காட்டப்பட்டுள்ள இடங்களுக்குக் கொண்டு சென்று போடுதல் வேண்டும். குறிப்பிட்ட திகதியில் சபையினால் அமைக்கப்பட்டுள்ள இரும்புத் தூண்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளவாறு இருக்க வேண்டும்.*

*(2) குப்பை போடுதல் வீதிகளுக்கு மற்றும் சமூகத்திற்கு இடையூறு இல்லாதவாறு காட்டப்பட்டுள்ள தூண்களில் கொக்கிகளில் தொங்கவிட வேண்டும்.*

*(3) இரும்புத் தூண்களில் காட்சிப்படுத்தியுள்ள குறிப்பிட்ட நேரங்களுக்கு முன்னர் குறித்த தினங்களில் குப்பை கொண்டுவந்து மிருகங்களிடமிருந்து ஏற்படும் பாதிப்பைத் தடுக்கும் வகையில் காட்டப்பட்டுள்ள இடங்களில் மாத்திரம் தொங்கவிட வேண்டும்.*

*(4) குப்பை கூழங்களை எந்தத் தருணத்திலும் பொது இடங்களில் அல்லது வடிகால்களில் அல்லது வீதியில் போடக்கூடாது.*

*(5) குப்பை கூழங்களை முறையற்ற விதத்தில் இடத்திற்கு இடம் போடுவதால் ஏற்படும் சுற்றாடல் பாதிப்பிற்காக சட்ட நடவடிக்கை எடுப்பதைச் சபையினால் மேற்கொள்ள முடியும்.*

*(6) பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்திற்குள் உள்ள பாடசாலை, அலுவலகங்கள், வைத்தியசாலை, பஸ் நிலையம், வாரச் சந்தை, பொதுச் சந்தை போன்ற பொது இடங்களுக்காகவும் விகாரை, பள்ளி, கோவில் போன்ற சமய ஸ்தாபனங்களிலும் குப்பைகளைப் போடுவதற்காக சீமெந்து தாங்கி அமைக்கப்பட்டுள்ளதுடன், வியாபார ஸ்தாபனங்களில் மற்றும் ஹோட்டல்களுக்காக குப்பைத் தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளதால், குப்பைகளைப் பெற்றுக்கொடுத்துள்ள பாத்திரங்களில் போடுதல் வேண்டும். தொழிற்சாலைகளின் குப்பைகளுக்காக அந்த இடங்களில் காட்டப்பட்டுள்ள பெரிய அளவிலான சீமெந்துத் தொட்டிகளுக்குள் கழிவுப் பொருட்கள் அனைத்தையும் போடவேண்டும்.*

*(7) மேற்குறித்த விடயத்தைப் பரிசோதிப்பதற்கு அதிகாரமுள்ள நபராவது பிரதேச சபையின் தவிசாளர் அல்லது குறித்த விடயத்திற்காக பொதுவாக அல்லது விசேடமாக எழுத்துமூலமாக அதிகாரம் வழங்கப்பட்ட எவரேனும் ஒரு உத்தியோகத்தர் ஆவதுடன், எந்தவொரு தினத்திலும் கடிகார நேரத்தில் காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரையிலான காலத்திற்குள் பரிசோதனைக்கு உட்படுத்துவதற்காக இல்லங்களுக்கு வருகை தருதலைச் செய்யலாம். அவ்வாறு பரிசோதனை செய்யப்படுவது கீழ்க்காணும் விடயங்களாகும் :-*

(i) *அங்கங்கு வசிப்பவர்களினால் துணைச்சட்டத்தில் காட்டப்பட்டுள்ள நியமங்கள் கடைப்பிடிக்கப்பட்டுள்ளதா என்பதை ;*

(ii) *குறித்த இடங்களில் மாத்திரம் குப்பைகள் முறையாகப் போடப்பட்டுள்ளதா என்பதை ;*

(iii) *வீட்டுத் தோட்டங்களில் முறையற்ற விதத்தில் பொலித்தீன், சிறட்டைகள், டயர், டின், யோகட் கப், மற்றும் வேறு குப்பைகள் போடப்பட்டுள்ளதா என்பதை ;*

(iv) *நீர் தேங்கி நிற்கும் விதத்தில் டின், யோகட் கப், டயர் அல்லது வேறு எதையாவது இடத்திற்கு இடம் போடப்பட்டுள்ளதா என்பதை ;*

*(8) மேற்குறித்த பரிசோதனைகளின்போது வசிப்பவர்களினால் துணைச் சட்டத்தில் தயாரிக்கப்பட்டுள்ள விடயங்களைக் கவனியாது விட்டிருந்தால் இந்த துணைச்சட்டத்தை மீறியதாகக் கருத முடியும்.*

*(9) இந்த துணைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவதொரு விதிமுறையை மீறும் அனைவரும் குற்றம் செய்வதுடன், இந்த நபரை உரிய அதிகாரம் உள்ள நீதிமன்றத்தின் முன் குற்றவாளியாக்கப்பட்டதன் பின்னர் பிரதேச சபைச் சட்டத்தில் 122(2) ஆம் வாக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தண்டங்களுக்கு உள்ளாவார்.*

**1 ஆவது அட்டவணை (1 ஆவது வாக்கியம்)**

*துணைச் சட்டம் செல்லுபடியாகும் அதிகாரப் பிரதேசம்*

*(1)*
*(2)*
*(3)*

*14 ஆவது பிரிவு*

**வடிகால் தொகுதி**

*பிரதேச சபையினால் இங்கு முதலாவது அட்டவணையில் காணப்படும் விருத்தி செய்யப்பட்ட கிராமங்களுக்குரிய அதிகாரப் பிரிவுக்குள் இருக்கும் வீதி மற்றும் பாதைகள் அருகில் உள்ள அனைத்து பொது நீரோடை வடிகால் தொகுதிகளைப் பரிசோதனை செய்தல், நிருவகித்தல், பராமரித்தல் மற்றும் அது சம்பந்தமான விதிமுறைகளைப் பயன்படுத்துதல் தொடர்பான துணைச் சட்டமாகும்.*

*2. மேற்குறித்த முதலாவது வாக்கியத்திலிருந்து அறிவிக்கப்பட்ட அதிகாரப் பிரதேசத்திற்குள் நிர்மாணிக்கப்பட்டுள்ள அனைத்துப் பொது வடிகால் தொகுதிகள் சம்பந்தமாக அதிகாரப் பிரதேசத்தின் சொத்து உரிமையாளர்கள், சொத்துக்களைப் பாவிப்பவர்கள் மற்றும் வியாபாரம் அல்லது சேவை வழங்குனர்கள் மற்றும் வசிப்பவர்கள் கீழ்க்காணும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் :-*

(i) *பொது வடிகால் தொகுதி சம்பந்தப்பட்ட ஏதேனும் நீர் செல்லும் வடிகால் அல்லது மழை நீர் வழிந்தோடும் வடிகால் பிரதேச சபையின் அனுமதியின்றி நிர்மாணிக்கப்படக் கூடாது.*

(ii) *மேற்குறித்த 1 ஆவது துணை வாக்கியத்தில் அனுமதி பெற்றுக்கொள்வதற்காக கட்டிட விண்ணப்பப்பத்திரம் சமர்ப்பித்து சபையினால் காலத்திற்குக்காலம் நியமனம் செய்து அரசாங்க வர்த்தமானிப்பத்திரத்தில் வருடாந்தம் பிரசுரிக்கப்பட்டுள்ள கட்டணம் செலுத்தியதன் பின்னர் அனுமதிப்பத்திரம் விண்ணப்பப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டும்.*

*3. கழிவுப் பொருட்களை வெளியேற்றும் வடிகால் ஊடாகச் செல்லும் கழிவு நீரை நேராக பொது வடிகால் தொகுதிக்கு எந்தத் தருணத்திலும் அனுப்பக் கூடாது. அந்த நீர் பூமிக்கு உறிஞ்சும் விதத்தில் குழிகள் செய்து சுத்தம் செய்ததன் பின்னர் பிரதான மழை நீர் வடிகால் தொகுதிக்கு அனுப்ப வேண்டும்.*

*4. ஏதேனும் காணியில் அல்லது காணியில் அமைந்துள்ள கட்டிடத்திற்கு விழும் மழை நீர் தவிர வேறு எவ்விதத்திலாவது அந்தக் காணியில் அல்லது காணியில் அமைந்துள்ள கட்டிடத்தில் அல்லது வளாகத்திற்குள் பாவித்த பின்னர் வெளியேற்றப்படும் கழிவு நீர், கழிவுப் பொருட்கள் உறிஞ்சும் குழிக்கு வழிந்தோட வழிசெய்தல் வேண்டியதுடன், பிரதேச சபைக்குரிய வீதிக்கு அல்லது வீதி வழியே இருக்கும் காணிகளுக்கு வெளியேற்றுதல் செய்யக் கூடாது.*

*5. அதேபோன்று அந்த நீரை உறிஞ்சும் குழி வாயுவுக்கு திறந்துவைக்கக் கூடாது. அருகிலுள்ள பொது நீர் வழியிலிருந்து அல்லது அமைக்கப்பட்டுள்ள கிணற்றிலிருந்து 15 மீற்றருக்குக் குறையாத தூரத்தில் அமைந்திருக்க வேண்டும். மேலும் ஏதேனும் தொழிற்சாலையில் பாவித்த பின்னர் வெளியேற்றப்படும் கழிவு நீரை எந்தத் தருணத்திலும் பொது நீர்க்குழாய்க்கு அல்லது மழைநீர் வடிகால் தொகுதிக்கு வெளியேற்றம் செய்யக்கூடாது.*

*6. நிர்மாணிக்கப்படும் வடிகால்களை பொது வடிகால் தொகுதிக்கு இணைக்கும்போது முறையான பள்ளம் உள்ளபடி கொன்கிரீட் வடிகால் அல்லது கொன்கிரீட் குழாய் அமைத்து இணைக்கலாம்.*

*7. வடிகால் தொகுதிக்கு கீழ்க்காணும் பொருட்கள் சேர்க்கக் கூடாது :-*

(i) *மலக்கழிவுப் பொருட்கள் ;*
(ii) *குப்பை கூழங்கள் ;*
(iii) *ஜீவ வாகன கழிவுப் பொருட்கள் ;*
(iv) *பொலித்தீன் ;*
(v) *பிளாஸ்டிக் பொருட்கள் ;*
(vi) *கண்ணாடி ;*
(vii) *உற்பத்திக்காகப் பயன்படுத்தும் மூலப்பொருட்கள்.*

*இந்தக் கழிவுப் பொருட்களை மழைநீர் வடிகால் தொகுதிக்கு வெளியேற்றுதல் தண்டனைக்குரிய குற்றமாகும்.*

*8. மேலும் அந்த வடிகால் தொகுதி அமைந்துள்ள இடத்தின் மீது மோட்டார் வாகனம் நிறுவத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தால் தவிர அவ்வாறான வாகனங்கள் வடிகால் தொகுதியில் ஏதேனும் பகுதியில் எக்காரணம் கொண்டும் நிறுத்திவைத்தல் கூடாது.*

*9. வடிகால்களுக்கு அருகில் மிருகங்களைக் கட்டுதல், நிறுத்திவைத்தல் தவிர்க்க வேண்டும்.*

*10. வடிகால்களுக்கு தடை ஏற்படும் விதத்தில் கட்டிடப் பொருட்களைச் சேகரித்து வைத்தல் செய்யக்கூடாது.*

*11. பிரதேச சபையினால் நிர்மாணிக்கப்படும் எந்தவொரு வடிகால் மீதும் தற்காலிக அல்லது நிரந்தரக் கட்டிடம் அல்லது வேறு வகையிலான நிர்மாணிப்புகள் செய்யக்கூடாது.*

*12. இந்த துணைச் சட்டத்தின் நடவடிக்கைகளை மீறும் எவராயினும் குற்றம் செய்வதுடன், அவ்வாறு செய்யப்படும் செயற்பாடு அல்லது விடயம் சபையினால் உடைத்தெறிவதற்கு, மாற்றம் செய்வதற்கு இடமுண்டு. பிரதேச சபையினால் அதற்காகச் செய்யப்படும் அனைத்துச் செலவுகளையும் தவறுக்காக குற்றவாளியாக்கப்படும் நபர் செலுத்த வேண்டும்.*

*13. இந்த துணைச் சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் நடவடிக்கைகளை மீறும் அனைவரும் குற்றம் செய்வதுடன், அந்த நபர் உரிய அதிகாரமுள்ள நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டதன் பின்னர் 750 ரூபாவுக்கு அதிகரிக்காத தண்டத்திற்கு உள்ளாவார். அந்தக் குற்றத்தை அதன் பின்னரும் தொடர்ந்து செய்துகொண்டிருந்தால் அவ்வாறு செய்யப்படும் அனைத்து தினத்திற்கும் 250 ரூபா வீதம் மேலதிக தண்டத்திற்கு உள்ளாவார்.*

*1 ஆவது அட்டவணை (1 ஆவது வாக்கியம்)*

1.
2.
3.
4.
5.
6.
7.
8.
9.
10.

*15 ஆவது பிரிவு*

**பொது அல்லது தனியார் சந்தைகள்**

*பிரதேச சபை அதிகாரப் பிரிவுக்குள் பொது அல்லது தனியார் சந்தைகள் அமைத்தல், பராமரித்தல், நிருவகித்தல், கடைகள், வியாபார ஆசன இடவசதிகள் ஒதுக்கிக் கொடுத்தல் அல்லது கட்டிடம் அல்லது சூழல் அல்லது அதன் ஒரு பகுதி பாவிப்பதற்காகக் கட்டணம் அல்லது வாடகை நியமம் செய்தல் மற்றும் அறிவிடுதல் தனியார் சந்தைகளுக்காக அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொடுத்தல், அனுமதிப்பத்திர விதிமுறைகள் மற்றும் அனுமதிப்பத்திரக் கட்டணம் நியமம் செய்தல் மற்றும் மேற்கூறிய அனைத்து விடயங்களுக்காக நடவடிக்கை செய்தல் தொடர்பான துணைச்சட்டம்.*

*2. பிரதேச சபையினால் அமைக்கப்பட்டு நடாத்திச்செல்லும் ஏதேனும் பொதுச் சந்தை சம்பந்தமாக இந்தத் துணைச்சட்டத்தின் கீழ்க்காணும் நியமங்களைக் கடைப்பிடித்தல் பிரதேச சபையினால் செய்தல் வேண்டும். அதாவது, பொதுச் சந்தையில்–*

(i) *நிரந்தரக் கட்டிடங்கள் அனைத்தையும் செங்கல்லில், சீமெந்துக் கல்லில் அல்லது கபொக் கல்லில் செய்திருக்க வேண்டிதுடன், சுவர்களின் உயரத்தைக் குறைந்தபட்சம் தரைமட்டத்திலிருந்து 3 மீற்றர் உயரமாக வேண்டும்.*

(ii) *கூரை ஏதேனும் நிரந்தரப் பொருளினால் அமைத்திருக்க வேண்டும்.*

(iii) *உள்ளே கடை அறைகளில் கூரைக்கு சிவிலின் பொருத்தப்பட்டிருக்க வேண்டியதுடன், அந்தச் சிவிலின் தரை மட்டத்திலிருந்து 2.85 மீற்றர் உயரத்தில் அமைத்திருக்க வேண்டும்.*

(iv) கட்டிடத்தின் உள்ளே கடை அறைகளில் முன்பக்கம் குறைந்தபட்சம் 2.5 மீற்றர் அகலம் உடைய தாழ்வாரம் இருக்க வேண்டியதுடன், அனைத்துக் கடை அறைகளும் தாழ்வாரத்திற்கு இணைக்கப்படும் இடத்தின் உள்ளே கதவு அல்லது துண்டுதுண்டாகக் கழற்றி திறக்கக்கூடிய கதவு இருக்க வேண்டும்.

(v) கடைகளுடனான கட்டிடத்தில், சுவர்களின் வெளிப்புற எல்லையில் மற்றும் தாழ்வார வெளி எல்லையில் குறைந்தபட்சம் ஒரு மீற்றர் அகலமான மேடைத்திட்டு மற்றும் மழை நீர் வழிந்தோடும் வடிகால் அமைத்திருக்க வேண்டும்.

(vi) கட்டிடத்தின் கடை அறைகள் உள்ள பிரிவில் வெளியே தற்காலிக வியாபாரிகளுக்காக வியாபாரக்கூடம் அமைத்திருக்கலாம்.

(vii) உள்ளே அமைக்கப்படும் அனைத்து வியாபாரக் கூடாரங்களும் செங்கல்லில் அல்லது சீமெந்துக் கல்லில் அல்லது கபொக் கல்லில் அமைக்கப்பட்ட கட்டின் மேல் கொன்கிரீட் தட்டில் அல்லது துருப்பிடிக்காத உலோகத் தகட்டினால் நிறைவுசெய்யப்பட்ட தட்டில் இருக்க வேண்டும். எவ்வாறாயினும் கொன்கிரீட் தட்டில் பூர்த்திசெய்திருக்கும்போது அந்தத் தட்டு சீமெந்துக் கலவை பூசப்பட்டிருக்க வேண்டும். அல்லது பீங்கான் செங்கல் பிடித்திருக்க வேண்டும். அந்த விதத்தில் வியாபாரக்கூடம் அமைக்க முடியாத தருணத்தில், தரையின் மீது மட்டமான விதத்தில் இடம் அமைத்திருக்க வேண்டியதுடன், அந்தப் பகுதி செங்கல்லில், சீமெந்துக் கல்லில் அல்லது கபொக் கல்லில் செய்து சீமெந்து பூசியிருக்க வேண்டியதுடன், ஒவ்வொரு பிரிவும் வேறுபடும் ரேகை வெள்ளை வர்ணத்தில் குறிப்பிட்டிருக்க வேண்டும்.

(viii) அனைத்து வியாபாரக் கூடத்திலும் பரப்பளவு குறைந்தபட்சம் சதுர மீற்றர் 2 இற்குக் குறையாது இருக்க வேண்டும்.

(ix) அனைத்து வியாபாரக் கூடமும் மறையும் விதத்தில் செங்கல்லில் அல்லது சீமெந்துக் கல்லில் அல்லது கபொக் கல்லில் கல்வனைஸ் செய்யப்பட்ட இரும்புக் குழாய்களினால் அல்லது அலுமினியம் குழாய்கள் பயன்படுத்திய தூண் மீது குறைந்தபட்சம் தரை மட்டத்திலிருந்து 2.25 மீற்றர் உயரதில் இருக்கக்கூடிய கூரை அமைத்திருக்க வேண்டியதுடன், தாழ்வாரம் குறைந்தபட்சம் தரை மட்டத்திலிருந்து 2.1 மீற்றர் உயரத்தில் இருக்க வேண்டும். அதேபோன்று இந்தத் தூண்கள் செங்கல்லில் அல்லது சீமெந்துக் கல்லில் அல்லது கபொக் கல்லில் அமைக்கப்பட்டிருந்தால் சாந்து பூசப்பட்டு பெயின்ட் பூசப்பட்டிருக்க வேண்டியதுடன், கெல்வனைஸ் செய்து இரும்பில் செய்யப்பட்டிருந்தால் அந்தத் தூண்களில் பெயின்ட் பூசப்பட்டிருக்க வேண்டும்.

(x) அனைத்துக் கூரையும் நிரந்தரப் பொருளில் அமைக்கப்பட்டிருக்க வேண்டியதுடன், மழைப்பீலி மற்றும் மழைப்பீலிகளில் சேரும் நீர் கீழே வழிந்தோடுவதற்குப் போதுமான குழாய்கள் பொருத்தப்பட்டிருக்க வேண்டும்.

(xi) அனைத்துக் கூடாரத்தையும் சுற்றித் தரையில் குறைந்தபட்சம் ஒரு மீற்றர் அகலத்தில் மேடைக்கட்டு அமைத்திருக்க வேண்டியதுடன், மழை நீர் வழிந்தோடுவதற்குப் போதுமான வடிகால்கள் அமைத்திருக்க வேண்டும்.

(xii) பாவனைக்கு எடுக்கும் மனித பாவனைக்கு உகந்தது என்பதற்கு தேசிய நீர் வளங்கள் நீர்ப்பாசனச் சபையினால் விநியோகிக்கப்பட்ட தரச் சான்றிதழ் பெற்றுக்கொண்டிருக்க வேண்டியதுடன், குறைந்தபட்சம் அனைத்து ஆறு மாத காலத்திற்கு ஒரு முறை வீதம் இந்த தரச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இடத்தின் பாவனைக்காக தேசிய நீர் வளங்கள் நீர்ப்பாசனச் சபையினால் வழங்கப்படும் நீரைப் பாவிப்பதாயின் அவ்வாறான தரச் சான்றிதழ் கிடைத்துள்ளதாகக் கருதப்பட வேண்டும்.

(xiii) இடத்தின் தேவைகளுக்குப் பயன்படுத்தும் நீர் களஞ்சியப்படுத்தி வைப்பதாயின் அவ்வாறு களஞ்சியப்படுத்தி வைக்கும் நீர் அசுத்தமாவதைத் தவிர்ப்பதற்குப் போதுமான பாதுகாப்பு நடவடிக்கைகள் செய்திருக்க வேண்டும்.

(xiv) ஆண் மற்றும் பெண்களுக்கு வேறு வேறாகப் போதுமான அளவில் மலசலகூடம் அல்லது கழிவறை அமைக்கப்பட்டிருக்க வேண்டியதுடன், அவ்வாறான அனைத்து மலசல கூடமும் தரையும் குறைந்தபட்சம் தரையிலிருந்து 2 மீற்றர் உயரத்திற்குப் பீங்கான் செங்கல் பிடிக்கபட்டிருக்க வேண்டும்.

(xv) அனைத்துக் கடை அறைகளுக்கும், வியாபாரக் கூடத்தின் அருகில் மலசலகூடம் அல்லது கழிவறை உள்ளே மற்றும் தாழ்வாரம் உட்பட அனைத்துப் பொதுப் பகுதிகளும் உள்ளே போதுமான மின் வெளிச்சம் வழங்கப்பட்டிருக்க வேண்டியதுடன், அனைத்து மின்சார இணைப்புகளும் மின்சார பாதுகாப்புப் பொருட்களினால் அமைக்கப்பட்ட மறைப்பொருளில் மூடப்பட்டிருக்க வேண்டும்.

(xvi) அனைத்துக் கடை அறைகளுக்கும் மின்சார மீற்றர் ஒன்று வீதம் பொருத்தப்பட்டிருக்க வேண்டியதுடன், பொது இடங்களில் வெளிச்சத்திற்காகச் செலவாகும் மின்சார அலகை கணக்கிடுதலுக்காக வேறாக மீற்றர் பொருத்தப்பட்டிருக்க வேண்டும்.

(xvii) வளாகத்திற்குள் பொது நீர் திறப்பு பொருத்தப்பட்டிருக்க வேண்டும்.

(xviii) மரக்கறி அல்லது பழங்கள் கழுவுவதற்காக வேறாக இடம் ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும்.

(xix) வியாபாரத்தின் தன்மையின்படி நீர்ப்பாவனை தேவைப்படும் அனைத்துக் கடைகளுக்கும் நீர் இணைப்பு வீதம் பொருத்தப்பட்டிருக்க வேண்டியதுடன், அவ்வாறான ஒவ்வொரு நீர் இணைப்பிற்காக வேறு வேறாக நீர் மீற்றர் வீதம் பொருத்தப்பட்டிருக்க வேண்டியதுடன், பொது நீர்க்குழாய்களில் மரக்கறி மற்றும் பழங்கள் கழுவுவதற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் நீர்ப்பாவனையை அளவையிடுதலுக்காக வேறாக நீர் மீற்றர் வீதம் பொருத்தப்பட்டிருக்க வேண்டும்.

(xx) உள்ளே நேராக மற்றும் கூரையின் மீது விழும் மழை நீர், மரக்கறி மற்றும் பழங்கள் கழுவுவதற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் வெளியேறும் நீர் உரிய முறையில் பெருக்கெடுத்துச் செல்ல போதுமான கானுகள் அமைக்கப்பட்டிருக்க வேண்டியதுடன், அவ்வாறான அசுத்த நீர் தடையின்றி ஓடுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

(xxi) உள்ளே போதுமான தீ பாதுகாப்பு வேலைத் திட்டம் செய்யப்பட்டிருக்க வேண்டியதுடன், மின்சாரத்தினால் ஏற்படும் தீ, எரிபொருள்களினால் ஏற்படும் தீ, வேறு விதத்தில் ஏற்படும் தீ கட்டுப்படுத்துவதற்காக தேவைப்படும் வேறு வேறான வகையில் தீ அணைக்கும் உபகரணங்கள் பொருத்தப்பட்டிருக்க வேண்டும்.

(xxii) பாவனையாளர்களினால் விலைக்கு பெறும் பொருட்களில் நிறையை பார்த்து உறுதிப்படுத்திக் கொள்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட பொது தராசு அதற்காக ஒதுக்கப்பட்ட தெளிவாக தெரியும் இடத்தில் வைத்திருக்க வேண்டும்.

(xxiii) பொது சந்தையில் கடைகளின் அமைப்பைக் கவனத்திற் கொண்டு பிரதேச சபையினால் இறைச்சி, மீன், மரக்கறி, பழங்கள், சில்லரை சாமான்கள் மற்றும் வேறு வியாபார பொருட்கள் விற்பனைக்காக சந்தையை பிரித்து ஒதுக்குதல் அந்த விதத்தில் வியாபார கூடாரங்களையும் பிரிவுகளாக வேறு படுத்துவதும் பிரதேச சபையின் விடயமாக வேண்டும்.

(xxiv) வளாகத்திற்குள் உற்பத்தியாகும் கழிவுப் பொருட்கள்:-

(i) ஜீவமான்ய கழிவுப் பொருட்கள் ;

(ii) கண்ணாடி ;

(iii) கடுதாசி அல்லது கடுதாசியிலான பொருட்கள் ;

(iv) பொலிதீன் அல்லது பிளாஸ்டிக் அல்லது பொலிதீன் மற்றும் பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் ரிஜிபோம் ;

(v) இரும்பு மற்றும் வேறு உலோகத்திலான பொருட்கள் அல்லது இரும்பு மற்றும் வேறு உலோகம் கலந்த பிரிவுகள் ;

(vi) கலவையான கழிவுப்பொருட்கள்

வேறு வேறாக சேகரிக்கக் கூடிய தொட்டி அல்லது பாத்திரம் அல்லது தாங்கி அல்லது அவ்வாறான பொது சந்தையில் வேறாக ஓரிடத்தில் அமைத்திருக்க வேண்டியதுடன், கழிவுப் பொருட்களைப் போடுவதற்காக அமைக்கப்பட்ட தொட்டி அல்லது பாத்திரம் அல்லது தாங்கி எலிகளுக்கு, ஈகளுக்கு, வேறு கிருமிகளுக்கு அல்லது ஏதேனும் பறவைகளுக்கு உள்நுழைய முடியாதவாறு நன்றாக மூடி வைக்கக் கூடிய மூடி பொருத்தி இருக்க வேண்டும்.

(xxv) துவிச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கிள் நிறுத்தி வைப்பதற்கு இடம் ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும்.

(xxvi) சந்தைக்கு வரும் நுகர்வோரின் மற்றும் பொருட்கள் போக்குவரத்து செய்யும் வாகனங்கள் நிறுத்தி வைப்பதற்கு போதுமான இடம் ஒதுக்கி வைத்திருக்க வேண்டும்.

3. (i) பொதுச் சந்தையில் இருக்கும் ஏதேனும் கடையில் வாடகைதாரர் அல்லது ஏதேனும் வியாபார கூடம் பாவிப்பதற்கு அல்லது உபயோகிப்பதற்கு டிக்கட் பத்திரம் பெற்றுள்ள எவரேனுமொரு நபர் அல்லது வியாபாரத்தில் ஈடுபடுத்தும் கடை மற்றும் அதை அண்மித்த வியாபார கூடத்தின் மீது அல்லது அதனருகில் உற்பத்தியாகும் அனைத்து கழிவுப்பொருட்கள்.

(i) ஜீவமான்ய கழிவுப் பொருட்கள் ;
(ii) கண்ணாடி ;
(iii) கடுதாசி அல்லது கடுதாசியிலான பொருட்கள்: ;
(iv) பொலிதீன் அல்லது பிளாஸ்டிக் அல்லது பொலிதீன் மற்றும் பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் ரிஜிபோம் ;
(v) இரும்பு மற்றும் வேறு உலோகத்திலான பொருட்கள் அல்லது இரும்பு மற்றும் வேறு உலோகம் கலந்த பிரிவுகள் ;
(vi) கலவையான கழிவுப்பொருட்கள்

என்ற வகையின் கீழ் வகைப்படுத்தி அந்த ஒவ்வொரு வகையில் கழிவுப்பொருட்களை போடுவதற்கு பிரதேச சபையினால் அமைக்கப்பட்டுள்ள வேறு வேறான தொட்டிகளில் அல்லது பாத்திரத்தில் அல்லது தாங்கியில் போடுதல் அந்த வாடகைதாரர் அல்லது அந்த வியாபார கூடத்தில் டிக்கட் பெற்றுள்ள நபரின் விடயமாகும்.

(ii) பொதுச் சந்தைக்கு வரும் நபர்களினால் போடப்படும் கழிவுப் பொருட்களைப் போடுவதற்காக (i) பந்தியின் கீழ் வகைப்படுத்தி வெளியேற்றுதலை இலகுவாக்கும் சிறியளவிலான பாத்திரம் பொதுச் சந்தையில் உகந்த இடங்களில் வைப்பதற்கு ஒழுங்கு செய்தல் விடயம் தவிசாளருடையதாக வேண்டியதுடன், அந்த பாத்திரங்கள் போதுமான காலத்தில் (i) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப் பொருட்களுக்கு குறிப்பிட்ட தொட்டியில் அல்லது பாத்திரத்தில் அல்லது தாங்கியில் போடுவதற்கு ஒழுங்கு செய்ய வேண்டும்.

(iii) பொதுச் சந்தையில் வைக்கப்பட்டுள்ள கழிவுப் பொருட்கள் சேகரிக்கும் பை அல்லது பாத்திரத்தில், தொட்டியில் அல்லது தாங்கியில் போடுவதற்கு ஒதுக்கப்பட்ட வகையிலான கழிவுப்பொருட்களை தவிர வேறு வகையிலான கழிவுப்பொருட்களைக் குறித்த தொட்டியில் அல்லது பாத்திரத்தில் அல்லது தாங்கியில் போடுவதை ஒருவரும் செய்யக் கூடாது.

(iv) 2 வது வாக்கியத்தில் (xxiv) வது பந்தியில் நியமங்களின் கீழ் ஜீவ கழிவுப் பொருட்கள் போடுவதற்காக அமைக்கப்பட்டுள்ள தொட்டியில் அல்லது பாத்திரத்தில் அல்லது தாங்கியில் போடும் தருணத்தில் அல்லது கழிவுப் பொருட்களை வெளியே எடுக்கும் போது தவிர வேறு அனைத்து தருணத்திலும் குறித்த தொட்டியின் அல்லது பாத்திரத்தின் அல்லது தாங்கியின் மூடிகள் நன்கு மூடி வைக்க வேண்டும்.

4. (i) ஏதேனும் ஒரு பொதுச் சந்தையில் வியாபாரத்திற்காக ஒதுக்கப்பட்ட இடம் என்பதில்,

(அ) கடையாகும் போது, அந்த கடையின் பின்புற சுவரிலிருந்து 2 வது வாக்கியத்தில் (iv) வது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கதவு பொருத்தப்பட்டுள்ள எல்லை வரை பிரிவும் ;

(ஆ) வியாபார கூடமாகும் போது, அந்த வியாபார கூடத்தில் மேல்புற வர்க்க அளவு மற்றும் வியாபாரத்தில் ஈடுபடும் நபருக்கு தங்கி இருப்பதற்கு இடமளித்துள்ள அந்த வியாபார கூடத்தில் பின்புற பூமி அளவும் கருதப்படல் வேண்டும்.

(ii) விற்பனைக்காக பொது சந்தைக்குக் கொண்டு வரப்படும் ஏதேனும் பொருள் அல்லது பொருட்கள் அல்லது வியாபாரத்திற்காக பயன்படுத்தும் உபகரணம் அல்லது வேறு பொருள் அந்த பொருள் அல்லது பொருட்கள் சந்தைக்குள் கொண்டு வரப்படும் தருணத்தில் அல்லது அங்கிருந்து வெளியில் கொண்டு செல்லும் தருணத்தில் தவிர்ந்த வேறு ஏதேனும் தருணத்தில் ஏதேனும் தாள்வாரத்தில் தவிர்ந்த மேடை திட்டில் தரித்து வைத்தல் அல்லது அவ்வாறு செய்வதற்கு இடமளித்தல் செய்யக்கூடாது.

(iii) பொது சந்தையில் ஏதேனும் தாள்வாரத்தின் மீது அல்லது மேடை திட்டின் மீது ஏதேனும் விதத்தில் வியாபாரம் செய்யக்கூடாததுடன், அந்த தாள்வாரம் அல்லது மேடை திட்டில் பயணிக்கும் நபர்களுக்கு இடையூறு ஏற்படும் ஏதேனும் செற்பாடுகள் செய்யக்கூடாது.

5. பொது சந்தைக்குள் அமைந்துள்ள ஹோட்டல், சாப்பாட்டுக் கடை, சிற்றுண்டிச்சாலை, தேநீர் கடை அல்லது கோப்பிக்கடை அல்லாத வேறு ஏதாவதொரு இடத்தில் சமையல் செய்தல் எவரும் செய்யக்கூடாது.

6. பிரதேச சபைக்குரிய ஏதேனும் பொது சந்தையில்,

(i) உள்ளே அமைதியற்ற முறையில் நடத்தல் அல்லது குழப்பங்கள் செய்தல், கெட்ட வார்த்தைகளை பாவித்தல், யாசகம் கேட்பது ;

(ii) அடிப்படை நடவடிக்கைகள் முடிவில் சந்தை மூடப்பட்டதன் பின்னர் அதன் வளாகத்திற்குள் தங்கி இருப்பது ;

(iii) ஏதேனும் கட்டிடத்திற்கு, நிர்மாணிப்புகளுக்கு. பொருத்தப்பட்டுள்ளவற்றுக்கு அல்லது அலங்காரத்திற்காக வளர்க்கப்பட்டுள்ள அல்லது வைக்கப்பட்டுள்ள ஏதேனும் பூ செடிகளுக்கு, பெயர் பலகைக்கு அல்லது வேறு பொருட்களுக்கு பாதிப்பு ஏற்படுத்துதல், நட்டம் ஏற்படுத்துதல், விகாரமடையச் செய்தல் ;

(iv) பாவிப்பதற்காக வழங்கப்பட்டுள்ள நீரை அசுத்தப்படுத்துதல், அல்லது வீனடித்தல், வீனே செல்ல இடமளித்தல், அல்லது வேறு ஏதேனும் விதத்தில் வீனடித்தல் அல்லது அவ்வாறான நீரில் குளித்தல் அல்லது துணி அல்லது மிருகங்களை கழுவுதல் அல்லது மரக்கறி, பழங்கள் கழுவுவதற்காக ஒதுக்கப்பட்ட இடத்தை தவிர்த்து வேறு இடத்தில் மரக்கறி மற்றும் பழங்களை கழுவுதல்.

(v) தவிசாளரினால் முறையான விதத்தில் அனுமதி வழங்கப்பட்டிருந்தால் தவிர, தமது கடையில் பெயர் பலகை அல்லாத வேறு எந்த விதத்திலான விளம்பர அறிவித்தல் பலகை பொருத்துதல், பெனர் போடுதல் அல்லது வேறு ஏதேனும் விதத்தில் பிரசாரம் செய்தல்.

(vi) மின்சார இணைப்பு வழங்கப்பட்டுள்ள பிரதான சாவி பலகை அருகில் நெருங்குவதற்கு தடை ஏற்படும் விதத்தில் பொருட்களை வைத்தல், அல்லது பிரதான சாவி பலகைக்கு பாதிப்பு ஏற்படுத்துதல்.

(vii) மின்சார இணைப்பு பெற்றுக்கொடுப்பதற்காக கட்டிடத்திற்குள் இழுக்கப்பட்டுள்ள பிரதான மின்சார கம்பியில் அல்லது வேறு ஏதேனும் மின்சாரக் கம்பியில் வஞ்சகமாக அல்லது அனுமதியின்றி மின்சார இணைப்பு பெற்றுக்கொள்ளல்.

(viii) நீர் இணைப்பை பெற்றுக்கொடுப்பதற்காக கட்டிடத்திற்குள் பொருத்தப்பட்டுள்ள பிரதான நீர் குழாயிலிருந்து அல்லது வேறு ஏதேனும் நீர் குழாயில் வஞ்சகமாக அல்லது அனுமதியின்றி நீர் இணைப்பு பெற்றுக்கொள்ளல்.

(ix) கட்டிடத்தில் பொருத்தப்பட்டுள்ள தீ அணைக்கும் உபகரணங்களுக்கு அருகில் நெருங்குவதற்கு தடை ஏற்படும் விதத்தில் பொருட்களை வைத்தல் அல்லது உபகரணங்களுக்கு பாதிப்பு ஏற்படுத்துதல்.

(x) உரிய விடயத்திற்காக ஒதுக்கப்பட்ட இடத்தை தவிர்த்து ஏதேனுமொரு வகையில் மரக்கறி, இறைச்சி, மீன் விற்பனை செய்தல் அல்லது விற்பனைக்காக காட்சிப்படுத்துதல் அல்லது அவ்வாறு செய்வதற்கு ஒழுங்கு செய்தல்.

(xi) வழாகத்திற்குள் துவிச்சக்கர வண்டி அல்லது மோட்டார் சைக்கிள் கொண்டு வருதல் அல்லது அவ்வாறு செய்வதற்கு இடமளித்தல்.

(xii) ஏதேனும் வியாபார ஸ்தாபனத்தில் அகற்றப்படும் கழிவு பொருட்களை மூன்றாவது துணைச் சட்டத்தில் நியமங்களின்படி பிரதேச சபையினால் வழங்கப்பட்டுள்ள தொட்டியில் அல்லது பாத்திரத்தில் அல்லது தாங்கியில் தவித்து பொது சந்தையினுள்ளே வேறு ஏதாவதொரு இடத்தில் போடுதல் எவரும் செய்யக்கூடாது.

7. (i) ஏதேனும் சுகப்படுத்த முடியாத தொற்று நோய் அல்லது சரும நோயினால் பீடிக்கப்பட்டுள்ள அல்லது அண்மையில் அவ்வாறான நோயினால் பாதிக்கப்பட்ட எவராவதொருவர் அல்லது அவ்வாறான ஏதேனும் நோயுள்ள ஒருவருக்கு அண்மையில் உபசரணை செய்த எவராவதொரு நபர் அவ்வாறான சுகப்படுத்த முடியாத நோய் மற்றும் அதன் விதை போஷாக்கு கால எல்லை கடந்திருந்தால் தவிர பொது சந்தையில் ஏதாவதொரு முறையில் வியாபாரத்தில் அல்லது அவ்வாறு வியாபாரத்தில் ஈடுபடும் நபரொருவரின் உதவியாளராக ஈடுபடுதல் அல்லது ஈடுபடச் செய்தல் அல்லது ஏதாவதொரு விடயத்தில் ஈடுபடுவதற்கு இடமளித்தல் கூடாது.

(ii) நன்கு கழுவி சுத்தம் செய்த உடை அணிந்திருந்தால் தவிர எவராவதொருவரினால் பொதுச் சந்தையில் ஏதாவதொரு வகையில் வியாபாரத்தில் ஈடுபடுதல் அல்லது ஈடுபடுவதற்கு இடமளித்தல் செய்யக்கூடாது.

8. பொதுசந்தையில் ஏதேனும் கடை அல்லது வியாபார கூடம் பாவிக்கும் அல்லது உபயோகிக்கும் அனைத்து நபரும் நாளாந்த நடவடிக்கை ஆரம்பத்திலும் கடைசியிலும் தேவைப்படுமாயின், அதனிடையே ஒரு தருணத்தில் அல்லது அதற்கு அதிகமான தடவையில் அந்த கடையினுள் மற்றும் அதன் முன்பக்க தாள்வாரத்தை அல்லது மேடை திட்டை இல்லையேல் வியாபார கூடத்தின் மீதும் அதனை சுற்றியும் பெருக்கி சுத்தம் செய்தல் மற்றும் அவ்வாறு பெருக்கிய பின்னர் சேரும் கழிவு பொருட்களை மூன்றாவது துணைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் பிரதேச சபையினால் வழங்கப்பட்டுள்ள தொட்டியில் அல்லது பாத்திரத்தின் அல்லது தாங்கியின் போடுதல் அல்லது போடுவதற்கு ஒழுங்கு செய்தல் அனைத்து கடை வாடகைதாரரின், வியாபார கூடத்தை பாவிக்கும், உபயோகிக்கும் நபருடைய விடயமாகும்.

9. பொது சந்தையில் மரக்கறி, பழங்கள், இறைச்சி, மீன் அல்லது வேறு உணவு அல்லது பானங்கள் விற்பனை செய்தல் அல்லது விற்பனை செய்வதற்கு காட்சிப்படுத்தும் அனைத்து கடைகள், வியாபார கூடம் அல்லது அனைத்து ஹோட்டல்கள், சாப்பாட்டு கடையும், சிற்றுண்டிச்சாலை உள்ளிட்ட அனைத்து தேனீர் அல்லது கோப்பிக் கடை நாளாந்த நடவடிக்கை முடிவில் அந்த வியாபார ஸ்தானத்தில் விற்பனைக்காக பொருட்கள் காட்சிப்படுத்தப்படும் அனைத்து கடையும், மேசையும் வாங்கும் பொருட்கள் வைக்கும் பலகையும் அலுமாரியும் சந்தர்ப்பத்திற்கேற்ப கழுவி, சுரண்டி சுத்தம் செய்தல் அல்லது அவ்வாறு செய்வதற்கு ஒழுங்கு செய்தல், அவ்வாறான ஏதேனும் இடத்தில் வியாபார விடயத்தில் ஈடுபட்டிருக்கும் நபரின் விடயமாகும்.

10. ஏதேனுமொரு பொது சந்தையில் ஏதேனுமொரு கடை அல்லது வியாபார கூடம் ஒதுக்கி கொடுக்கப்பட்டுள்ளது எந்த வகையிலான பொருட்கள் அல்லது பொருள் வியாபாரத்திற்கோ, அவ்வாறு ஒதுக்கப்பட்ட வகையிலான பொருட்கள் அல்லது பொருள் தவிர வேறு ஏதேனுமொரு பொருள் அல்லது பொருட்கள் விற்பனை செய்தல் அல்லது விற்பனைக்காக காட்சிப்படுத்தல் எவராலும் செய்யக்கூடாது.

11. பொதுச் சந்தையில் கடைகளுக்கு வெளியில் அமைக்கப்படும் ஏதேனுமொரு வியாபார கூடத்தில் நாளாந்த நடவடிக்கைகளின் முடிவில் ஏதேனுமொரு பொருள் அல்லது பொருட்கள் அல்லது கழிவு பொருட்கள் தரித்து வைத்தல் எவராலும் செய்யக்கூடாது.

12. மாடு கொல்லும் கட்டளைச்சட்டத்தின் நியமங்களின் கீழ் முறையான அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள மாடு கொல்லும் மடுவத்தில் கொல்லப்பட்ட ஏதேனுமொரு மிருகத்தின் இறைச்சியானால் தவிர, பொது சந்தையில் இறைச்சி வியாபார ஸ்தானத்தில், விற்பனைக்காக காட்சிப்டுத்துதல் எவராலும் செய்யக்கூடாது.

13. ஏதாவதொரு மாடு கொல்லும் மடுவத்தில் ஏதாவதொரு திகதியில் இறைச்சிக்காக மிருகங்களை கொல்ல தடை செய்து மாடு கொல்லும் கட்டளைச் சட்டத்தில் 17 ஆவது வாக்கியத்தின் அதிகாரத்தின் பிரகாரம் உரிய அதிகார சபையினால் நியமனங்கள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள தருணத்தில் பொதுச் சந்தைக்குள் நடாத்தப்படும் ஏதேனுமொரு இறைச்சிக் கடையில் வியாபாரத்திற்காக இறைச்சி காட்சிப்படுத்துதலோ, களஞ்சியப்படுத்துதலோ செய்யக்கூடாது.

14. எவராவதொரு நபரினால் பொதுச் சந்தை சூழலுக்குள் நாய் அல்லது பூனையை அல்லது வேறு ஏதாவதொரு மிருகத்தை அல்லது பறவையை கொண்டு வருதல் அல்லது வருவதற்கு இடமளித்தல் செய்யக்கூடாது. இந்த நியமம் ஏதேனும் பரிசோதனை விடயத்திற்காக எவராவதொரு பொலிஸ் உத்தியோகத்தரினால் பொலிஸ் நாய் பொது சந்தைக்குள் கொண்டு வருவதை தடை செய்யும் நியமனங்களாக விளங்கிக் கொள்ள கூடாது.

15. பொது சந்தையில் வியாபாரம் முடிந்து பொதுச் சந்தையை முழுமையாக மூடி வைக்கும் தருணத்தில் மற்றும் பொது சந்தையில் ஏதெனுமொரு கடையை மூடிவிட்டு வெளியில் செல்லும் அனைத்து தருணங்களின் போதும் அந்த கடையில் அனைத்து மின் விளக்குகளையும், மின் விசிறி, வேறு மின்சார உபகரணங்கள் செயலிழக்கச் செய்ய வேண்டியதுடன், எரியூட்டப்பட்டிருக்கும் நெருப்பு அல்லது எண்ணெய் விளக்குகளை அணைத்துவிட ஒழுங்கு செய்தல் வாடகைதாரரின் விடயமாகும். அவ்வாறாயினும் உணவு அல்லது பான வகைகள் காலம் தாழ்த்தி வைத்துக்கொள்வதற்காக பாவிக்கும் குளிர்சாதனம் அல்லது அதிகுளிரூட்டி சாதனம் இதன் கீழ் உள்ளடங்கப்பட மாட்டாது. அதேபோன்று மேலும் பொது சந்தையில் பாதுகாப்பிற்கு பாதிப்பு ஏற்படக்கூடிய ஏதாவதொரு விதத்தில் தீ மூட்டுதல் அல்லது தீ மூட்டுவதற்கு ஒழுங்கு செய்தல் அல்லது பொதுச் சந்தை வளாகத்திற்குள் ஏதேனுமொரு இடத்தில் பட்டாசு கொழுத்துதல் அல்லது கொழுத்துவதற்கு ஒழுங்கு செய்தல் எவராலும் செய்யக்கூடாது.

16. ஏதானுமொரு பொதுச் சந்தையில் வெளி இடத்தில் இருக்கும் ஏதேனுமொரு கழிவு பொருளை அந்த பொதுச் சந்தையில் உற்பத்தியாகும் கழிவு பொருட்கள் போடுவதற்கு அமைக்கப்பட்டுள்ள தொட்டியில், பாத்திரத்தில் அல்லது தாங்கியில் போடுதலை எவராலும் செய்யக்கூடாது.

17. பொதுச் சந்தையில் இருக்கும் அனைத்து மலசலகூடம் மற்றும் கழிவறைகள் குறைந்தபட்சம் நாளொன்றுக்கு மூன்று முறை வீதம் கிருமி நாசினி இட்டு கழுவுவதன் மூலம் சுத்தம் செய்வதற்கும், நீர் வழிந்தோடுவதற்கு அமைக்கப்பட்டுள்ள அனைத்து கானுகளையும் குறைந்த பட்சம் நாளொன்றுக்கு இரண்டு முறை வீதம் கழுவி சுத்தம் செய்வதற்கு ஒழுங்கு செய்தல் தவிசாளரின் விடயமாகும்.

18. 2 ஆவது வாக்கியத்தில் xxivi ஆவது பந்தியில் நியமம் செய்துள்ள விதத்தில் அமைக்கப்பட்டுள்ள அனைத்து தொட்டியில் பாத்திரத்தில் அல்லது தாங்கியில் சேகரிக்கப்படும் கழிவு பொருட்களை குறைந்தபட்சம் நாளொன்றுக்கு ஒரு முறையாவது தேவையாயின் அதற்கு அதிகமான தடவைகள் அந்த இடத்திலிருந்து வெளியேற்ற ஒழுங்கு செய்தல் தவிசாளரின் விடயமாக வேண்டும். அதேபோன்று அவ்வாறான கழிவு பொருட்களை அந்த இடத்திலிருந்து வெளியேற்றுகையில் கழிவு பொருட்களை ஏற்றிய பகுதியை முழுமையாக மூடப்பட்ட வாகனத்தில் ஏற்றிச் செல்ல ஒழுங்கு செய்தல் வேண்டும்.

19. மரக்கறி அல்லது பழங்கள் கழுவுவதற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் சேரும் மண் மற்றும் மணல் மற்றும் வேறு கழிவு பொருட்கள் குறைந்தபட்சம் நாளொன்றுக்கு ஒரு முறையாவது அகற்றுவதற்கும் அந்த இடத்தில் நீர் வழிந்தோட ஏற்படும் தடைகளை தடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை ஒழுங்கு செய்தல் தவிசாளரின் விடயமாகும்.

20. பொதுச் சந்தையில் பொருத்தப்பட்டுள்ள தீ அணைக்கும் உபகரணங்களில் செயற்பாடுகள் உரிய முறையில் உள்ளதா என்பதை குறைந்தபட்சம் ஆறு மாதத்திற்கு ஒரு முறை வீதம் பரிசோதனை செய்து கொள்ளலும், செயற்படாத தீ அணைக்கும் உபகரணங்களை பொருத்துவதற்கும் ஒழுங்கு செய்தல் தவிசாளரின் விடயமாக வேண்டும்.

21. பொதுச் சந்தையில் –

(அ) கடைகளின் உள்ளே சுவர் தவிர ஏனைய சுவர்கள், அனைத்து வியாபார கூடத்திலும் சீமெந்தில் சாந்து பூசிய பகுதி, கல்வனைஸ் செய்த இரும்பில் நிறைவு செய்து நிர்மாணித்தல் மற்றும் கடைகளின் உள்ளே சீலின் தவிர ஏனைய பகுதிகள் குறைந்தபட்சம் வருடத்திற்கு ஒரு முறை வீதம் பெயிண்ட் பூசுவதற்கு ஒழுங்கு செய்தல் தவிசாளரின் விடயமாக வேண்டும் ;

(ஆ) கடைகளின் உள்ளே சுவர் தவிர்ந்த ஏனைய சுவர்கள் கடையின் உள்ளே கல்வனைஸ் செய்த இரும்பினால் நிறைவு செய்துள்ள நிர்மாணிப்புகள் மற்றும் கடைகளின் உள்ளே சீலின் குறைந்தபட்சம் வருடத்திற்கு ஒரு முறையேனும் பெயிண்ட் பூசுதல் அந்த கடை பொறுப்பாளரின் விடமாக வேண்டும்.

22. பொதுச் சந்தையில் ஏதேனும் வியாபார கூடம் பாவிப்பதற்கு அல்லது உபயோகிப்பதற்கு 27 ஆவது வாக்கியத்தின் கீழ் அனுமதி சீட்டு பெற்றுள்ள எவராவதொரு நபரினால் அந்த அனுமதி சீட்டை கைமாற்றுதல், அந்த அனுமதி சீட்டு விநியோகித்துள்ளது எந்த வியாபார கூடத்திற்கோ அந்த வியாபார கூடம் தவிர்ந்த வேறு ஏதேனும் இடத்தில் வியாபாரம் செய்தலை செய்யக்கூடாததுடன், எவராவதொருவர் அவ்வாறு செயற்பட்டிருப்பதாக தவிசாளர் அல்லது அனுமதிபெற்ற உத்தியோகத்தர் கருதும் தருணத்தில் அவர் உரிய இடத்தில் வியாபாரத்திற்காக அனுப்புவதற்கு இல்லையேல் அந்த தினத்தில் வியாபார நடவடிக்கைகளில் இருந்து நீக்கி பொதுச் சந்தையிலிருந்து வெளியேற்றுதல் அல்லது அவருக்கு விநியோகித்த அனுமதி சீட்டை இரத்துச் செய்வதற்கு தவிசாளர் அல்லது அனுமதிபெற்ற உத்தியோகத்தருக்கு அதிகாரம் இருக்க வேண்டும்.

23. ஏதேனும் பொதுச் சந்தையில் கடையை வாடகைக்கு பெற்றுள்ள எவராவதொரு நபரினால் அல்லது ஏதேனும் வியாபார கூடம் பாவிக்கும் அல்லது உபயோகிப்பதற்கு அனுமதி சீட்டு பெற்றுள்ள எவராவதொருவரினால் தனது வியாபார விடயத்திற்காக ஒதுக்கிக் கொண்ட அந்த கடையில் அல்லது வியாபார கூடத்தில் இடம் இல்லாது போனால் அதில் ஏதேனும் பகுதியை ஏதாவதொரு பொருள் அல்லது பொருட்கள் வியாபாரம் செய்வதற்கு அல்லது வியாபாரம் செய்வதற்காக காட்சிப்படுத்துவதற்கு அல்லது வேறு ஏதேனும் விடயத்திற்கு வேறு நபருக்கு இடமளித்தல் செய்யக்கூடாது.

24. பிரதேச சபையினால் முன்னதாக தீர்மானித்துக் கொண்ட விடயத்திற்காக அதிகாரம் வழங்கப்பட்டிருந்தால் தவிர, எவராவதொரு நபரினால் பொதுச் சந்தையில் ஏதேனும் கடையில் அமைக்கப்பட்டுள்ள அமைப்புகளுக்கு பாதிப்பு ஏற்படுத்துதல் அல்லது பாதிப்பு ஏற்படுத்தும் விதத்தில் ஏதேனும் நிர்மாணிப்புகள் அல்லது பொருத்துதல் அல்லது மாற்றம் செய்தல் அல்லது பிரித்தல் செய்யக்கூடாது.

25. பிரதேச சபையினால் முன்னர் தீர்மானித்துக் கொண்ட விடயத்திற்காக அதிகாரம் வழங்கப்பட்டிருந்தால் தவிர, எவராவதொரு நபரினால் பொதுச் சந்தையில் ஏதேனும் கடையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள ஒழுங்கு முறைகளை மாற்றம் செய்தல் அல்லது ஒழுங்கு முறைக்கு பாதிப்பு ஏற்படுத்துதல் அல்லது அந்த விதத்தில் ஏதேனும் நிர்மாணிப்புகள் அல்லது பொருத்துதல் அல்லது மாற்றம் செய்தல், பொது சந்தைக்குள் ஏதேனுமொரு இடத்தில் வியாபார கூடம் அமைத்தல் அல்லது தகடு பொருத்துதல் செய்யக்கூடாது.

26. பிரதேச சபையினால் நடாத்தப்படும் ஏதேனும் பொதுச் சந்தை திறந்து வைக்கப்படவேண்டிய திகதிகள் மற்றும் நேரம் காலத்திற்கு காலம் பிரதேச சபையினால் தீர்மானிக்க முடியும். பிரதேச சபையினால் அவ்வாறு தீர்மானிக்கப்பட்ட விதத்தில் பொதுச் சந்தை திறந்து வைக்கும் திகதி மற்றும் நேரம் எவை என்பதை மும்மொழிகளிலுமான அறிவித்தல் அல்லது அறிவித்தல் நன்கு தெரியும் விதத்தில் பொதுச் சந்தைக்குள் நுழையும் நுழைவாயில் அருகில் காட்சிப்படுத்த ஒழுங்கு செய்தல் தவிசாளரின் விடயமாக வேண்டும்.

27. (i) பொதுச் சந்தையிலுள்ள கடைகளில் வெளியே அமைக்கப்பட்டுள்ள ஏதேனும் கூடாரம் பாவிப்பதற்கு அல்லது உபயோகிப்பதற்கு தேவைப்படும் அனைவரும் இந்த பகுதியின் துணைச் சட்டங்களின் நியமங்களின் கீழ் பிரதேச சபையின் அதிகார சபையின் மீது அல்லது அதன் கீழ் விநியோகிக்கப்பட்ட செல்லுபடியாகும் அனுமதி சீட்டு பெற்றுக்கொள்ள வேண்டும் ;

(ii) (i) பந்தியில் நியமத்தின் கீழ் விநியோகிக்கப்படும் அனுமதி சீட்டை இங்கு முதலாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரியின்படி தயாரித்துக்கொள்ள வேண்டும்.

28. 27 ஆவது வாக்கியத்தின் நியமங்களின் கீழ் விநியோகிக்கப்பட்ட செல்லுபடியாகும் அனுமதி சீட்டை வைத்திருப்பவர் அல்லது அவரது சேவையாளர் அல்லது துணை பிரதிநிதி அல்லது வேறு பெயர் மற்றும் இந்த பிரிவின் துணைச் சட்டத்தில் நியமங்களுக்கு மற்றும் விதிமுறைகளுக்கு அனுகூலமானால் தவிர, பொதுச் சந்தையில் கட்டிடத்தில் கடைகள் உள்ள பிரிவில் வெளியில் அமைக்கப்பட்டுள்ள வியாபார கூடத்தை பாவித்தல் அல்லது உபயோகித்தல் செய்யக்கூடாது.

29. 27 ஆவது வாக்கியத்தில் நியமங்களின் கீழ் பொதுச் சந்தையில் கட்டிடத்தின் கடைகள் உள்ள பிரிவின் வெளியில் அமைக்கப்பட்டுள்ள வியாபார கூடங்களுக்காக செலுத்த வேண்டிய கட்டணம் பிரதேச சபையினால் காலத்திற்குக்காலம் தீர்மானிக்கப்படும் விதத்தில் நியமம் செய்ய முடியும். அதே விதத்தில் அந்த கட்டணத் தொகையை பிரதேச சபையினால் காலத்திற்குக் காலம் மாற்றம் செய்தல் அல்லது திருத்தம் செய்ய முடியும்.

30. இந்த பிரிவின் துணைச் சட்டத்தில் நியமங்களின் கீழ் பிரதேச சபையுடன் கையொப்பமிட்ட வாடகை ஒப்பந்தத்திற்கு தோன்றியுள்ள நபர் அல்லது அவரது சேவையாளர் அல்லது வேறு பிரதிநிதியானால் இந்த பிரிவில் துணைச் சட்டங்களில் மற்றும் குறித்த வாடகை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட நியமங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு அனுகூலமானால் தவிர ஏதேனுமொரு கடையை பாவித்தல் அல்லது உபயோகித்தல் செய்யக்கூடாது.

31. (i) பொதுச் சந்தையின் கட்டிடத்தின் இறைச்சிக் கடை அல்லாத ஏதேனும் கடை பாவிப்பதற்கு அல்லது உபயோகிப்பதற்கு வாடகைதாரரை தெரிவு செய்து அந்த கடையை தெரிவு செய்து கொண்ட வாடகைக்காரருக்கு வாடகைக்கு வழங்கும் விடயத்தை பகிரங்கமான டென்டர் கோருதலின் மூலமாக செய்தல் பிரதேச சபையின் விடயமாக வேண்டும் ;

(ii) மேலே 1 ஆவது பந்தியின் கீழ் ஏதேனும் கடையை வாடகைக்கு கொடுப்பதற்காக டென்டர் கோருகையில் அந்த கடைக்காக செலுத்தவேண்டிய மாத வாடகையை, தீர்மானித்தல் பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டுக்கு அமைய இருக்க வேண்டும்.

(iii) மேலே 1 ஆவது பந்தியின் கீழ் வாடகைதாரரை தெரிவு செய்வதற்கு டென்டர்கோரும் தருணமாக :

(அ) வாடகைதாரரினால் தனது செந்த விருப்பத்தில் வாடகை ஒப்பந்தத்தை இரத்துச் செய்து கொள்ளும் தருணத்தில் ; அல்லது

(ஆ) இந்த பிரிவில் துணைச் சட்டங்களில் நியமங்களை மீறுதல் அல்லது வாடகை ஒப்பந்ததில் விதிமுறைகளை மீறுதல் காரணங்களினால் வாடகை ஒப்பந்தத்தை இரத்துச் செய்துள்ள அல்லது இரத்தாகியுள்ளதாக கருதும் தருணத்தில் ; அல்லது

(இ) எவரேனும் வாடகைதாரரின் துணை அல்லது பிள்ளை இல்லாது இருக்கும் போது வாடகைதாரர் மரணமடைந்த தருணத்தில் ; அல்லது

(ஈ) புதிதாக பொதுச் சந்தை சபையினால் நிர்மாணித்திருக்கும் தருணத்தில் கருத வேண்டியதுடன் 35 ஆவது வாக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நியமங்களின்படி எவரேனுமொரு வாடகைதாரினால் ஏதேனும் எதிர்வரும் வருடத்திற்காக அந்த வாடகை ஒப்பந்த்தை செல்லுபடியாக்கிக்கொள்ளலை நிராகரித்திருந்தால் அல்லது அதனை செல்லுபடியானதாக்கிக் கொள்ளலை வேண்டுமென்றே தவிர்த்திருந்தால் தவிர, பிரதேச சபை மற்றும் அந்த வாடகைகாரர் உடன்பட்டு கையொப்பமிட்ட உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டதாக கருத வேண்டும்.

32. 31 ஆவது வாக்கியத்தின் நியமங்களின் கீழ் டெண்டர் கோருவதன் மூலம் ஏதேனும் கடையை பாவித்தல் அல்லது உபயோகிப்பதற்காக தெரிவு செய்யப்பட்ட வாடகைகாரர் பிரதேச சபையுடன் ஒப்பந்தத்திற்கு உள்வாங்க வேண்டும்.

33. 31 ஆவது துணைச் சட்டத்தில் எது குறிப்பிடப்பட்டிருந்தாலும் இந்த பிரிவில் துணைச் சட்டங்கள் அதிகாரம் பெறும் போது பிரதேச சபையிடம் இருக்கும் ஏதேனுமொரு பொதுச் சந்தையில் ஒவ்வொரு கடை சம்பந்தமாக பிரதேச சபையுடன் கடைசியாக

கையொப்பமிடும் வாடகை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வாடகைக்காரர் அந்த செல்லுபடியாகும் திகதியிலிருந்து அமுலாகும் விதத்தில் 31 ஆவது துணைச் சட்டத்தின் கீழ் அந்த கடையை பாவிப்பதற்கு அல்லது உபயோகிப்பதற்கு தெரிவு செய்து கொண்ட வாடகைதாரராக கருதுவது சட்டபூர்வமாகும். அதேபோல் மேலும் இந்த துணைச் சட்டம் அமுலுக்கு வரும் திகதி முதல் மூன்று மாத காலத்திற்குள் 32 ஆவது துணைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நியமங்களுக்கு அமைய புதி வாடகை ஒப்பந்தத்திற்கு உள்வாங்க வேண்டும்.

34. (i) 32 ஆவது 33 ஆவது துணைச் சட்டங்களில் நியமங்களின் கீழ் பிரதேச சபையுடன் கையொப்பமிட்ட ஏதேனும் ஒப்பந்தம் ஒரு வருட காலத்திற்கு மாத்திரம் செல்லுபடியாக வேண்டியதுடன், அந்த வருட காலம் முடிவடைவதற்கு ஒரு மாத்திற்கு முன்னர் எதிர்வரும் வருடத்திற்காக பிரதேச சபையுடன் புதிய ஒப்பந்தத்திற்கு வந்ததன் பின்னர் மேலும் ஓர் வருட காலத்திற்குகாக அந்த கடையை வாடகை காலத்தை செல்லுபடியாக்கிக் கொள்ளலாம். அதே விதத்தில் பின்வரும் வருத்திற்காகவும் அந்த கடையின் வாடகை காலத்தை வருடாந்தம் செல்லுபடியாக்கிக் கொண்டு அந்த கடையை பாவிப்பதற்கு அல்லது உபயோகிப்பதற்கு அந்த வாடகைகாரருக்கு உரிமை இருக்க வேண்டும் ;

(ii) எவ்வாறாயினும் மேலே 1 ஆவது பந்தியின் கீழ் எவரேனும் வாடகைதாரரினால் பின்வரும் வருடத்திற்காக வாடகை காலத்தை செல்லுபடியாக்கிக் கொண்டு அந்த கடையை பாவிக்கும் அல்லது உபயோகிப்பதற்காக அந்த பின்வரும் வருடத்திற்குள் செலுத்தவேண்டிய மாத வாடகை பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீடு அல்லது உள்ளூராட்சிமன்ற சேவையில் மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின்படி தீர்மானிப்பது தவிசாளரின் விடயமாக வேண்டும் ;

(iii) குறைந்தளவு ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை அல்லது சபை தீர்மானிக்கும் ஐந்து வருடத்திற்கு குறையும் காலத்திற்கு ஒரு முறை மதிப்பீட்டு வாடகைத் தொகையை அரசாங்க பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் மீது திருத்தம் செய்தல் வேண்டும்.

35. ஏதேனும் கடை வாடகை காலம் முடிவடையும் திகதி முதல் ஒரு மாத காலம் செல்வதற்கு முன்னர் 34 ஆவது துணைச் சட்டத்தின் கீழ் எதிர்வரும் வருடத்திற்குகாக வாடகை காலத்தை செல்லுபடியாக்கிக் கொண்டிருந்தால் தவிர, எவராவதொரு வாடகைதாரருக்குப் பாவிப்பதற்கு அல்லது உபயோகிப்பதற்கு வழங்கப்பட்டுள்ள கடையை அந்த மாதம் முடிவடையும் திகதிக்கு பின்னர் பாவிப்பதற்கு அல்லது உபயோகிப்பதற்கு உரிமை இருக்கக்கூடாது.

36. பொதுச் சந்தையில் ஏதேனுமொரு கடை துணை வாடகை எடுத்தல் எந்த நபராலும் செய்யக்கூடாது. எவராவதொருவரினால் ஏதேனும் கடையை துணை வாடகைக்கு பெறுதல் காரணத்தினால், அந்த கடையின் வாடகைதாரருடன் பிரதேச சபை ஏற்படுத்தியுள்ள ஒப்பந்தத்தை இரத்துச் செய்வதன் காரணத்தினால் அந்த கடையை மீண்டும் பிரதேச சபைக்கு பொறுப்பேற்றுக்கொள்ளும் காரணத்தினால் அந்த துணை வாடகைகாரருக்கு ஏற்படும் நட்டம் அல்லது சேதம் அல்லது நட்டங்கள் அந்த துணை வாடகைதாரருக்கே உரியதாவதுடன் பிரதேச சபை அல்லது தவிசாளர் அல்லது செயலாளர் அல்லது அதிகாரமுள்ள உத்தியோகத்தர் அது தொடர்பாக பொறுப்பு கூறலுக்கு உள்வாங்க மாட்டார்கள்.

37. பிரதேச சபையினால் நடாத்தப்படும் ஏதேனும் பொதுச் சந்தையில் கடையொன்றின் வாடகைகாரரினால் அந்த கடையை துணை வாடகைக்கு வழங்குதல் அல்லது கூலிக்கு கொடுத்தல் செய்யக்கூடாதுடன், எவராவதொரு வாடகைகாரரினால் அந்த கடையை துணை வாடகைக்கு வழங்க அல்லது கூலிக்கு கொடுக்கப்பட்டுள்ளதாகவோ இந்த பிரிவின் துணைச் சட்டங்களில் நியமனங்களை அல்லது அந்த கடையை வாடகைக்கு கொடுப்பதற்குரிய ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நியமனங்களை மீறியுள்ளதாக கருதக்கூடிய போதுமான விடயங்கள் உண்டு என தவிசாளரின் கருத்தாகும் போது குறித்த வாடகைதாரர் அது தொடர்பாக எழுத்து மூலமாக விளக்கமளித்து அந்த துணை வாடகை கொடுத்ததை அல்லது கூலிக்கு வழங்கியதை முடிவுக்கு கொண்டு வருமாறு தெரிவித்து அனுப்புதல தவிசாளரின் விடமாகும்.

38. 37 ஆவது வாக்கியத்தி குறிப்பிடப்பட்டுள்ளவாறு அறிவித்தல் எவராவது நபரினால் அறிவிதிதலின் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு எதிராக ஏதேனும் எதிர்ப்புகள் தெரிவிப்பதற்கு தன்னிடம் விபரங்கள் இருக்குமாயின் அந்த அறிவித்தல் கிடைத்த தினம் முதல் 14 நாட்களுக்குள் அந்த எதிர்ப்பு அல்லது எதிர்ப்புகள் தொடர்பாக தனக்கு முன்வைக்க இருக்கும் விடயங்களை எழுத்துமூலமாக குறிப்பிட்டு தவிசாளருக்கு வேண்டுகோள் முன்வைப்பதற்காக வாடகைதாரருக்கு உரிமை உண்டு. அதேபோன்று அந்த வாடகைதாரினால் எழுத்துமூலமாக சமர்ப்பிக்கப்பட்ட எதிர்ப்பு அல்லது எதிர்ப்புகள் உள்ளிட்ட விடயங்கள் அடங்கிய அறிவித்தல் தவிசாளருக்கு கிடைத்த திகதி முதல் 14 நாட்களுக்குள் அந்த எதிர்ப்பு அல்லது எதரிர்ப்புகள் தொடர்பாக பரிசோதனை செய்தல் தவிசாளரின் விடயமாக வேண்டும்.

39. 38 ஆவது வாக்கியத்தின்படி தவிசாளரினால் நடாத்தப்பட்ட எதிர்ப்பு பரிசோதனையின் போது 37 ஆவது துணைச்சட்டத்தில் நியமனங்களின்படி தவிசாளரினால் அனுப்பப்பட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை உண்மையானவை என உறுதிப்படுத்தப்பட்டுள்ள போது அல்லது அந்த எதிர்ப்பு பரிசோதனை செய்த நாள் வரும் முதல் அந்த துணை வாடகை கொடுத்தல் அல்லது கூலிக்கு வழங்குதல் சரியானதென வாடகைகாரர் தவறும் தருணத்தில் பிரதேச சபையுடன் அந்த வாடகைதாரர்

கையொப்பமிட்டுள்ள வாடகை ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக கருதுவதை தவிர அந்த எதிர்ப்பு பரிசோதனை செய்த நாள் முதல் 07 தினங்களுக்குள் அந்த கடையை பிரதேச சபைக்கு பொறுப்பேற்றல் தவிசாளரின் விடயமாக வேண்டும். அதேபோல் மேலும் பொறுப்பேற்கப்பட்ட ஏதேனும் கடையை மீண்டும் வாடகைக்கு கொடுப்பதற்கு தவிசாளரினால் 31 ஆவது வாக்கியத்தின் நியமங்களை பின்பற்ற வேண்டும்.

40. 36 ஆவது வாக்கியத்திலிருந்து 39 ஆவது வாக்கியம் வரையிலான துணைச் சட்டங்களில் எது குறிப்பிடப்பட்டிருந்தாலும் பிரதேச சபைக்குரிய ஏதாவதொரு கடையில் வாடகைதாரரின் வேண்டுகோளின் மீது அல்லது வாடகைதாரர் இறந்துபோகும் போது அல்லது அந்த வாடகைதாரரின் துணை அல்லது பிள்ளைக்கு அந்த கடையின் வாடகை உரிமையை ஒப்படைக்க அந்த துணைச் சட்டங்களினால் தடை இருக்கக்கூடாது. அவ்வாறு ஒப்படைக்கப்பட்ட நபர் சபையுடன் புதிய வாடகை ஒப்பந்தத்திற்கு வருதல் வேண்டும்.

41. (i) பிரதேச சபையினால் நடாத்திச் செல்லப்படும் ஏதேனுமொரு பொதுச் சந்தையில் கடை பாவிப்பதற்கு அல்லது உபயோகிப்பதற்கு டென்டர் மூலமாக தெரிவு செய்யப்பட்ட அனைத்து வாடகைதாரரினாலும்,

(அ) வாடகைதாரரை தெரிவு செய்வதற்காக டென்டர் கோரும் தருணம் வரும் போது பிரதேச சபையினால் தீர்மானிக்கப்பட்ட பெறுமதியிலான மீள் செலுத்தக்கூடிய பிணை வைப்பு பணம் ;

(ஆ) 32 ஆவது வாக்கியத்தில் அல்லது 33 ஆவது வாக்கியத்தில் நியமங்களின்படி கையொப்பமிடப்பட்ட ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மாதாந்த வாடகையைப் போன்று மூன்று மடங்கிற்கு நிகரான வைப்பு பணம் ;

(இ) சபையின் தீர்மானத்தின்படி ஒரே முறையில் செய்யப்படும் மீளளிக்கப்படாத கொடுப்பனவு பெற்றுக்கொள்ள வேண்டுமென தீர்மானித்து டென்டர் கோரி இருந்தால் டென்டரில் குறிப்பிடப்பட்டுள்ள அவ்வாறு ஒரே முறையில் செலுத்தும் பணத்தை சபைக்கு செலுத்த வேண்டும்.

(ii) மேலே 1 (அ) மற்றும் (ஆ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள நியமங்கள் அதே விதத்தில் பூரணப்படுத்தியிருந்தால் தவிர எவராவதொரு நபருக்கு பிரதேச சபையினால் நடாத்திச் செல்லப்படும் ஏதேனுமொரு பொதுச் சந்தையில் கடையை பாவிப்பதற்கு அல்லது உபயோகிப்பதற்கு இடமளிக்கக்கூடாது ;

(iii) பழைய பொதுச் சந்தை கட்டிடமொன்றை அகற்றிவிட்டு அதே இடத்தில் புதிய பொதுச் சந்தை அமைக்கப்பட்டுள்ள தருணத்தில் பழைய சந்தையில் வாடகைகார்களினால், புதிய சந்தையில் கடைகள் வேண்டிய நின்றால் சபையினால் நியமிக்கும் ஒரே முறையில் செலுத்தும் பணம் மற்றும் (ii) வாக்கியத்தின் கீழ் நியமம் செய்த மாதாந்த வாடகை பணத்தை போல் மூன்று மடங்கிற்கு நிகரான பணத்தை சபை நியமம் செய்யும் திகதிக்கு முன்னர் சபைக்கு செலுத்தி 32 ஆவது வாக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தத்திற்கு வருவதாயின் போட்டி டென்டர் இல்லாது கடை வாடகை உரிமையை ஒப்படைக்கலாம்.

(iv) 33 ஆவது வாக்கியத்திற்குரியதான எவராவதொரு வாடகைதாரர் அந்த துணைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் பிரதேச சபையுடன் ஒப்பந்தம் கையொப்பமிட்ட திகதி முதல் 6 மாதம் செல்லும் முன்னர் மேலே 1 (அ) மற்றும் (ஆ) பந்தியில் நியமங்களை பூர்த்தி செய்திருந்தால் தவிர அந்த 6 மாத காலம் கடந்த பின்னர் அந்த கடையை பாவித்தல் அல்லது உபயோகித்தல் சட்டபூர்வமற்றதாகும்.

42. (i) பொதுச் சந்தையில் ஏதேனும் கடைக்காக வாடகைதாரரினால் பிரதேச சபைக்குச் செலுத்தவேண்டிய ஒவ்வொரு மாதத்தில் வாடகைப் பணத்தைச் செலுத்தவேண் டிய திகதி, அந்தக் கடையை வாடகைக்குக் கொடுப்பதற்கு குறிதத ஒப்பந்தத்தில் உறுதியாகக் குறிப்பிடப்பட வேண்டியதை தவிர அந்தத் தினம் அல்லது அதற்கு முன்னர் அந்த வாடகைப் பணத்தைப் பிரதேச சபைக்குச் செலுத்துவது வாடகைதாரரின் விடயமாக இருக்க வேண்டும் ;

(ii) எவராவதொரு வாடகைதாரரினால் 42.1 பந்தியில் நியமம் செய்யப்பட்டுள்ள விதத்தில் கையொப்பமிட்ட ஒப்பந்தத்தின்படி இணங்கிய தினத்தில் அல்லது அதற்கு முன்னர் குறித்த மாத வாடகையை பிரதேச சபைக்கு செலுத்த தவறும் தருணத்தில் குறிப்பிட்ட திகதி முதல் செலுத்த வேண்டியுள்ள அனைத்து மாதத்திற்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்காக குறித்த மாத வாடகையில் 10 வீதம் தாமதக் கட்டணம் செலுத்த வாடகைதாரர் கீழ்ப்படிய வேண்டியதுடன், இந்த நியமங்கள் குறித்த ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும்.

(iii) எவரேனுமொரு வாடகைதாரரினால் பிரதேச சபைக்கு செலுத்தவேண்டிய மாதாந்த வாடகை பணத்தை செலுத்தாது தவிர்த்திருந்தால் அல்லது அந்த பாக்கி வாடகை பணத்தை மூன்று மாத காலத்திற்குள் அதிகமாகும் ஏதேனும் தருணத்தில் இங்கு (iv) பந்தி மற்றும் (v) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதிபலன்களையும் குறிப்பிட்டு அந்த பாக்கி பணம் மற்றும் (ii) ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தாமதக் கட்டணத்தை செலுத்துமாறு வாடகைகாரருக்கு கடிதம் மூலமான அறிவித்தல் ஒப்படைத்தல் செயலாளரின் விடயமாக வேண்டும். அதே போன்று இந்த அறிவித்தலின்படி

பாக்கி வாடகை பணத்தை மற்றும் தாமதக் கட்டணம் செலுத்துவதை மேலும் தவித்தால் கடையை சீல் வைத்ததன் பின்னர் அதனுள்ளே இருக்கும் வாடகைதாரருக்கு சொந்தமான ஏதேனுமொரு சொத்துக்களை விற்பதற்காக நடவடிக்கை மேற்கொள்ளும் திகதி எப்போது என்பதையும் அந்த அறிவித்தலில் குறிப்பிட்டிருக்க வேண்டும்.

43.

44.

45.

46.

47.

அவ்வாறாயினும், முந்திய வருடத்திற்காக தெரிவு செய்யப்பட்ட ஏதேனும் கட்டணம் சேகரிப்பவர் பின்வரும் வருடத்திற்காக டென்டர் விண்ணப்பப்பத்திரம் சமர்ப்பிப்பதற்கும், அந்த டென்டர் விண்ணப்பப்பத்திரத்தை ஏற்றுக்கொள்வதற்கு சபை தீர்மானிப்பதாயின் அவர் பின்வரும் வருடத்திற்காக கட்டணம் சேகரிப்பவராக தெரிவு செய்வதற்கு இந்த துணைச் சட்டத்தில் நியமங்களின் மூலம் தவிர்க்கப்பட்டுள்ளதாக கருதக்கூடாது.

48. (i) 45 ஆவது வாக்கியத்தில் நியமங்களின் கீழ் கட்டணம் சேகரிப்பவர் தெரிவு செய்யப்பட்ட போது அவரினால் -

(அ) அந்த தெரிவு செய்கைக்காக டென்டர் கோரும் தருணத்தின் போது பிரதேச சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ள பெறுமதியிலான மற்றும் மீள செலுத்தக்கூடிய பிணை வைப்பு பணம் பிரதேச சபையில் வைப்பு செய்வதற்கு ;

(ஆ) அந்த அனுமதி சீட்டு விநியோகித்தல் மற்றும் கட்டணம் சேகரித்தல் தொடர்பாக பிரதேச சபையுடன் ஒப்பந்தத்திற்கு வருதல் ;

(இ) மேலே 1 ஆவது பந்தியில் நியமனத்தின் கீழ் கையொப்பமிட்ட ஒப்பந்தத்தில் இணங்கியுள்ள வருடாந்த கட்டணத்தில் மூன்றில் ஒரு பங்கிற்கு நிகரான அல்லது அதற்று அதிகமான வைப்பு பணம் பிரதேச சபையில் வைப்பு செய்வதற்கு ;

(ii) மேலே 1 ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள நியமங்களை அதே விதத்தில் பூர்த்தி செய்திருந்தால் தவிர எவரேனுமொருவருக்கு பிரதேச சபையினால் நடாத்திச் செல்லும் ஏதேனுமொரு பொதுச் சந்தையில் வியாபார கூடம் பாவிப்பதற்கு அல்லது உபயோகிப்பதற்கு நபர்களுக்கு அனுமதி சீட்டு விநியோகிப்பதற்கு மற்றும் அந்த அனுமதி சீட்டிற்காக பணம் சேரிப்பதற்கு அதிகாரம் இருக்கக்கூடாது.

49. 29 ஆவது வாக்கியத்தின் நியமங்களின் கீழ் ஏதேனுமொரு பொதுச் சந்தையில் வியாபார கூடம் பாவிப்பதற்கு அல்லது உபயோகிப்பதற்கு பிரதேச சபையினால் தீர்மானித்துள்ள கட்டணத்தை கடந்த அளவிலான கட்டணம் அல்லது கட்டணம் சேகரிப்பவரினால் செய்யக்கூடாது.

50. 48 ஆவது வாக்கியத்தில் 1 (அ) பந்தியின் நியமங்களுக்கு அமைய ஏதேனும் கட்டணம் அறவிடுபவருடன் பிரதேச சபை கையொப்பமிடும் ஒப்பந்தத்தில் -

(அ) வியாபார கூடம் பாவிப்பதற்கு அல்லது உபயோகிப்பதற்காக அனுமதி சீட்டு விநியோகிக்க வேண்டிய முறை ;

(ஆ) அந்த அனுமதி சீட்டுக்காக பணம் சேகரிக்கும் விதம் மற்றும் பெறக்கூடிய அதிகபட்ச தொகை ;

(இ) கட்டணம் சேகரிப்பவரினால் ஒப்பந்தம் செய்து கொண்ட வருடத்திற்காக பிரதேச சபை செலுத்த வேண்டிய தொகை ;

(ஈ) அந்த வருடாந்த பணத்தை சமமான தவணை 12 இல் பிரதேச சபைக்கு செலுத்த வேண்டியது மற்றும் தவணையின் பெறுமதி ;

(உ) ஒவ்வொரு மாதத்திற்காக செலுத்த வேண்டிய பணத்தை பிரதேச சபைக்கு செலுத்த வேண்டிய திகதி ;

(ஊ) குறிப்பிட்ட திகதியில் மாதாந்த கட்டணம் செலுத்துவதை தவிர்த்தால் அந்த பணத்தின் அளவில் 10% அளவிற்கு சமமான பணத்தை தாமத கட்டணமாக பிரதேச சபைக்கு செலுத்துவதற்கு கட்டணம் சேகரிப்பவர் கீழ்ப்படிவதாக;

(எ) பிரதேச சபைக்கு செலுத்த வேண்டிய கட்டணத்தை மூன்று மாதத்திற்கு அதிகமான காலம் செலுத்துவதை தவிர்த்தால் 51 ஆவது துணை சட்டத்தில் நியமங்களின்படி ஒப்பந்தத்தினை இரத்துச் செய்வதற்கு கீழ்ப்படிவதாக மற்றும் அந்த ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டதாக செயலாளரினால் கடித மூலமான அறிவித்தல் கிடைத்த திகதியிலிருந்து அந்த சந்தையில் வியாபார கூடம் பாவிப்பதற்கு அல்லது உபயோகிப்பதற்கு நபர்களூக்கு அனுமதி சீட்டு விநியோகித்தல் மற்றும் அந்த அனுமதி சீட்டிற்காக பணம் அறவிடுதல் கட்டணம் சேகரிப்பவருக்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரம் முடிவடைவதாக.

ஒப்பந்தம் செய்யப்பட்ட விதிமுறைகளாக உள்ளடக்குதல் பிரதேச சபையின் விடயமாகும்.

51. (i) கட்டணம் சேகரிப்பவரினால் பிரதேச சபைக்கு செலுத்த வேண்டிய மாதாந்த கட்டணம் செலுத்தாது தவிர்த்துள்ள மற்றும் அந்த பாக்கி கட்டணம் 3 மாத கட்டணத்திற்கு அதிகமாக அதிகரிக்கும் தருணத்தில், அந்த பாக்கி பணம் மற்றும் தாமத கட்டணம் செலுத்துமாறு கட்டணம் அறவிடுபவருக்கு கடிதம் மூலமான அறிவித்தல் ஒப்படைத்தல் செயலாளரின் விடயமாக வேண்டும்.

(ii) மேலே (i) பந்தியின் கீழுள்ள அறிவித்தல் கிடைத்த எவராவதொரு கட்டணம் அறவிடுபவரினால் தனக்கு அந்த அறிவித்தல் கிடைத்த நாள் முதல் 07 தினங்களுக்குள் அந்த பாக்கி பணத்தை மற்றும் தாமத கட்டணத்தை பிரதேச சபைக்குச் செலுத்தத் தவறினால் அந்த அறிவித்தல் அவருக்கு கிடைத்த திகதியிலிருந்து 7 தினங்கள் கடந்த நாள் முதல் அந்த கட்டணம் சேகரிப்பவருடன் பிரதேச சபை கையொப்பமிடும் ஒப்பந்தம் செல்லுபடியற்றதாகுவதுடன், அந்த செல்லுபடியற்றதாகுதல் சட்டபூர்வமானதாகும். அதேபோல் அந்த ஒப்பந்தம் செல்லுபடியாகாததாக கருதும் தினத்திலே அந்த கட்டணம் சேகரிப்பவருக்கு அதனை கடிதத்தின் மூலம் அறிவிப்பது செயலாளரின் விடயமாக வேண்டும்;

(iii) மேலே (ii) பந்தியில் நியமங்களின் கீழ் ஏதேனுமொரு ஒப்பந்தம் செல்லுபடியாகாததான திகதியின் பின்னர் எந்தவொரு தருணத்திலும் அந்த ஒப்பந்தத்தின் தரப்பினரான கட்டணம் சேகரிப்பவரினால் அந்த பொதுச் சந்தையில் வியாபார கூடம் பாவிப்பதற்கு அல்லது உபயோகிப்பதற்கு எந்த நபருக்கும் அனுமதி சீட்டு விநியோகித்தல் அல்லது அனுமதி சீட்டு விநியோகிப்பதற்காக பணம் சேகரிப்பது செய்யக்கூடாது ;

(iv) மேலே (ii) பந்தியில் நியமனங்களின் கீழ் ஏதேனும் ஒப்பந்தம் செல்லுபடியற்றதாகும் திகதியின் பின்னர் வரும் திகதி முதல் அந்த திகதியில் பொதுச் சந்தையில் வியாபார கூடம் பாவிப்பதற்கு அல்லது உபயோகிப்பதற்கு அனுமதி சீட்டு விநியோகிப்பதற்காக மற்றும் அந்த அனுமதி சீட்டுக்காக பணம் சேகரிப்பதற்கு பிரதேச சபையின் அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தரின் மூலம் அந்த விடயத்தை மேலும் செய்து கொண்டு போவது முடியாதது என்பது செயலாளரின் கருத்தாகும் போது 46 ஆவது வாக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நியமங்களின்படி செயற்படுவதற்காக தனது கருத்தை தவிசாளர் மூலமாக பிரதேச சபைக்கு முன்வைக்க வேண்டும். அந்த விதத்தில் செயலாளரின் கருத்தின் மூலம் பிரதேச சபைக்கு அறிக்கையிடப்பட்டுள்ள தருணத்தில் 46 ஆவது துணைச் சட்டத்தின்படி செயற்படுத்து பிரதேச சபையினால் தீர்மானம் எடுக்க முடியும் ;

(v) மேலே iv பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 46 ஆவது துணைச் சட்டத்தின்படி செயற்படுவதற்கு பிரதேச சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ள ஏதேனும் தருணத்தில் அந்த டெண்டர் கோருதலின்படி டெண்டர் விண்ணப்பபத்திரம் முன்வைப்பதற்கு செல்லுபடியற்ற ஒப்பந்தத்தின் தரப்பினரான கட்டணம் சேகரிப்பவருக்கு உரிமை இருக்கக் கூடாது.

52. தவிசாளரினால் குறித்த விடயத்திற்காக விநியோகிக்கப்படும் செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரம் இருந்தால் தவிர, எந்தவொரு நபரினாலும் பிரதேச சபை பிரதேசத்திற்குள் தனியார் சந்தை நடாத்திச் செல்லல் செய்யக்கூடாது.

53. (i) இந்த பிரிவில் துணைச் சட்டங்களின் கீழ் விநியோகிக்கப்படும் அனுமதிப்பத்திரமும், முன்னதாக இரத்துச் செய்யப்பட்டிருந்தால் தவிர அந்த அனுமதிபத்திரத்தை விநியோகித்தது எந்த வருடத்திற்கோ, அந்த வருடத்தின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைய வேண்டும் ;

(ii) மேலே 52 ஆவது வாக்கியத்தின் கீழ் அனுமதிப்பத்திரம் கோரும் அனைத்து நபரும் பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானித்து வருடாந்த அரசாங்க வர்த்தமானி பத்திரத்தின் மூலம் பிரசுரிக்கப்பட்டுள்ள கட்டணத்தை சபைக்கு செலுத்த வேண்டும்.

54. 2 ஆவது வாக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுச் சந்தையொன்றுக்கு உரிய நியமங்கள் அதே விதத்தில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தால் தவிர தவிசாளரினால் ஏதேனுமொரு தனியார் சந்தைக்கு அனுமதிபத்திரம் விநியோகித்தல் செய்யக்கூடாது.

55. ஏதேனுமொரு தனியார் சந்தையில் உள்ள கடைகளில் மற்றும் வியாபார கூடங்களில் வியாபாரத்தில் ஈடுபடும் அனைத்து நபரும் 57 ஆவது வாக்கியத்தில் நியமங்களின் கீழுள்ள மாற்றம் செய்தலுடன் 2 ஆவது வாக்கியத்தில் இருந்து 21 ஆவது வாக்கியம் வரையிலான வாக்கியங்களில் நியமங்களை ஏற்றுக்கொள்வதை தவிர அந்த நபர்களினால் அந்த நியமங்களை ஏற்றுக்கொள்வததாக பொறுப்பு கூறுதல் அந்த சந்தையின் அனுமதிபத்திரம் பெற்றவர்களின் விடயமாக வேண்டும்.

56. 57 ஆவது வாக்கியத்தின் நியமங்களின் கீழுள்ள மாற்றம் செய்தலுடனான 2 ஆவது வாக்கியத்தில் இருந்து 21 ஆவது வாக்கியம் வரையிலான வாக்கியங்களில் நியமங்களை ஏற்றுக்கொள்ளல் அனைத்து தனியார் சந்தைகளின் அனுமதிபத்திரம் பெற்றவர்களின் விடயமாக வேண்டும்.

57. ஏதேனுமொரு தனியார் சந்தைக்கு உரிய 55 ஆவது வாக்கியத்தில் விடயங்களுக்காக 2 ஆவது வாக்கியத்தில் இருந்து 21 ஆவது வாக்கியம் வரையிலான துணைச் சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள,

(அ) “பொதுச் சந்தை” என்பதற்கு தனியார் சந்தை எனவும் ;

(ஆ) “வாடகைதாரர்” என்பதற்கு அந்த தனியார் சந்தையில் ஏதேனும் கடையின் வியாபாரத்தில் ஈடுபடும் நபர் அல்லது அவரது பிரதிநிதி அல்லது அந்த தருணத்தில் அந்த கடையில் நிர்வாக பொறுப்பில் இருக்கும் எவரேனும் நபரொருவர் எனவும் ;

(இ) “தவிசாளர்” அல்லது “பிரதேச சபை” என்பதற்கு அந்த தனியார் சந்தையில் அனுமதிப்பத்திரம் பெற்றவர் கருதப்படுவதுடன், அவரது பிரதிநிதி அல்லது அந்த தருணத்தில் அந்த தனியார் சந்தையில் அனுமதிப்பத்திரதாரரின் விடயங்களை அல்லது விடயங்களுக்கு பொறுப்பாக இருக்கும் எவரேனுமொரு நபர் எனவும் கருதப்படுதல் வேண்டும்.

58. ஏதேனுமொரு தனியார் சந்தை திறந்து வைக்கப்படும் திகதிகள் மற்றும் நேரங்கள் எவை என்பதை மும்மொழிகளிலும் அறிவித்தல் அல்லது அறிவித்தல்களினால் நன்றாக தெரியும் விதத்தில் அந்த தனியார் சந்தைக்கு நுழையும் நுழைவாயில் அருகில் காட்சிப்படுத்துவதற்கு ஒழுங்கு செய்தல் அனுமதிபத்திரம் பெற்றவரின் விடயமாக வேண்டும்.

59. தவிசாளர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரினால் ஏதேனுமொரு பொதுச் சந்தையில் அல்லது தனியார் சந்தையில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள அல்லது விற்பனைக்காக காட்சிப்படுத்தப்பட்டுள்ள அல்லது களஞ்சியப்படுத்தியுள்ள ஏதேனும் உணவு பொருட்களின் மாதிரியை, அதன் விலையை கொடுத்து பெற்றுக்கொள்ளல் சட்டபூர்வமானது தவிர எவராவதொரு நபரினால் அந்த விலை கொடுத்து வாங்குதலை நிராகரித்தல் அல்லது அதற்கு இடையூறு ஏற்படுத்துதல் செய்யக்கூடாது.

60. இந்த பிரிவில் துணைச் சட்டங்களில் நியமங்களை பரிசோதனை செய்வதற்கு தவிசாளர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் பரிசோதனை செய்வதற்கு அதிகாரம் கிடைக்கும் உரிய காலம் என்பதற்கு, ஏதேனுமொரு பொதுச் சந்தை அல்லது தனியார் சந்தை வியாபார நடவடிக்கைகளுக்காக திறந்து வைக்கும் எந்த தருணமும் கருதப்படும்.

61. இந்த பிரிவில் துணைச் சட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டுள்ள ஏதேனும் தனியார் சந்தை நடாத்திச் செல்லும் இடம், 57 ஆவது வாக்கியத்துடன் கூறப்பட வேண்டிய இரண்டாவது வாக்கியத்தில் ஏதேனுமொரு நியமத்திற்கு அனுகூலமாக இருத்தல் முடிவடைந்தால் அல்லது இந்த துணைச் சட்டங்களில் வேறு ஏதேனும் துணைச் சட்டத்தின் நியமங்களுக்கு முரணான தருணத்தில், உறுதியாக குறிப்பிடப்படும் திகதிக்கு முன்னர் அந்த இடம் அந்த நியமங்களுக்கு அனுகூலமான நிலைக்கு கொண்டு வருவதற்கு தேவையான அனைத்து விடயங்களும் நிறைவேற்றுவதாக அனுமதிப்பத்திரம் பெற்றவருக்கு நியமம் செய்யும் அறிவித்தல் தவிசாளரினால் அந்த அனுமதிப்பத்திரம் பெற்றவருக்கு ஒப்படைக்க ஒழுங்கு செய்ய வேண்டும்.

62. 61 ஆவது வாக்கியத்தில் குறிப்பிட்டுள்ளவாறு அறிவித்தல் கிடைத்த ஏதேனுமொரு அனுமதிப்பத்திரம் பெற்றவரினால் அறிவித்தலில் உறுதியாக குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் அந்த அறிவித்தலில் நியமம் செய்யப்பட்டுள்ள விதத்தில் செயற்பட வேண்டும். ஏற்றுக்கொள்ளக்கூடிய விதத்தில் விடயங்களை எழுத்துமூலமாக சமர்ப்பித்துள்ள ஏதேனுமொரு தருணத்தில் அந்த அறிவித்தலில் உறுதியாக குறிப்பிட்டுள்ள திகதியை நீடிப்பதற்கு தவிசாளருக்கு அதிகாரம் இருக்கப்பட வேண்டும். அவ்வாறாயினும் அந்த விதத்தில் நீடிக்கப்படும் காலத்தை 14 நாட்களுக்கு அதிகரிக்காது இருக்க வேண்டும்.

63. 62 ஆவது வாக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அறிவித்தல் கிடைத்த ஏதேனுமொரு அனுமதிப்பத்திரம் பெற்றவரினால் அந்த அறிவித்தலில் உறுதியாக நியமம் செய்யப்பட்டுள்ள திகதி இல்லையேல் நீடிக்கப்பட்ட திகதிக்கு முன்னர் அந்த அறிவித்தலில் நியமம் செய்யப்பட்டுள்ள விதத்தில் செயற்படுதல் தவிர்த்துள்ள தருணத்தில் அதற்காக அந்த இடத்திற்கு விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தை தவிசாளரினால் செல்லுபடியற்றதாக்கப்படுதல் சட்டபூர்வமானதாகும்.

64. பதம் சம்பந்தமாக வேறு அர்த்தம் தேவையாயின் தவிர இந்தப் பிரிவின் துணைச் சட்டங்களில்–

(i) "துணை" என்பது, ஏதேனுமொரு வாடகைதாரரின் சட்டபூர்வமான மனைவி மற்றும் கணவரும் ;

(ii) "பொதுச் சந்தை" என்பது, வியாபாரத்தில் ஈடுபடுவதற்காக நிர்மாணிக்கப்பட்ட கடைகள் மற்றும் தத்தமது வீட்டு தோட்டங்களில் அல்லது வீடுகளில் உற்பத்தி செய்யப்படும் மரக்கறி அல்லது பழங்கள் உள்ளிட்ட வேறு பொருள் மற்றும் பொருட்கள் விற்பனைக்காக இடம் ஏற்படுத்தியுள்ள பிரதேச சபையினால் நிர்மாணிக்கப்பட்டு நடாத்திச் செல்லும் ஏதேனுமொரு இடம் எனக் கருதப்படுவதுடன், ஏதேனும் உற்பத்திகளை தொகையாக விலைக்கு பெறுதல் அல்லது விற்கப்படும் இடம் அதற்குள் உள்ளடங்க வேண்டும் ;

(iii) "தனியார் சந்தை" என்பது, பிரதேச சபை அல்லாத அல்லது அதன் நிர்வாகத்திற்கு ஒப்படைக்கப்படாத வேறு ஏதேனும் நபரினால் அல்லது நபரின் சபையினால் பொதுச் சந்தையில் விடயத்திற்கு நிகரான விடயத்தை அல்லது விடயங்களை நடாத்திச் செல்லும் ஏதேனுமொரு இடம் எனக் கருதப்படுதல் வேண்டும் ;

(iv) "பிரதான மதிப்பீட்டாளர்" என்பது, மதிப்பீட்டு திணைக்களத்தில் பிரதான மதிப்பீட்டாளர் கருதப்படுவதுடன், பிரதேச சபை உள்ளடங்கும் நிர்வாக மாவட்டத்திற்காக அந்த திணைக்களத்தினால் நியமிக்கப்பட்ட எவரேனுமொரு உத்தியோகத்தர் அதற்கு உள்ளடங்க வேண்டும் ;

(v) "வாடகைதாரர்" என்பது, பிரதேச சபையுடன் ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தத்துடன் ஏதேனுமொரு சந்தையில் ஏதேனுமொரு கடையை நடாத்திச் செல்லும் நபர் எனக் கருதப்படுதல் வேணடும் ;

(iv) "வியாபார கூடம்" என்பது, ஏதேனுமொரு பொதுச் சந்தையில் கடைகளினால் பிரிக்கப்பட்டுள்ள அவ்வாறான பொதுச் சந்தையின் உள்ளே அன்றாடம் வியாபாரம் செய்வதற்காக நிர்மாணிக்கப்பட்டுள்ள ஏதேனும் வாங்கு அல்லது பலகை அல்லது பெட்டி எனக் கருதப்படுவதுடன், அவ்வாறான பொதுச்சந்தையில் தரை கோடிட்ட குறியீடு வரைந்து வியாபார நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள ஏதேனுமொரு இடம் அதற்கு உள்வாங்க வேண்டும்.

**முதலாவது அட்டவணை**

27 ஆவது வாக்கியம்

(உப பத்திரிகைப் புத்தகமாக செய்துகொள்ள வேண்டும்.)

..................... சபை ............................ பொதுச் சந்தை

வியாபாரக் கூடம் பாவித்தல் அல்லது உபயோகிப்பதற்கான அனுமதிச்சீட்டு

அனுமதிச்சீட்டு உரியவரின் பெயர் :--------------------------------------------.

தேசிய அடையாள அட்டை இலக்கம் :--------------------------------------------.

ஒதுக்கப்பட்ட வியாபாரக் கூடத்தில்/கோடிட்ட பகுதி இலக்கம் :--------------------.

ஒதுக்கிக் கொடுக்கப்பட்ட காலம் : 20 ...................... ஆந் திகதி முதல் ...........................

திகதிவரை

ஒதுக்கப்பட்ட திகதிகளின் எண்ணிக்கை : 1 தினம்/7 தினங்கள்/1 மாதம் :--------.

அறவிட்டுக்கொண்ட கட்டணம் : ரூபா :------------------------------------------.

விநியோகிக்கப்பட்ட திகதி :----------------------------------------------------.

----,
கட்டணம் அறிவிடுபவரின் கையொப்பம்.

தேவையற்ற சொற்களை வெட்டிவிடவும்.

**இரண்டாவது அட்டவணை**

*29 ஆவது வாக்கியம்*

*பொதுச் சந்தையில் வியாபாரக் கூடம் பாவிப்பதற்கு அல்லது உபயோகிப்பதற்கு அறவிடப்படும் கட்டணக் கூற்று*

| *வியாபாரக் கூடத்தின் தன்மை* | *ஒரு நாளைக்கான கட்டணம் ரூபா* | *ஏழு நாளைக்கான கட்டணம் ரூபா* | *ஒரு மாதத்திற்கான கட்டணம் ரூபா* |
|---|---|---|---|
| பூமியின் மேல் நிர்மாணிக்கப்பட்ட வியாபாரக் கூடம் | | | |
| பூமியில் கோடிட்ட குறியீடு இட்டு ஒதுக்கப்பட்ட பகுதி | | | |

*16 ஆவது பிரிவு*

**முடி வெட்டும் இடம் மற்றும் பாபர் சாப்பு**

*பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்திற்குள் முடிவெட்டும் இடம், பாபர் சாப்பு மற்றும் முடி மற்றும் முக அலங்காரம் சம்பந்தமான அழுகுக்கலை நிலையம் முறைப்படுத்துதல், கண்காணித்தல், பரிசோதித்தல் மற்றும் நிருவகித்தல் தொடர்பான துணைச் சட்டமாகும்.*

*2. தவிசாளரினால் உரிய விடயத்திற்காக விநியோகிக்கப்பட்ட செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரம் இருந்தால் தவிர, எவராவதொரு நபரினால் பிரதேச சபை பிரதேசத்திற்குள் முடி ஒழுங்கு செய்யும் இடம் அல்லது பாபர் சாப்பு சலூன் அல்லது அழகுக்கலை நிலையம் நடாத்துதல் செய்யக்கூடாது.*

*3. இந்த துணைச்சட்டத்தின்கீழ் விநியோகிக்கப்படும் அனைத்து அனுமதிப்பத்திரங்களும் முன்னதாக இரத்துச்செய்யப்படாது இருந்தால் தவிர, அந்த அனுமதிப்பத்திரம் விநியோகித்தது எந்த வருடத்திற்கோ, அந்த வருடத்தின் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைய வேண்டும்.*

*4.* (i) *இந்த வாக்கியத்தில்* II *மற்றும்* III *பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள நியமங்களைப் பூர்த்திசெய்திருந்தால் தவிர, தவிசாளரினால் ஏதேனுமொரு முடி ஒழுங்குசெய்யம் இடம் அல்லது பாபர் சாப்புச் சலூன் அல்லது அழகுக்கலை நிலையம் நடாத்திச் செல்வதற்காக அனுமதிப்பத்திரம் விநியோகித்தல் செய்யக்கூடாது.*

(ii) *முடி ஒழுங்குசெய்யும் இடம் அல்லது பாபர் சாப்பு சலூன் அல்லது அழகுக்கலை நிலையம் நடாத்திச் செல்ல உத்தேசிக்கும் கட்டிடம் அல்லது கட்டிடத்தின் ஒரு பகுதி :*

*(அ) உறுதியாக நிறைவு செய்யப்பட்டிருக்க வேண்டியதுடன், ஒரு வாடிக்கையாளருக்கு சேவை வழங்குவதற்காக ஒதுக்கப்படும் இடம் குறைந்தபட்சம் 1.5 சதுர மீட்டருக்குக் குறையாதவிதத்தில் ஒரே முறையில் சேவை வழங்கும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கைக்கு அமைய போதுமான இடவசதி வழங்கப்பட்டிருக்க வேண்டும்.*

*(ஆ) சேவை பெற்றுக்கொள்ள எதிர்பார்த்து வருகை தரும் எவராவதொரு வாடிக்கையாளருக்கு சேவை பெற்றுக்கொள்ளும் வாடிக்கையாளரை அமரவைக்கும் இடத்திலிருந்து குறைந்தபட்சம் 1.5 மீட்டர் தூரம் இருக்கும் விதத்தில் வசதியாக அமர்ந்திருப்பதற்குப் போதுமான இடவசதி வழங்கப்பட்டிருக்க வேண்டும்.*

*(இ) உள்ளே சுவர் உறுதியான பொருட்களினால் அமைந்திருக்க வேண்டியதுடன், பெயின்ட் பூசப்பட்டிருக்க வேண்டும்.*

*(ஈ) அதற்குரிய கூரைப் பலகை அல்லது வேறு உறுதியான பொருட்களில் அமைந்திருக்க வேண்டியது தவிர, குறைந்தபட்சம் பூமியின் மட்டத்தில் இருந்து 2.25 மீட்டர் உயரமாக சிவிலின் இருக்க வேண்டும். மேலும் சிவிலின் வெள்ளை நிறத்தில் தீட்டப்பட்டிருக்க வேண்டும்.*

(உ) உள்ளே தரைச் சீமெந்தினால் தீட்டப்பட்டு பீங்கான் கல் பிடிக்கப்பட்டிருக்க வேண்டியதுடன், சுவர் மற்றும் தரை இணையும் இடத்தை சுத்தம் செய்வதற்கு வசதியாக வட்டமான வடிவத்தில் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

(ஊ) உள்ளே குளிரூட்டப்படாத கட்டிடமானால் அதன் தரையின் வர்க்கத்தின் அளவில் பதினைந்தில் ஒன்றுக்குக் குறையாத யன்னல் பொருத்தப்பட்டிருக்க வேண்டியதுடன், போதுமான வெளிச்சம் கிடைப்பதற்கு ஒழுங்குசெய்திருக்க வேண்டும்.

(எ) உள்ளே குளிரூட்டப்பட்ட கட்டிடமானபோது போதுமான மின் வெளிச்சம் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

(ஏ) வாடிக்கையாளர்களுக்கு சேவை வழங்குகையில் கழுவுவதற்காக நீரைப் பாவிப்பதாயின் கழுவும் தொட்டி பொருத்தப்பட்டிருக்க வேண்டியதுடன், பாவிக்கப்பட்ட அசுத்த நீர் வழிந்தோடுவதற்கு போதுமான குழாய் பொருத்தப்பட்டிருக்க வேண்டும்.

(ஐ) உள்ளே பாவித்து வெளியேற்றும் அசுத்த நீர் உறிஞ்சக்கூடிய குழிக்கு வழிந்தோட ஒழுங்கு செய்திருக்க வேண்டியதுடன், பொதுக்குழாய் வெளியேற்றும் வழிக்கு வழிந்தோட ஒழுங்குசெய்யக்கூடாது.

(ஒ) உள்ளே அல்லது சூழலுக்குள் நீர் வசதியுடன் மலசலகூட வசதி வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

(ஓ) உள்ளே வீட்டு விடயங்களுக்காக பயன்படுத்துதல் கூடாததுடன், வீட்டுக்காகப் பயன்படுத்தப்படும் பகுதி சுவர்களினால் பிரிக்கப்பட்டிருக்க வேண்டும்.

(iii) முடி ஒழுங்கு செய்யும் இடம் அல்லது பாபர் சாப்பு சலூன் அல்லது அழகுக்கலை நிலையத்தின் உள்ளே,-

(அ) வாடிக்கையாளர்களுக்காக திறந்து வைக்கப்படும் அனைத்துத் தருணங்களிலும் போதுமான நீர்ப்பாசனம்.

(ஆ) நடாத்திச் செல்கையில் பாவிக்கப்படும் உபகரணங்கள் மற்றும் பாத்திரங்கள் சுத்தம் செய்வதற்காக போதுமான நீரை கொதிக்கவைக்கும் முறை, கழுவும் முறை மற்றும் கழுவுவதற்காகப் பாவிக்கும் பாததிரங்கள் போதுமானளவு.

(இ) உள்ளே சேவை வழங்குபவர்களுக்கு அவர்களின் வேலை செய்யும்போது கைகழுவிக்கொள்ளும் வசதியுடன் தொட்டி மற்றும் சவர்க்காரம் அல்லது சவர்க்காரத் திரவம்.

(ஈ) வாடிக்கையாளர்களின் உபயோகத்திற்காக வெள்ளை நிறத்தில் அல்லது வேறு இளம் நிறத்திலான கடும் நிறம் அல்லாத துவாய் மற்றும் மேல் அங்கம் மூடப்போதுமான அளவில்.

(உ) உள்ளே வெட்டப்படும் முடி மற்றும் வேறு கழிவுப் பொருட்களைப் போடுவதற்காக நன்றாக மூடக்கூடிய மூடியையுடைய நகர்த்தக்கூடிய பாத்திரம்.

(ஊ) உள்ளே மின்சாரத்தினால் செயற்படும் உபகரணம் பாவிப்பதாயின் ஒரு வாடிக்கையாளரின் மேசைக்கு குறைந்தபட்சம் ஒன்று வீதம் பாதுகாப்பு மின்சார பிளக்.

(எ) பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளரினால் நியமம் செய்யப்படும் விதத்தில் போதுமான முதலுதவி உபகரணங்கள் மற்றும் ஔடதங்களுடனான முதலுதவிப் பெட்டி அமைத்து அல்லது ஒழுங்கு செய்திருக்க வேண்டும்.

5. இந்த துணைச்சட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரம் பெற்ற அனைத்து இடங்களிலும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் நபர்களுக்கும் பிரதேச சபையினால் சிபாரிசு செய்யப்படும் அளவிலான முதலுதவி பயிற்சி மற்றும் குறைந்தபட்சம் வருடத்தில் ஒரு முறையேனும் முதலுதவி பயிற்சி மற்றும் வருடத்தில் ஒரு முறையேனும் முதலுதவி முன் பழக்கம் பெற்றுக்கொடுத்திருக்க வேண்டும்.

6. இந்த துணைச் சட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரம் பெற்ற அனைத்து நபர்களினாலும் 4 ஆவது வாக்கியத்தில் 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் அனுமதிப்பத்திரம் இடத்தில் பெயின்ட் பூசப்பட்டிருக்க வேண்டும். நியமம் செய்யப்பட்டுள்ள இடங்கள் குறைந்தபட்சம் வருடத்திற்கு ஒரு முறை வீதம் பெயின்ட் பூசப்பட வேண்டும்.

7. இந்த துணைச் சட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரம்பெற்ற அனைத்து நபரினாலும் அனுமதிப்பத்திரத்தின் இடத்தின் வீட்டுத் தரை குறைந்தபட்சம் மூன்று மாதத்திற்கு ஒரு முறையேனும் கிருமிநாசினி இட்டு கழுவுதல் வேண்டும்.

8. இந்த துணைச்சட்டத்தின்கீழ் அனுமதிப்பத்திரம் பெற்ற இடத்தில் உள்ளே பகல் வேளையில் அல்லது இரவு வேளையில் நித்திரைகொள்ளும் அல்லது உணவு அருந்தும் இடமாகப் பாவிக்கக்கூடாததுடன், வேறு ஒருவருக்கு அவ்வாறு பாவிப்பதற்கு இடமளிக்கக் கூடாது.

9. இந்த துணைச்சட்டத்தின்கீழ் அனுமதிப்பத்திரம் பெற்ற இடத்தில் உள்ளே உணவு சமைத்தல் அல்லது உணவு விற்பனை செய்தல், விற்பனைக்காக காட்சிப்படுத்துதல் செய்யக்கூடாது.

10. (i) ஏதாவது குணப்படுத்த முடியாத நோய், ஸ்பர்சம் அல்லது சரும நோயினால் பீடிக்கப்பட்டுள்ள அல்லது அண்மையில் அவ்வாறான நோயினால் பீடிக்கப்பட்டிருந்த எவராவதொருவர் அல்லது அவ்வாறான ஏதேனுமொரு நோயினால் பீடிக்கப்பட்டுள்ள ஒருவருக்கு அண்மையில் பராமரிப்புச் சேவையில் ஈடுபட்டிருந்த ஒருவருக்கு, அவ்வாறான நோய் குணப்படுத்த முடியாத நோய் விதை, போஷணைக் காலம் கடந்திருந்தால் தவிர, ஏதேனுமொரு அனுமதிப்பத்திரம் பெற்ற இடத்தில் எவ்விதத்திலும் விடயத்தில் அல்லது அவ்வாறான விடயங்களில் ஈடுபடும் ஒருவரின் உதவியாளராக ஈடுபடுதல் அல்லது ஏதேனுமொரு விடயத்தில் ஈடுபடுவதற்கு இடமளித்தல் செய்யக்கூடாது.

(ii) நன்றாகக் கழுவி சுத்தம் செய்த ஆடை அணிந்திருந்தால் தவிர, எவராவதொருவரினால் அனுமதிப்பத்திரம் பெற்ற இடத்தில் ஏதாவதொரு விதத்தில் விடயங்களில் ஈடுபடுவதற்கு இடமளிக்கக் கூடாது.

(iii) அனுமதிப்பத்திரம் பெற்ற இடத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அனைத்துச் சேவையாளர்களும் குறைந்தபட்சம் வருடத்திற்கு ஒரு முறை வைத்தியப் பரிசோதனைக்கு உள்ளாக்குவது அனுமதிப்பத்திரம் பெற்றவரின் விடயமாக வேண்டும்.

11. ஏதேனுமொரு விதத்தில் அல்லது சுகப்படுத்த முடியாத அல்லது ஸ்பரிசம் அல்லது சரும நோயினால் பீடிக்கப்பட்ட இல்லையேல் அவ்வாறான நோயினால் பீடிக்கப்படும் நபருக்கு அண்மையில் பராமரிப்புச் செய்த எவரேனுமொரு வாடிக்கையாளருக்கு சேவை வழங்கியதன் பின்னர்,-

(i) அந்த சேவையை வழங்கிய நபர், ஏதேனும் கிருமிநாசினி இட்டு தனது இரு கைகளையும் சுத்தம் செய்து கொண்டிருந்தால் தவிர, வேறு ஒரு வாடிக்கையாளருக்கு சேவை செய்தல் அல்லது சேவை செய்வதற்கு வாய்ப்பளித்தல் செய்யக்கூடாது.

(ii) அந்த வாடிக்கையாளருக்காக பாவிக்கப்பட்ட ஏதேனுமொரு உபகரணம் துப்புரவு செய்யப்பட்டிருந்தால் தவிர, பாவிக்கப்பட்ட துவாய், மேல் அங்கி, மூடும் ஆவரணம், கிருமிநாசினி அல்லது சவர்க்காரம் இட்டு கழுவப்பட்டிருந்தால் தவிர, வேறு ஒரு வாடிக்கையாளருக்குப் பாவித்தல் அவ்வாறு பாவிப்பதற்கு இடமளித்தல் கூடாது.

12. அனுமதிப்பத்திரம் பெற்ற இடத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அனைத்துச் சேவையாளர்களும்,-

(i) தினமும் குளித்தல் அல்லது உடல் கழுவிய பின்னர் மாத்திரம் சேவையில் ஈடுபடுவதாக;
(ii) அணியும் ஆடை அணிகள் சுத்தமாகவும் சுகாதாரப் பாதுகாப்பான நிலையிலும் இருப்பதாக;
(iii) நகங்களை கட்டையாக வெட்டி அழுக்கின்றி வைத்திருப்பதாக மற்றும்;
(iv) ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்கு சேவை செய்வதற்கு முன்னர் சவர்க்காரம் இட்டு கைகளைக் கழுவிக்கொள்வதற்காக

உறுதியளித்தல் அனுமதிப்பத்திரம் பெற்றவரின் விடயமாகும்-,

13. அனுமதிப்பத்திரம் பெற்ற இடத்தில் பாவனைக்கு எடுக்கும் :

(i) உபகரணங்கள் பாவிக்கும் ஒவ்வொரு தடவைக்கும் பின்னர் சுத்தம் செய்தல்;
(ii) பிரஸ் மற்றும் சீப்புகளை தினமும் பாவனைக்கு எடுப்பதற்கு முன்னர் நன்றாகக் கழுவி சுத்தம் செய்தல்;
(iii) அனைத்துக் கோப்பைகள், சவர்க்கார பிரஸ்களை பயன்பாட்டிற்கு எடுக்கும் ஒவ்வொரு முறைக்குப் பின்னரும் கொதிநீரில் அமுத்திக் கழுவுதல்.

செய்வதாக அனுமதிப்பத்திரம் பெற்றவர் உறுதியளிக்க வேண்டும்.

14. அனுமதிப்பத்திரம் பெற்ற இடத்தில் சேவை பெற்றுக்கொள்ளும் ஒவ்வொரு வாடிக்கையாளர்களின் :-

(i) முடி அல்லது தாடி வெட்டிய பின்னர் வெளியேற்றப்படும் முடித்துண்டுகள் அல்லது வேறு கழிவுப் பொருட்கள் கூட்டுதல் அல்லது மின்சாரத்தினால் இயங்கும் உரிஞ்சும் இயந்திரத்தினால் சேகரித்து அதற்காக ஒதுக்கப்பட்ட பாத்திரத்தில் போடுவதற்காக.

(ii) முடி அல்லது தாடி வெட்டுவதற்குப் பயன்படுத்தும் பிளேட் மாற்றக்கூடிய கத்தியில் பிளேட் மாற்றம் செய்வதாக அனுமதிப்பத்திரம் பெற்றவர் உறுதியளிக்க வேண்டும்.

15. நாளாந்த நடவடிக்கைளின் முடிவில் அல்லது தேவைப்படுமாயின் நாளொன்றுக்குப் பல தடவை அகற்றப்படும் முடித்துண்டுகள் அடங்கிய பாத்திரத்தில் இருக்கும் கழிவுப்பொருட்களைப் பூமியில் ஒரு மீற்றருக்கு குறையாத ஆழமுள்ள குழியில் போடுவதற்கு ஒழுங்குசெய்தல் அனுமதிப்பத்திரம் பெற்றவரின் விடயமாகும். அதேபோல் அகற்றப்படும் முடித்துண்டுகளை அல்லது வேறு கழிவுப்பொருட்கள் காற்றில் அடித்துச் செல்லுதல் அல்லது சூழலுக்குள் ஏதேனுமொரு இடத்தில் பரப்பிக் கிடத்தல் தடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதும் அனுமதிப்பத்திரம் பெற்றவர் விடயமாகும்.

16. அனுமதிப்பத்திரம் பெற்ற இடத்தில் சேகரிக்கப்படும் முடித்துண்டுகள் மற்றும் வேறு கழிவுப்பொருட்கள் முகாமைத்துவ வேலைத்திட்டத்தின் கீழ் நியமம் செய்யப்பட்ட விதத்தில் பிரதேச சபை குப்பை சேகரிக்கும் வாகனத்திற்கு ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

17. அனுமதிப்பத்திரம் பெற்ற இடத்தில் பாவனைக்கு எடுக்கும் கழிவுப்பொருட்கள் சேகரிக்கும் பாத்திரம் வெற்றானதன் பின்னர் சுத்தம்செய்து கிருமிநாசனி இடுவதற்கு ஒழுங்குசெய்தல் அனுமதிப்பத்திரம் பெற்றவர் விடயமாக வேண்டும்.

18. ஏதேனுமொரு அனுமதிப்பத்திரம் பெற்ற இடத்தில்,

(i) ஏதாவதொரு முறையில் அல்லது இரத்தம் நிறுத்தும் பென்சில் வகைகள் அல்லது பவுடர் அல்லது வேறு பொருட்கள் அல்லது

(ii) இரத்தம் வெளியேறுவதை நிறுத்துவதற்காக சீனக்காரம் அல்லது வேறு பொருட்கள், அதைத் தூளாக அல்லது திரவமாக இருக்குமாயின் தவிர, எந்தவொரு வாடிக்கையாளருக்கும் பாவித்தல் அல்லது பாவிப்பதற்கு இடமளித்தல் செய்யக்கூடாது.

19. ஏதேனுமொரு அனுமதிப்பத்திரம் பெற்ற இடத்தில் அனுமதிப்பத்திரம் பெற்றவரினால் சுத்தமான நிலையில் அல்லாத மேல் சரீரம் மூடும் மறைப்பு அல்லது கழுவுவதன் பின்னர் முதல் தடவையாக பாவிக்கப்படும் துவாய் அல்லாத ஏதேனும் துவாய் அல்லது எவராவதொரு வாடிக்கையாளருக்குப் பிரயோசனத்திற்காகக் கழுவிக்கொள்ளல் கூடாது.

20. இந்த துணைச்சட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரம்பெற்ற இடத்திற்கு விநியோகிக்கப்படும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தவிர வேறு ஏதேனும் அல்லது விடயம் தவிசாளரின் எழுத்துமூலமான அனுமதி இருந்தால் தவிர, செய்யக் கூடாது.

21. இந்தப் பகுதி துணைச் சட்டங்களில் நியமங்களைப் பரிசோதனை செய்வதற்குத் தவிசாளருக்கு அல்லது அதிகாரம்பெற்ற உத்தியோகத்தருக்கு பரிசோதனை செய்வதற்கு அதிகாரம் கிடைப்பதினால் காலம் என்பதற்கு அந்த இடத்தின் வாடிக்கையாளர்களுக்கு சேவை வழங்குதல் செய்யப்படும் எந்தவொரு தருணமும் கருதப்படும்.

22. இந்தப் பிரிவில் துணைச்சட்டத்தின்கீழ் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டுள்ள ஏதேனுமொரு இடம் 4 ஆவது வாக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனுமொரு நியமத்திற்கு அனுகூலமாக இருத்தல் முடிவடைந்தால் அல்லது இந்தப் பகுதியில் துணைச் சட்டத்தின் நியமங்களுக்கு முரணாகும் தருணத்தில், உறுதியாகக் குறிப்பிடப்பட்ட திகதிக்கு முன்னர் அனைத்து விடயங்களையும் செய்வதாக எழுத்து மூலமான கட்டளை அனுமதிப்பத்திரம் பெற்றவருக்கு ஒப்படைக்க ஒழுங்கு செய்தல் வேண்டும்.

23. 22 ஆவது வாக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்திலான கட்டளை கிடைத்த எவரேனுமொரு அனுமதிப்பத்திரம் பெற்றவரினால் அந்தக் கட்டளையில் உறுதியாகக் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் அந்தக் கட்டளையில் நியமம் செய்யப்பட்டுள்ள விதத்தில் செயற்பட வேண்டும். ஏற்றுக்கொள்ளக்கூடிய விதத்தில் விடயங்கள் எழுத்து மூலமாகச் சமர்ப்பித்துள்ள ஏதேனுமொரு தருணத்தில் அந்தக் கட்டளையில் உறுதியாகக் குறிப்பிடப்பட்டுள்ள திகதியை நீடிப்பதற்குத் தவிசாளருக்கு அதிகாரம் இருக்க வேண்டும். அவ்வாறாயினும் அந்த விதத்தில் நீடிக்கப்படும் காலம் 14 நாட்களுக்கு அதிகமாகக் கூடாது.

24. 23 ஆவது வாக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்திலான கட்டளை கிடைத்த எவராவதொரு அனுமதிப்பத்திரம் பெற்றவரினால் அந்தக் கட்டளையில் உறுதியாக நியமம் செய்துள்ள திகதி அல்லது நீடிக்கப்பட்ட திகதிக்கு முன்னர் அந்தக் கட்டளையில் நியமம் செய்யப்பட்டுள்ள விதத்தில் செயற்படுதலை கவனியாது விட்டிருக்கும் தருணத்தில் அந்த இடத்திற்கு விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தைத் தவிசாளரினால் இரத்துச்செய்தல் சட்டபூர்வமானதாக வேண்டும்.

25. இந்த துணைச்சட்டத்தில் ஏதேனுமொரு நியமத்தைச் செய்யாதுவிடல் அல்லது கவனியாதுவிடல் குற்றமாவதுடன், அதற்காக உரிய அதிகாரம் உள்ள நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டதன் பின்னர் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கமுடைய பிரதேச சபைச் சட்டத்தில் 122(2) ஆம் வாக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தண்டங்களுக்கு உள்ளாக வேண்டும்.

26. பதம் சம்பந்தமாக வேறு அர்த்தம் தேவையாயின் தவிர இந்தப் பிரிவின் துணைச் சட்டங்களில்,

"மேல் சரீரம் மூடும் மறைப்பு" என்பதில், அனுமதிப்பத்திரம்பெற்ற இடத்தில் சேவை பெற்றுக்கொள்ளும் எவராதொரு வாடிக்கையாளரின் மேல் சரீரத்தை மறைப்பதற்காகப் பாவிக்கப்படும் ஏதேனுமொரு மறைப்புத்துணி எனக் கருதப்படும்.

"முடிவெட்டும் இடம்" அல்லது "பாபர் சாப்பு" என்பதில் பெண்களின் அல்லது ஆண்களின் முடிவெட்டுதல், தாடி வெட்டுதல், தாடி அல்லது முடி ஒழுங்குசெய்தல், முடி சீவுதல் மற்றும் முகம் மற்றும் முடி ஒழுங்குசெய்தலுடன் அழகுபடுத்துதல் செய்யப்படும் ஏதாவதொரு இடம் எனக் கருதப்படும்.

17 ஆவது பகுதி

**பிரசார விளம்பரம்**

பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்திற்குள் ஏதேனுமொரு வழியில் அல்லது பிரசித்தமான இடத்திலிருந்து தெரியும் விதத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அல்லது காட்டப்பட்டுள்ள பிரசார விளம்பரம் முறைப்படுத்துதல், நிருவகித்தல் மற்றும் அது சம்பந்தமான கட்டணம் அறவிடுதல் தொடர்பான துணைச் சட்டமாகும்.

2. பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்திற்குள் பிரச்சார விளம்பரம் காட்சிப்படுத்துவதற்காக இடமளிக்கும் பிரதேசங்கள் எவை என்பதை பிரதேச சபை காலத்திற்குக் காலம் நிர்ணயித்திருக்க வேண்டும். பிரசார விளம்பரம் காட்சிப்படுத்துவதற்காக இடமளிக்கும் பிரதேசங்கள் தொடர்பாக காலத்திற்குக்காலம் பிரதேச சபை எடுக்கும் தீர்மானங்கள் தொடர்பான அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்க ஒழுங்குசெய்தல் பிரதேச சபையின் தவிசாளரின் விடயமாவதுடன், அவ்வாறான அறிவித்தலை வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதி அல்லது அதில் உறுதியாகக் காட்டப்படும் ஏதேனும் எதிர்வரும் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

3. பிரதேச சபையின் தவிசாளரினால் விநியோகிக்கப்படும் குறித்த விடயத்திற்காக இங்கு முதலாவது அட்டவணையில் காணப்படும் மாதிரியின்படி தயாரிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்ட செல்லுபடியாகும் உத்தரவுப்பத்திரம் இருந்தால் தவிர, எவராவதொரு நபரினால் சபை அதிகாரப் பிரதேசத்திற்குள் வழியில் அல்லது பிரசித்த இடத்திலிருந்து பார்க்கும்போது தெரியும் விதத்தில் ஏதாவதொரு விதத்திலான பிரசார விளம்பரம் காட்சிப்படுத்துதல் அல்லது காட்சிப்படுத்த ஒழுங்குசெய்தல் கூடாது.

4. காட்சிப்படுத்துவதற்காக செல்லுபடியாகும் உத்தரவுப்பத்திரம் பெற்றிருந்தாலும் ஏதாவதொரு பிரசார விளம்பரம் ஏதேனுமொரு வழியில் அல்லது பிரசித்தமான இடத்திலிருந்து பார்க்கும்போது தெரியும்விதத்தில் உரிய உத்தரவுப்பத்திரத்தில் உறுதியாகக் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் அல்லது இடங்களில் தவிர வேறு ஏதேனுமொரு இடத்தில் காட்சிப்படுத்துதல் அல்லது அவ்வாறு செய்வதற்கு ஒழுங்குசெய்தல் கூடாது.

5. இந்தப் பகுதி துணைச் சட்டங்களின்கீழ் விநியோகிக்கப்படும் அனைத்து உத்தரவுப்பத்திரங்களும் முன்னதாக இரத்துச்செய்யாதிருந்தால் தவிர, அந்த உத்தரவுப்பத்திரத்தில் நிச்சயித்து குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்கு மாத்திரம் செல்லுபடியாக வேண்டும்.

6. ஏதேனுமொரு பிரசார விளம்பரம் காட்சிப்படுத்துவதற்காக உத்தரவுப்பத்திரம் தேவைப்படும் அனைத்து நபரினாலும் குறைந்தபட்சம் அவ்வாறான பிரசார விளம்பரத்தைக் காட்சிப்படுத்துவதற்காகக் கருதும் திகதிக்கு 7 நாட்களுக்கு முன்னர் இங்கு இரண்டாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரியின்படி தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்பத்திரம் பிரதேச சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

7. இந்த துணைச் சட்டத்தின் கீழ்க்காணும் நியமங்கள் அதே விதத்தில் விண்ணப்பதாரியினால் பூர்த்தி செய்யப்பட்டிருந்தால் தவிர, தவிசாளரினால் ஏதாவது ஒரு விதத்திலான பிரசார விளம்பரம் காட்சிப்படுத்துவதற்காக உத்தரவுப்பத்திரம் விநியோகித்தல் செய்யக்கூடாது.

(i) இரண்டாவது துணைச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்பட்ட வலயத்திற்கு உள்ளே இடமொன்றில் காட்சிப்படுத்துவதற்கான வேண்டுகோளைச் செய்ய வேண்டும்.

(ii) விளம்பரம் காட்சிப்படுத்துவதற்கு வேண்டும் இடத்திற்கு வேறு ஒருவருக்கு முன்னர் விநியோகிக்கப்பட்ட உத்தரவுப்பத்திரத்தின் செல்லுபடியாகும் காலம் முடிவடைந்திருக்க வேண்டும். அவ்வாறாயினும் முன்னர் விநியோகிக்கப்பட்ட மற்றும் மேலும் செல்லுபடியாகும் உத்தரவுப்பத்திரத்தின்கீழ் காட்சிப்படுத்தும் ஏதேனும் விளம்பரப் பலகையில் குறிப்பிடப்பட்டுள்ள விளம்பரம் தெரிவதில் இடையூறு ஏற்படாதவாறு அதற்கருகில் விளம்பரப் பலகை காட்சிப்படுத்த உத்தரவுப்பத்திரம் விநியோகிப்பதற்கு இந்த ஏற்பாடுகள் தடையாக இருக்கக் கூடாது.

(iii) காட்சிப்படுத்தல் உத்தரவுப்பத்திரம் வேண்டி நிற்கும் விளம்பரங்கள் ஆபாசமான அல்லது அருவருப்பான அல்லது அநாகரிகமான அல்லது ஏதேனும் கலாசாரத்திற்கு பாதிப்பு ஏற்படுத்தும் அல்லது ஏதாவதொரு மதத்திற்கு அல்லது இனத்திற்கு அல்லது சமூகத்திற்கு பாதிப்பு ஏற்படும் அல்லது அவ்வாறான நிலை ஏற்படுவதற்கு வாய்ப்பிருக்கும் விதத்தில் காட்சிகள் அல்லது வாக்கியம் உள்ளடங்கும் விதத்தில் விளம்பரம் இருக்கக் கூடாது.

(iv) ஏதேனுமொரு எழுத்து மூலமான நீதியில் தடைசெய்யப்பட்ட அல்லது மட்டுப்படுத்தப்பட்டுள்ள விதத்திலான பிரசார விளம்பரம் அல்லது காட்சிப்படுத்துதலாக இருக்கக் கூடாது.

(v) பிரசார விளம்பரம் செய்யப்படும் இடம்.- விண்ணப்பதாரர் அல்லாத வேறு நபருக்கு அல்லது ஏதேனும் அதிகாரத்திற்குரிய இடமாகும்போது அந்த நபருக்கு அல்லது அந்த அதிகார சபையினால் அந்தப் பிரசார விளம்பரத்தை அந்த இடத்தில் காட்சிப்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தப்படும் எழுத்து மூலமான சாட்சி சமர்ப்பித்திருக்க வேண்டும்.

8. பிரசார விளம்பரத்தின் அருகில் பயணிக்கும் எவராவதொருவருக்கு அல்லது வாகனத்திற்கு இடைஞ்சல் ஏற்படுதல் அல்லது விபத்து ஏற்படும் விதத்தில் எவராவதொரு நபரினால் ஏதேனுமொரு பிரசார விளம்பரம் பொருத்தக்கூடாது. அதேபோன்று வாகனத்தை ஓட்டிச்செல்லும் எவரேனும் சாரதியின் கவனத்தை மாற்றும் விதத்தில் அல்லது அவரது காட்சிக்கு இடையூறு ஏற்படும் விதத்தில் மின் வெளிச்ச விளக்கு பொருத்துதல் அல்லது எதிரொளி ஏற்படுத்துவது செய்யக்கூடாது.

9. சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனும் விண்ணப்பப்பத்திரத்திற்காக இந்தப் பகுதியில் துணைச்சட்டத்தின்கீழ் உத்தரவுப்பத்திரம் விநியோகிப்பதற்குத் தேவையான நியமங்கள் பூரணப்படுத்தப்பட்டுள்ள தருணத்தில் அதனை தவிசாளர் அல்லது அதிகாரம்பெற்ற உத்தியோகத்தரினால் விண்ணப்பதாரருக்கு அறிவிக்க வேண்டும். விண்ணப்பதாரருக்கு அந்த அறிவித்தல் கிடைத்த பின்னர் அவரினால் 10 ஆவது வாக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் உத்தரவுப்பத்திரக் கட்டணம் மற்றும் II ஆவது வாக்கியத்தில் குறிப்பிட்டுள்ள பிணை வைப்புப்பணம் இந்தச் சபைக்குச் செலுத்திய பின்னர் குறித்த உத்தரவுப்பத்திரம் விநியோகித்தல் தவிசாளரின் அல்லது அதிகாரமுள்ள உத்தியோகத்தரின் விடயமாக வேண்டும்.

10. (i) இந்தப் பிரிவின் துணைச்சட்டத்தின்கீழ் விநியோகிக்கப்படும் அனைத்து உத்தரவுப்பத்திரத்தின் மீது இந்தச் சபைக்குச் செலுத்தவேண்டிய உத்தரவுப்பத்திரக் கட்டணம் பிரதேச சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானித்து அரசாங்க வர்த்தமானியின் மூலம் பிரசுரிக்கும் கட்டணமாக இருக்க வேண்டும்.

(ii) ஏதேனுமொரு பிரசார விளம்பரம் காட்சிப்படுத்துவதற்காக விநியோகிக்கப்பட்ட உத்தரவுப்பத்திரத்தில் காலம் முடிவடைந்ததன் பின்னர் பின்தொடரும் காலத்திற்குள் அந்தப் பிரசார விளம்பரத்தைக் காட்சிப்படுத்த தேவை ஏற்படும்போது அந்த பின்தொடரும் காலத்திற்காக அந்த விளம்பரத்தைக் காட்சிப்படுத்துவதற்காக புதிய உத்தரவுப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

(iii) இந்த துணைச் சட்டத்தில் எது குறிப்பிடப்பட்டிருந்தாலும் ஏதேனும் சமயம் சார்ந்த விடயம், அரசியல் பொதுக்கூட்டம் அல்லது பணம் அறவிடாது நடாத்தப்படும் ஏதேனும் கலாசார விடயம் சம்பந்தமாகப் பிரசார விளம்பரம் பெறும் முழுப் பணமும் புண்ணிய நடவடிக்கைக்காக பயன்படுத்தும் ஏதேனுமொரு கச்சேரியின் விளம்பரம் உத்தரவுப்பத்திரக் கட்டணத்திலிருந்து விடுவிக்கப்படல் வேண்டும். அவ்வாறாயினும் அவ்வாறான பிரசார விளம்பரத்திற்காக இந்தப் பிரிவில் துணைச் சட்டங்களில் ஏனைய நடவடிக்கைகள் அதே விதத்தில் நடைபெற வேண்டும்.

11. (i) பிரசார விளம்பரம் காட்சிப்படுத்துவதற்காகச் சமர்ப்பிக்கப்படும் ஏதேனும் விண்ணப்பப்பத்திரத்திற்காக உத்தரவுப்பத்திரம் விநியோகிக்க தீர்மானித்துள்ள தருணத்தில், இந்தச் சபையினால் காலத்திற்குக்காலம் தீர்மானிக்கப்படும் அளவிலான பிணைத்தொகை விண்ணப்பதாரரினால் இந்தச் சபையில் வைப்புச் செய்யும் வரை தவிசாளரினால் அந்த விண்ணப்பப்பத்திரத்திற்கு உத்தரவுப்பத்திரம் விநியோகித்தல் செய்யக்கூடாது.

(ii) ஏதேனும் பிரசார விளம்பரம் காட்சிப்படுத்துவதற்காக உத்தரவுப்பத்திரம் விநியோகிப்பதற்கு முன்னர் இந்தச் சபையில் வைப்புச் செய்யப்படவேண்டிய பிணைப்பணம் சம்பந்தமாக இந்தச் சபையினால் எடுக்கப்படும் தீர்மானத்தை வர்த்தமானியில் பிரசுரிப்பது தவிசாளரின் விடயமாக வேண்டும்.

12. காட்சிப்படுத்தும் அனைத்து விளம்பரங்களுக்கும் விநியோகிக்கப்பட்ட உத்தரவுப்பத்திரத்தின் இலக்கம் அந்த விளம்பரம் அல்லது விளம்பரங்களைக் காட்சிப்படுத்துவதற்கு முன்னர் ஒவ்வொரு விளம்பரத்தில் வலது பக்கம் கீழ் மூலையில் குறிப்பிடுதல் அனுமதிப்பத்திரம் பெற்றவரின் விடயமாக வேண்டும்.

13. (i) ஏதேனும் பிரசார விளம்பரம் பொருத்துவதற்காகப் பயன்படுத்தும் ஏதாவதொரு விதத்திலான காணும் பலகை, தாங்குசுவர், நிர்மாணிப்புகள் அல்லது பொருத்தங்கள் சுற்றாடலுக்குப் பாதிப்பு ஏற்படும் விதத்தில் அல்லது எவரேனும் நபருக்கு அல்லது நபரின் சொத்துக்கு ஆபத்தான அல்லது பாதிப்பு ஏற்படுத்தும் விதத்தில் இருக்கும் தருணத்தில் அதை நிச்சயிக்கப்பட்ட காலத்திற்குள் உரிய நிலைமைக்குக் கொண்டுவருமாறு உத்தரவுப்பத்திரம் பெற்றவருக்கு அனுப்பும் அறிவித்தலின் மூலம் நியமம் செய்வதற்கு தவிசாளருக்கு அல்லது அதிகாரம்பெற்ற உத்தியோகத்தருக்கு அதிகாரம் இருக்க வேண்டும்.

(ii) மேற்குறித்த II ஆம் பந்தியின் கீழான அறிவித்தல் கிடைத்த எவரேனுமொரு நபர் அந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்குள் அந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட நியமங்களின்படி செயற்படுவதைக் கவனியாது விடும் தருணத்தில் தவிசாளர் அல்லது அதிகாரம்பெற்ற உத்தியோகத்தரினால் அந்தப் பிரசார விளம்பரத்திற்காக விநியோகிக்கப்பட்ட உத்தரவுப்பத்திரத்தை இரத்துச்செய்தல் மற்றும் அந்தப் பிரசார விளம்பரத்தைக் கழற்றி அகற்றுதல் சட்டபூர்வமானதாக இருக்க வேண்டும்.

(iii) மேலே II ஆம் பந்தியின் நடவடிக்கையின்கீழ் ஏதேனும் உத்தரவுப்பத்திரம் இரத்துச் செய்யப்பட்டுள்ள தருணத்தில் அந்தப் பிரசார விளம்பரத்தைக் காட்சிப்படுத்துவதற்காக இந்தச் சபையில் வைப்புச் செய்யப்பட்டுள்ள வைப்புப் பணம் இந்த சபைக்குரியதாக வேண்டுமே தவிர, வைப்புப் பணத்தைக் கேட்பதற்கு வேறு ஒருவருக்கும் உரிமை இருக்கக் கூடாது.

14. காட்சிப்படுத்துவதற்காக உத்தரவுப்பத்திரம் பெற்றுக்கொண்டு காட்சிப்படுத்தும் ஏதேனும் விளம்பரத்திற்கு ஏற்படும் ஏதேனும் பாதிப்புகள் அல்லது விகாரமடையச் செய்தல் அல்லது அகற்றுதல் சம்பந்தமாக இந்தச் சபை எந்தவிதத்திலும் பொறுப்புக்கூறலுக்கு உள்ளாகக் கூடாது.

15. இந்தப் பிரிவின் துணைச் சட்டங்களில் ஏதேனுமொரு நியமத்தை மீறியுள்ள தருணத்தில், அந்த மீறுதல் தொடர்பாக கவனம் செலுத்தும் அறிவித்தலுடன் விநியோகிக்கப்பட்ட ஏதேனுமொரு உத்தரவுப்பத்திரத்தை இரத்துச்செய்வதற்கு தவிசாளருக்கு அல்லது அதிகாரம்பெற்ற உத்தியோகத்தருக்கு அதிகாரம் இருக்க வேண்டும்.

16. ஏதேனும் பிரசார விளம்பரம் காட்சிப்படுத்துவதற்காக இந்தப் பிரிவின் துணைச் சட்டத்தின்கீழ் விநியோகிக்கப்பட்ட உத்தரவுப்பத்திரத்தின் மூலம் அந்தப் பிரசார விளம்பரத்தில் தகுறிப்பிடப்பட்டுள்ள அர்த்தத்தை அல்லது கூற்றை முன்வைத்ததற்காக வழங்கப்பட்ட சட்ட ரீதியான உத்தரவு உள்ளடங்கியதாகக் கருதக்கூடாததுடன், அவ்வாறு விளங்கிக்கொள்வதையும் செய்யக்கூடாது.

17. ஏதேனும் பிரசார விளம்பரம் நிர்மாணிப்பதற்காகப் பாவிக்கும் ஏதேனும் நிர்மாணிப்பின் தாங்கி, பொருத்தங்கள் அல்லது அதற்காகப் பாவிக்கப்படும் வேறு ஏதேனும் அல்லது அவ்வாறான பிரசார விளம்பரத்தில் கூறப்பட்டுள்ள அர்த்தம் அல்லது உள்ளடங்கும் வேறு அர்த்தங்கள் காரணத்தினால் ஏதேனுமொரு தரப்பினருக்கு ஏற்படும் அல்லது ஏற்பட வாய்ப்புள்ள ஏதேனும் நட்டம் அல்லது பாதிப்பு சம்பந்தமாக உத்தரவுப்பத்திரம் பெற்றவர் பொறுப்புக் கூறுதலுக்கு உள்ளாக வேண்டும்.

18. இந்தப் பிரிவில் துணைச் சட்டங்களின்கீழ் உத்தரவுப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்குச் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிரசார விளம்பரத்தைக் காட்சிப்படுத்தப்படும் கடைசித் திகதியின் பின்னர் 48 மணி நேரம் கடப்பதற்கு முன்னர் அந்தப் பிரசார விளம்பரத்தை மற்றும் அதற்குப் பயன்படுத்திய வேறு அனைத்துப் பொருட்களையும் அந்த இடத்திலிருந்து அல்லது இடங்களில் இருந்து அகற்றுவதற்கு ஒழுங்குசெய்தல் அந்த உத்தரவுப்பத்திரம் பெற்றவரின் விடயமாக வேண்டும்.

19. (i) 18 ஆவது வாக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் செயற்பட்டதன் பின்னர் தவிசாளருக்கு எழுத்து மூலமாகச் செய்யப்படும் வேண்டுகோளின் மீது குறித்த உத்தரவுப்பத்திரத்தை விநியோகிப்பதற்கு முன்னர் சபையில் வைப்புச் செய்யப்பட்ட வைப்புப் பணத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்வதற்கு உத்தரவுப்பத்திரம் பெற்றவருக்கு முடியும்.

(ii) மேலே I ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு எழுத்துமூலமான வேண்டுகோள் கிடைத்த பின்னர் அந்த வைப்புப் பணம் உத்தரவுப்பத்திரம் பெற்றவருக்கு விடுவிப்பதற்கு முன்னர்,-

(அ) 18 ஆவது துணைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நியமங்கள் உத்தரவுப்பத்திரம் பெற்றவரினால் உரிய முறையில் நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

(ஆ) உத்தரவுப்பத்திரம் பெற்றவரினால் 18 ஆவது துணைச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள விதத்தில் செயற்பட்டுள்ளதாகவும் இந்தச் சபையின் காட்சிப்பலகைக்குப் பாதிப்பு ஏற்படவில்லை என்பதற்குத் தவிசாளர் திருப்தியடைந்தால் தவிர, அந்த வைப்புப்பணத்தை உத்தரவுப்பத்திரம் பெற்றவருக்கு முழுமையாக விடுவித்தல் செய்யக்கூடாது. எவரேனும் உத்தரவுப்பத்திரம் பெற்றவரினால் 17 ஆவது வாக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செயற்படுதலை மீறியுள்ள தருணத்தில் அல்லது இந்தச் சபையில் காட்சிப்பலகைக்குப் பாதிப்பு ஏற்படுத்தியிருந்தால், சந்தர்ப்பத்திற்கு ஏற்றவிதத்தில் அந்தச் செயலைச் செய்தல் அல்லது காட்சிப்பலகையைப் பழுதுபார்த்தல் அல்லது அந்த விடயங்கள் இரண்டிற்கும் இந்தச் சபைக்கு ஏற்படக்கூடிய செலவை வைப்புப் பணத்தில் கழித்துக்கொள்ள வேண்டியதுடன், மிகுதியாகும் ஏதேனும் பணம் இருக்குமாயின் அந்தப் பணத்தை மாத்திரம் உத்தரவுப்பத்திரம் பெற்றவருக்கு மீளளிக்க முடியும்.

(இ) (ஆ) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செயற்படுகையில் இந்தச் சபைக்கு அறவிட்டுக்கொள்ள வேண்டிய பணம் வைப்புச் செய்யப்பட்ட பணத்திற்கும் பார்க்க அதிகமாகும் தருணத்தில் அவ்வாறு மேலதிகமாக அறவிடவேண்டிய பணத்தை உத்தரவுப்பத்திரம் பெற்றவரினால் இந்தச் சபைக்குச் செலுத்த வேண்டும்.

20. இந்தச் சபை அதிகாரப் பிரதேசத்திற்குள் நடாத்திச் செல்லப்படும் ஏதேனும் வியாபார ஸ்தாபனத்தில் அல்லது தொழிற்சாலையில் பெயர், விலாசம் மற்றும் அந்த வியாபார ஸ்தாபனத்தில் செய்யப்படும் வியாபாரத்தின் தன்மை அல்லது தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் உற்பத்தியின் தன்மை காட்டப்படும் விளமபரப் பலகை ஒன்று மாத்திரம் அந்த வியாபார ஸ்தாபனத்தில் அல்லது தொழிற்சாலையில் முன்பக்கம் காட்சிப்படுத்துதல், ஏதேனும் கச்சேரிகள் நடாத்தும் இடத்தில் அந்தக் கச்சேரிக்கு உரியதாக காட்சிப்படுத்தும் பிரசார விளம்பரம், வீட்டுப் பெயர்ப்பலகை பதவிப் பெயர்ப்பலகை மற்றும் ஏனுமொரு சொத்துக்களைப் பிரிப்பதற்கு அல்லது விற்பதற்கு அல்லது வாடகைக்கு விடுவதற்கு அல்லது அந்தச் சொத்துக்கள் மீது காட்சிப்படுத்தப்படும் "வாடகைக்கு விட உள்ளது" அல்லது "விற்பனைக்கு உள்ளது" அல்லது "கூலிக்கு வழங்கப்படும்" எனக் குறிப்பிடப்படும் பிரசார விளம்பரங்கள் ஒன்றுக்கு மாத்திரம் இந்தப் பிரிவின் துணைச் சட்டங்களின் நடவடிக்கைகளுக்கு உரியதாகக் கூடாது. அவ்வாறாயினும் அதே விதத்திலான விளம்பரப் பலகை ஒன்றுக்கு மேற்பட்டு காட்சிப்படுத்தும் ஏதேனுமொரு தருணத்தில் அவ்வாறு அதிகரிக்கும் அனைத்து விளம்பரப் பலகைக்கும் இந்தப் பிரிவின் துணைச் சட்டங்களின் நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

21. அரசாங்கத்தின் அல்லது மாகாண சபை அல்லது இந்தச் சபையினால் காட்சிப்படுத்தப்படும் பிரசார விளம்பரம் சம்பந்தமாக இந்தப் பிரிவின் துணைச் சட்டங்களின் நடவடிக்கைகள் உரியதாகக் கூடாது.

22. ஏதேனும் வியாபார ஸ்தானத்தில் பெயர், இலக்கம் அல்லது விலாசத்துடன் வேறு ஏதேனும் வியாபாரப் பொருட்களின் அல்லது சேவையின் பிரசார விளம்பரம் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் தருணத்தில் மற்றும் ஏதேனுமொரு வீட்டில் ஏதாவதொரு விதத்தில் வியாபாரப் பொருட்களின் அல்லது சேவையின் பிரசார விளம்பரம் காட்சிப்படுத்தப்பட்டுள்ள தருணத்தில், அந்தப் பிரசார விளம்பரத்தை அல்லது பிரசார விளம்பரங்கள் இந்தப் பிரிவின் துணைச் சட்டங்களில் நடவடிக்கைகளுக்குள் உள்ளடங்க வேண்டும். இந்த துணைச் சட்டத்தில் நடவடிக்கைகள் சம்பந்தமாக உத்தரவுப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய நபராக அந்த வியாபார ஸ்தானத்தில் அல்லது வீட்டின் உரிமையாளர், முகாமையாளர் அல்லது அந்தத் தருணத்தில் அங்கு நிருவாகப் பொறுப்பில் இருக்கும் எவரேனுமொரு நபர் கருதப்படுதல் வேண்டும்.

23. எவராவதொருவரினால்–,

(i) ஏதேனுமொரு வீதியில், பாதையில் அல்லது அடிப்பாதையில் வாகன வழிக்கு மேல் அல்லது குறுக்காக நேராக இருக்கும் விதத்தில் பிரசார விளம்பரம் காட்சிப்படுத்துதல்.

(ii) பூமியிலிருந்து 12 மீட்டர் கடக்கும் உயரத்தில் இருக்கும் ஏதேனுமொரு பலகையில் பிரசார விளம்பரம் காட்சிப்படுத்துதல்.

(iii) ஏதேனுமொரு விதத்தில் அல்லது பாதைக்கு நேரே இருக்கும் கட்டிடத்தில் முகப்பக்கம் அல்லது வியாபார ஸ்தானத்தின் பெயர்ப்பலகையில் அல்லது அந்தக் கட்டிடத்தில் முகப்பு எல்லையைக் கடந்து செல்லும் விதத்தில் நீளமான பிரசார விளம்பரம் பொருத்தப்படாது தொங்கவைத்தல்.

(iv) பறக்கும் பெயர்ப்பலகைத் தன்மையில் பிரசார விளம்பரம் பிரதேச சபையின் பூரண அமைதியைப் பெற்றுக்கொள்ளாது ஏதேனுமொரு விதத்தில் வைத்தல் அல்லது நிர்மாணித்தல் செய்யக் கூடாது.

24. எவராவதொரு நபரினால் தனியார் அல்லது பொதுக் கட்டிடத்தில் பொது வணக்கத்திற்குரிய இடத்தில், பொதுப் பூங்காவில் அல்லது ஏதேனும் பாலத்தில் அல்லது பாதையின் குறுக்கே இருக்கும் அவ்வாறான பாலத்தில், தொலைபேசி அல்லது மின் கம்பத்தில்,

ஓரச் சுவரில், அணைக்கட்டில், அமுனையில், போக்கில், பாறையில், கரையில் அல்லது மரத்தில் பிரசார விளம்பரம் காட்சிப்படுத்தல் கூடாது.

25. ஏதேனுமொரு பிரசார விளம்பரம் காட்சிப்படுத்துவதற்காக உரிய உத்தரவுப்பத்திரம் பெற்றுக்கொண்டுள்ளதாக காண்பிப்பதற்கு பிரசார விளம்பரத்தில் பிரதேச சபையினால் உள்ளடக்கப்பட்டுள்ள ஏதேனும் இலச்சினை, குறியீடு, எழுத்துச் சொல் அல்லது இலக்கத்தை எந்தவொரு நபரும் விகாரமடையச் செய்தல் கூடாது.

26. இந்த துணைச் சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனுமொரு நடவடிக்கையாயினும் மீறுதல் குற்றமாவதுடன், அந்த நபர் உரிய அதிகாரமுள்ள நீதிமன்றத்தின் முன் அந்த குற்றத்திற்கு குற்றவாளியாக்கப்பட்டால் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தில் 122(2) வாக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லைகளுக்கு அனுகூலமான தண்டத்திற்கு உள்ளாக்கப்படுதல் வேண்டும்.

27. பதம் சம்பந்தமாக வேறு அர்த்தம் தேவையாயின் தவிர இந்தப் பிரிவின் துணைச் சட்டங்களில்,-

“கட்டவுட்” என்பது, பலகை அல்லது வேறு பொருட்களைப் பயன்படுத்திச் செய்யப்பட்ட ஏதேனுமொரு பிரேமுக்குள் ஒட்டப்படும் அல்லது பொருத்தப்படும் பிரசார விளம்பரம்.

“காட்சிப் பலகை” என்பது, மக்கள் அறிந்துகொள்வதற்காக அல்லது கவனத்திற்காக காட்சிப்படுத்தப்படும் ஏதேனுமொரு பிரசார விளம்பரம் பொருத்துதல் அல்லது தாங்கி வைப்பதற்காக நிர்மாணிக்கப்பட்ட ஏதாவதொரு விதத்திலான நிரந்தரப் பலகை.

“பிரசார விளம்பரம்” என்பது, எவராவதொரு நபரினால் ஏதாவதொரு இடத்தில் அல்லது கட்டிடத்தில் அல்லது நிர்மாணிப்புகளில் காட்சிப்படுத்தப்படும் மற்றும் மக்கள் அறிவதற்காக அல்லது கவனிப்பதற்காக காட்சிப்படுத்தப்படும், ஒட்டப்படும், பொருத்தப்படும், அமைக்கப்படும், தொங்கவிடப்படும் அல்லது வேறு விதத்தில் வைக்கப்படும் பிரசார விடயங்களுக்காகப் பயன்படுத்தும் அல்லது ஏதேனும் எழுத்து அல்லது சொல் அல்லது படங்கள் உள்ளடங்கும் பிரசார விளம்பரம் அல்லது பெனர் அல்லது கட்டவுட் அல்லது ஏதேனும் விதத்திலான விளம்பரம் அல்லது அறிவித்தல் அல்லது வியாபார விளம்பரமும், மின் அல்லது மின்சாரத்தைப் பாவித்து காட்சிப்படுத்தப்படும் விளம்பரமும் எனக் கருதப்படும்.

## முதலாவது அட்டவணை

3 ஆவது வாக்கியம்

............................. சபை எல்லைக்குள் பிரசார விளம்பரங்கள் காட்சிப்படுத்துவதற்கான அனுமதிப்பத்திரம் செலுத்திய அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூ. .................................. அனுமதிப்பத்திரத்தின் தொடர் இலக்கம் ........................... பிணை வைப்புப் பணம் ரூ. .....................................

........................................... வசிக்கும், தே. அ. அ. இல. .......................................... உடைய ............................................ என்பவருக்கு பிரசார விளம்பரம் ஆறைப்படுத்துதல், கண்காணித்தல் மற்றும் நிருவகித்தல் சம்பந்தமாக துணைச் சட்டங்களின் நியமங்களின்கீழ் 20.............. ........................ மாதம் .................... திகதி முதல் 20 ................... .............................. மாதம் ................. திகதி வரையிலான காலத்திற்குள் .............................. சபை எல்லைக்குள் கீழ்க்காணும் இடத்தில்/இடங்களில் பிரசார விளம்பரங்கள்/ விளம்பரம் காட்சிப்படுத்துவதற்கு இதன் மூலம் அதிகாரம் வழங்கப்படுகின்றது.

பிரசார விளம்பரங்கள்/விளம்பரக் காட்சிப்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள இடம்/இடங்கள் :

1. ..........................................
2. ..........................................
3. ..........................................

----,
அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர்.

------------------------------
சபை.

திகதி :----.

**இரண்டாவது அட்டவணை**

*6 ஆவது வாக்கியம்*

*பிரசார விளம்பரத்திற்கான விண்ணப்பப்பத்திரம்*

1. விண்ணப்பதாரரின் பெயர் :----.
2. விலாசம் :----.
3. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
4. தொலைபேசி இலக்கம் :----.
5. மின் அஞ்சல் முகவரி :----.
6. பிரசார விளம்பரம் தொடர்பான விபரம் :

   (i) விளம்பரத்தின் அளவு :
   நீளம்: செ. மீ. ................................... அகலம்: செ. மீ. ...........................
   (ii) விளம்பரங்களின் எண்ணிக்கை :----.
   (iii) விளம்பரத்தில் உள்ளடக்கம் :----.
   (iv) வைக்கப்படும் விதம் :----.
   (v) வைக்கப்படும் இடங்கள் :----.

   (7 ஆவது துணைச் சட்டத்தில் (எ) ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் இணைக்கவும்.)

7. வேண்டப்படும் அனுமதிப்பத்திரம் செல்லுபடியாகும் காலம் :
   ஆரம்பிக்கும் திகதி :
   20............ ...................................... மாதம் ................... திகதி

   முடிவடையும் திகதி :
   20............ ...................................... மாதம் ................... திகதி

பிரசார விளம்பரங்கள் முறைப்படுத்துதல், கண்காணித்தல் மற்றும் நிருவகித்தல் தொடர்பாக துணைச் சட்டங்களின் நியமங்கள் அனைத்தையும் ஏற்றுக்கொள்வதாகவும், அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியாகும் காலம் முடிவடைந்து 2 தினங்கள் கடப்பதற்கு முன்னர் அனுமதிப்பத்திரத்திற்குரிய பிரசார விளம்பரத்தை/ விளம்பரங்களை மற்றும் அதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள அனைத்துப் பொருட்களையும் எனது செலவில் அந்த இடத்திலிருந்து/இடங்களில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் இதன் மூலம் உறுதியளிக்கின்றேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

*18 ஆவது பிரிவு*

**ஹோட்டல்**

பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்திற்குள் ஹோட்டல் நடாத்திச் செல்வதற்காக முறைப்படுத்துதல், கண்காணித்தல், பரிசோதித்தல், நிருவகித்தல் மற்றும் அதற்காக அனுமதிப்பத்திரம் விநியோகித்தல் தொடர்பான துணைச் சட்டமாகும்.

2. தவிசாளரினால் உரிய விடயத்திற்காக விநியோகிக்கப்பட்ட செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரம் இருந்தால் தவிர, எவராவதொரு நபரினால் பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்திற்குள் ஹோட்டல் நடாத்திச் செல்லல் கூடாது.

3. இந்தப் பகுதியின் துணைச் சட்டங்களில் நியமங்களின்கீழ் அனுமதிப்பத்திரம் கோரும் எவராவதொரு நபரினால் இந்தப் பிரிவில் “அ” அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரியின்படி தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்பத்திரம் ஒன்றைத் தவிசாளருக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

4. இந்தப் பிரிவில் 2 ஆவது வாக்கியத்தில் குறிப்பிட்டுள்ள வருட அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்காக பிரதேச சபை அங்கீகரிக்கப்பட்டுள்ள கட்டணம் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் செலுத்த வேண்டும். அந்தக் கட்டணம் அனைத்து வருடத்திற்காகவும் அரசாங்க வர்த்தமானிப்பத்திரத்தில் சபையினால் பிரசுரிக்கப்பட்டுள்ளவாறு இருக்க வேண்டும்.

5. இந்த துணைச் சட்டத்தின்கீழ் விநியோகிக்கப்படும் அனைத்து அனுமதிப்பத்திரமும் முன்னதாக இரத்துச் செய்யாதிருந்தால் தவிர, அந்த அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டது எந்த வருடத்திற்கோ, அந்த வருடத்தின் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைய வேண்டும்.

6. இந்த துணைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நியமங்களை அதே விதத்தில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தால் தவிர, தவிசாளரினால் ஏதேனுமொரு ஹோட்டலுக்கு அனுமதிப்பத்திரம் விநியோகித்தல் கூடாது.

(i) இடத்தை நன்கு பழுதுபார்த்த நிலையில் நடாத்திச் செல்லல்.

(ii) இடத்தின் அனைத்து அறைகளிலும் சுவர் 3 மீட்டருக்குக் குறையாத உயரத்தில் இருக்க வேண்டியதுடன், அந்த சுவர் செங்கல்லில், சீமெந்துக் கல்லில் அல்லது கபொக் கல்லில் அமைக்கப்பட்டிருக்க வேண்டியதுடன், இரு பக்கமும் சீமெந்து சாந்து பூசி பெயின்ட் பூசப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறாயினும் சமையலறை தவிர வேறு அறைகள் பலகையில் அல்லது ஏதேனும் உலோகத் தகடுகளில் அல்லது பலகை மற்றும் உலோகத் தகடுகளில் அமைக்கப்பட்டு பெயின்ட் பூசப்பட்டிருத்தல் இந்த நியமங்களுக்கு அனுகூலமானதெனக் கருத முடியும்.

(iii) இடத்தில் அனைத்து அறைகளும் சிவிலின் பொருத்தப்பட்டிருக்க வேண்டியதுடன், அந்த சிவிலின் பூமி மட்டத்தில் இருந்து குறைந்தபட்சம் 032 மீட்டர் உயரத்திற்குக் குறையாது இருக்க வேண்டும்.

(iv) அனைத்து அறையிலும் திறக்கக்கூடிய யன்னல் பொருத்தப்பட்டிருக்க வேண்டியதுடன், அந்த ஒவ்வொரு அறையிலும் யன்னல்கள் திறந்ததும் அந்த யன்னல்களின் பரப்பளவு அறையின் தரைப்பரப்பளவில் 1/15 இற்கு குறையாது இருக்க வேண்டும். அவ்வாறாயினும் ஏதேனுமொரு அறை குளிரூட்டப்பட்டுள்ள தருணத்தில் இந்த நியமம் உரியதாக இருக்கக் கூடாது.

(v) கூரை ஏதேனுமொரு நிலையான பொருளில் அமைந்திருக்க வேண்டும்.

(vi) கூரை ஓரங்கள் பூமி மட்டத்தில் இருந்து குறைந்தபட்சம் 2.5 மீட்டர் உயரத்தில் அமைந்திருக்க வேண்டியதுடன் தாழ்வார வாசி குறைந்தபட்சம் 1.5 மீட்டர் இருக்க வேண்டும்.

(vii) அனைத்து அறைகளும் தரை சீமெந்து இட்டு சாந்து பூசப்பட்டு அல்லது பீங்கான் செங்கல் பிடிக்கப்பட்டிருக்க வேண்டும்.

(viii) இடத்தினுள் உற்பத்தியாகும் குப்பைகளைச் சேகரிப்பதற்காக குப்பைப் பாத்திரம் வைக்க வேண்டியதுடன், சமையலறைக்குள் வைக்கப்படும் குப்பைப் பாத்திரம் ஈ மற்றும் வேறு கிருமிகள் உள்நுழைய முடியாத விதத்தில் மூடிவைக்கக்கூடிய மூடி இருக்க வேண்டும்.

(ix) இடத்தினுள் உற்பத்தியாகும் குப்பைகளை வெளியேற்றுவதற்காக 24 ஆவது வாக்கியத்தின் நியமங்களின்படி செயற்படக்கூடியவாறு தேவையான நடவடிக்கைகள் ஒழுங்குசெய்திருக்க வேண்டும்.

(x) இடத்தில் சமையலறைக்குள் பாவிக்கப்படும் அனைத்து மேசைகளும்,-

(அ) பலகையில் செய்திருந்தால், அதன் கால்கள் தீட்டப்பட்டு பெயின்ட் பூசப்பட்டிருக்க வேண்டும். அந்த மேசையின் மேல் புறத்தில் நன்கு தீட்டப்பட்டு கடினமான பொருளினால் அல்லது துருப்பிடிக்காத பிரிக்கப்படாத உலோகத் தகட்டினால் மூடப்பட்டிருக்க வேண்டும்.

(ஆ) இரும்பு அல்லது உருக்கு அல்லது வேறு ஏதேனும் உலோகத்தில் அமைக்கப்பட்டிருந்தால் அதன் கால்கள் பெயின்ட் பூசப்பட்டிருக்க வேண்டியதுடன், மேல் புறத்தில் நன்கு தீட்டப்பட்டு கடினமான பொருளினால் அல்லது துருப்பிடிக்காத பிரிக்கப்படாத உலோகத் தகட்டினால் மூடப்பட்டிருக்க வேண்டும்.

(xi) இடத்தில் வாடிக்கையாளர்களின் பாவனைக்காக வைக்கப்பட்டிருக்கும் அனைத்து மேசையும்,-

(அ) பலகையில் செய்திருந்தால், அதன் கால்கள் தீட்டப்பட்டு பெயின்ட் பூசப்பட்டிருக்க வேண்டியதுடன், கண்ணாடியினால் மேல் புறத்தில் நன்கு தீட்டப்பட்டு கடினமான பொருளினால் அல்லது துருப்பிடிக்காத பிரிக்கப்படாத உலோகத் தகட்டினால் மூடப்பட்டிருக்க வேண்டும்.

(ஆ) இரும்பு அல்லது உருக்கு அல்லது வேறு ஏதேனும் உலோகத்தில் அமைக்கப்பட்டிருந்தால் அதன் கால்கள் பெயின்ட் பூசப்பட்டிருக்க வேண்டியதுடன், கண்ணாடியினால் அல்லது மேல் புறத்தில் நன்கு தீட்டப்பட்டு கடினமான பொருளினால் அல்லது துருப்பிடிக்காத பிரிக்கப்படாத உலோகத் தகட்டினால் மூடப்பட்டிருக்க வேண்டும்.

(xii) இடத்தில் பாவனைக்கு எடுக்கும் நீர் மனித உபயோகத்திற்கு உகந்ததென தேசிய நீர் வளங்கள் மற்றும் நீர்ப்பாசனச் சபையினால் விநியோகிக்கப்பட்ட தரச் சான்றிதழ் பெற்றிருந்தால் தவிர, குறைந்தபட்சம் 6 மாதத்திற்கு ஒரு முறை வீதம் இந்த தரச்சான்றிதழைப் பெற்றுக்கொள்ள வேண்டும். தேசிய நீர் வழங்கல் நீர்ப்பாசனச் சபையினால் வழங்கப்படும் நீர் இடத்தின் பாவனைக்காக உபயோகப்படுத்துவதாயின் அவ்வாறான தரச் சான்றிதழ் கிடைத்துள்ளதாகக் கருத வேண்டும்.

(xiii) இடத்தின் விடயங்களுக்குப் பயன்படுத்தும் நீரைக் களஞ்சியப்படுத்தி வைப்பதாயின் அவ்வாறு களஞ்சியப்படுத்தி வைக்கும் அசுத்தமாவதைத் தடுப்பதற்காகப் போதுமான பாதுகாப்பு நடவடிக்கை ஒழுங்குசெய்யப்பட்டிருக்க வேண்டும்.

(xiv) வாடிக்கையாளர்களினால் பாவனைக்கு எடுத்த பாத்திரங்கள் கழுவுவதற்காக வேறான ஒரு பகுதி இடத்தை நடாத்திச் செல்ல வேண்டும்.

(xv) வாடிக்கையாளர்களின் மற்றும் சேவையாளர்களின் பாவனைக்காக குறைந்தபட்சம் அனைத்து 10 பேருக்கு ஒன்று வீதம் ஆண் மற்றும் பெண் இருபாலாருக்கும் வேறு வேறாக மலசலகூடம் மற்றும் கழிவறை அமைத்திருக்க வேண்டும்.

(xvi) அனைத்து மலசலகூடம் மற்றும் கழிவறைகளில் சுவர் செங்கல்லில் அல்லது சீமெந்துக் கல்லில் அல்லது கபொக் கல்லில் அல்லது துருப்பிடியாத உலோகத் தகடுகளினால் அமைக்கப்பட்டு தரை சீமெந்தில் சாந்து பூசி சீமெந்தினால் தீட்டப்பட்டு அல்லது பீங்கான் செங்கல் பிடித்திருக்க வேண்டும். அதேபோல் மேலும் செங்கல்லில் அல்லது சீமெந்துக் கல்லில் அல்லது கபொக் கல்லில் அமைக்கப்பட்ட சுவர்களாகும் போது அவைகள் சாந்து பூசப்பட்டு சீமெந்தினால் தீட்டப்பட்டு அல்லது பீங்கான் கல் பிடிக்கப்பட்டு இருக்க வேண்டியதுடன், துருப்பிடிக்காத உலோகத் தகடுகளினால் அமைக்கப்பட்ட சுவர்களாகும்போது அவைகளின் மேல் புறத்தில் பெயின்ட் பூசப்பட்டிருக்க வேண்டும்.

(xvii) இடத்தில் சேவையில் ஈடுபடும் நபர்களின் பாவனைக்காக குளியல் அறை போதுமானளவு அமைக்கப்பட்டிருக்க வேண்டியதுடன், (xvi) ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள மலசலகூடங்களுக்கு உரிய நியமங்கள் அந்தக் குளியல் அறைகளின் தரைக்கு மற்றும் சுவர்களுக்கு உரியதாக வேண்டும்.

(xviii) இடத்தின் வாடிக்கையாளர்களின் பாவனைக்காக ஒதுக்கப்பட்ட பகுதிக்குள், வாடிக்கையாளர்களின் கைகளைக் கழுவுவதற்காக துருபடியாத உலோகத் தகடுகளில் அல்லது பீங்கான் மண்ணில் செய்து தீட்டப்பட்ட அல்லது செங்கல்லில் அல்லது சீமெந்துக் கல்லில் அமைக்கப்பட்டு பீங்கான் கல் பிடிக்கப்பட்ட தொட்டி அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

(xix) இடத்தில் ஏதாவதொரு பகுதியில் பாவித்த பின்னர் வெளியேறும் அசுத்த நீர் தடையின்றி வழிந்தோட உகந்த வடிகால் தொகுதி ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

(xx) பிரதேச சபையினால் கழிவுநீர் வெளியேற்றும் தொகுதி நடாத்திச் செல்வதாயின் இடத்தில் வெளியேற்றும் அசுத்த நீரைப் பிரதேச சபையினால் நியமம் செய்யும் விதத்தில் அந்த அசுத்த நீர் தொகுதிக்கு வழிந்தோட ஒழுங்குசெய்ய முடிவதுடன், அவ்வாறு இல்லாத தருணத்தில் அந்தக் கழிவு நீரை உறிஞ்சிக்கொள்ளும் குழிக்கு வழிந்தோடச் செய்திருக்க வேண்டும்.

(xxi) இடத்தில் சாதாரணமான தீ அணைக்கும் உபகரணம் வைத்திருக்க வேண்டியதுடன், இடத்திற்கு மின்சார இணைப்பு பெற்றிருந்தால் மேலதிகமாக மின்சார தீ அணைக்கும் உபகரணங்கள் வைத்திருக்க வேண்டும்.

(xxii) இடத்தில் தேநீர், கோப்பி அல்லது பால் ஒழுங்கு செய்யும் பகுதி கீறல்கள் அற்ற துருப்பிடியாத உலோகத் தகட்டினால் அல்லது பீங்கான் செய்கல் பிடித்து வேறு கடினமான பொருளினால் மூடப்பட்டிருக்க வேண்டும்.

(xxiii) இடத்தில் வாடிக்கையாளர்களுக்கு மற்றும் சேவையாளர்களுக்கு உறங்குவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள தூங்கும் அறைகளில் ஒரு நபர் தூங்குவதற்கு ஒதுக்கப்பட்டுள்ள இடம் குறைந்தபட்சம் 4 சதுர மீட்டருக்கு குறையாது இருக்க வேண்டியதுடன், அனைத்து தூங்கும் அறையிலும் உடைகள் வைப்பதற்கு அலுமாரி ஒன்று அல்லது கெபினட் ஒன்று, துவாய் ராக்கை தங்குபவரின் அல்லது தங்குபவர்களின் பொருட்களை வைப்பதற்கு மேசை மற்றும் மலசலகூடத்துடன் குளிக்கும் அறை இருக்க வேண்டும்.

(xxiv) ஏதேனும் அனுமதிப்பத்திரம் பெற்ற இடத்தில் இருக்கும் உறங்கும் அறையினுள்ளே ஏதேனுமொரு தருணத்தில் :

(அ) தனி அறையில் ஒரு கட்டிலுக்கு அதிகமாக;
(ஆ) சோடி அறையில் இருவருக்கான கட்டில் அல்லது தனி கட்டில் இரண்டுக்கு அதிகமாக ;
(இ) மூவருக்கான அறையில் இருவருக்கான கட்டில் ஒன்று மற்றும் தனிக்கட்டில் ஒன்றுக்கு அல்லது தனிக் கட்டில் மூன்றுக்கு மேல் ;
(ஈ) குடும்ப அறையில் இருவருக்கான கட்டில் இரண்டும் தனி கட்டில் ஒன்றும் அல்லது இருவருக்கான கட்டில் ஒன்றும் தனி கட்டில் மூன்றும் அல்லது தனி கட்டில் ஐந்திற்கு அதிகமாக வைத்தல் கூடாது.

7. பெயின்ட் பூசப்பட்டிருக்க வேண்டும் என்றும் 4 ஆவது வாக்கியத்தில் நியமம் செய்யப்பட்டுள்ள அனைத்துப் பகுதிக்கும் குறைந்தபட்சம் வருடத்திற்கு ஒரு முறை வீதம் பெயின்ட் பூசுவதற்கு ஒழுங்குசெய்தல் அனுமதிப்பத்திரம் பெற்றவரின் விடயமாக வேண்டும்.

8. அனுமதிப்பத்திரம் பெற்ற இடம் குறைந்தபட்சம் நாளொன்றுக்கு இரண்டு வீதம் கூட்டிப் பெருக்குதல் செய்ய வேண்டியதுடன், கழிவு நீர் வழிந்தோடும் வடிகால்களை குறைந்தபட்சம் நாளொன்றுக்கு இரு தடவை வீதம் சுத்தம் செய்து நீரினால் கழுவுதல் வேண்டும்.

9. அனுமதிப்பத்திரம் பெற்ற இடத்தில் உறங்கும் அறையில் நிச்சயமாக ஒதுக்கப்பட்டுள்ள அறையைத் தவிர வேறு ஏதேனும் அறையில் எவராவதொரு நபர் உறங்குவதற்கு இடமளிக்கக் கூடாது.

10. 6 ஆவது வாக்கியத்தில் (xxiii) ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள குறைந்தபட்ச இடத்திற்குப் பொருந்தாத எண்ணிக்கையிலான நபர்களை ஏதேனும் உறங்கும் அறையில் தூங்குவதற்கு அனுமதிப்பத்திரம் பெற்றவரினால் இடமளிக்கக் கூடாது.

11. ஏதேனுமொரு ஹோட்டலில் தனி அறையில் ஒரு நபருக்கு அதிகமாக அல்லது சோடி அறையில் இருவருக்கு அதிகமாக அல்லது மூவருக்கான அறையில் மூவருக்கு அதிகமாக தூங்குவதற்கு இடமளித்தல் அனுமதிப்பத்திரம் பெற்றவரினால் செய்யக்கூடாது. அவ்வாறாயினும் இந்த ஏதாவதொரு அறையில் தூங்கும் நபரொருவர் 12 வயதுக்குக் குறைந்தவரானபோது இந்த துணைச் சட்டத்தில் விடயத்திற்காக அவரை ஒரு நபராகக் கருதுதல் கூடாது.

12. அனுமதிப்பத்திரம் பெற்ற இடத்தில் இரவைக்குத் தங்குவதற்காக வருகை தரும் ஒவ்வொரு நபர்களின் பெயர், முகவரி மற்றும் அடையாளத்தைக் குறிக்கும் பதிவேடு அனைத்து அனுமதிப்பத்திரம் பெற்ற இடத்திலும் நடாத்திச் செல்ல வேண்டியதுடன், தவிசாளர் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் அல்லது பொலிஸ் உத்தியோகத்தரினால் பரிசோதனை செய்வதற்குக் கோரும் தருணத்தில் அந்தப் பதிவேட்டைப் பரிசோதனை செய்வதற்கு இடமளித்தல் அனுமதிப்பத்திரம் பெற்றவரின் விடயமாக வேண்டும்.

13. ஏதேனுமொரு ஹோட்டலில் தங்கும் அனைத்து நபர்களும் தமது அடையாளத்தை அனுமதிப்பத்திரம் பெற்றவரிடம் சமர்ப்பிக்க வேண்டியதுடன், தங்குமிடத்தில் நடாத்திச் செல்லும் வருகை தருபவர்களின் பதிவேட்டில் தமது விபரங்களை உள்ளடக்கும் நேரில் கையொப்பமிடல் வேண்டும். அதேபோல் தமது அடையாளத்தைச் சமர்ப்பிக்காத நபருக்கு அனுமதிப்பத்திரம் பெற்ற இடத்தில் ஏதாவதொரு பகுதியில் தங்குவதற்கு ஒழுங்குசெய்தலை அனுமதிப்பத்திரம் பெற்றவரினால் செய்யக்கூடாது.

14. ஏதேனுமொரு ஹோட்டலில் ஏதாவதொரு பகுதி விரோதமான விடயங்களுக்காகப் பயன்படுத்துவதற்கு இடமளிக்காதது அனுமதிப்பத்திரம் பெற்றவரின் விடயமாக வேண்டியதுடன், எவராவதொரு நபரினால் ஹோட்டலில் வேறு தங்குபவர்களின் அல்லது ஹோட்டலின் அருகில் வசிப்பவர்களுக்கு இடையூறு ஏற்படும் வித்ததில் பாடல் பாடுதல், இசை வாத்தியங்கள் இசைப்பது, அநாவசியமான விதத்தில் சத்தம் செய்தல், சத்தம் ஏற்படுத்துதல் செய்வதற்கு இடமளிக்காதிருப்பது அனுமதிப்பத்திரம் பெற்றவரின் விடயமாக வேண்டும்.

15. அனுமதிப்பத்திரம் பெற்ற இடத்தில் அனைத்து உறங்கும் அறையிலும் ஒரு வாடிக்கையாளர் வீதம் பாவித்த பின்னர் வேறு வாடிக்கையாளருக்கு பாவிப்பதற்கு இமளிப்பதற்கு முன்னர் அந்த உறங்கும் அறையில் கட்டில் விரிப்பு, தலையணை உறை, போர்வை, சிறிய துவாய் மற்றும் பாவித்த வேறு துணிகளை கழுவி சுத்தம் செய்த பின்னர் தவிர, வேறு வாடிக்கையாளர் பாவிப்பதற்காக ஒழுங்குசெய்தல் கூடாது. பின்னர் வரும் வாடிக்கையாளருக்கு அந்த அறையை பாவிப்பதற்கு இடளிப்பதற்கு முன்னர் அந்த அறையின் யன்னல்களை குறைந்தபட்சம் 4 மணி நேரமாவது முழுமையாக திறந்து வைப்பதற்கு ஒழுங்குசெய்தல் வேண்டும்.

16. அனைத்து அனுமதிப்பத்திரம் பெற்ற இடத்திலும் அனைத்து அறைகள், படிகள், சாலை, வடிகால் மற்றும் அந்த இடத்திற்குரிய காணி தினமும் மத்தியானத்திற்கு முன்னர் கூட்டிப்பெருக்குவதற்கு ஒழுங்குசெய்தல் அனுமதிப்பத்திரம் பெற்றவரின் விடயமாக வேண்டும்.

17. அனுமதிப்பத்திரம் பெற்ற இடத்தில் ஏதேனுமொரு உறங்கும் அறையில், சமையல் அறையில், சமையல் செய்யும் இடத்தில் அல்லது உணவு உட்கொள்ள ஒதுக்கப்பட்டுள்ள பகுதியில் எந்தவிதமான மிருகத்தையும் வைத்திருத்தல் செய்யக்கூ டாது.

18. அனுமதிப்பத்திரம்பெற்ற இடத்தில் உள்ள மலசலகூடம் மற்றும் வழிவறைகளை குறைந்தபட்சம் நாளொன்றுக்கு இரண்டு முறை வீதம் சுத்தம் செய்து கிருமிநாசினி இடுதல் செய்வேண்டிதுடன் துர்நாற்றம் வீசாது நடாத்திச்செல்ல வேண்டும். அவ்வாறாயினும், வாடிக்கையாளர்கள் தங்கும் ஏதேனுமொரு அறையில் மலசலகூடம் நானொளன்றுக்கு ஒரு முறை சுத்தம் செய்தல் போதுமானதாகக் கருதப்படும்.

19. அனுமதிப்பத்திரம்பெற்ற இடத்தில் உணவு தயாரிப்பதற்கு, விற்பனைக்காக காட்சிப்படுத்துவதற்கு அல்லது வாடிக்கையாளர்களின் பாவனைக்குப் பெறப்படும் பொருட்கள், பாத்திரங்கள் மற்றும் உபரகணங்கள் அனைத்தும் பாவனைக்கு எடுப்பதற்கு முன்னர் சுத்தமான நீரில் கழுவிக்கொள்ள வேண்டிதுடன், பாவித்த பின்னர் கழுவி சுத்தம் செய்வதற்கு ஒழுங்குசெய்தல் அனுமதிப்பத்திரம் பெற்றவரின் விடயமாக வேண்டும்.

20. அனுமதிப்பத்திரம் பெற்ற இடத்தில் அந்தந்தப் பிரிவுகளில் ஒன்றுசேரும் அனைத்துக் குப்பைகளை 24 ஆவது துணைச் சட்டத்தில் நியமம் செய்யப்பட்டுள்ள விதத்தில் வகைப்படுத்தி மறுபக்கம் தெரியாத பொருளிலான பாத்திரத்தில் உடனடியாகப் போடுவதற்கு ஒழுங்குசெய்தல் வேண்டியதுடன் அவ்வாறான குப்பைகளைக் குறைந்தபட்சம் ஒவ்வொரு முறையேனும் தேவைப்படுமாயின் அதற்கு மேலதிகமான தடவையில் அந்த இடத்திலிருந்து வெளியேற்ற ஒழுங்கு செய்தல் வேண்டியதுடன், அந்தப் பாத்திரங்களுக்கு குப்பை போடும் தருணத்திலும் அகற்றும்போது தவிர ஏனைய அனைத்து வேளைகளிலும் அந்தப் பாத்திரத்தை நன்றாக மூடிவைக்க வேண்டும்.

21. அனுமதிப்பத்திரம் பெற்ற இடத்தில் வெளியேற்றும் குப்பைகளை ஏதேனுமொரு தருணத்தில் இடத்தில் தரையில் அல்லது ஒவ்வொரு இடத்தில் போடுதல் செய்யக்கூடாது.

22. (அ) அனுமதிப்பத்திரம்பெற்ற இடத்திற்குள் உற்பத்தியாகும் அனைத்துக் கழிவுப் பொருட்களையும் மீண்டும் பாவனைக்கு எடுப்பதாயின் தவிர, அந்தக் கழிவுப் பொருட்களை,-

(i) மலக் கழிவுப் பொருட்கள் ;
(ii) கண்ணாடி ;
(iii) கடதாசி அல்லது கடதாசியிலான பொருட்கள் ;
(iv) பொலிதீன் மற்றும் பிளாஸ்டிக் அல்லது பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பொருட்கள் ;
(v) இரும்பு மற்றும் வேறு உலோகப் பொருட்கள் அல்லது இரும்பு மற்றும் வேறு உலோகப் பகுதிகள் ;
(vi) உற்பத்திக்காகப் பயன்படுத்தும் மூலப்பொருட்களில் உற்பத்திப் பொருட்கள் மற்றும் பாகங்கள் ;
(vii) ஆபத்தான கழிவுப் பொருட்கள்

என்ற வகைகளின்கீழ் வகைப்படுத்த ஒழுங்குசெய்தல் வேண்டியதுடன், அந்த ஒவ்வொரு வகையின் கழிவுப் பொருட்களை வெளியேற்றுவதற்கு ஒழுங்குசெய்யப்பட்டுள்ள வேறு வேறான பாத்திரங்களுக்குள் அல்லது தாங்கிகளில் போடுவதற்கு ஒழுங்குசெய்தல் அனுமதிப்பத்திரம் பெற்றவரின் விடயமாக வேண்டும்.

(ஆ) மேலே (அ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வகைப்படுத்தி பாத்திரங்களில் அல்லது தாங்கிகளில் போடப்பட்டுள்ள கழிவுப்பொருட்களை பிரதேச சபையின் கழிவுப்பொருட்கள் முகாமைத்துவ வேலைத்திட்டத்தின் கீழ் வெளியேற்றுவதாயின் தவிர, பிரதேச சபையின் தவிசாளரினால் நியமம் செய்யும் விதத்தில் இறுதி வெளியேற்றத்தைச் செய்தல் வேண்டும்.

23. அனைத்து அனுமதிப்பத்திரம் பெற்ற இடமும் எலிகள், ஈக்கள், வேறு கிருமிகள் இல்லாது நடாத்திச்செல்ல வேண்டும். அந்த இடங்களில் வைக்கப்படும் உணவு அல்லது பானம் தயாரிப்பதற்கு உபயோகப்படுத்தும் தயாரிக்கப்பட்ட உணவு அல்லது பானம் அவ்வாறான மிருகங்களிடமிருந்து துஷ்பிரயோகம் ஆவதைத் தவிர்ப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கை ஒழுங்குசெய்தல் அனுமதிப்பத்திரம் பெற்றவர்கள் விடயமாக வேண்டும்.

24. வாடிக்கையாளர்களுக்கு உணவு வழங்குகையில் அவைகளைக் கையில் பிடிப்பதை செய்யக்கூடாததுடன், அவ்வாறான உணவு வழங்குவதற்காக கரண்டி அல்லது வேறு விதமான உபகரணம் பயன்படுத்த வேண்டும்.

25. ஏதாவதொரு அனுமதிப்பத்திரம் பெற்ற இடத்தில் தரம் குறைந்த பால் ஏதாவது வைத்திருத்தல் கூடாததுடன், இந்த துணைச் சட்டத்தில் விடயத்திற்காக தரம் குறைந்த பால் என்பதில் நீர் அல்லது வேறு பிற பொருள் அல்லது பொருட்கள் சேர்க்கப்பட்ட பால் அல்லது கொழுப்பு அல்லாத பால் கனமான பொருட்கள் நூற்றுக்கு 85 இற்கு குறைந்த அல்லது பால் கொழும்பு 35 இற்கு குறைந்த பசும்பால் அல்லது கொழும்பு அல்லாத பால் கண பொருள் நூற்றுக்கு 9 இற்கு அல்லது பால் கொழும்பு நூற்றுக்கு 7 இற்கு குறைந்த எருமைப் பால் எனக் கருதப்படும்.

26. (அ) ஏதேனும் சுகப்படுத்த முடியாத ஸ்பரிசம் அல்லது சரும நோயினால் பீடிக்கப்படும் அல்லது அண்மையில் அவ்வாறான நோயினால் பீடிக்கப்பட்டிருந்த எவராவதொரு நபர் அல்லது அவ்வாறான ஏதேனும் நோயினால் பீடிக்கப்பட்ட நபருக்கு அண்மையில் உபசரணை செய்வதில் ஈடுபட்டிருந்த எவராவதொரு நபர் அவ்வாறான நோய் விதை போசனைக் காலம் கடந்திருந்தால் தவிர ஏதேனுமொரு அனுமதிப்பத்திரம் பெற்ற இடத்தில் ஏதாவதொரு விதத்திலான விடயங்களில் அல்லது அவ்வாறான விடயங்களில் ஈடுபட்டுள்ள நபரை உதவியாளராகவோ ஈடுபடுதல் அல்லது ஈடுபடுத்துதல் அல்லது ஏதாவதொரு விடயத்தில் ஈடுபடுவதற்கு இடமளித்தல் செய்யக்கூடாது.

(ஆ) நன்றாகக் கருவி சுத்தம் செய்த ஆடை அணிந்திருந்தால் தவிர, எவராவதொரு நபரினால் அனுமதிப்பத்திரம் பெற்ற இடத்தில் ஏதாவதொரு விதத்தில் விடயங்களில் ஈடுபடுதல், ஈடுபடுவதற்கு இடமளித்தல் செய்யக் கூடாது.

(இ) அனுமதிப்பத்திரம் பெற்ற இடத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அனைத்து சேவையாளர்களையும் குறைந்தபட்சம் வருடத்திற்கு ஒரு முறையேனும் வைத்திய பரிசோதனைக்கு உள்ளாக்குதல் அனுமதிப்பத்திரம் பெற்றவரின் விடயமாக வேண்டும்.

27. அனுமதிப்பத்திரம் பெற்ற இடத்தில் உணவு அல்லது பான வகைகள் தயாரிப்பதில் ஈடுபட்டிருக்கும் அனைத்துச் சேவையாளர்களுக்கும் சீருடைகள் வழங்கப்பட்டிருத்தலும், அந்தச் சேவையாளர்கள் விடயங்களில் ஈடுபடும் தருணத்திலும் அந்தச் சீருடைகளை அணிந்திருக்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்துதல் அனுமதிப்பத்திரம் பெற்றவரின் விடயமாக வேண்டும்.

28. அனுமதிப்பத்திரம் பெற்ற இடத்தில் சேவையில் ஈடுபடும் அனைத்து சேவையாளர்களுக்காகவும் சுத்தமான நீர், சுத்தமான துவாய், நகங்களைச் சுத்தம் செய்வதற்கு இருக்கும் தூரிகை, சவர்க்காரம் அல்லது சவர்க்கார திரவம் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

29. இங்கு துணைச் சட்டங்களில் நியமங்களைப் பரிசோதனை செய்வதற்கு தவிசாளருக்கு அல்லது அதிகாரம்பெற்ற உத்தியோகத்தருக்கு பரிசோதனை செய்வதற்கு அதிகாரம் கிடைக்கும் உரிய காலம் என்பதற்கு இடத்திற்குள் வியாபார நடவடிக்கை செய்யும் ஏதாவதொரு தருணத்தைக் கருதலாம்.

30. தவிசாளர் அல்லது அதிகாரம்பெற்ற உத்தியோகத்தரினால் ஏதேனுமொரு அதிகாரம்பெற்ற இடத்தில் தயாரிக்கப்படும் அல்லது விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள ஏதேனும் உணவு மாதிரி, அதன் விலை கொடுத்து பெற்றுக்கொள்வதற்கு சட்ட ரீதியாக இருக்க வேண்டுமே தவிர எவராவதொரு அனுமதிப்பத்திரம் பெற்றவரினால் அந்த விலை கொடுத்துப் பெறுதலை நிராகரித்தல் அல்லது அதற்குத் தடை ஏற்படுத்துதல் செய்யக் கூடாது.

31. இந்த துணைச் சட்டத்தின்கீழ் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டிருக்கும் ஏதேனுமொரு ஹோட்டல் நடாத்திச் செல்லும் இடம் 6 ஆவது வாக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவதொரு நியமத்திற்கு அனுகூலமாக நடைபெறுதல் முடிவடைந்தால் அல்லது இந்த துணைச் சட்டங்களில் ஏதேனுமொரு துணைச் சட்டத்தில் நியமங்களுக்கு அனுகூல நிலையில் கொண்டு வருவதற்குத் தேவையான அனைத்து விடயங்களையும் நிறைவேற்றுவதாக அனுமதிப்பத்திரம் உரியவருக்கு நியமம் செய்யும் அறிவித்தல் தவிசாளரினால் அந்த அனுமதிப்பத்திரம் உடையவருக்கு ஒப்படைப்பதற்கு ஒழுங்குசெய்தல் வேண்டும்.

32. மேலே 31 ஆவது வாக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அறிவித்தல் கிடைத்த ஏதாவதொரு அனுமதிப்பத்திரம் உரியவரினால் அந்த அறிவித்தலில் நிச்சயமாகக் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் அந்த அறிவித்தலில் நியமம் செய்யப்பட்டுள்ள விதத்தில் செயற்பட வேண்டும். ஏற்றுக்கொள்ளக்கூடிய விதத்தில் விடயங்கள் எழுத்து மூலமாகச் சமர்ப்பித்துள்ள தருணத்தில் அந்த அறிவித்தலில் நிச்சயமாக குறிப்பிடப்பட்டுள்ள திகதியை நீடிப்பதற்குத் தவிசாளருக்கு அதிகாரம் இருக்க வேண்டும். அவ்வாறாயினும் அந்த விதத்தில் நீடிக்கப்படும் காலம் 14 நாட்களுக்கு அதிகமாகக் கூடாது.

33. மேலே 31 ஆவது வாக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் அறிவித்தல் கிடைத்த எவராவதொரு அனுமதிப்பத்திரம் பெற்றவரினால் அந்த அறிவித்தலில் நிச்சயமாக நியமம் செய்யப்பட்டுள்ள திகதி அல்லது நீடிக்கப்பட்ட திகதிக்கு முன்னர் அந்த அறிவித்தலில் நியமம் செய்துள்ள விதத்தில் செயற்படுதலை கவனியாது விட்டுள்ள இத்தருணத்தில் அந்த இடத்திற்கு விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தை தவிசாளரினால் இரத்துச்செய்தல் சட்டரீதியானதாக வேண்டும்.

34. இந்த துணைச் சட்டத்தின் வாக்கியங்களில் ஏதேனுமொரு வாக்கியத்தை அல்லது வாக்கியத்தில் காணப்படும் நியமங்களை அல்லது நடவடிக்கைகளை மீறுதல் அல்லது மீறும் செயற்பாடுகள் அல்லது ஏற்றுக்கொள்ளாதிருத்தல் குற்றமாக வேண்டும்.

35. மேலே 34 ஆவது வாக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனுமொரு குற்றம் சம்பந்தமாக உரிய அதிகாரமுள்ள நீதிமன்றத்தின் முன் அந்தக் குற்றத்திற்கு குற்றவாளியாக்கப்பட்ட பின்னர் அந்தக் குற்றத்திற்காக 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கமுடைய பிரதேச சபைகள் சட்டத்தில் 122 ஆவது வாக்கியத்தில் (2) ஆவது உப வாக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 750 ரூபாவுக்கு அதிகரிக்காத தண்டத்திற்கு உள்ளாக்கப்படுதல் வேண்டும்.

36. மேலே 34 ஆவது வாக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் குற்றத்திற்காக உரிய அதிகாரமுள்ள நீதிமன்றத்தினால் குற்றத்திற்குக் குற்றவாளியாக்கப்பட்ட பின்னர், 35 ஆவது வாக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் தண்டத்திற்கு உள்ளாக்கப்பட்ட அல்லது அந்த மீறுதல் சம்பந்தமாகக் கவனம் செலுத்தி தவிசாளாரினால் அல்லது அதிகாரமுள்ள வேறு உத்தியோகத்தினால் எழுத்து மூலமான அறிவித்தல் ஒப்படைத்த பின்னர் எவராவதொரு நபரினால் அந்த மீறுதலை அல்லது மீறும் செயலைத் தொடர்ந்தும் செய்யும் ஒவ்வொரு தினத்திற்கும் மேல்குறிப்பிட்ட 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கமுடைய பிரதேச சபைகள் சட்டத்தில் 122 ஆவது வாக்கியத்தில் (2) ஆவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மேலதிக தண்டத்திற்கு உள்ளாக வேண்டும்.

37. பதங்கள் சம்பந்தமாக வேறு அர்த்தங்கள் தேவையாயின் தவிர, இந்த துணைச் சட்டங்களில்,-

(i) "ஹோட்டல்" என்பது, விற்பனைக்காக சமைத்த உணவு மற்றும் குழம்பு தயாரிக்கும் அல்லது வைத்து காட்சிப்படுத்தும் இடம், உணவு வேளைக்காக சாப்பாட்டிற்கு உகந்த வேறு ஏதாவது தயாரிக்கப்பட்ட உணவு அல்லது ஏதேனும் சிற்றுண்டி வகை விற்பனைக்காகத் தயாரிக்கும் அல்லது வைத்திருக்கும் அல்லது காட்சிப்படுத்தும் இடம் அல்லது அந்த விடயங்களுடன் வாடிக்கையாளர்களுக்கு தங்குவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ள இடம் எனக் கருதப்படும்.

(ii) "அனுமதிப்பத்திரம் பெற்றவர்" என்பது, இந்த துணைச் சட்டத்தின்கீழ் அனுமதிப்பத்திரம் பெற்ற ஹோட்டலில் முகாமைத்துவ நடவடிக்கை செய்யும் நபர் எனக் கருதப்படுவார்.

(iii) "பொலிஸ் உத்தியோகத்தர்" என்பது, பொலிஸ் பரிசோதகர் பதவியின்கீழ் பதவி வகிக்கும் இலங்கைப் பொலிஸ் சேவையில் பொலிஸ் உத்தியோகத்தர் எனக் கருதப்படுவார்.

(iv) "குடும்ப அறை" என்பது, ஒரே முறையில் இரு நபர்கள் தங்குவதற்குப் போதுமான இடவசதி மற்றும் இருவருக்கான கட்டில் இரண்டு மற்றும் தனிக் கட்டில்கள் அல்லது இருவருக்கான கட்டில் ஒன்றுடன் தனிக்கட்டில் மூன்று அல்லது தனிக்கட்டில் 5 உடைய அறை.

(v) "தனிக் கட்டில்" என்பது, குறைந்தபட்சம் 200 செ. மீ. நீளம் 95 செ. மீ. அகலமான மெத்தையுடனான கட்டிலும்.

(vi) "தனி அறை" என்பது, ஒருவர் மாத்திரம் தங்குவதற்குப் போதுமான இடவசதியுடைய ஒரு கட்டில் உடைய அறை.

(vii) "மூவருக்கான அறை" என்பது, மூன்று நபர்கள் தங்குவதற்குப் போதுமான இட வசதியுடைய இருவருக்கான கட்டில் மற்றும் தனிக்கட்டில் உடைய அல்லது தனிக்கட்டில் மூன்று உடைய அறையும்.

(viii) சோடிக் கட்டில் என்பது, குறைந்தபட்சம் 200 செ. மீ. நீளம் 125 செ. மீ. அகலமான மெத்தையுடனான கட்டிலும்.

(ix) "சோடி அறை" என்பது, ஒரே முறையில் இருவர் தங்குவதற்குப் போதுமான இடவசதியுடன் இருவருக்கான கட்டில் அல்லது தனிக்கட்டில் இரண்டுடனான அறை எனக் கருதப்படும்.

## "அ" ஆவது அட்டவணை

3 ஆவது வாக்கியம்

ஹோட்டல் நடாத்துவதற்காக அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பப்பத்திரம்

1. விண்ணப்பதாரரின் பெயர் :----.
2. விண்ணப்பதாரரின் நிரந்தர முகவரி :----.
3. ஹோட்டலின் பெயர் :----.
4. சொத்து உரிமையாளரின் பெயர் மற்றும் முகவரி :----.
5. ஹோட்டல் நடாத்தும் இடத்தின் முகவரி :----.
6. வரிப்பண இலக்கம் :----.
   வீதி/பாதை :----.
7. விண்ணப்பதாரரின் தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.
8. ஹோட்டல் நடாத்தப்படும் இடத்திற்கான கிராம அலுவலர் பிரிவு :----.
9. ஹோட்டல் சுற்றுலா சபையில் பதிவுசெய்யப்பட்டிருந்தால் அதன் இலக்கம் :----.
10. ஹோட்டல் ஆரம்பித்த திகதி :----.
11. ஹோட்டல் முன்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்தால் ஹோட்டலில் கடந்த வருடத்தில் பெற்ற வருமானம் :----.
12. முகாமையாளரின்/பொறுப்பாளரின் பெயர் :----.
13. தொலைபேசி இலக்கம் :----.
14. அனுமதிப்பத்திரம் கோரப்படும் வருடம் :----.

15. ஹோட்டலில்-
   (i) தனி அறையின் எண்ணிக்கை :----.
   (ii) சோடி அறையின் எண்ணிக்கை :----.
   (iii) மூவருக்கான அறையின் எண்ணிக்கை :----.
   (iv) குடும்ப அறையின் எண்ணிக்கை :----.
   (v) ஒரே முறையில் தங்கக்கூடிய முழு எண்ணிக்கை :----.

16. ஹோட்டலில் சேவையில் ஈடுபட்டுள்ளவர்களின் எண்ணிக்கை (முகாமையாளர் சகிதம்) :----.

17. மலசலகூடம்-
   (i) ஆண்களுக்கான சேவையாளர் மலசலகூடங்களின் எண்ணிக்கை :----.
   (ii) ஆண்களுக்கான சேவையாளர் கழிவறை எண்ணிக்கை :----.
   (iii) வாடிக்கையாளர் ஆண்களுக்கான மலசலகூடங்களின் எண்ணிக்கை :----.
   (iv) வாடிக்கையாளர் ஆண்களுக்கான கழிவறை எண்ணிக்கை :----.
   (v) வாடிக்கையாளர் பெண்களுக்கான மலசலகூடங்களின் எண்ணிக்கை :----.

18. குளியல் அறை-
   (i) ஆண்களின் குளிக்கும் அறை :----.
   (ii) பெண்களின் குளிக்கும் அறை :----.

19. சமையலறை எண்ணிக்கை :----.

20. நீர்ப்பாசன பிரவேகம் :----.

21. கடின கழிவுப் பொருட்களை இறுதியாக வெளியேற்றும் முறை :----.

22. இரவு வெளிச்சம் வழங்குதல் தொடர்பான நடவடிக்கை :----.

மேற்குறித்த விபரங்கள் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் உறுதியளிக்கின்றேன். ஹோட்டலை முறைப்படுத்துதல், கண்காணித்தல், நிருவகித்தல் தொடர்பாக துணைச் சட்டங்களில் நியமங்களை ஏற்றுக்கொள்கின்றேன். அந்த துணைச் சட்டங்களின்கீழ் மேற்குறித்த ஹோட்டலை நடாத்திச் செல்வதற்காக ..................... ஆம் வருடத்திற்கு அனுமதிப்பத்திரம் பெற்றுத்தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

----,
உரிமையாளர்/முகாமையாளர்/
பொறுப்பாளரின் கையொப்பம்.

திகதி :----.

---

அலுவலக உபயோகத்திற்காக

சுகாதார வைத்திய அதிகாரி :

இந்த விண்ணப்பப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஹோட்டலை பரிசோதனை செய்து அறிக்கை அனுப்புமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

----,
சபைச் செயலாளர்.

திகதி :----.

கௌரவ தவிசாளர்,
பிரதேச சபை,

இந்த விண்ணப்பப்பத்திரத்தில் விபரம் குறிப்பிடப்பட்டுள்ள ஹோட்டலுக்காக அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொடுக்க சிபாரிசு செய்கின்றேன்./செய்யவில்லை.

----,
சுகாதார வைத்திய அதிகாரி.

திகதி :----.

---

கௌரவ தவிசாளர்,

இந்த விண்ணப்பப்பத்திரத்தில் விபரம் குறிப்பிடப்பட்டுள்ள ஹோட்டலுக்காக .................. ஆம் வருடத்திற்கு ................ ரூபா அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிட சிபாரிசு செய்கின்றேன்.

----,
வருமான பரிசோதகர்/வருமான நிருவாகி.

திகதி :----.

---

கௌரவ தவிசாளர்,

அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொடுக்க சிபாரிசு செய்கின்றேன்./செய்யவில்லை.

----,
சபைச் செயலாளர்.

திகதி :----.

---

அனுமதிப்பத்திரத்திரம் பெற்றுக்கொடுப்பதை அனுமதிக்கின்றேன்/அனுமதிக்கவில்லை.

----,
தவிசாளர்.

அறவிடப்படும் அனுமதிப்பத்திரக் கட்டணம் :----.
பற்றுச்சீட்டு இலக்கம் :----.
அனுமதிப்பத்திர இலக்கம் :----.
திகதி :----.

19 ஆவது பிரிவு

**இறைச்சி விற்பனை**

பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்திற்குள் இறைச்சி விற்பதற்காக பாவிக்கும் இடம் பரிசோதனை செய்தல், முறைப்படுத்துதல், நிருவகித்தல் மற்றும் அந்த இடங்களுக்கு அனுமதிப்பத்திரம் விநியோகித்தல் தொடர்பான துணைச் சட்டமாகும்.

2. எவராவதொரு நபரினால் சபையினால் அறிவிக்கப்பட்டுள்ள (பொதுச் சந்தை அல்லாத) ஏதாவதொரு இடத்தில் தவிசாளரினால் விநியோகிக்கப்படும் செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரம் இல்லாது இறைச்சி விற்பனை செய்யும் விடயத்திற்கு ஏதேனுமொரு இடத்தைப் பாவிக்கக் கூடாது.

3. அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டுகோள் விடுக்கும் வியாபார ஸ்தாபனம் இங்கு கீழ்க் காணும் விதிமுறைகளுக்கு அனுகூலமானால் தவிர, தவிசாளரினால் அல்லது அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தரினால் எந்தவொரு நபருக்கும் இறைச்சி விற்பனை ஸ்தாபனம் நடாத்துவதற்கு அனுமதிப்பத்திரம் விநியோகிக்கக் கூடாது.

(i) கட்டிடம் தவிசாளரினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள திட்டத்திற்கு அனுகூலமான முறையில் செய்தல் வேண்டும்.

(ii) விற்பனைக்கான இறைச்சி காட்சிப்படுத்தும் பகுதி பீங்கான் செங்கல் அல்லது சாந்து பூசப்பட்ட சீமெந்து அல்லது துரு படியாத உலோக தகட்டினால் அமைந்திருக்க வேண்டும்.

(iii) இறைச்சி விற்பனைக்காக காட்சிப்படுத்தும் இடத்தில் தரை மற்றும் களஞ்சியப்படுத்தும் இடத்தில் தரை சீமெந்தினால் தீட்டப்பட்டு அல்லது பீங்கான் செங்கல் பிடிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(iv) கழிவுநீர் வழிந்தோடுவதற்காக பல்லமாக சீமெந்தினால் தீட்டப்பட்ட அல்லது பீங்கான் செங்கல் பிடிக்கப்பட்ட வடிகால் இருக்க வேண்டும்.

(v) மேலே iv வது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வடிகாண்களில் வழிந்தோடும் கழிவு நீர் ஏதேனுமொரு பொது வழிக்கு செல்வதை தவிர்ப்பதற்கு போதுமான நடவடிக்கை ஒழுங்கு செய்திருக்க வேண்டியதுடன், அவ்வாறான கழிவு நீர் உரிஞ்சக்கூடிய குழிக்கு செல்வதற்கு வழி செய்திருக்க வேண்டும்.

(vi) கழிவு நீர் வழிந்தோட ஒழுங்கு செய்துள்ள உரிஞ்சும் காற்றுக்கு (சுற்றாடலுக்கு) திறந்து வைக்கக் கூடாது.

(vii) இறைச்சி வியாபார ஸ்தாபனத்தில் வெளியேற்றப்படும் .......... கழிவுப் பொருட்களை வெளியேற்றுவதற்குப் போதுமான பாத்திரங்கள் வைத்திருக்க வேண்டியதுடன், நாளாந்த வியாபார நடவடிக்கைகளின் பின்னர் அவ்வாறான கழிவுப் பொருட்களை பூமி மட்டத்திலிருந்து 1.5 மீட்டர் ஆழமாக புதைத்தல் அல்லது சபையினால் முன்னதாக தீர்மானித்து நியமம் செய்யப்பட்டுள்ள நியமங்களுக்கு அனுகூலமாக வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(viii) வியாபார ஸ்தாபனத்தில் சேவை செய்யும் நபர்களின் பிரயோசனத்திற்காக போதுமான மலசலகூட வசதி வழங்கப்பட்டிருக்க வேண்டியதுடன், மலசலகூடம் பாவித்த பின்னர் பாவனைக்கு உகந்த சுகாதார பாதுகாப்பு முறை மற்றும் பொருட்கள் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

4. மாடு கொல்லும் கட்டளைச் சட்டத்தின் நியமங்களின் கீழ் முறையான அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள மாடுகொல்லும் இடத்தில் கொல்லப்படும் ஏதேனுமொரு மிருகத்தின் இறைச்சியானால் தவிர, ஏதாவது இறைச்சி வியாபார ஸ்தாபனத்தில் விற்பனை செய்வதற்காக காட்சிப்படுத்துதல் எந்த நபரினாலும் செய்யக் கூடாது.

5. ஈ அல்லது கிருமிகள் அல்லது வேறு ஏதாவது மிருகத்திற்கு நுழைய முடியாத விதத்தில் நன்றாக மூடி வைக்கக்கூடிய வாகனத்தில் அல்லது பெட்டியில் அல்லது வேறு பாத்திரத்தில் மூடப்பட்டு போக்குவரத்து செய்வதாயின் தவிர, எவராவதொரு நபரினால் ஏதேனும் இறைச்சி போக்குவரத்து செய்யக்கூடாததுடன், அவ்வாறான இறைச்சி போக்குவரத்து செய்த பின்னர் அந்த இறைச்சி போக்குவரத்து செய்வதற்காக பயன்படுத்திய வாகனம் அல்லது பெட்டி அல்லது வேறு பாத்திரங்களை கிருமிநாசினியிட்டு நன்றாக கழுவ வேண்டும்.

6. அனுமதிப்பத்திரம் பெற்ற ஏதாவதொரு இறைச்சி வியாபார ஸ்தாபனத்தில் நாளாந்த நடவடிக்கைகள் முடிவில் அந்த இடத்தின் தரை, சுவர்களில் பீங்கான் செங்கல் பிடிக்கப்பட்ட அல்லது சீமெந்து சாந்து பூசப்பட்ட பகுதிகளையும் இறைச்சி வெட்டுவதற்காக பயன்படுத்தும் பகுதியையும், உபகரணங்களையும், இறைச்சி விற்பனைக்காக காட்சிப்படுத்தும் இடத்தையும் கிருமிநாசினி திரவம் இட்டு சுத்தம் செய்வதற்கு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

7. அனுமதிப்பத்திரம் பெற்ற ஏதேனுமொரு இறைச்சி விற்பனை ஸ்தாபனத்தில் அங்குள்ள வடிகாண்கள், இறைச்சி களஞ்சியப்படுத்துதல், தயார்செய்தல் அல்லது விற்பனை செய்தல் சம்பந்தமாக பாவிக்கும் அனைத்து பாத்திரங்கள், உபகரணங்கள், உரிய பழுதுபார்த்தலின் துர்நாற்றம் இல்லாது வைத்திருக்க ஒழுங்கு செய்தல் வேண்டும்.

8. அனுமதிப்பத்திரம் பெற்ற இடத்தில் நாளாந்தம் வியாபார நடவடிக்கை முடிவடைந்ததன் பின்னர் விற்க முடியாது மீதியான இறைச்சி அதி குளிரூட்டியில் களஞ்சியப்படுத்தியிருந்தால், அவ்வாறு களஞ்சியப்படுத்திய தருணம் முதல் மறு தினம் இறைச்சி விற்பனை ஸ்தாபனம் திறக்கப்படும் தருணம் வரை அந்த அதி குளிரூட்டி உரிய முறையில் செயற்பட்டிருந்தால் தவிர, மீதியாகும் ஏதேனும் இறைச்சி

மறு தினம் விற்பனைக்காக காட்சிப்படுத்துதல் அதி குளிரூட்டியில் அல்லது அனுமதிப்பத்திரம் பெற்ற இடத்தில் வைத்துக் கொள்ளல் கூடாது.

9. ஏதேனுமொரு மாடு கொல்லும் இடத்திற்குள் ஏதேனுமொரு தினத்தில் இறைச்சிக்காக மிருகங்கள் கொல்லுதலுக்கு தடை விதித்து மாடு கொல்லும் கட்டளைச் சட்டத்தில் 17 வது வாக்கியத்தின் அதிகாரத்தின் பிரகாரம் உரிய அதிகாரத்தினால் நியமங்கள் வர்த்தமானிப் பத்திரத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள தருணத்தில் ஏதாவதொரு இறைச்சிக் கடையில் விற்பனைக்காக இறைச்சி வைத்திருத்தல் அல்லது விற்பனைக்காக இறைச்சி காட்சிப்படுத்துதல் அல்லது களஞ்சியப்படுத்துதல் செய்யக் கூடாது.

10. அனுமதிப்பத்திரம் பெற்ற ஏதாவதொரு இறைச்சி வியாபார ஸ்தாபனத்தில் நாய்கள், பூனைகள், எலிகள், கிருமிகள் அல்லது வேறு ஏதாவது மிருகம் இல்லாது இருக்க வேண்டும்.

11. அனுமதிப்பத்திரம் பெற்ற இடத்தில் இறைச்சி போட்டு வைப்பதற்காக அல்லது செய்வதற்கு அல்லது விற்பனைக்கு பாவிக்கும் உபகரணங்கள் அல்லது பாத்திரங்கள் தவிர வேறு ஏதேனும் பாத்திரம் அல்லது உடை அல்லது உறங்கும் பாய் வேறு ஏதாவதொரு பொருள் வைத்திருக்க கூடாது.

12. அனுமதிப்பத்திரம் பெற்ற இடத்தில் சேவை செய்யும் நபர்களின் பாவனைக்கு எடுப்பதற்காக குடிப்பதற்கு உகந்த நீர் போதுமானளவு வைத்திருக்க வேண்டும்.

13. (அ) ஏதேனும் அசாத்திய ஸ்பரிச அல்லது சரும நோயினால் பீடிக்கப்படும் அல்லது அண்மையில் அவ்வாறான நோயினால் பீடிக்கப்பட்டிருந்த எவராவதொரு நபர் அல்லது அவ்வாறான ஏதேனும் நோயினால் பீடிக்கப்பட்ட நபருக்கு அண்மையில் உபசரணை செய்வதில் ஈடுபட்டிருந்த எவராவதொரு நபர் அவ்வாறான நோய் விதை போசனை காலம் கடந்திருந்தால் தவிர, ஏதாவதொரு இறைச்சி விற்பனைத ஸ்தாபனத்தில் ஏதாவதொரு விதத்தில் வியாபாரத்தில் அல்லது அவ்வாறு வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள நபருக்கு உதவியாளராக ஈடுபடுதல், அல்லது ஏதேனும் விடயங்களில் ஈடுபடுவதற்கு இடமளிக்கக் கூடாது.

(ஆ) நன்றாகக் கழுவி சுத்தம் செய்த ஆடை அணிந்திருந்தால் தவிர, எவராவதொரு நபரினால் இறைச்சி விற்பனை ஸ்தாபனத்தில் ஏதாவதொரு விடயத்தில் ஈடுபடுதல் அல்லது ஈடுபடுவதற்கு இடமளித்தல் கூடாது.

(இ) இறைச்சி விற்பனை ஸ்தாபனத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அனைத்து சேவையாளர்களும் குறைந்தபட்சம் வருடத்திற்கு ஒரு முறை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்துவது அனுமதிப்பத்திரம் பெற்றவரின் விடயமாக வேண்டும்.

14. இறைச்சி விற்பனை ஸ்தாபனத்தில் சேவையில் ஈடுபடும் அனைத்து சேவையாளர்களுக்கும் வேறாக வாய் கவசம், கையுறை மற்றும் தேவைப்படும் பாதுகாப்பு உடை வழங்குவதும், அவ்வாறான சேவையாளர்கள் இறைச்சி விற்பனை ஸ்தாபனத்தில் சேவையில் ஈடுபடும் அனைத்து தருணத்திலும் அந்த பாதுகாப்பு உடை அணிந்திருப்பதாக உறுதியளித்தல் அனுமதிப்பத்திரம் பெற்றவரின் விடயமாக வேண்டும்.

15. தவிசாளர் அல்லது அதிகாரம்பெற்ற உத்தியோகத்தரினால் ஏதேனும் இறைச்சி விற்பனை ஸ்தாபனத்தில் விற்பனைக்காக காட்சிப்படுத்தப்பட்டுள்ள அல்லது உள்ளக களஞ்சிய அறை இருக்கும் ஏதேனும் இறைச்சி வகையில் மாதிரியை விலை கொடுத்து பெற்றுக் கொள்ளல் சட்டபூர்வமாவதுடன், எவராவதொரு அனுமதிப்பத்திரம் பெற்றவரினால் அவ்வாறான விலைக்கு பெறுவதை நிராகரித்தல் அல்லது அதற்கு தடை ஏற்படுத்துதல் செய்யக் கூடாது.

16. (அ) அனுமதிப்பத்திரம் பெற்ற இடத்திற்குள் உற்பத்தியாகும் அனைத்துக் கழிவுப் பொருட்களும் மீண்டும் பாவனைக்கு எடுப்பதாயின் தவிர, அந்த கழிவுப் பொருட்களை -

(i) மலக் கழிவுப் பொருட்கள் ;
(ii) கண்ணாடி ;
(iii) கடுதாசி அல்லது கடுதாசியிலான பொருட்கள் ;
(iv) பொலிதீன் அல்லது பிளாஸ்டிக் அல்லது பொலிதீன் மற்றும் பிளாஸ்டிக் பொருட்கள் ;
(v) இரும்பு மற்றும் வேறு உலோகப் பொருட்கள் அல்லது இரும்பு மற்றும் வேறு உலோகப் பகுதிகள் ;
(vi) உற்பத்திக்காகப் பயன்படுத்தும் மூலப் பொருட்களில் உற்பத்திப் பொருட்கள் மற்றும் பாகங்கள் ;
(vii) ஆபத்தான கழிவுப் பொருட்கள்.

என்ற வகைகளின் கீழ் வகைப்படுத்த ஒழுங்கு செய்தல் வேண்டியதுடன், அந்த ஒவ்வொரு வகையின் கழிவு பொருட்களை வெளியேற்றுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ள வேறு வேறான பாத்திரங்களுக்குள் அல்லது தாங்கிகளில் போடுவதற்கு ஒழுங்கு செய்தல் அனுமதிப்பத்திரம் பெற்றவரின் விடயமாக வேண்டும்.

(ஆ) மேலே (அ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வகைப்படுத்தி பாத்திரங்களில் அல்லது தாங்கிகளில் போடப்பட்டுள்ள கழிவுபொருட்களை பிரதேச சபையின் கழிவுப் பொருட்கள் முகாமைத்துவ வேலைத் திட்டத்தின் கீழ் வெளியேற்றுவதாயின் தவிர, பிரதேச சபையின் தவிசாளரினால் நியமம் செய்யும் விதத்தில் இறுதி வெளியேற்றத்தை செய்தல் வேண்டும்.

17. இந்த துணைச் சட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டிருக்கும் ஏதேனுமொரு இறைச்சி விற்பனை செய்யும் ஸ்தாபனத்தில் நடாத்திச் செல்லும் இடம்3 வது வாக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவதொரு நியமத்திற்கு அனுகூலமாக நடைபெறுதல் முடிவடைந்தால் அல்லது இந்த துணைச் சட்டங்களில் ஏதேனுமொரு துணைச் சட்டத்தில் நியமங்களுக்கு முரணாகும் தருணத்தில், நிச்சயமாக குறிப்பிடப்படும் திகதிக்கு முன்னர் அந்த இடத்தை அந்த நியமங்களுக்கு அனுகூல நிலையில் கொண்டு வருவதற்கு தேவையான அனைத்து விடயங்களையும் நிறைவேற்றுவதாக அனுமதிப்பத்திரம் உரியவருக்கு நியமம் செய்யும் அறிவித்தல் தவிசாளரினால் அந்த அனுமதிப்பத்திரம் உடையவருக்கு ஒப்படைப்பதற்கு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

18. மேலே 17 ஆவது வாக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அறிவித்தல் கிடைத்த ஏதாவதொரு அனுமதிப்பத்திரம் உரியவரினால் அந்த அறிவித்தலில் நிச்சயமாக குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் அந்த அறிவித்தலில் நியமம் செய்யப்பட்டுள்ள விதத்தில் செயற்பட வேண்டும். ஏற்றுக்கொள்ளக் கூடிய விதத்தில் விடயங்கள் எழுத்து மூலமாக சமர்ப்பித்துள்ள தருணத்தில் அந்த அறிவித்தலில் நிச்சியமாக குறிப்பிடப்பட்டுள்ள திகதியை நீடிப்பதற்கு தவிசாளருக்கு அதிகாரம் இருக்க வேண்டும். அவ்வாறாயினும் அந்த விதத்தில் நீடிக்கப்படும் காலம் 14 நாட்களுக்கு அதிகமாகக் கூடாது.

19. மேலே 18 ஆவது வாக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் அறிவித்தல் கிடைத்த எவராவதொரு அனுமதிப்பத்திரம் பெற்றவரினால் அந்த அறிவித்தலில் நிச்சயமாக நியமம் செய்யப்பட்டுள்ள திகதி அல்லது நீடிக்கப்பட்ட திகதிக்கு முன்னர் அந்த அறிவித்தலில் நியமம் செய்துள்ள விதத்தில் செயற்படுதலைக் கவனியாது விட்டுள்ள தருணத்தில் அந்த இடத்திற்கு விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தைப் பிரதேச சபையின் தவிசாளரினால் இரத்துச்செய்தல் சட்ட ரீதியானதாக வேண்டும்.

20. இந்த துணைச் சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனுமொரு நடவடிக்கையை மீறுதல் குற்றமாவதுடன், அந்த நபருக்கு உரிய அதிகாரமுள்ள நீதிமன்றத்தின் முன் அந்தக் குற்றத்திற்குக் குற்றவாளியாக்கப்பட்டால், 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கமுடைய பிரதேச சபைகள் சட்டத்தின் 122(2) ஆம் வாக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லைக்கு அனுகூலமான தண்டத்திற்கு உள்ளாக நேரிடும்.

21. பதம் சம்பந்தமாக வேறு அர்த்தம் தேவையாயின் தவிர, இந்தப் பகுதியின் துணைச் சட்டங்களில் இறைச்சி என்பதில் மாட்டிறைச்சி, பன்றி இறைச்சி, ஆட்டிறைச்சி எனும் இறைச்சி வகைகள் கருதப்படும்.

20 ஆவது பிரிவு

**மீன் விற்பனை தொடர்பான துணைச்சட்டம்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கமுடைய பிரதேச சபைகள் சட்டத்தில் 122 ஆவது வாக்கியத்துடன் கூறப்படவேண்டிய அந்தச் சட்டத்தில் 126 ஆவது வாக்கியத்தில் (ix) ஆவது உப வாக்கியத்தில் (ஏ) பந்தியில் கிடைத்துள்ள அதிகாரத்தின் பிரகாரம் பிரதேச சபையினால் மீன் விற்பனை சம்பந்தமாக இந்தத் துணைச்சட்டம் தயாரிக்கப்படுகின்றது.

2. இந்தத் துணைச்சட்டத்தைப் பிரதேச சபைஅதிகாரப் பிரதேசத்திற்குள் மீன் விற்பனை தொடர்பான துணைச் சட்டமாகக் கருதப்படும்.

3. பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்திற்குள் மீன் விற்பனை செய்யுமிடம் பரிசோதனை செய்தல், முறைப்படுத்துதல், நிருவகித்தல் மற்றும் அதற்காக அனுமதிப்பத்திரம் விநியோகித்தல் போன்றவற்றுக்காக இந்தத் துணைச் சட்டம் தயாரிக்கப்படுகின்றது.

4. எவராவதொரு நபரினால் பொதுச்சந்தை அல்லாத வேறு ஏதாவதொரு இடத்தில் தவிசாளரினால் வருடாந்தம் விநியோகிக்கும் செல்லுடியாகும் அனுமதிப்பத்திரம் இல்லாது மீன் விற்பனைக்காக இடமொன்றைப் பாவிக்கக் கூடாது.

5. 4 ஆவது வாக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்காகப் பிரதேச சபையினால் நியமம் செய்யப்பட்டுள்ள வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டணம் செலுத்த வேண்டியதுடன், அவ்வாறான கட்டணம் அனைத்து வருடத்திற்காகவும் அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையின் மூலம் தவிசாளரினால் பிரசுரிக்கப்பட்டிருக்க வேண்டும்.

6. அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கு வேண்டுகோள் விடுக்கும் வியாபார ஸ்தாபனம் இங்கு கீழ்க்காணும் விதிமுறைகளுக்கு அனுகூலமானால் தவிர, தவிசாளரினால் எவராவதொரு நபருக்கு மீன் விற்பனை செய்யுமிடம் நடாத்துவதற்கு அனுமதிப்பத்திரம் விநியோகிக்கக் கூடாது :

(அ) மீன் விற்கப்படும் இடம் பிரதேச சபையின் தவிசாளரினால் அனுமதிக்கப்பட்ட திட்டத்திற்கு அமைய செய்தல் வேண்டும் ;

(ஆ) விற்பனைக்காக மீன் காட்சிப்படுத்தும் பகுதியைப் பீங்கான் செங்கல் பிடிக்கப்பட்டு அல்லது சாந்து பூசப்பட்டு சீமெந்து அல்லது துருப்பிடியாத உலோகத் தகடு இட்டிருக்க வேண்டும் ;

(இ) மீன் விற்பனைக்காக காட்சிப்படுத்தும் இடத்தின் தரை மற்றும் களஞ்சியப்படுத்தும் இடத்தின் தரை சீமெந்து தீட்டி அல்லது பீங்கான் செங்கல் பிடித்திருக்க வேண்டும் ;

(ஈ) கழிவுநீர் வழிந்தோடுவதற்காக தேவையான பள்ளத்துடனான சீமெந்து தீட்டி அல்லது பீங்கான் செங்கல் பிடித்த வடிகாண் இருக்க வேண்டும் ;

(உ) (ஈ) இல் குறிப்பிடப்பட்டுள்ள வடிகாணினூடாக வழிந்தோடும் கழிவு நீர் ஏதேனுமொரு பொது நீர்ப்பாதைக்குச் செல்லாது தவிர்ப்பதற்குப் போதுமான நடவடிக்கை ஒழுங்கு செய்திருக்க வேண்டியதுடன், அவ்வாறான கழிவுநீர் உறிஞ்சக்கூடிய குழிக்கு வழிந்தோடுவதற்கு வழி செய்திருக்க வேண்டும் ;

(ஊ) கழிவுநீர் வழிந்தோடுவதற்குச் செய்யும் உறிஞ்சும் குழி காற்றுக்கு திறந்திருக்கக் கூடாது ;

(எ) மீன் விற்கும் இடத்தில் வெளியேற்றப்படும் கழிவுப்பொருட்களைப் போடுவதற்குப் போதுமான பாத்திரங்கள் வைத்திருக்க வேண்டியதுடன், நாளாந்த வியாபார நடவடிக்கைகளின் முடிவில் அவ்வாறான கழிவுப்பொருட்களைப் பூமி மட்டத்திலிருந்து குறைந்தபட்சம் 1.5 மீற்றர் ஆழமான புதைத்தல் அல்லது பிரதேச சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானித்து நியமம் செய்யப்படும் நியமங்களுக்கு அனுகூலமாக பிரதேச சபையின் குப்பை சேகரிக்கும் வாகனத்திற்கு ஒப்படைக்க வேண்டும் ;

(ஏ) மீன் விற்கும் இடத்தில் சேவை செய்யும் நபர்களின் உபயோகத்திற்காகப் போதுமான நீர் இருக்கும் மலசலகூட வசதி வழங்கப்பட்டிருக்க வேண்டியதுடன், மலசலகூடம் பாவித்த பின்னர் பாவிப்பதற்கு உகந்த சுகாதாரப் பாதுகாப்பு முறை மற்றும் பொருட்கள் வழங்கப்பட்டிருக்க வேண்டும் ;

(ஐ) மீன் விற்கப்படும் அனைத்துத் தருணத்திலும் அதை விலைக்குப் பெறுபவருக்குப் பெற்றுக்கொடுக்கையில் உகந்த மறைப்பில் சுற்றி அல்லது பைக்குள் இட்டு விநியோகிக்க வேண்டும்.

7. ஈக்கள், பூச்சிகள் அல்லது வேறு ஏதாவதொரு மிருகத்திற்கு நுழைய முடியாத விதத்திலான நன்கு மூடிவைக்கக்கூடிய வாகனத்தில் அல்லது பெட்டியில் அல்லது வேறு பாத்திரத்தில் இட்டு மூடப்பட்டு போக்குவரத்துச் செய்வதாயின் தவிர, எவராவதொரு நபரினால் ஏதாவதொரு மீன் வகையைப் போக்குவரத்துச் செய்யக்கூடாததுடன், அவ்வாறான மீன் போக்குவரத்துச் செய்த பின்னர் அந்த மீன் போக்குவரத்துச் செய்வதற்காகப் பாவிக்கப்பட்ட வாகனம் அல்லது பெட்டி அல்லது வேறு பாத்திரம் கிருமிநாசினி இட்டு நன்றாகக் குழுவுதுல் வேண்டும்.

8. அனுமதிப்பத்திரம்பெற்ற ஏதாவதொரு மீன் விற்கும் இடத்தில் மற்றும் அதன் அருகில் உள்ள வடிகாண்கள், மீன் களஞ்சியப்படுத்துதல், தயார் செய்தல், விற்பனை செய்தல் சம்பந்தமாகப் பாவிக்கும் அனைத்துப் பாத்திரங்களும், உபகரணங்களும் உரிய பழுதுபார்த்தலுடன் துர்நாற்றம் இல்லாது வைத்திருக்க ஒழுங்குசெய்தல் வேண்டும்.

9. அனுமதிப்பத்திரம்பெற்ற இடத்தில் நாளாந்தம் வியாபார நடவடிக்கை முடிவடைந்ததன் பின்னர் விற்க முடியாது மீதியான மீன் அதிகுளிரூட்டியில் களஞ்சியப்படுத்தியிருந்தால், அவ்வாறு களஞ்சியப்படுத்திய தருணம் முதல் மறுதினம் இறைச்சி விற்பனை ஸ்தாபனம் திறக்கப்படும் தருணம் வரை அந்த அதிகுளிரூட்டி உரிய முறையில் செயற்பட்டிருந்தால் தவிர, மீதியாகும் ஏதேனும் மீன் வகையை மறுதினம் விற்பனைக்காகக் காட்சிப்படுத்துதல் அதிகுளிரூட்டியில் அல்லது அனுமதிப்பத்திரம் பெற்ற இடத்தில் வைத்துக்கொள்ளல் கூடாது.

*10. அனுமதிப்பத்திரம் பெற்ற இடத்தில் மீன் போட்டு வைப்பதற்காக அல்லது ஒழுங்கு செய்வதற்கு அல்லது விற்பனைக்கு பாவிக்கும் உபகரணங்கள் அல்லது பாத்திரங்கள் தவிர வேறு ஏதேனும் பாத்திரம் அல்லது உடை அல்லது உறங்கும் பாய் வேறு ஏதாவதொரு பொருள் வைத்திருக்கக் கூடாது.*

*11. அனுமதிப்பத்திரம் பெற்ற ஏதாவதொரு மீன் விற்கும் இடத்தில் நாய்கள், பூனைகள், எலிகள் அல்லது பூச்சிகள் இல்லாது இருக்க வேண்டும்.*

*12. (அ) ஏதேனும் அசாத்திய ஸ்பரிச அல்லது சரும நோயினால் பீடிக்கப்படும் அல்லது அண்மையில் அவ்வாறான நோயினால் பீடிக்கப்பட்டிருந்த எவராவதொரு நபர் அல்லது அவ்வாறான ஏதேனும் நோயினால் பீடிக்கப்பட்ட நபருக்கு அண்மையில் உபசரனை செய்வதில் ஈடுபட்டிருந்த எவராதொரு நபர் அவ்வாறான நோய், விதை போசணைக் காலம் கடந்திருந்தால் தவிர, ஏதாவதொரு மீன் விற்பனை ஸ்தானத்தில் ஏதாவதொரு விதத்தில் வியாபாரத்தில் அல்லது அவ்வாறு வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள நபருக்கு உதவியாளராக ஈடுபடுதல் அல்லது ஏதேனும் விடயங்களில் ஈடுபடுவதற்கு இடமளிக்கக் கூடாது ;*

*(ஆ) நன்றாகக் கழுவி சுத்தம் செய்த ஆடை அணிந்திருந்தால் தவிர, எவராவதொரு நபரினால் மீன் விற்பனை ஸ்தாபனத்தில் ஏதாவதொரு விடயத்தில் ஈடுபடுதல் அல்லது ஈடுபடுவதற்கு இடமளித்தல் கூடாது ;*

*(இ) மீன் விற்பனை ஸ்தாபனத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அனைத்துச் சேவையாளர்கள் குறைந்தபட்சம் வருடத்திற்கு ஒரு முறை வைத்தியப் பரிசோதனைக்கு உட்படுத்துவது அனுமதிப்பத்திரம் பெற்றவரின் விடயமாக வேண்டும்.*

*13. மீன் விற்பனை ஸ்தாபனத்தில் சேவையில் ஈடுபடும் அனைத்துச் சேவையாளர்களுக்கும் வேறாக வாய்க்கவசம், கையுறை மற்றும் தேவைப்படும் பாதுகாப்பு உடை வழங்குவதும், அவ்வாறான சேவையாளர்கள் மீன் விற்பனை ஸ்தாபனத்தில் சேவையில் ஈடுபடும் அனைத்துத் தருணத்திலும் அந்தப் பாதுகாப்பு உடை அணிந்திருப்பதாக உறுதியளிப்பதும் அனுமதிப்பத்திரம் பெற்றவரின் விடயமாக வேண்டும்.*

*14. அனுமதிப்பத்திரம் பெற்ற இடத்தில் சேவையில் ஈடுபட்டிருக்கும் அனைத்து நபர்களும் பிரயோசனத்திற்குப் பெறுவதற்காகச் சவர்க்காரம் அல்லது சவர்க்கார நீர் வைத்திருத்தல் அனுமதிபெற்றவரின் விடயமாக வேண்டும்.*

*15. இந்தத் துணைச் சட்டங்களில் நியமங்களைப் பரிசோதனை செய்வதற்காக தவிசாளர் அல்லது உத்தரவுபெற்ற உத்தியோகத்தருக்கு பரிசோதனை செய்வதற்கு அனுமதி கிடைக்கும் உரிய காலம் என்பதற்கு மீன் வியாபாரம் செய்யுமிடத்தில் மீன் விற்பனை செய்யும் எந்த ஒரு தருணத்தையும் கருதலாம்.*

*16. (அ) அனுமதிப்பத்திரம் பெற்ற இடத்திற்குள் உற்பத்தியாகும் அனைத்துக் கழிவுப் பொருட்கள் மீண்டும் பாவனைக்கு எடுப்பதாயின் தவிர அந்தப் பொருட்கள் :*

*(1) உக்கிப்போகும் கழிவுப் பொருட்கள் ;*
*(2) கண்ணாடி ;*
*(3) கடதாசி அல்லது கடதாசிப் பொருட்கள் ;*
*(4) பொலித்தீன் அல்லது பிளாஸ்டிக் அல்லது பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பொருட்கள் ;*
*(5) இரும்பு மற்றும் வேறு தகட்டுப் பொருட்கள் அல்லது இரும்பு மற்றும் வேறு தகட்டுப் பிரிவுகள் ;*
*(6) உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படும் வேறு மூலப்பொருட்களினால் மீதியாகும் பிரிவுகள் அல்லது உற்பத்தியின்போது துணைத் தயாரிப்புப் பொருட்கள் அல்லது பிரிவுகள் ;*
*(7) வேறுபட்ட கழிவுப் பொருட்கள்–*

*என்ற வகைகளின்கீழ் வகைப்படுத்த வேண்டியதுடன், அந்த ஒவ்வொரு விதத்திலான கழிவுப் பொருட்களைப் போடுவதற்குத் தயாரிக்கப்பட்டுள்ள வேறுபட்ட பாத்திரங்களுக்கு, தாங்கிகளுக்குப் போடுவதற்கு ஒழுங்குபடுத்துதல் அனுமதிப்பத்திரம் பெற்றவரின் விடயமாக வேண்டும் :*

*(ஆ) மேல் (அ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வகைப்படுத்திப் பாத்திரங்களில் அல்லது தாங்கிகளில் இட்டுள்ள கழிவுப் பொருட்கள் பிரதேச சபையின் கழிவுப் பொருட்கள் முகாமைத்துவ வேலைத்திட்டத்தின்கீழ் போடுவதாயின் தவிர தவிசாளரினால் நியமம் செய்யும் விதத்தில் இறுதியாக வெளியேற்றுதல்.*

*17. அனுமதிப்பத்திரம் பெற்றவரினால் நாளாந்தம் குறைந்தபட்சம் மீன் வகைகள் இரண்டாவது விற்பனைக்காக வைத்திருக்க வேண்டியதுடன், பொது மக்களின் பார்வைக்கு விலை காட்சிப்படுத்தப்பட வேண்டும்.*

*18. தவிசாளர் அல்லது அதிகாரமுள்ள உத்தியோகத்தரினால் ஏதேனும் மீன் வியாபாரம் செய்யுமிடத்தில் விற்பனைக்காக வைத்திருக்கும் அல்லது விற்பனைக்காகக் காட்சிப்படுத்தியுள்ள அல்லது உள்ளே களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள ஏதேனும் மீன் வகையில் மாதிரியொன்றை அதன் விலையைக் கொடுத்துப் பெற்றுக்கொள்ளல் சட்டபூர்வமானதாக இருக்க வேண்டுமே தவிர எந்தவொரு அனுமதிப்பத்திரம் பெற்றவரினாலும் நிராகரித்தல் அல்லது அதற்கு இடையூறு ஏற்படுத்துதல் கூடாது.*

*19. இந்தத் துணைச் சட்டத்தின்கீழ் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டுள்ள ஏதேனும் மீன் விற்பனை செய்யும் இடத்தை 3 ஆவது துணைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் நியமங்களுக்கு முரணான தருணத்தில் நிச்சயமாகக் குறிப்பிடப்படும் திகதிக்கு முன்னர் அந்த இடம், அந்த நியமங்களுக்கு அனுகூலமான நிலைக்குக் கொண்டுவருவதற்குத் தேவையான அனைத்து விடயங்களையும் நிறைவேற்றுமாறு அனுமதிப்பத்திரம் பெற்றவருக்கு தெரிவிக்கும் அறிவித்தலொன்றைத் தவிசாளரினால் குறித்த அனுமதிப்பத்திரம் பெற்றவருக்கு ஒப்படைக்க ஒழுங்குசெய்ய வேண்டும்.*

*20. மீன் விற்பனைக்கு உரிய இந்தத் துணைச் சட்டத்தில் ஏதேனும் துணைச் சட்டங்களின் அனைத்து மீறல்களுக்கும் 750 ரூபாவுக்குக் குறையாத தண்டத்திலும், தொடர்ந்து செய்யப்படும் அவ்வாறான குற்றம் சம்பந்தமாகக் குற்றவாளியாக்கப்பட்டதன் பின்னர் அல்லது அந்த மீறுதலைச் செய்தது தொடர்பாகக் கவனம் செலுத்தித் தவிசாளரினால் அல்லது தவிசாளரினால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தரினால் எழுத்து மூலமான அறிவித்தல் ஒன்றை ஒப்படைத்த பின்னர் தொடர்ந்தும் இடைவிடாது குற்றம் செய்தலுக்காக ஒரு நாளைக்கு 250 ரூபாவுக்கு அதிகரிக்காத தண்டத்திற்கு உள்வாங்க வேண்டும்.*

*21. 19 ஆவது வாக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் அறிவித்தல் கிடைத்த எவரேனும் அனுமதிப்பத்திரம் பெற்றவரினால் அந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்னதாக அந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் செயற்பட வேண்டும். ஏற்றுக்கொள்ளக்கூடிய விதத்தில் விபரங்கள் எழுத்து மூலமாகச் சமர்ப்பித்திருந்தால் ஏதேனும் ஒரு தருணத்தில் அந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியை நீடிப்பதற்கு தவிசாளருக்கு அதிகாரம் இருக்க வேண்டும். அவ்வாறாயினும் அந்த விதத்தில் நீடிக்கப்படும் காலம் 14 நாட்களுக்கு மேல் அதிகரிக்கக் கூடாது.*

*22. 21 ஆவது வாக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் அறிவித்தல் கிடைத்த எவராவதொரு அனுமதிப்பத்திரம் பெற்றவரினால் அந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதி அல்லது நீடிக்கப்பட்ட திகதிக்கு முன்னர் அந்த அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள விதத்தில் செயற்படுதலைக் கைவிட்டிருந்தால் அந்த இடத்திற்கு விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தைத் தவிசாளரினால் இரத்துச்செய்தல் சட்டபூர்வமானதாக வேண்டும்.*

*23. பதம் சம்பந்தமாக வேறு அர்த்தம் தேவைப்படுமாயின் தவிர,*

*“பிரதேச சபை” என்பது, ................................................ பிரதேச சபையும்,*

*“தவிசாளர்” என்பது, .................................................. பிரதேச சபையின் தவிசாளரும்,*

*“அதிகாரம் வழங்கப்பட்ட நபர் அல்லது உததியோகத்தர்” என்பது, ................................... பிரதேச சபையின் தவிசாளரினால் கடிதம் மூலம் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள சபையின் எவரேனும் உத்தியோகத்தர் ஒருவரும்*

*எனக் கருதப்படும்.*

*21 ஆவது பிரிவு*

**இடையூறான அல்லது ஆபத்தான வியாபாரம்**

*பிரதேச சபை அதிகாரப் பிரிவுக்குள் நடாத்திச் செல்லப்படும் இடையூறான வியாபாரம், ஆபத்தான வியாபாரம் இடையூறான அல்லது ஆபத்தான வியாபாரங்களை முறைப்படுத்துதல், கண்காணித்தல், பரிசோதனை செய்தல் மற்றும் நிருவகித்தல் மற்றும் அதற்காக அனுமதிப்பத்திரம் விநியோகித்தலுக்கான நடவடிக்கை ஒழுங்குசெய்தல் தொடர்பான துணைச்சட்டம்.*

*2. பிரதேச சபையின் தவிசாளரினால் ஏதேனும் விடயங்களுக்காக விநயோகிக்கப்படும் அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவரானால் தவிர, எந்தவொரு நபரும் பிரதேச சபை அதிகாரப் பிரிவுக்குள் இடையூறான வியாபாரம், ஆபத்தான வியாபாரம், இடையூறான அல்லது ஆபத்தான வியாபாரங்களை நடாத்திச்செல்லல் கூடாது. அதேபோன்று எந்த ஒரு அனுமதிப்பத்திரத்தையும் வேறு ஒருவருக்கு ஒப்படைக்க முடியாது.*

3. 2 ஆவது வாக்கியத்தின் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதிப்பத்திரம் ஒன்று பெற்றுக்கொள்வதற்காக பிரதேச சபையினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டணம் செலுத்த வேண்டியதுடன், அந்தக் கட்டணம் அனைத்து வருடத்திற்கும் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைய வேண்டும்.

4. இந்தத் துணைச் சட்டத்தின்கீழ் விநியோகிக்கும் அனைத்து அனுமதிப்பத்திரமும் முன்னதாக இரத்துச் செய்யப்பட்டால் தவிர, அந்த அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டது எந்த வருடத்திற்கோ அந்த வருடத்தின் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியில் முடிவடைய வேண்டும்.

5. (i) வியாபாரத்தை நடாத்திச்செல்லும் சூழல் பிரதேச சுகாதார உத்தியோகத்தரினால் அல்லது அவரினால் அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரினால் அதற்கு உகந்ததென சிபாரிசு செய்தால் தவிர, மற்றும்

(ii) அந்தச் சூழலை அந்த வியாபாரத்தின் விடயத்திற்காகப் பாவிப்பதற்கு எடுக்கும் ஏதேனும் கட்டிடம் இருப்பின் அந்தக் கட்டிடத்தைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கமைய இருந்தால் தவிர, எந்த ஒருவரும் இடையூறான வியாபாரம், ஆபத்தான வியாபாரம் இடையூறான அல்லது ஆபத்தான வியாபாரங்களை நடாத்திச் செல்வதற்காக அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கு உரிமை கிடையாது.

(அ) சூழலை மறுசீரமைக்கும் நிலையில் மற்றும் நன்கு காற்றோட்டம் மற்றும் வெளிச்சம் கிடைக்கும் விதத்தில் செய்திருக்க வேண்டியதுடன், அனைத்து அறைகளும் திறக்கும்போது வீட்டுத் தரை அளவில் பதினைந்தில் ஒரு பங்கிற்கு (1/15) குறையாத அளவில் யன்னல் பொருத்தப்பட்டிருக்க வேண்டும்.

(ஆ) அனைத்து அறைகளிலும் சுவர்களில் அனைத்துப் பிரிவிலும் 2.15 மீற்றருக்குக் குறையாத உயரம் இருக்க வேண்டியதுடன், செங்கல், கருங்கல், கபொக் கல் அல்லது சீமெந்து கல்லில் செய்திருக்க வேண்டும். சுவர்களில் உள்பக்கம் குறைந்தபட்சம் வீட்டுத் தரையிலிருந்து இரண்டு மீற்றர் உயரத்திற்கு சீமெந்துக் கலவை அல்லது சுண்ணாம்புக் கலவை உபயோகித்து சாந்து பூசப்பட்டிருக்க வேண்டும்.

(இ) அனைத்துக் கூரை ஓரமும் வீட்டுத் தரையிலிருந்து இரண்டு மீட்டருக்கு அதிகமான உயரத்தில் இருக்க வேண்டும்.

(ஈ) கூரை ஏதேனும் நிரந்தரமான பொருளில் செய்திருக்க வேண்டும்.

(உ) பலகையிலான பகுதிகள் அனைத்தையும் எண்ணெய் சாயம் பூசப்பட்டிருக்க வேண்டும்.

(ஊ) முழு வீட்டுத் தரையும் சீமெந்தினால் அல்லது கடினமான பொருளினால் செய்திருக்க வேண்டும்.

(எ) சூழல் போதுமான காற்றோட்டம் ஏற்படக்கூடியவாறு அமைந்திருக்க வேண்டும்.

(ஏ) சுற்றாடலில் சுகாதாரப் பாதுகாப்புக் குப்பைத்தொட்டி மற்றும் போதுமான மலசலகூட வசதி வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

6. அனைத்து அனுமதிப்பத்திரம் பெற்றவரும் வியாபாரம் செய்வதற்காக தேவைப்படும் அனைத்துப் பொருட்களையும் துர்நாற்றம் வீசும் அல்லது பீடைகள் ஏற்படுவதைத் தவிர்க்கும் விதத்தில் களஞ்சியப்படுத்தி வைக்க வேண்டும்.

7. அனைத்து அனுமதிப்பத்திரம் பெற்றவரும் பீடை ஏற்படக்கூடிய அல்லது துர்நாற்றம் வீசக்கூடிய பொருட்களைப் பொது இடங்களில் அல்லது வீதிகளில் எடுத்துச்செல்கையில் ஏதேனும் பீடைகள் ஏற்படுவதைத் தவிர்க்கக்கூடிய விதத்தில் மூடப்பட்ட உறிஞ்சும் தன்மையற்ற பாத்திரத்தில் இட்டு எடுத்துச்செல்ல வேண்டும்.

8. அனைத்து அனுமதிப்பத்திரம் பெற்றவரும் ஏதேனும் உரிய தயாரிப்புச் செயற்பாட்டின்போது வெளியேறும் பீடையான வாயுத்திரவம் அல்லது வாயு, அவைகள் விசிரப்பட்டு பாதிப்பு ஏற்படுத்தும் அல்லது பீடையான பெறுபேறுகளை ஏற்படுத்தக்கூடிய வாய்ப்பு ஏற்படாத விதத்தில் மற்றும் உயரத்தில் வாயு மண்டலத்திற்குப் போய்ச்சேரும் விதத்தில் வெளியேற்ற வேண்டும். இல்லையேல் நெருப்பு அல்லது அதற்குரிய உபகரணத்தின் மூலம் வெளியேறுவதற்கு ஏற்பாடுகள் செய்தல் வேண்டும்.

9. அனைத்து அனுமதிப்பத்திரம் பெற்றவரும், தனது வியாபாரத்தைச் செய்யும் தொகுதியில் போதுமான அளவில் வடிகாண்கள் அமைத்து முறையாகப் பராமரிக்க வேண்டியதுடன், அவைகளைத் தினமும் கழுவுதல் வேண்டும்.

10. அனைத்து அனுமதிப்பத்திரம் பெற்றவரும், தமது வியாபாரத்தைச் செய்யும் தொகுதியில் வீட்டுத் தரையைக் கடினமாக அமைக்க வேண்டியதுடன், நன்கு மறுசீரமைப்பு நிலையில் பராமரித்தலும், தினமும் சுத்தம் செய்தலும் வேண்டும்.

11. அனைத்து அனுமதிப்பத்திரம் பெற்றவரும், தமது வியாபாரத்தைச் செய்யும் தொகுதியின் சுவர்கள் கழிவுப் பொருட்களை உறியும் தன்மையிலிருந்து பாதுகாக்கும் விதத்தில் சிறந்த நிலையில் வைத்திருக்க வேண்டியதுடன், வருடாந்தம் அவைகளில் சுண்ணாம்பு மற்றும் பெயின்ட் பூசுதல் வேண்டும்.

12. அனுமதிப்பத்திரம் பெற்றவரினால் அனுமதிப்பத்திரம் பெற்ற இடத்தை பகல் அல்லது இரவு வேளைகளில் உறங்கும் அல்லது உணவு அருந்தும் இடமாகப் பாவித்தல் அல்லது வேறு நபருக்கு அவ்வாறு பாவிப்பதற்கு இடமளித்தல் கூடாது.

13. அனைத்து அனுமதிப்பத்திரம் பெற்றவரும் வியாபார நடவடிக்கைகளின்போது பாவிக்கப்படும் உபகரணங்கள் மற்றும் பாத்திரங்கள் உள்ளிட்ட உதிரிப்பாகங்களை சுத்தமாக வைத்தல் வேண்டியதுடன், தினமும் சுத்தம் செய்தல் வேண்டும்.

14. அனைத்து அனுமதிப்பத்திரம் பெற்றவரும் வியாபாரம் செய்யும் தொகுதியில் குப்பைகளைப் பொறுக்கி சேகரிக்கும் பதர் அழுக்குகளுடன் விரயமாகும் பொருட்கள் மற்றும் துணைத் தயாரிப்புகள், அவைகளை மேலும் வியாபார நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவதாயின் தவிர மூடப்பட்ட பாத்திரங்களில் இட்டு தினமும் வெளியேற்ற வேண்டும்.

15. அனைத்து அனுமதிப்பத்திரம் பெற்றவரும் தோல் அல்லது வேறு பொருட்கள் கழுவுதல் அல்லது ஊறவைத்தலுக்காகப் பாவிக்கும் தாங்கி, துர்நாற்றம் வீசுவதைத் தவிர்ப்பதற்காகத் தேவையான விதத்தில் சுத்தம் செய்தல் வேண்டும்.

16. அனைத்து அனுமதிப்பத்திரம் பெற்றவரும் ஏதேனும் ஆறுகள், நீர் ஓடை, வாய்க்கால், மடைக்கதவு, கிணறு, குளம் அல்லது ஏதேனும் வடிகாண், கடல் அல்லது ஏதேனும் திறந்த நீர்ப் பிரதேசத்தில் ஏதேனும் அசுத்த, துர்நாற்றம் வீசும் அல்லது பீடையான நீர் அல்லது வேறு திரவங்களை அனுப்புதல் அல்லது அதற்குள் பெருக்கெடுத்துச் செல்ல திட்டமிடல் அல்லது பீடையான பெருட்களைக் கழுவுவதை அல்லது வேறு விதத்தில் அல்லது அவ்வாறான ஆறு, நீர் ஓடை அடங்கிய மடைக்கதவு, கிணறு, குளம், கடல் அல்லது திறந்த நீர்ப்பிரதேசத்தை அசுத்தப்படுத்துதலைச் செய்யக்கூடாது.

17. சபையின் தவிசாளரினால் உரிய விடயத்திற்காக அவரினால் சாதாரணமாக அல்லது விசேடமாக அதிகாரம் வழங்கப்பட்ட பிரதேச சபையின் உத்தியோகத்தரினால் அனைத்துச் சாதாரண நேரத்திற்குள் பீடைக்குரிய வியாபாரம், ஆபத்தான வியாபாரம், பீடையான மற்றும் ஆபத்தான வியாபாரம் செய்யும் தொகுதிக்குள் நுழைந்து பரிசோதனை செய்து பார்த்தல் சட்டபூர்வமானதாகும். மேலும் அனுமதிப்பத்திரம் பெற்றவர் அல்லது அதன் நிருவாகிக்கு அவ்வாறான பரிசோதனை செய்வதற்கு இடமளிக்க வேண்டும்.

18. அனுமதிப்பத்திரம்பெற்ற சூழல் இந்த துணைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கைகளின்படி இல்லை எனப் பரிசோதனையின்போது தெரியவரும் தருணத்தில் முன்பு கூறிய சூழல் இந்த துணைச் சட்டங்களில் நடவடிக்கைகளின்படி செய்விப்பதற்காக செய்யவேண்டிய விடயங்களைக் குறித்த காலத்திற்குள் செய்து முடிப்பதாக அனுமதிப்பத்திரம் பெற்றவருக்கு எழுத்து மூலமாக அறிவிப்பதற்கு தவிசாளருக்கு அதிகாரம் உண்டு. அறிவித்தல் கிடைத்தவுடன் மேற்கூறிய அறிவித்தலின் நடவடிக்கைகளின் பிரகாரம் அனுமதிப்பத்திரம் பெற்றவர் செயற்பட வேண்டும்.

19. பிரதேச சபையினால் நிச்சயிக்கப்பட்ட பீடையான வியாபாரம், ஆபத்தான வியாபாரம், பீடையான மற்றும் ஆபத்தான வியாபாரம் முறையே இலக்கம் I, II, III உடைய அட்டவணை உள்ளடக்கப்பட்டுள்ளது. அனுமதிப்பத்திரம் விநியோகித்தல், விண்ணப்பதாரருக்கு அறிவித்தல் தவிசாளரின் விடயமாகும்.

20. இந்தத் துணைச் சட்டத்தின்கீழ், ஏதேனும் வியாபாரத்தின்கீழ் ஏதேனும் வியாபாரம் செய்வதற்காக அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்காக எவராவதொருவர் சமர்ப்பிக்கும் விண்ணப்பப்பத்திரம் தனக்குக் கிடைத்த 30 நாட்களுக்குள் அந்த சூழலில் இந்தச் சட்டத்திற்கு உகந்ததாயின் அனுமதிப்பத்திரம் விநியோகிப்பதாயின் அல்லது நிராகரிப்பதாயின் காரணத்துடன் அதை விண்ணப்பதாரருக்கு அறிவிப்பது தவிசாளரின் விடயமாகும்.

21. இந்தத் துணைச் சட்டத்தை மீறுதல் தொடர்பாக இந்த மீறும் செயலை நிலைநிறுத்தும் ஏதேனும் செயற்பாடுகளைச் செய்யாது விடுதலுக்காக 750 ரூபாவுக்கு அதிகரிக்காத தண்டமும் அந்த மீறும் செயலை இடைவிடாது தொடர்ந்து செய்யும்போது உரிய அதிகாரமுள்ள நீதிமன்றத்தினால் அது தொடர்பாக குற்றவாளியாக்கப்பட்டதன் பின்னர் அல்லது அந்த மீறும் செயல் தொடர்பாக கவனம் செலுத்தி தவிசாளரினால் அல்லது அதிகாரம்பெற்ற வேறு உத்தியோகத்தரினால் எழுத்து மூலமான அறிவித்தல் ஒப்படைத்த பின்னர் மீறும் செயலை மேலும் தொடர்ந்து செய்யும் அனைத்து ஒரு தினத்திற்கும் 250 ரூபாவுக்கு அதிகரிக்காத மேலுதிக தண்டத்திற்கு உள்ளாக்கப்பட வேண்டும்.

"அனுமதிப்பத்திரம் பெற்றவர்" என்பது, இந்தத் துணைச் சட்டத்தின்கீழ் வியாபாரம் ஒன்றைச் செய்வதற்காக அனுமதிப்பத்திரம் பெறுவதற்காக அதிகாரம் பெற்றுள்ள எவரேனுமொரு நபர் எனக் கருதப்படுவார் ;

"நபர்" என்பது, உறுதிசெய்யப்பட்ட அல்லது செய்யப்படாத நபர்களின் சபை எனக் கருதப்படும் ;

"நிருவாகம் பொறுப்பான நபர்" என்பது, ஒரு பொறுப்பாளர், பாதுகாவலர், சொத்துப் பாதுகாவலர், முகாமையாளர் அல்லது வியாபார அமைப்பின் நிருவாகம் அல்லது முகாமைத்துவம் வழங்கப்பட்டுள்ள வேறு நபர் எனக் கருதப்படுவார்.

## முதலாவது அட்டவணை - பீடையான வியாபாரம்

1. காரீயம் சுத்தம் செய்தல் அல்லது களஞ்சியப்படுத்துதல்
2. உரம் அல்லது இரசாயன உரம் உற்பத்தி செய்தல் அல்லது விற்பனைக்கு வைத்திருத்தல்
3. தோல் பதம் செய்தல்
4. விலங்குப் பண்ணை (இறைச்சி, பால் அல்லது முட்டைக்காக) மிருகங்கள் வளர்க்குமிடம் நடாத்துதல்
5. மாசி உற்பத்தி செய்தல் அல்லது 50 கிலோவுக்கு அதிகமாக களஞ்சியப்படுத்துதல்
6. இறப்பர் உற்பத்தி செய்தல் அல்லது இறப்பர் ரொட்டி வைத்திருத்தல்
7. மிருக வைத்திய சிகிச்சைச்சாலை நடாத்துதல்
8. தொகையாக விற்பனை செய்வதற்காக பழுதடையும் சாப்பாடு வகைகள் அல்லது உணவுப் பொருட்கள் வைத்திருத்தல்
9. தோல் விற்பனைக்கு வைத்திருத்தல்
10. கருவாடு, மீன் அல்லது ஜாடி 100 கிலோவுக்கு அதிகமானஅளவு வைத்திருத்தல்
11. மீன் அல்லது மீன் ஜாடி போடுதல் அல்லது உலர்த்துதல் அல்லது ஐஸ் போடுதல்
12. சிறட்டைக் கரி அல்லது விறகுக் கரி தயாரித்தல்
13. புகையிலை உலர்த்துதல்
14. மிருக உணவு தயாரித்தல்
15. பிண்ணாக்கு தயாரித்தல்
16. மிருக இறைச்சி அல்லது இரத்தம்
17. சவர்க்காரம் தயாரிப்பு
18. மிருக எலும்பு அரைத்தல் அல்லது வைத்திருத்தல்
19. டிறங்க் பெட்டி செய்தல்
20. புதிய தகடுகள் அல்லது பழைய தகடுகள் வைத்திருத்தல்
21. உலோகத் துண்டுகள் வைத்திருத்தல்
22. வீட்டுத் தளபாடங்கள் தயாரித்தல்
23. பிரம்புப் பொருட்கள் தயாரித்தல்
24. தச்சுத் தொழிற்சாலை நடாத்துதல்
25. சிரப் அல்லது பழச்சாறு பானம் தயாரித்தல்
26. இனிப்புப் பண்டங்கள் தயாரித்தல்
27. தேங்காய்த் தோல் உரித்தல் அல்லது (தேங்காயாக்குதல்)
28. தூரிகை வகைகள் தயாரித்தல்
29. பல் தூரிகை தயாரித்தல்
30. கள்ளு சேகரித்தல்
31. விநாகிரி தயாரித்தல்
32. விறகு அறுத்தல்
33. வரையும் பெயின்ட், வார்னிஸ் அல்லது டிஸ்டெம்பர் தயாரித்தல்
34. சோடா தயாரித்தல்
35. தும்பு சாயம் போடுதல்
36. தோல் பொருட்கள் தயாரித்தல்
37. பழங்கள், மீன் அல்லது வேறு பொருட்கள் டின்களில் அடைத்தல்
38. கோப்பி, தானியங்கள் மாவாக்குதல்
39. பேக்கிங் பவுடர் தயாரித்தல்
40. கேஸ் மென்டல் தயாரித்தல்
41. கற்பூரம் தயாரித்தல்
42. பொட்டி தயாரித்தல்
43. மெழுகுதிரி தயாரித்தல்
44. எழுதும் மை, அச்சு மை அல்லது ஸ்டென்சில் மை தயாரித்தல்
45. ஆடைகள் கழுவும் நீலம் தயாரித்தல்
46. லாக்கட தயாரித்தல்
47. வாசனைப் பொருட்கள் தயாரித்தல்
48. பாடசாலை வெண்கட்டி தயாரித்தல்
49. டயர் அல்லது டியூப் தயாரித்தல்
50. டயர் மீள் நிரப்புதல்
51. டயர், டியூப் வோல்கனைசிங் செய்தல்

**முதலாவது அட்டவணை - பீடையான வியாபாரம்** *(தொடர்ச்சி)*

52. சீமெந்து தயாரித்தல்
53. சீமெந்துப் பொருட்கள் அல்லது எஸ்பெஸ்டஸ் பொருட்கள் தயாரித்தல்
54. மணல் கடதாசி தயாரித்தல்
55. பிளாஸ்டிக் பொருட்கள் தயாரித்தல்
56. செங்கல் சுடுதல்
57. இயந்திரத்தினால் துணி செய்தல்
58. அமிலம் தயாரித்தல் அல்லது மீள் நிரப்புதல்
59. ஓடு தயாரித்தல்
60. உரம், சுண்ணாம்பு, மா அல்லது வேறு பொருட்கள் இடப்பட்ட சாக்கு சுத்தம் செய்து விற்பனை செய்தல்
61. இயந்திரத்தினால் புளொக் கல் தயாரித்தல்
62. தைத்த ஆடைகள் தயாரித்தல்
63. கோழி வியாபார நிலையம் நடாத்துதல்
64. கிருமிநாசினி மருந்து தயாரித்தல்
65. டயர், டியூப் பழுதுபார்த்தல்
66. பாதணி, பேக், தோல் பொருட்கள் தயாரித்தல்
67. புகையிலை பயன்படுத்தி சிகரட், பீடி, சுருட்டு தயாரித்தல்

**இரண்டாவது அட்டவணை - ஆபத்தான வியாபாரம்**

1. கருங்கல் தோண்டுதல் மற்றும் உடைத்தல்
2. குளிர்பானம் தயாரித்தல்
3. ஐஸ் தயாரித்தல்
4. மரக்கறி எண்ணெய் தயாரித்தல்
5. தேங்காய் எண்ணெய் தயாரித்தல்
6. தீப்பெட்டி தயாரித்தல் அல்லது களஞ்சியப்படுத்துதல்
7. மெதைல் ஸ்பிரிட் தயாரித்தல்
8. தேயிலைப் பெட்டி தயாரித்தல்
9. தும்பு அல்லது வேறு தும்பு வகைகள் தயாரித்தல்
10. தும்பு மற்றும் வேறு தும்பு வகைகளிலான பொருட்கள்
11. வைக்கோல் வைத்திருத்தல்
12. பாவித்த ஆடைகள் களஞ்சியப்படுத்துதல்
13. தங்க ஆபரணங்கள் தயாரித்தல் அல்லது பழுதுபார்த்தல்
14. இயந்திரத்தினால் பலகை அறுத்தல்
15. சுண்ணாம்புக் கல் அகழ்தல்
16. இயந்திரங்கள் பாவிக்கும் கொல்லன் அறை நடாத்துதல்
17. வெற்றுப்போத்தல் அல்லது வெற்றுச்சாக்கு வைத்திருத்தல்
18. துவிச்சக்கர வண்டி அல்லது மோட்டார் சைக்கிள் பழுதுபார்த்தல்
19. பாவிக்கப்பட்ட கடதாசி அல்லது பத்திரிகை வைத்திருத்தல்
20. அலங்கார வர்ணம் பூசுதல்
21. நெருப்பு விளையாட்டுப் பொருட்கள் பட்டாசு களஞ்சியப்படுத்துதல்
22. உலோகத் தயாரிப்பு தொழிற்சாலை ஆயுதம் (இயந்திரங்கள், ஆயுதங்கள், உபகரணங்கள் தயாரித்தல்)
23. வேல்டின் வேலைத்தளம் நடாத்துதல்

**மூன்றாவது அட்டவணை - பீடையான மற்றும் ஆபத்தான வியாபாரம்**

1. காரீயம் சுத்தம் செய்தல்
2. இரசாயனப் பொருட்கள் பாவித்து கருவா, ஏலக்காய், தும்பு வகைகள் செய்தல்
3. ட்றைக்கிளீன் செய்தல்
4. துணி அச்சு செய்தல் அல்லது சாயம் இடுதல்
5. மின் உலோகம் பூசுதல்
6. எண்ணெய் அல்லது மிருக நெய் தயாரித்தல்
7. சுண்ணாம்புக் கல் தயாரித்தல்
8. நெருப்பு விளையாட்டுப் பொருட்கள் அல்லது பட்டாசு தயாரித்தல்

**மூன்றாவது அட்டவணை - பீடையான மற்றும் ஆபத்தான வியாபாரம்** *(தொடர்ச்சி)*

9. மோர், நெய் தயாரித்தல்
10. படகு கட்டுதல்
11. பெற்றரி மின் ஏற்றுதல் அல்லது பழுதுபார்த்தல்
12. உலோகங்கள் பொருத்துதல்
13. மோட்டார் வாகனம் பழுதுபார்த்தல்
14. மோட்டார் வாகனம் சேர்விஸ் செய்தல்
15. இயந்திரத்தினால் உலோகம் தூள் செய்தல்
16. உருக்கும் மடுவம் நடாத்துதல்
17. புளொக் வேலைத்தளம் நடாத்துதல்
18. மோட்டார் வாகன பொடி அமைத்தல்
19. கிருமிநாசினி, களை நாசினி, கன்றுகள் நாசினிகள் தயாரித்தல்
20. விஷ நாசினி தயாரித்தல்
21. நுளம்புச் சுருள் தயாரித்தல்
22. மர பாதுகாப்பு தயாரித்தல்
23. கல் தார் அல்லது பொருட்கள் தயாரித்தல்
24. கண்ணாடிப் பொருட்கள் தயாரித்தல்
25. கண்ணாடி அலங்காரங்கள் தயாரித்தல்
26. இரும்புத் தகடு கெல்வனைஸ் செய்தல்
27. பொருத்தும் ஈயம் தயாரித்தல்
28. அலுமினியப் பொருட்கள் தயாரித்தல்
29. முட்கம்பி தயாரித்தல்
30. கம்பி ஆணி தயாரித்தல்
31. காபன் கடதாசி அல்லது தட்டச்சு பட்டி (ரிபன்) தயாரித்தல்
32. இரும்பு பீப்பா அல்லது காபன் தாங்கி தயாரித்தல்
33. ஜீ. ஐ. வாளி தயாரித்தல்
34. காற்றமுத்த இயந்திரம், குளிரூட்டி அல்லது அதிகுளிரூட்டி தயாரித்தல்
35. காற்றமுத்த இயந்திரம், குளிரூட்டி அல்லது அதிகுளிரூட்டி பழுதுபார்த்தல்
36. பிரேக் லைனர், கிளச் லைனர் தயாரித்தல்
37. இயந்திர உபகரணங்கள் தயாரித்தல்
38. மின்சாரப் பொருட்கள் தயாரித்தல்
39. இறப்பர் கலந்த தும்பு தயாரித்தல்
40. பெற்றரி தயாரித்தல்
41. ட்ரக்டர் வாகனம் பொருத்துதல்
42. ரேடியேட்டர் தயாரித்தல்
43. இலெக்றோணிக் உபகரணங்கள் தயாரித்தல் மற்றும் பழுதுபார்த்தல்
44. உலர்ந்த கூடு பெற்றரி தயாரித்தல்
45. நெல் ஆலை
46. சவப்பெட்டி அமைத்தல்
47. தொலைபேசி தயாரித்தல் அல்லது பழுதுபார்த்தல்
48. மின் உபகரணங்கள் பழுதுபார்த்தல் அல்லது பொருத்துதல்
49. கணினி அல்லது தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள் பொருத்துதல் அல்லது பழுதுபார்த்தல்

**22 - பொது சுகாதாரம் பாதுகாத்தல்**

(அவமங்கள சேவை வழங்குமிடம்)

*பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்திற்குள் பொது சுகாதாரப் பாதுகாப்பு செய்வதற்காக அவமங்கள சேவை வழங்குமிடத்தை முறைப்படுத்துதல், கண்காணித்தல் மற்றும் நிருவகித்தல், அதற்காகக் கட்டணம் தயாரித்தல் தொடர்பான துணைச் சட்டமாகும்.*

*2. தவிசாளரினால் உரிய விடயத்திற்காக விநியோகிக்கப்படும் செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரம் இருந்தால் தவிர எவரேனும் நபரினால் சபைப் பிரதேசத்திற்குள் அவமங்கள சேவை வழங்கும் இடம் நடாத்திச்செல்லக் கூடாது.*

3. இந்த துணைச்சட்டத்தின்கீழ் விநியோகிக்கப்படும் அனைத்து அனுமதிப்பத்திரமும் முன்னதாக இரத்துச் செய்யப்படாதிருந்தால் தவிர அந்த அனுமதிப்பத்திரம் விநியோகிப்பது எந்த வருடத்திற்கோ, அந்த வருடத்தில் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைய வேண்டும்.

4. இந்த துணைச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நியமங்களை அதேவிதத்தில் பூர்த்திசெய்திருந்தால் தவிர தவிசாளரினால் எதேனும் அவமங்கள சேவை வழங்கும் இடத்திற்கு அனுமதிப்பத்திரம் விநியோகிக்கக் கூடாது.

(i) அவமங்கள சேவை வழங்கும் இடம் நடாத்திச்செல்லும் கட்டிடத்தின் உள்ளே மரண உடல் ஒழுங்குசெய்வதற்காக ஒதுக்கப்பட்ட அறை இருக்கவேண்டியதுடன், அந்த அறையில் ஒரு நபரின் மரண உடல் ஒழுங்குசெய்வதற்காக குறைந்தபட்சம் சதுர மீட்டர் ஒன்பதுக்குக் குறையாத இடம் இருக்க வேண்டும். அவ்வாறு கூறப்பட்ட விடயத்தைச் செய்வதற்குப் பாவிப்பதற்குப் போதுமான கொங்கிரீட் மேடை இருக்கவேண்டியதுடன், அதை பீங்கான் செங்கல் பிடிக்கப்பட்டு நன்கு செய்திருக்க வேண்டும்.

(ii) மரண உடல் ஒழுங்கமைக்கும் அறை, அனைத்துத் தருணத்திலும் அவமங்கள சேவை வழங்கும் இடத்தில் காட்சி மண்டபத்தில் அல்லது மண்டபங்களிலிருந்து வேறுபட்டு இருக்க வேண்டும். வெளியாட்கள் உத்தரவின்றி உட்பிரவேசிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

(iii) மரண உடல் ஒழுங்குசெய்யும் அறையின் உள்ளே சுத்தமான காற்றோட்டம் கிடைக்கும் விதத்தில் பாவிக்கும் அறையின் பரப்பளவில் ஏழுக்கு ஒன்று குறையாத அளவில் காற்று நுழையக்கூடிய யன்னல் இருக்க வேண்டும். அது தொடர்பான விடயங்களில் ஈடுபடுதல் எந்த வெளி நபருக்கும் தெரியாத வண்ணம் இருக்க வேண்டும். அந்த யன்னல் அவமங்கள சேவை வழங்கும் இடம் அமைந்துள்ள சூழலில் அருகில் உள்ள காணிகளின் வீடுகள் பக்கத்திற்கு நேரே திறக்குமாறு இருக்கக்கூடாது.

(iv) மரண உடல் ஒழுங்குசெய்கையில் அகற்றப்படும் மரண உடல் பாகங்கள் தற்காலிகமாகப் போடுவதற்குப் போதுமான பாத்திரங்கள் இருக்க வேண்டியதுடன், அந்த விடயங்களைச் செய்யும் தருணத்தில் மரண உடலில் இருந்து வெளியேறும் இரத்தம் அல்லது வேறு திரவம் அல்லது மரண உடலைக் கழுவுதல் செய்யப்படுவதாயின் அந்த அசுத்த நீர் சேகரிப்பதற்காக கடினமான மற்றும் ஈ, எலி அல்லது வேறு மிருகங்கள் நுழைய முடியாத வண்ணம் நன்றாக மூடிவைக்கக்கூடிய விதத்தில் பாத்திரத்தை வைத்திருக்க வேண்டும்.

(v) (அ) அனுமதிப்பத்திரம்பெற்ற இடத்தில் பொது மக்களின் அஞ்சலிக்காக மரண உடலை வைப்பதற்கு இடமளிக்கும் தருணத்தில் ஏதேனும் மரண உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்த வரும் நபர்களின் வசதி கருதி போதுமான இருக்கைகள் போடுவதற்கு அல்லது அவ்வாறு வருகை தருபவர்களின் வாகனம் நிறுத்துவதற்குப் போதுமான இடவசதிகள் ஒதுக்கி இருக்க வேண்டும்.

(ஆ) அஞ்சலிக்காக மரண உடல் ஒன்றை வைத்திருக்கும் இடம், அந்த அவமங்கள சேவை வழங்கும் இடத்தில் காட்சி மண்டபத்திலிருந்து மரண உடல் ஒழுங்கு செய்யும் அறையிலிருந்து வேறுபடுத்தி இருக்க வேண்டும்.

(இ) அவமங்கள சேவை இடத்திற்காக அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் அனைத்து நபர்களினாலும் இந்தப் பகுதியில் முதலாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மாதிரி தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தைத் தவிசாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

(ஈ) அனுமதிப்பத்திரம் வேண்டி விண்ணப்பிப்பவரால் பிரதேச சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானித்து அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகையில் வருடாந்தம் பிரசுரிக்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரக் கட்டணத்தைச் சபைக்குச் செலுத்த வேண்டும்.

6. மரண உடல் ஒழுங்குச் செய்கையில் அகற்றப்படும் அல்லது வெளியேறும் மரண உடல் பாகங்களை, நீதிவான் அல்லது மரண விசாரணை அதிகாரியினால் அது தொடர்பாக வழங்கப்பட்டுள்ள கட்டளைகள் இல்லையேல், அந்தப் பாகங்களை அந்த விடயம் முடிவடைந்து 6 மணி நேரம் கடப்பதற்கு முன்னதாக பூமியின் மேலிருந்து 1.5 மீற்றர் ஆழமான குழியில் இட்டு முறையாகப் புதைக்கப்பட வேண்டும்.

7. மரண உடலை ஒழுங்கு செய்கையில் அகற்றப்படும் மரண உடல் பாகங்கள் தொடர்பாக நீதிவான் அல்லது மரண விசாரணை அதிகாரியினால் கட்டளை இட்டுள்ளபோது, அந்தக் கட்டளையின்படி செயற்படுதல் அனுமதிப்பத்திரம் பெற்றவரின் விடயமாக வேண்டும்.

8. 6 ஆவது வாக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்காகப் போதுமான இடங்கள் அவமங்கள சேவை வழங்கும் இடத்தில் இல்லாதபோது சபையினால் காலத்திற்குக்காலம் தீர்மானிக்கப்பட்ட கட்டணம் செலுத்திய பின்னர் அந்த விடயத்தை பிரதேச சபையின் பொது மயான பூமி உள்ளடங்கிய துணைச் சட்டத்தில் நியமம் செய்யப்பட்டுள்ள ஆழமுடைய குழியில் இட்டு அடக்கம் செய்ய வேண்டும்.

*9.* மரண உடலை ஒழுங்குசெய்யும் அறையை எந்நேரமும் கிருமிநாசனி இட்டு சுத்தமாக வைத்திருக்க வேண்டும். அதேபோன்று தேவையான தருணத்தில் நிருவாகச் சபையின் உபயோகத்திற்குப் பெற்றுக்கொள்ளக்கூடியவாறு அந்த இடத்தில் போதுமான முதலுதவி மற்றும் உபகரணங்கள் இருக்க வேண்டும்.

*10.* அவமங்கள சேவை வழங்கும் இடத்தில் சேவையில் ஈடுபடும் நிருவாக சபை உறுப்பினர்கள் தொடர்பாக அறிக்கை வைத்திருத்தல் அனுமதிப்பத்திரம் பெற்றவரின் விடயமாகும்.

*11.* மரண உடலை ஒழுங்குசெய்யும் அறைகளில் வேலை செய்யும் அனைத்துச் சேவையாளர்களுக்கும் பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளரினால் சிபாரிசு செய்யப்பட்ட விதத்திலான பாதுகாப்பு உடை, வாய்க் கவசம் மற்றும் கையுறை பெற்றுக்கொடுத்தல் மற்றும் மரண உடலை ஒழுங்குசெய்யும் தருணத்தில் அந்தச் சேவையாளர்கள் அந்த உடையையும் மற்றும் அணிகலன்களையும் அணிந்து குறித்த விடயத்தில் ஈடுபடுவதற்கு வழி அமைப்பது அனுமதிப்பத்திரம் பெற்றவரின் விடயமாகும்.

*12.* அனுமதி பெற்ற இடத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அனைத்துச் சேவையாளர்களையும் குறைந்தபட்சம் வருடத்திற்கு ஒரு முறை வைத்தியப் பரிசோதனைக்கு உள்ளாக்குவது அனுமதிப்பத்திரம் பெற்றவரின் விடயமாகும்.

*13.* மரண உடல் போக்குவரத்துச் செய்யப்படும் வாகனம் அல்லது வாகனத்தின் உள்ளே, குறைந்தபட்சம் ஒரு நாளைக்கு ஒரு முறை வீதம் முறையாகச் சுத்தம் செய்து கிருமிநாசினி இடப்படுதல் வேண்டும்.

*14.* அதிகபட்சமாக பாதிப்பு ஏற்படுவதினால் அல்லது வேறு ஏதேனும் காரணத்தினால் ஒழுங்குசெய்ய முடியாதவாறு இருக்கும் மரண உடலைத் தவிர வேறு மரண உடல்களை வைக்கப்படும் பெட்டியில் உள்ளே அல்லது மரண உடல் முழுமையாக அல்லது ஒரு பகுதி மறைப்பதற்காகப் பொலித்தீன் அல்லது இத்துப்போகாத வேறு பொருட்களை உபயோகிக்கக்கூடாது.

*15.* அனைத்து அனுமதிப்பத்திரம் பெற்றவரினாலும் உரிய முறையில் அதிகாரம் வழங்கப்பட்ட நபர் தவிர வேறு எவரேனுமொரு நபரினால் எந்தவொரு மரண உடலையும் ஒழுங்குசெய்தல் அல்லது மரண உடலை எடுத்துச்செல்லல் செய்யக்கூடாது.

*16.* பிரதேச சுகாதாரப் பணிப்பாளரினால் நியமம் செய்யும் விதிமுறைகளுக்குக் கீழ்பணிந்து அவரினால் அதற்காக அனுமதிப்பத்திரம் பெற்றவருக்கு வழங்கப்படும் எழுத்து மூலமான அனுமதி இருந்தால் தவிர, கொலரா, கொள்ளை நோய், அம்மை நோய், மஞ்சள் காய்ச்சல் அல்லது எயிட்ஸ் நோயினால் மரணமடைந்துள்ளதாகக் கருதும் நபரின் மரண உடலை அனுமதிப்பத்திரம் பெற்ற இடத்திற்குக் கொண்டுசெல்வது அல்லது கொண்டுசெல்வதற்கு இடமளித்தல் எவராலும் செய்யப்படக்கூடாது.

*17.* ஏதேனும் மரண உடலை ஒழுங்குசெய்வதற்கு மற்றும் அவமங்கள ஏற்பாடுகளுக்காக பொறுப்பேற்பதற்கு முன்னர் அந்த மரணம் சம்பந்தமாக மரணம் பதிவுசெய்யும் செயலாளரினால் விநியோகிக்கப்பட்ட முறையான மரணச் சான்றிதழ் தனக்குச் சமர்ப்பித்திருந்தால் தவிர, அந்த விடயத்திற்காக மரண உடலை பொறுப்பேற்பதை அனுமதிப்பத்திரம் பெற்றவர் செய்யக்கூடாது.

*18.* ஏதேனும் மரண உடலுக்குரிய மரணம் திடீர் மரணமானால் அல்லது அந்த மரணம் சந்தேகத்திற்குரியதானால் நீதிவான் ஒருவரினால் அல்லது திடீர் மரண பரிசோதகரினால் செய்யப்பட்ட திடீர் மரண பரிசோதனையின் பின்னர் விநியோகிக்கப்பட்ட அறிக்கை தனக்குச் சமர்ப்பித்திருந்தால் தவிர, அந்த மரண உடலை ஒழுங்குசெய்தல் அல்லது ஒழுங்குசெய்வதற்காகப் பொறுப்பேற்றல் எந்த நபரினாலும் செய்யக்கூடாது.

*19.* நீதிவான் ஒருவரினால் திடீர் மரண பரிசோதகரினால் செய்யப்பட்ட திடீர் மரண விசாரணையின் பின்னர் விநியோகிக்கப்பட்ட அறிக்கையின் மூலம் அந்த மரண உடலில் இறுதிக் கிரியைகள் சம்பந்தமாக வழங்கப்பட்டுள்ள ஏதேனும் கட்டளை இருக்குமாயின் அனுமதிப்பத்திரம் பெற்றவரினால் அந்தக் கட்டளைகளின் நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

*20.* அனுமதிப்பத்திரம் பெற்ற இடத்திலிருந்து அல்லது வேறு ஏதேனும் வெளி இடத்தில் செய்யப்படும் அனைத்து மரண உடல் ஒழுங்கமைப்பு மற்றும் அவமங்கள சேவை வழங்குதல் தொடர்பாக இந்தப் பகுதியில் இரண்டாவது அட்டவணையில் காணப்படும் மாதிரிக்கு நிகராக தயாரிக்கப்பட்ட பதிவேடு ஒன்றை நடாத்திச்செல்லுதல் மற்றும் அந்தப் பதிவேட்டைத் தவிசாளரினால் அல்லது அதிகாரம்பெற்ற உத்தியோகத்தரினால் அல்லது வேறு உத்தியோகத்தரினால் கேட்கும் தருணத்தில் பரிசோதனை செய்வதற்காக முன்வைத்தல் அனுமதிப்பத்திரம் பெற்றவர் விடயமாக வேண்டும்.

*21.* பொது மக்களின் அஞ்சலிக்காக மரண உடல் வைக்கும் சேவை நடாத்தப்படும் இடம் சம்பந்தமானபோது அந்த இடத்தில் வைக்கப்படும் ஏதேனும் மரண உடலுக்கு மரண உடலின் பொறுப்பாளர்களுக்கு உரிய மரியாதை கிடைக்கும் விதத்தில் அந்த மரண உடலை காட்சிப்படுத்துதலைச் செய்ய வேண்டும்.

*22.* பொது மக்களின் அஞ்சலிக்காக மரண உடலை வைக்கும் இடம் சுத்தமாகவும் சுகாதாரப் பாதுகாப்பாகவும் நடாத்திச்செல்வதற்கு ஒழுங்குசெய்தல் அனுமதிப்பத்திரம் பெற்றவரின் விடயமாக வேண்டும்.

*23.* அவமங்கள சேவை வழங்கும் இடத்தின் அருகில் வசிப்பவர்களுக்கு தொல்லை ஏற்படும் அல்லது பீடை ஏற்படும் அல்லது ஏதாவதொரு முறையில் அவமங்கள சேவை வழங்குமிடத்தின் அவ்வாறு வளாகத்தினுள் செய்வதற்கு அல்லது அவ்வாறு செய்வதற்கு இடமளித்தல் எவரினாலும் செய்தல் கூடாது.

24. (அ) அனுமதிப்பத்திரம் பெற்ற இடத்தினுள் உற்பத்தியாகும் அனைத்துக் கழிவுப் பொருட்களையும் மீண்டும் பாவனைக்கு எடுப்பதாயின் தவிர, அந்தக் கழிவுப் பொருட்களை–

(i) உக்கிப்போகும் கழிவுப் பொருட்கள்
(ii) கண்ணாடி
(iii) கடதாசி அல்லது கடதாசிப் பொருட்கள்
(iv) பொலித்தீன் அல்லது பிளாஸ்டிக் அல்லது பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பொருட்கள்
(v) இரும்பு மற்றும் வேறு தகட்டுப் பொருட்கள் அல்லது இரும்பு மற்றும் வேறு தகட்டுப் பிரிவுகள்
(vi) உற்பத்திக்காக பயன்படுத்தப்படும் வேறு மூலப்பொருட்களினால் மீதியாகும் பிரிவுகள் அல்லது உற்பத்தியின்போது துணைத் தயாரிப்புப் பொருட்கள் அல்லது பிரிவுகள்
(vii) வேறுபட்ட கழிவுப் பொருட்கள்

என்ற வகைகளின்கீழ் வகைப்படுத்த ஒழுங்குசெய்தல் வேண்டியதுடன், அந்த ஒவ்வொரு வகையின் கழிவுப் பொருட்களையும் போடுவதற்குத் தயாரிக்கப்பட்டுள்ள வேறு வேறான பாத்திரங்களில் அல்லது தாங்கிகளில் போடுவதற்கு ஒழுங்கு செய்தல் அனுமதிப்பத்திரம் பெற்றவர் விடயமாக வேண்டும்.

(ஆ) மேலே (அ) பந்தியில் (i) துணை பந்தியிலிருந்து (vi) துணை பந்தி வரையுள்ள கழிவுப் பொருட்கள் என்பதற்கு ஏதேனும் மரண உடலின் பாகங்கள் உள்ளடங்கக்கூடாததுடன், மரண உடலில் இருந்து வெளியேறும் ஏதேனும் மரண உடல் பாகங்கள் அல்லது பாகம் சந்தர்ப்பத்தின்படி 6 ஆவது மற்றும் மற்றும் 8 ஆவது வாக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் வெளியேற்றுவதற்கு ஒழுங்குசெய்தல் அனுமதிப்பத்திரம் பெற்றவர் விடயமாக வேண்டும்.

(இ) மேலே (அ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் வகைப்படுத்தி பாத்திரங்களில் அல்லது தாங்கிகளில் போடப்பட்டுள்ள கழிவுப் பொருட்களைப் பிரதேச சபையின் கழிவுப் பொருட்கள் முகாமைத்துவ வேலைத்திட்டத்தின்கீழ் வெளியேற்றுவதாயின் தவிர, தவிசாளரினால் நியமம் செய்யப்படும் விதத்தில் கடைசி வெளியேற்றத்தைச் செய்தல் வேண்டும்.

25. இந்தப் பிரிவில் துணைச் சட்டங்களில் நியமங்களை பரிசோதனை செய்வதற்குத் தவிசாளருக்கு அல்லது அதிகாரம்பெற்ற உத்தியோகத்தருக்கு பரிசோதனை செய்வதற்கு அதிகாரமுள்ள உரிய காலம் என்பதற்கு அனுமதிப்பத்திரம் பெற்ற இடத்தில் மரண உடல் ஒழுங்கு செய்யும் அல்லது ஏதேனும் மரண உடல் பொது மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ள எந்தவொரு தருணமும் கருத்திற்கொள்ளப்படும்.

26. அந்தப் பிரிவு துணைச்சட்டத்தின்கீழ் விநியோகிக்கப்பட்டுள்ள ஏதேனும் அவமங்கள சேவை வழங்கும், நடாத்திச்செல்லப்படும் இடம் 4 ஆவது துணைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் நியமங்களுக்கு அனுகூலமாக நடாத்துதல் முடிவடைந்தால் அல்லது இந்த துணைச் சட்டங்களில் வேறு ஏதேனும் துணைச் சட்டத்தில் நியமங்களுக்கு முரணான தருணத்தில், உறுதியாகக் குறிப்பிடப்படும் திகதிக்கு முன்னர் அந்த இடத்தை அந்த நியமங்களுக்கு அனுகூலமான நிலைமைக்குக் கொண்டுவருவதற்குத் தேவையான அனைத்து விடயங்களையும் செய்யுமாறு நியமம் செய்யும் அறிவித்தல் ஒன்றை தவிசாளரினால் அந்த அனுமதிப்பத்திரம் பெற்றவருக்கு ஒப்படைக்க ஒழுங்கு செய்தல் வேண்டும்.

27. 26 ஆவது துணைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் அறிவித்தல் கிடைத்த எவராவதொரு அனுமதிப்பத்திரம் பெற்றவரினால் அந்த அறிவித்தலில் உறுதியாகக் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்னர், அந்த அறிவித்தலில் நியமம் செய்யப்பட்டுள்ள விதத்தில் செயற்பட வேண்டும். ஏற்றுக்கொள்ளக்கூடிய விதத்தில் விடயங்களை எழுத்துமூலமாகச் சமர்ப்பித்துள்ள ஏதேனுமொரு தருணத்தில் அந்த அறிவித்தலில் உறுதியாகக் குறிப்பிடப்பட்டுள்ள திகதியை நீடிப்பதற்குத் தவிசாளருக்கு அதிகாரம் இருக்க வேண்டும். அவ்வாறாயினும், அந்த விதத்தில் நீடிக்கப்படும் காலம் 14 நாட்களுக்கு மேல் அதிகரிக்கக் கூடாது.

28. 27 ஆவது துணைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்திலான அறிவித்தல் கிடைத்த எவராவதொரு அனுமதிப்பத்திரம் பெற்றவரினால் அந்த அறிவித்தலில் உறுதியாக நியமம் செய்யப்பட்டுள்ள திகதி அல்லது நீடிக்கப்பட்ட திகதிக்கு முன்னர் அந்த அறிவித்தலில் நியமம் செய்யப்பட்டுள்ள விதத்தில் செயற்படுத்துவதை கவனியாது விடும் தருணத்தில் அந்த இடத்திற்கு விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தைத் தவிசாளரினால் இரத்துச்செய்தல் சட்டபூர்வமானதாக வேண்டும்.

29. இந்த துணைச்சட்டத்தில் ஏதேனுமொரு நியமத்தை, செய்யாதுவிடல் அல்லது கவனியாது விடல் குற்றமாவதுடன், அதற்காக உரிய அதிகாரமுள்ள நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டால் 750 ரூபாவுக்குக் குறையாத தண்டத்திற்கு அந்தக் குற்றத்தைச் செய்யும் நபர் கீழ்ப்படிய வேண்டும். அந்தத் தவறைத் தொடர்ந்தும் செய்துவந்தால், நாளொன்றுக்கு 250 ரூபா வீதம் மேலதிக தண்டத்திற்கு உள்ளாக்கப்படுவார்.

*30.* பதங்கள் சம்பந்தமாக வேறு அர்த்தம் தேவையாயின் தவிர, இந்தப் பிரிவில் துணைச் சட்டங்களில் :

(i) "அவமங்கள சேவை வழங்கும் இடம்" என்பது, ஏதேனும் மரண உடலைக் காலம்கடத்தி வைத்துக்கொள்ளும் விதத்தில் தயார்செய்தல், மரண உடலை இறுதி அஞ்சலிக்காகத் தயார்செய்தல், இறுதிக் கிரியைகள் செய்வதற்காக மயான பூமி வரை கொண்டு செல்லும்வரை ஏதேனும் பணம் அறவிட்டுக்கொண்டு பொது மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்படும் இடமும்.

(ii) "மரண உடல் ஒழுங்குசெய்தல்" என்பது, மரணமடைந்த நபரின் மரண உடலை இறுதி அஞ்சலிக்காக காலம் கடத்தி வைத்துக்கொள்ளும் விதத்தில் தயார்செய்தல், அந்த மரண உடலுக்கு உடை அணிவித்தல், மரண உடலை ஏதேனும் பெட்டியில் வைத்தல், அந்த விடயத்திற்குத் தேவைப்படும் வேறு தேவைகளைச் செய்தலும்.

(iii) "மரண உடல் பாகங்கள்" என்பது மரணமடைந்த நபரின் மரண உடலில் இருந்து அகற்றப்படும் ஏதேனும் உடல் தொகுதி அல்லது அதன் ஒரு பகுதி அல்லது உள்ளே உள்ள பாகங்கள் அல்லது மரண உடலிலிருந்து வெளியேறும் அல்லது வெளியேற்றும் இரத்தம் அல்லது வேறு திரவம் அல்லது மரணமடைந்தவர் அந்தத் தருணத்தில் உடுத்தியிருந்த ஏதேனும் உடை அல்லது உடைகள் அல்லது அதில் ஒரு பகுதி, மரணமடைந்தவரின் உடலில் இருந்த ஏதேனும் உள்ளே இருந்த அல்லது இரு பக்கம் கட்டும் பட்டி, பஞ்சு அல்லது ஏதேனும் பொருள் எனக் கருதப்படும்.

**முதலாவது அட்டவணை**

5 ஆவது வாக்கியம்

அவமங்கள சேவை வழங்கும் இடம் நடாத்திச்செல்வதற்காக அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பப்பத்திரம்

1. விண்ணப்பதாரரின் பெயர் :----.
2. தே. அ. அ. இல. :----.
3. அவமங்கள சேவை வழங்குமிடத்தின் வியாபாரத்தின் பெயர் மற்றும் அந்த இடத்தின் விலாசம் :----.
4. ஒரு முறையில் ஒழுங்குசெய்வதற்காக வைத்துக்கொள்ளக்கூடிய மரண உடல்களின் எண்ணிக்கை :----.
5. ஸ்தாபனத்திற்குச் சொந்தமான அவமங்கள வாகனங்களின் எண்ணிக்கை :----.
6. மரண உடல் ஒழுங்குசெய்வதற்கு முன்னர் போக்குவரத்திற்காகப் பயன்படுத்தியுள்ள வாகனங்களின் எண்ணிக்கை :----.
7. வெளியேற்றப்படும் மரண உடல் பாகங்களை வெளியேற்றும் விதம் :----.
8. அஞ்சலிக்காக மரண உடலை வைப்பதற்குப் பொறுப்பேற்பதாயின் :
    (i) ஒரே முறையில் வைக்கக்கூடிய மரண உடல்களின் எண்ணிக்கை :----.
    (ii) அஞ்சலி செலுத்த வருபவர்களின் வாகனம் எந்தளவு ஒரே முறையில் நிறுத்திவைக்க முடியும் ? :----.
9. இயற்கையான பூ வைத்திருத்தல் மற்றும் விற்பனை செய்தல் செய்கின்றீரா ? : ஆம்/இல்லை :----.
10. வெளியேறும் இயற்கையான பூக்கள் அல்லது மரத்துண்டுகள் வெளியேற்றுவதற்கு எதிர்பார்க்கும் விதம் :----.
11. ஸ்தாபனத்தில் சேவை செய்யும் சேவையாளர்களின் எண்ணிக்கை :----.
12. முகாமையாளர் நியமிக்கப்பட்டிருந்தால் அவரது-
    (i) பெயர் :----.
    (ii) தே. அ. அ. இல. :----.

*13.* அவமங்கள சேவை வழங்கும் இடங்களை முறைப்படுத்துதல், கண்காணித்தல் மற்றும் நிருவாகம் தொடர்பாக துணைச் சட்டங்களின் ஏற்பாடுகளை அதே விதத்தில் ஏற்றுக்கொள்வதற்கு மற்றும் காலத்திற்குக் காலம் பிரதேச சபையினால் நியமம் செய்யப்படும் வேறு சுகாதார பாதுகாப்பு நியமங்களை ஏற்றுக்கொள்வதற்கு இணங்குவதாக இங்கு கையொப்பமிட்டு ஏற்றுக்கொள்கின்றேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

**இரண்டாவது அட்டவணை**

*20 ஆவது வாக்கியம்*

1. மரணமடைந்தவரின் விபரம் :
   (அ) பெயர் :----.
   (ஆ) ஆண்/பெண் :----.
   (இ) மரணமடைந்த திகதி :----.
   (ஈ) மரணம் நிகழ்ந்த இடம் :----.

2. மரணச் சான்றிதழின் விபரம் :
   (அ) இலக்கம் மற்றும் திகதி :----.
   (ஆ) சான்றிதழ் விநியோகித்த உத்தியோகத்தரின் பதவிப்பெயர் மற்றும் விலாசம் :----.
   (இ) விசேட கட்டளை விபரம் :----.

3. மரண உடலை ஒப்படைத்தவரின் விபரம் :
   (அ) பெயர் :----.
   (ஆ) விலாசம் :----.
   (இ) தே. அ. அ. இல. :----.
   (ஈ) மரணமடைந்தவருக்கு உள்ள சம்பந்தம் :----.

4. மரண உடல் தொடர்பான விபரம் :
   (அ) ஒழுங்குசெய்யும் இடத்திற்குப் பொறுப்பேற்ற திகதி/நேரம் :----.
   (ஆ) இடத்திலிருந்து வெளியேற்றிய திகதி/நேரம் :----.
   (இ) எடுத்துச்சென்ற மயான பூமி தகன/அரங்கு :----.
   (ஈ) இறுதிக் கிரியைகள் செய்த திகதி :----.

*23 ஆவது பிரிவு*

**நடமாடும் வியாபாரம்**

பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்திற்குள் நடமாடும் வியாபாரிகளைக் கண்காணித்தல், நிருவகித்தல் மற்றும் அந்த விடயத்திற்காக அனுமதிப்பத்திரம் விநியோகித்தல், குறித்த பொருட்கள் விற்பனை செய்தல், குறித்த இடத்தில் அல்லது பிரதேசத்தில் பொருட்கள் விற்பனை செய்தல், முறைப்படுத்துதல் அல்லது இரத்துச்செய்தல் தொடர்பான துணைச்சட்டமாகும்.

2. பிரதேச சபையின் தவிசாளரினால் உரிய விடயத்திற்காக விநியோகிக்கப்படும் அனுமதிப்பத்திரம் அல்லது அடையாள அட்டை இல்லாத எந்தவொரு நபரும் ஏதேனும் வீதியில் அல்லது பாதையில் அல்லது பொது மைதானத்தில் பொதுப் பூங்காவில் அல்லது வண்டியில் அல்லது மோட்டார் வாகனம் நிறுத்தி வைப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ள அல்லது உபயோகத்திற்கு எடுக்கும் ஏதேனும் பொது வாகன நிறுத்தத்தில் அல்லது பொது பஸ் நிலையத்தில் அல்லது பொது மக்கள் ஒன்றுகூடும் பொது இடத்தில் ஏதாவதொரு பொருள் விற்பனை செய்தல், விற்பனை செய்வதற்காக வைத்திருத்தல் அல்லது விற்பனைக்காக அங்கும் இங்கும் எடுத்துச்செல்லுதல் செய்யக்கூடாது.

3. மேலே 2 ஆவது வாக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்காக பிரதேச சபையினால் நியமம் செய்யப்பட்டுள்ள அனுமதிப்பத்திரக் கட்டணம் செலுத்த வேண்டியதுடன், அந்தக் கட்டணம் அனைத்து வருடத்திற்காகவும் அரசாங்க வர்த்தமானிப்பத்திரத்தின் மூலம் சபையினால் பிரசுரிக்கப்படும் விதத்தில் இருக்க வேண்டும்.

4. விநியோகிக்கப்படும் அனைத்து அனுமதிப்பத்திரத்திலும் பொருட்கள் விற்பனைக்கு குறித்த இடம் அல்லது பிரதேசம் மற்றும் விற்பனைக்குரிய பொருட்கள் தொடர்பான விதிமுறைகளை உள்ளடக்க தவிசாளருக்கு அதிகாரம் உண்டு.

5. உரிய நீதிமன்றத்தினால் அனுமதிப்பத்திரத்தை இரத்துச்செய்தால் உரிய அனுமதிப்பத்திரம் தாமதமின்றி தவிசாளருக்கு மீண்டும் ஒப்படைக்க வேண்டும்.

6. உரிய நீதிமன்றத்தினால் இரத்துச்செய்தால் தவிர, அனைத்து அனுமதிப்பத்திரமும், அதை விநியோகித்தது எந்த வருடத்திற்காகவோ அந்த வருடத்தில் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரை செல்லுபடியாகும்.

7. மேலே 6 ஆவது வாக்கியத்தில் எது குறிப்பிடப்பட்டிருந்தாலும் பொது மக்கள் ஒன்றுகூடும் ஏதாவதொரு விதத்தில் மக்கள் ஒன்றுகூடுதல் பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்திற்குள் ஏற்படும் தருணத்தில் சுற்றுலா வியாபாரத்திற்காக தற்காலிக அனுமதிப்பத்திரம், அது முடிவடையும் காலம் குறிப்பிடப்பட்டு தவிசாளரினால் விநியோகிக்க முடியும்.

8. அனைத்து நடமாடும் வியாபாரியும் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் நேரங்களில் தவிசாளரினால் விநியோகிக்கப்பட்ட அடையாள அட்டையைத் தெளிவாகத் தெரியும் விதத்தில் அணியவேண்டும்.

9. தவிசாளரினால் அல்லது அவரினால் அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தரினால் தமது அனுமதிப்பத்திரத்தையும் அடையாள அட்டையைச் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கும்போது அந்தக் கடிதங்களை உடனடியாகச் சமர்ப்பித்தல் நடமாடும் வியாபாரியின் விடயமாக வேண்டும்.

10. அனுமதிப்பத்திரம்பெற்ற நடமாடும் வியாபாரி ஒருவர் மு. ப. 6.00 மணி முதல் பி. ப. 10.00 மணி வரையிலான காலத்திற்குள் தமது வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு உரிமையுண்டு. அவ்வாறாயினும் தவிசாளரினால் அந்தக் கால எல்லையைக் கடந்து வியாபாரத்தில் ஈடுபடுவதற்காக அனுமதி வழங்கப்பட்டு அதனை அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தால், அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்குள் வியாபாரம் செய்வதற்கு அனுமதிப்பத்திரம் பெற்றவருக்கு உரிமை இருக்கின்றது.

11. அனுமதிப்பத்திரதாரர் பரவும் நோயினால் பீடிக்கப்பட்டிருந்தால் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுதலைத் தவிர்க்க வேண்டும்.

12. உணவு வகைகள் விற்பனை செய்யும் வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கும் அனைத்து நடமாடும் வியாபாரியும் கீழ்க்காணும் நடவடிக்கைகளுக்கு அனுகூலமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் :-

(i) விற்பனைக்குக் கொண்டுசெல்லும் உணவுகளுக்கு ஈ மூடுதலைத் தவிர்ப்பதற்கு மற்றும் புழுதி, கழிவுப் பொருட்கள், துர்நாற்றம் சேருதலைத் தவிர்ப்பதற்கு இயலும் விதத்தில் வைத்துக்கொள்ள வேண்டியதுடன், அந்த உணவை நபர்கள் ஸ்பரிசம் செய்வதற்கு இடமளிக்கக் கூடாது.

(ii) உணவு வகைகளை வைத்திருக்கும் வாகனம், துவிச்சக்கர வண்டி, பாத்திரங்கள் மற்றும் தட்டு போன்றவை மற்றும் உணவுடன் ஸ்பரிசமாகும் அனைத்து உபகரணங்கள் மற்றும் பாகங்கள் தினமும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

(iii) உணவு பொதி செய்வதற்காகப் பாவிக்கும் கடதாசி அல்லது பொதி செய்யும் பொருட்கள் சுத்தமாகவும் அதற்கு உகந்த தரத்திலும் வைத்திருக்க வேண்டும்.

(iv) உணவு வகைகளை ஸ்பரிசம் செய்வதற்காக சுத்தமான உபகரணங்கள் மற்றும் பொருட்கள் பாவிக்க வேண்டும். கையில் பிடித்து உணவு வகைகளை விற்பனை செய்தல் கூடாது.

(v) உணவு விற்கும் நடவடிக்கைக்காக பரவும் நோயுள்ள ஒருவரை ஈடுபடுத்தக் கூடாது.

(vi) எவராவதொரு நபருக்கு அல்லது நபர்களுக்கு ஆபத்தான விதத்தில் அல்லது பீடையான விதத்தில் நெருப்பு பாவிக்கக் கூடாது.

(vii) கழிவுப் பொருட்கள் அல்லது கழிவு நீர் பொது இடங்களில் போடக் கூடாததுடன், அவைகளைச் சுகாதார பாதுகாப்பு முறையில் அகற்றுதல் தவிசாளர் திருப்தியடையும் விதத்தில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

(viii) விலைக்குப் பெறும் தருணத்திலேயே உண்ணுவதற்காக உணவு வகைகள் விற்பனை செய்வதாயின், அதற்காக ஒதுக்கப்பட்ட பாத்திரங்கள் வழங்க வேண்டும்.

(ix) விலைக்குப் பெறுபவர்களினால் உணவு உட்கொண்ட பின்னர் மீதியாகும் உணவு வகைகளைப் போடுவதற்காக மூடியுடனான நன்கு மூடக்கூடிய பாத்திரம் வைத்திருக்க வேண்டும்.

13. மாடு கொல்லும் கட்டளைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மிருகத்தின் அல்லது மிருகங்களின் இறைச்சி நடமாடும் வியாபாரி விற்பனை செய்யக் கூடாது.

14. நடமாடும் வியாபாரியினால் ஏதேனும் தொற்றுநோய் அல்லது பரவும் நோய் பரவும் அல்லது பரவியுள்ள பிரதேசத்தில் சமைக்கப்படும் உணவுப் பொருட்களை விற்பனை செய்தலைத் தவிசாளரினால் தடை செய்தல் வேண்டும்.

15. பொதுச்சந்தை சூழலுக்குள் நடமாடும் வியாபாரம் தடையாகும்.

16. ஏதேனும் ஒரு இடத்தில் நீண்ட நேரம் தங்கியிருந்து வியாபாரம் செய்தல் எந்தவொரு அனுமதிப்பத்திரம் பெற்றவரும் செய்யக்கூடாது.

17. இந்த துணைச் சட்டத்தை மீறுதல் தொடர்பாக, அந்த மீறும் செயல் உறுதிப்படுத்தப்படும் ஏதேனும் செயற்பாடு அல்லது செய்யாது விட்டதற்காக 750 ரூபாவுக்கு அதிகரிக்காத தண்டத்திற்கும் அந்த மீறும் செயலைத் தொடர்ந்தும் செய்யும்போத உரிய அதிகாரமுள்ள நீதிமன்றத்தினால் அது தொடாப்பாக குற்றவாளியாக்கப்பட்டதன் பின்னர் அல்லது அந்த மீறுதல் தொடர்பான கவனம் செலுத்தி தவிசாளரினால் அல்லது அதிகாரம்பெற்ற உத்தியோகத்தரினால் எழுத்து மூலமான அறிவித்தல் ஒப்படைத்த பின்னர் மீறுதலைத் தொடர்ந்தும் இடைவிடாது செய்யும் அனைத்து தினத்திற்கும் நாளொன்றுக்கு 250 ரூபாவுக்கு அதிகரிக்காத மேலதிக தண்டத்திற்கு உள்ளாக வேண்டும்.

18. நடமாடும் வியாபரிகளினால் ஏதேனுமொரு தருணத்தில் வீதியில் அல்லது வீதியின் இரு மருங்கிலும் அல்லது கட்டிடங்களின் முன்னால் அல்லது வேறு இடங்களில் தரையில் வைத்து அல்லது தரை விரிப்பில் வைத்து பொருட்கள் விற்பனை செய்தல் அல்லது காட்சிப்படுத்துதல் செய்யக் கூடாது.

19. உணவு வகைகள் அல்லாத பொருட்கள் விற்பனை செய்யும் வியாபாரிகளினால் பைக்குள் இட்டு விற்பனை செய்யக்கூடிய அனைத்துப் பொருட்களையும் பைக்குள் இட்டு விற்பனை செய்ய வேண்டும்.

20. நடமாடும் வியாபாரத்தில் ஈடுபடும் எவராவதொரு நபரினால் ஏதேனும் வீதியில் ஓடும் வாகனத்திற்கு அல்லது நடமாடும் பயணிகள் அல்லது பொது இடத்தில் நடமாடும் மக்களுக்கு இடையூறு அல்லது ஆபத்து ஏற்படாத விதத்தில் வியாபாரம் செய்தல் வேண்டும். அவ்வாறான தடை ஏற்படுவதாக பொலிஸ் உத்தியோகத்தரினால் அல்லது பொது இடங்களின் உரிமையாளர்களினால் அல்லது சபையின் உத்தியோகத்தர் ஒருவரினால் அறிவித்த உடன் வியாபார நடவடிக்கையை நிறுத்தி, அந்த இடத்திலிருந்து வெளியேற வேண்டும்.

21. நடமாடும் வியாபாரம் செய்பவரினால் முறையான அனுமதி இல்லாது தமது பொருட்களை விளம்பரத்திற்காக ஒலிபெருக்கி இயந்திரம், ரேடியோ, கெசட் இயந்திரம் அல்லது பொது அழைப்பு பயன்படுத்தக் கூடாது.

22. (i) இந்தத் துணைச் சட்டங்களில் பதம் சம்பந்தமாக எடுக்கப்படும் "உணவு வகை" என்பது, மனித பாவனைக்காக எடுக்கப்படும் தயாரிக்கப்பட்ட உணவு மற்றும் பானங்கள், பழங்கள், இளநீர் மற்றும் உணவுக்காக எடுக்கும் அனைத்து வகையும் கருதப்படும்.

(ii) "நடமாடும் வியாபாரம்" என்பது, தன்னால் அல்லது மிருகத்தின் உதவியுடன் அல்லது வாகனத்தில் அல்லது பொருட்கள் எடுத்து வந்து செய்யப்படும் வியாபாரம் எனக் கருதப்படுவதுடன், மீண்டும் விற்பனை செய்வதற்காக நபரொருவரினால் செய்யப்படும் தொகை வியாபாரம் அதற்கு உள்ளடங்கும்.

12-761

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.